மங்கையர் மலர்


இரட்டைச் சிறப்பிதழ் – I

இரட்டைச் சிறப்பிதழ் – II
(இணைப்பு)
கேட்டு வாங்குங்கள்



நவராத்திரி
இரட்டைச் சிறப்பிதழ் - I

Descended straight from royalty.



Visit us at: "Jewels of India" Exhibition
Stall No: 28 & 29 - On Sept 28 - Oct 02, 2001
Venue: Kanteerava Indoor Stadium, Bangalore

PRINCE JEWELLERY

Panagal Park, T.Nagar, Chennai 600 017. Tel.: 436 3137 / 436 3138. Fax: 433 6998.
E-mail: jose@md3.vsnl.net.in Visit us at: www.prince-jewel.com **(Showroom only at Chennai)**

மங்கையர் மலர்

மலர் : 21
இதழ் : 9



நவராத்திரியைக் கொண்டாடுவோம்!

'சக்தி' தரிசனம்


'நவ'ராத்திரியில் மணக்க மணக்க...

அனுபவ பாடம்

நவராத்திரி இரட்டைச் சிறப்பிதழ்

அக்டோபர் 2001

இன்டர்நெட் முகவரி : http://www.mangayarmalarmonthly.com





சில வார்த்தைகள்...

கணவன் இராமனாக இருந்தால்...

மஞ்சுளா ரமேஷ்


“வாழ்க்கையில் அவரவர்க்கு விதிக்கப்பட்ட கடமைகளை, தர்மத்தைச் செய்யறதிலே எந்த ஏற்றத்தாழ்வும் இல்லை. ஒரு ஏழை மனிதன் கூட தான் செய்ய வேண்டிய திருமணத்தைத் தனக்கு ஏற்ற விதத்தில் செய்தான். அந்தக் கல்யாணத்தில் என்னென்ன கர்மாக்களைச் செய்ய வேண்டும் என்பதுதான் முக்கியமே தவிர, எவ்வளவு காசு செலவழிக்க வேண்டும் என்பது முக்கியமில்லை. எனவே அவரவர் தர்மங்களைச் சரியாக அவரவர்க்கு ஏற்ற வகையில் மகிழ்ச்சியாக செய்தார்கள்.

ஆனால் மனிதனுடைய வாழ்க்கையில் வியாபார நோக்கு என்பது எப்போது புகுந்ததோ அப்போதே அனைத்து தர்மங்களும் அழிய ஆரம்பித்து விட்டன என்றுதான் சொல்ல வேண்டும். எல்லாவற்றையும் வியாபாரமாக பார்ப்பது. இதனால் பணத்துக்கு ரொம்ப முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்து எல்லாமே காசினாலே அளக்க ஆரம்பித்து விட்டார்கள்...”

இது ஏதோ இன்றைக்கு நடக்கிற விஷயங்களைப் பேசுவது போல இருக்கிறது இல்லையா? மிக அபூர்வமாகக் கிடைத்த ஒரு புத்தகத்தில் பரமாச்சார்யார் நமது சமூக அவலத்தைப் பற்றி எழுபது ஆண்டுகளுக்கு முன்பு (1932-ல்) ஒரு கூட்டத்தில் பேசியதைப் படித்தேன். என்றைக்குத் தெரியுமா? உலக ‘வியாபார’ மையக் கட்டிடத்தை விமானம் கொண்டு தாக்கி அழித்தார்களே அன்றைக்குத்தான். பெரியவர் தனிப்பட்டவர்களின் வாழ்விலே நேரும் அவலங்களையும், சமூகத்திலே ஏற்படக்கூடிய பிரச்னைகளையும் சொல்லியிருக்கிறார். அதன் உச்சகட்டமாகத்தான் உலக ‘வர்த்தக’ மையக் கட்டிடமே இடிந்து பொடிப் பொடியானது என்று எனக்குத் தோன்றியது.

தீவிரவாதம், வன்முறை என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் வியாபாரம் மனித வாழ்க்கையில் புகுந்து விட்ட கோரத்தின் உச்சகட்டம்தானே இது? ‘நீ இவ்வளவு உயரமாக வர்த்தகக் கட்டிடம் கட்டியிருக்கிறாயா? கண்ணை உறுத்தும் இந்தக் கட்டிடத்தையே தூளாக்கி உன் நாட்டின் பொருளாதாரத்தையே சீர்குலைக்கிறேன் பார்!’ என்று கொக்கரிக்கும் வக்கிரக் கூச்சல் அல்லவா அது!

மனிதனின் கட்டுக்கடங்காமல் உயர்ந்து விட்ட ஆசை எப்படியெல்லாம் விண்ணை முட்டுகிறது. இன்று நடந்து வரும் ஒவ்வொரு பேரழிவின் மூலமும் இயற்கை, ‘மனிதா,



பாடம் கற்றுக் கொள்,’ ‘மனிதா, பாடம் கற்றுக் கொள்’ என்று கூவுகிறது. கூவுவதா? கதறுகிறது என்று கூடச் சொல்லலாம்.

வானியல் ஆய்வாளர்களுக்குத் தெரியும், இந்த பிரம்மாண்ட பிரபஞ்சத்தில் இந்தச் சின்னஞ்சிறு பூமி எவ்வளவோ பெரிய வானியல் விபத்துக்களுக்கு எல்லாம் தப்பி, தன்னிடம் பொதிந்திருக்கும் நிகரற்ற பேரழகோடு சுற்றிச் சுற்றி வருகிறது என்று. அதற்கு வெளியிலிருந்து வருவானேன், இந்தப் பூமியிலிருந்து உதித்த நாங்களே இதை அழித்து விடுகிறோம் என்று ‘பூமி புத்திரன் நரகாசுரன்’ போல ஒவ்வொருவரும் கிளம்பி இருக்கிறார்கள்.

சுற்றுப்புறத்திற்கு மாக ஏற்படுகிறது. உலகப் போர் விளையுமா என்று அச்சம் எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனின் மனதிலும்தான் 'வர்த்தக மையம்' விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்து நிற்கிறது! பரமாச்சார்யார் சொன்னாரே, 'அவரவர்க்கு ஏற்ற வாழ்க்கை, இது பணத்தால் நிர்ணயிக்கப்படவில்லை' என்று. அப்படி இருந்தால், அடுத்தவரோடு தேவையில்லாமல் ஒப்பிட்டுக் கொள்ளாமல் இருந்தால் எவ்வளவோ சுமுகமாக வாழ்க்கை சென்று விடுமே!

அதுதான் நம்மிடம் கிடையவே கிடையாதே! 'எனக்கு இருக்கும் இந்த வாழ்க்கையில், என்னுடைய கடமைகள் இது. சரி, அடுத்து உயர்ந்த லட்சியங்களை அமைத்துக் கொள்வோம். அதற்காகப் பாடுபடுவோம்' என்று இருக்கலாம்.

இப்போதெல்லாம் உயர்ந்த இலட்சியம் எது? நிறைய பணம் சம்பாதிப்பதுதான். நிறைய வீடுகள், நிறைய சொத்து, பெரிய பதவியால் வரும் ஏராளமான செல்வம், மற்றவர்கள் வர்த்தக மையத்தை அண்ணாந்து பார்ப்பது போல நம்மைப் பார்க்க வேண்டும்... இலட்சியம் என்றாலே பணம் சம்பாதிப்பதுதான் என்றாகி விட்டது. பிறகு அது வியாபாரப் போக்கு இல்லாமல் என்ன?

படிப்பது – பணம் சம்பாதிக்க.
வேலை – பணம் சம்பாதிக்க.
கலியாணம் – பணம் சம்பாதிக்க.
பிள்ளைகள் – பணம் சம்பாதிக்க.

இப்படி லிஸ்ட் போட்டுக் கொண்டே போகலாம். மனிதர்கள் எல்லோரும் மூன்று திக்குத் திசை தெரியாமல் இல்லாமல் ஓடிக் கொண்டிருப்பது நோட்டு நோட்டாக பார்ப்பதற்காகத்தான்.

இந்த வாழ்க்கையையே வியாபாரமாகப் பார்க்கும் நோக்கு நம்மிடம் ஆழமாக இருக்கிறது என்ற உண்மையைப் புரிந்து கொண்டால்தான் நம் வாழ்க்கையில் நமக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்னைகளைத் தீர்க்கும் வழியும் புரியும்.

கணவன் இராமனாக இருந்தால்
மனைவியும் சீதையாக இருப்பாள்!

இது ஒரு புதுக்கவிதை. ஆக நீ இராமனாக இல்லை, அதனால் நானும் சீதையாக இல்லை. அம்மா அப்பா கேட்ட போது கேட்டதைத் தரவில்லையா அவர்கள் விரோதி. நீ அன்பாக இல்லையா, நானும் பதில் கூட பேச மாட்டேன். நீ எப்படி நடந்து கொள்கிறாயா நான் அப்படி நடந்து கொள்வேன். மாமியார் கடுசொல் பேச

கிறாள், நானும் பேசுவேன். கணவன் ஒரு தட்டை வீசியெறிந்தால், நான் இரண்டு தட்டாக வீசுவேன். இதுதான் வியாபார வாழ்க்கை. ஆமாம், வியாபாரம் என்பதே பரிமாற்றம்தானே! நீ கொடுத்தால் நானும் கொடுப்பேன்.

யோசித்துப் பாருங்கள். நம் வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது. மனதிலே நூற்றியோரு மாடியாக அடுக்கடுக்காகக் கட்டி வைத்திருக்கிறோம். மனதுள் பொங்க வேண்டிய கருணை, அன்பு, தயை, ஆனந்தம் எனும் அத்தனை ஊற்றுக்களையும் அடைத்து விட்டு வர்த்தகமையத்தை விண்முட்டக் கட்டி வைத்திருக்கிறோம். அது வளைந்து கொடுக்காத உறுதியான கம்பிகளால் ஆனது. யாரும் எளிதில் அசைத்துவிட முடியாது.

இப்படி கட்டிக் கட்டி உயரே போகும் போது நானா, நீயா எனும் போட்டிதான் அதிகமாகுமே தவிர, நம் நாட்டின் மறைந்து வரும் குணங்களான 'போதும் என்ற மனமே பொன் செயும் மருந்து', 'விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை' இதெல்லாம் எங்கேயிருந்து பெருக்கெடுக்கும்! தனிமனித வாழ்க்கையிலே நிறைய இப்படிப்பட்ட உறவுச் சிதறல்களை, அழிவுகளைப் பார்த்துக் கொண்டுதான் வருகிறோம். அதன் வெளிப்பாடான அம்சமாகத் தான் நாம் சமீபத்தில் பார்த்த பேரழிவு என்று தோன்றுகிறது.

இந்த அழிவில் சிக்கிக் கொள்பவர்கள் பாவம் ஒரு பாவமும் அறியாத அப்பாவி மக்கள்தான். பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் புதைந்து போய் விட்டார்களே! எத்தனை கனவுகள், எத்தனை உறவுகள், எத்தனை பாசங்கள்! உயிர் தப்பிப் பரிதவிக்கும், கண்ணீர் விடும் அந்த முகங்களையெல்லாம் பார்க்கும் போது மனம் விம்முகிறது. கதறியழும் அந்தக் கண்ணீரிலே என்ன பேதம் இருக்கிறது? குப்பை கூட்டும் மனிதனை இழந்த துயரமும் ஒன்றுதான். சாஃப்ட்வேர் இன்ஜினியரை பறிகொடுத்த கொடுமையும் ஒன்றுதான். இழப்பிலேதான் மனித உறவுகளின் பாசமும், அன்பும் வெளியாகிறது. அதுவரை கண்மண் தெரியாமல் வர்த்தகம் செய்யத்தான் மனிதர்களுக்கு நேரம் இருக்கிறது.

நாம் இதிலிருந்தெல்லாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். நமக்கு இருக்கும் இந்தச் சின்ன வாழ்க்கையில் எத்தனை அன்பாக இருக்கலாம்! பாசமாக வாழலாம்!! ஏன், இந்த 'சின்ன விஷயம்' நமக்கு உறைக்கவே மாட்டேன் என்கிறது?

கொலு படம் : திருவாரூர் மங்களம் கிருஷ்ணன்



நவராத்திரி டிப்ஸ்

பிளேட் பெயிண்ட்டிங்

அழகான எவர்சில்வர், அல்லது பீங்கான் தட்டுகளை எடுத்துக் கொள்ளவும். அதில் விருப்பப்பட்ட டிசைனை ட்ரேஸ் செய்யவும். அதன் மீது ஃப்ராலிக்கா 3-டி (Frolika 3-D) Glitter Paints உபயோகப்படுத்தி டிசைன் செய்து நன்கு காயவிடவும்.

கொலுப்படியில் சாய்த்து நிற்க வைத்தால் மிக நேர்த்தியாக இருக்கும்.

— உஷா

கொலுவின் போது நிறைய சுண்டல்கள் பிரசாதமாகக் கிடைக்கும். சுண்டலான்னு கேட்கும் குழந்தைகளுக்கு சுண்டலை மிக்ஸியில் ஒரு சுற்றுச் சுற்றி வெங்காயம், கொத்துமல்லித்தழை யாவும் கலந்து கட்லெட் போல் செய்து கொடுங்கள். ஒன்று கூட மீதமில்லாமல் காலியாகி விடும்.

— வைதேகி ரமணி

விலை மலிவாகக் கிடைக்கும் வண்ணப் பிளாஸ்டிக் பந்துகளை வாங்கி படியின் இரண்டு புறங்களிலும் ஒரே வண்ணப் பந்தை லேசாக பெவிகால் தடவி ஒட்டி விட்டால் பார்க்க மிகவும் அழகாக இருக்கும்.

❀❀❀

நாளிதழ்களில் வரும் வண்ண விளம்பரங்களை 'கட்' செய்து அட்டையில் ஒட்டி, பார்க்கின் ஓரங்களில் ஒன்றிரண்டு வைத்தால், 'ஹோர்டிங்' போல் இருக்கும்!

❀❀❀

உங்கள் குழந்தைகள் வாங்கிய கோப்பை/ஷீல்டை ஒரு கொலுப்படியின் இரண்டு ஓரங்களில் வையுங்கள். குழந்தைகளின் முகத்தில் சிரிப்பை பாருங்க! பேஷ் பேஷ்!!

❀❀❀

பழைய பயன்படுத்தாத செஸ் போர்டை 'பார்க்'கின் ஒரு பகுதியில் வைத்து நான்கு பக்கங்களிலும் சின்ன பூந்தொட்டி வைக்கலாம். அல்லது செஸ் போர்டின் மீது சேர், டேபிள் போன்றவற்றை வைத்து ஒரு ஹோட்டல் போர்டை வைத்து விட்டால் போதும். ஃபாஸ்ட் புட் ரெடி!

❀❀❀

பழைய சி.டி.யை இரண்டு மலை போல் மண்ணைக் குவித்து அதன் நடுவே சூரியன் போல் பாதி மறைத்து வைக்கலாம்! வெளிச்சத்தில் சூரியன் போல் ஒளி பளபளக்குமே!

— போரூர் ஆர். சீதா

கட்டில்

கர்நாடக மாநிலத்தின் துறைமுக நகரமான மங்களூரிலிருந்து முப்பது கிலோ மீட்டர் தொலைவில் அமைந்திருக்கும் புண்ணிய க்ஷேத்ரம் - கட்டில். இங்கே குடிகொண்டிருக்கும் சுயம்புவிற்கு துர்கா பரமேஸ்வரி என்று பெயர்.

ஆதி பராசக்தியின் அம்சங்களிலிருந்து வெவ்வேறு பெயருடன் உருக் கொண்டிருக்கும் அஷ்ட துர்க்கைகளில் இவளும் ஒருத்தி. ஜல துர்காவாக நீரின் நடுவே நின்று உலகை காத்துக் கொண்டிருக்கிறாள் இந்தத் துர்கா பரமேஸ்வரி.



பிரவகித்து ஓடும் நந்தினி நதியின் இடுப்பில் இவள் குடிகொண்டு வாழ்வதால், - கட்டு + இல் = கட்டில் என்று பெயர் பூண்டிருக்கிறது இவ்வூர்.

இந்தப் பகுதியில் ஏற்பட்ட கடும் பஞ்சத்திற்கும், வறட்சிக்கும் காரணமாயிருந்த அருணாசுரனை அழித்துச் சுபிட்சமுண்டாகும்படி இதனைச் சுற்றியிருந்த தபோவனத்து மகான்கள் எல்லாரும் சக்தியிடம் முறையிட்டார்களாம். ஆனால் இரண்டு அல்லது நான்கு கால்களுள்ள எந்த உயிராலும் தன்னை அழிக்க முடியாதபடி இறைவனிடம் வரம் பெற்றிருந்தானாம் அந்த அசுரன்.

மானிட உருவோ, விலங்கின் உருவோ எப்படி உருமாறி வந்தாலும் அவனை அழிக்க இயலாது என்பதை அறிந்த அன்னை வண்டுகளின் உருவெடுத்து வந்து அந்த அசுரனை அழித்ததாக இங்கே கூறப்படுகிறது.

அருணாசுரனை அழித்து இங்கே சுபிட்சம் நிலவும்படி நந்தினியைப் பிரவகிக்கச் செய்த அன்னை, அந்த நந்தினியின் இடுப்பிலேயே தானும் குடியிருந்து இந்தப் பகுதியைக் காத்து வருகிறாள்.

"நித்த நித்தம் இவளது அருள் தேடி வருகின்ற பக்தர்களுக்கு இந்தத் திருக்கோயிலில் அன்னோபசாரமும் நடத்தப்படுகிறது! நவராத்ரி காலங்களில் கிட்டத்தட்டப் பத்து லட்சம் மக்கள் இந்த ஆலயத்தில் திரண்டிருப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்!

— "சன்மிஷ்டை"

ஜலதுர்கா

அந்தக் காலத்தில் கோயிலை மையமாக வைத்துத்தான் பல காரியங்கள் நடந்தன. பொது மக்களுக்கான வசதிகள், பல்வேறு வழக்குகள், வேலை வாய்ப்புகள் எதுவானாலும்... இப்போது ஒவ்வொரு ஊரிலும் எதை மையமாக வைத்து நடத்துகிறார்கள்? அவரவர்கள் சிந்தனைக்கே விட்டு விடுகிறேன்...

ஆனால் மேல்மருவத்தூருக்கு நான் போன போது இந்த எண்ணம்தான் தோன்றியது. பத்தாண்டுகளுக்கும் மேல் இருக்கும் நான் முதல் தடவை போன போது. அப்புறம் எத்தனையோ வளர்ச்சி. அத்தனையையும் செய்திகளாகக் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஜி.எஸ்.டி. சாலையில் கோயிலைக் கடக்கும் போது ஒரு கும்பிடு. 'அப்பா, எவ்வளவு பேர் செவ்வாடை கட்டி சிரத்தையுடன் வருகிறார்கள்' என ஒரு நிமிட வியப்பு.



• தாயோடு தனயன்

ஆனால் இந்த முறை போன போது ஆதிபராசக்தியின் விளையாட்டாகப் பரந்திருக்கும் அந்த சமூகப் பணிகளைப் பார்த்த போது பிரமிக்காமல் இருக்க முடியவில்லை. ஜி.எஸ்.டி. சாலையின் ஓரமாக அமைதியான கோவில் என்றாலும் பின்னாலும் பக்கவாட்டிலும் எத்தனை அற்புத வளர்ச்சி! கல்லூரிகளாகவும், மருத்துவ மனைகளாகவும், தியான மண்டபமாகவும் பரந்து விரிந்து கிடக்கிறது.

எங்கும் முழங்கும்

ஆனால் அதே எளிமையான அடிகளார்! வணங்கி எழுந்த போது சிரித்தார். "எங்கெங்கோ சக்தி பீடங்களுக்குப் போறீங்களாமே! பக்கத்தில் இருக்கும் இந்த சக்தி பீடத்துக்கு வர இவ்வளவு நாளாச்சுதா?"

ரொம்ப நாளைக்கு முன்பு வந்திருந்ததைச் சொன்ன போது, "அப்புறம் பல இடங்களுக்கும் போய் வந்திருப்பீங்க. இங்கே நம்ம இடத்திலேயும் நீங்க சொல்ற 'வைப்ரேஷன்' இருக்குதா பாருங்களேன்"

மஞ்சுளா ரமேஷ்

• பங்காரு அடிகளார்

என்று சொல்லி யாரையும் அவர் உள்ளே அனுமதிக்காத பிரத்யேக பூஜையறையில் அமரச் சொன்னார். எப்பேர்ப்பட்ட பாக்யம். கண் மூடி அமர்ந்திருந்த அந்தச் சில மணித்துளிகள் பேரானந்தம். தேவியின் வடிவை மண்டபத்தில் எழுந்தருளச் செய்திருக்கிறார். நின்று நிலைத்து எரியும் விளக்கு மனதை நிச்சலனமாக்குகிறது.

"இந்த சக்திய இன்னும் கூட சில பேர் புரிஞ்சுக்கலை. ஆனா பெரிய மகான்கள்லாம் புரிஞ்சுக்கிட்டு வந்தாங்க. மக்கள் பாருங்க, அவங்க திருந்தி வரணும். வரும்போதே, "அம்மா, நான் உழைக்காம பெரிய பணக்காரனா வர்றதுக்கு வழி சொல்லு. அப்பத்தான் நீ சக்தி"ங்கறான். அவன என்ன பண்ண?

எது நம்மகிட்ட இல்லையோ அப்பதான் அதன் அருமை தெரியுது. மெட்றாஸ்ல மழையே இல்ல. யாரைப் பார்த்தாலும் மழை பத்தித்தான் பேசறான். எம் புள்ளகுட்டி நல்லாருக்கணும் அப்படீன்னு கூட இப்பல்லாம் கேக்கறதில்ல.



ஓம் சக்தி!



• மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம் மாடல்

"எங்க ஊர்ல மழை பெய்ய வை அம்மாங்"கறான்.

அதே மாதிரிதான் தாய் தந்தை பக்கத்துல இருக்கற வரை அவுங்க அருமை தெரியறதில்லை. ஒருத்தன் அவுங்க அம்மா அப்பாவ பாத்து கிட்டாலே போதும். வேற தெய்வத்தையே கும்பிட வேண்டாம். அத வுட்டுட்டு ஊர் ஊரா எதுக்குப் போவணும்?

நம்ப கோயில்ல பாருங்க, அதனாலதான் பெண்களுக்குத் தான் முதல் இடம் கொடுத்திருக்கோம். அம்மாவ மிஞ்சி யார் உண்டு? அவங்கள விட புனிதமான

சக்தி தானே விரும்பி ஆட்கொண்டதால் அவரே அன்னையாகி அனைவருக்கும் "அம்மா" ஆனார். நாலாயிரத்துக்கும் மேற்பட்ட ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றங்கள் உலகெங்கும் பரவி அம்மாவிற்குத் தொண்டு செய்ய காத்திருக்கிறார்கள்.

"இங்கே பதினைந்துக்கும் மேற்பட்ட பெண் சித்தர்கள் அடக்கமாகி இருக்கிறார்கள். அதனால்தான் இந்த மண்ணிற்கு இத்தனை மகிமை"

என்று அடிகளார் கூறியது சத்தியமே. அன்னையின் ஆணை பேரில் மைந்தனாகி சிறு கோயிலை இங்கு ஸ்தாபித்தார் அடிகளார். இன்றோ அங்கு ஒரு பல்கலைக் கழகமே வெகு விரைவில் வரப் போகிறது. அம்மாவிடம் வந்து ஆசி பெறாத பெருந்தலைவர்களே இல்லையென்று சொல்லலாம்.

அடிகளாரின் ஆசியோடு டாக்டர் ரமேஷ்



வங்க உண்டா? அதனாலதான் சக்தி பூஜைய கருவறையில பெண்கள்தான் செய்யறாங்க. வேற எந்தக் கோயில்ல இந்த மாதிரி உண்டு?"

அடிகளார் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்து அனைவருக்கும் வியப்பு. "அம்மா சாதாரணமா ஜாஸ்தி பேச மாட்டாங்க. நீங்க ரொம்ப பாக்கியசாலி" என்றார்கள்.

எளிய குடும்பத்தில் பிறந்து ஆசிரியர் தொழிலில் இருந்த பங்காரு அடிகளாரை ஆதிபரா

மருவத்தூரின் சேவை நிலையங்களுக்கு அழைத்துச் சென்றார். முதலில் சென்ற அந்த மிகப் பெரும் மருத்துவமனையைப் பார்த்து வாயைப் பிளக்காத குறைதான். நடுவில் மிகப் பெரிய உயர்ந்த மண்டபம். அதிலே நடுவிலே நின்று 'ஓம்' சொன்னால் நாதமாக இழைகிறது. முழுக்க முழுக்க அடிகளார் சொன்ன அளவில் கட்டப்பட்டதாம் அந்த மண்டபம். அதைச் சுற்றிலும் மகளிர் மருத்துவம் முதல், அவசர சிகிச்சை வரை பல்வேறு பிரிவுகள். சுத்தம் சுத்தம் எங்கு பார்த்தாலும் அப்படி ஒரு சுத்தம். ஆயிரக்கணக்கான நோயாளிகள் ஸ்கேனிங் முதல் அத்தனை சிகிச்சைகளையும் பெறுகிறார்கள் – அத்தனையும் இலவசமாக!

"அம்மாட்ட ஐந்து ரூபாய்னாவது வாங்கலாம்.

அப்பத்தான் அவங்களுக்கும் ஒரு அக்கறை வரும் னோம். அதெல்லாம் வேண்டாம். நம்மகிட்ட வலின்னு வர்றவனுக்கு நாம மருந்தாகணும். காசே வாங்கக் கூடாதுன்னு சொல்லிட்டாங்க" என்கிறார் டாக்டர் ரமேஷ். அடிகளாரை அனைவருமே அம்மா என்றுதான் அழைக்கிறார்கள். அவரின் ஆசியில் அத்தனை நவீன மருத்துவ உபகரணங்களும் வந்துள் ளன. விரைவில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான் அம்மாவின் கட்டளையாம்.


ஏற்கெனவே பொறியியல் கல்லூரியும், மற்ற பிரிவு களும், தங்கும் விடுதிகளும் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. மிகப் பெரும் ஆன்மீக சாம் ராஜ்யம் அங்கே நடந்து கொண்டிருப்பதைப் பார்க் கும் போது மனதில் மகிழ்ச்சி தாளவில்லை. இப்படி ஒவ்வொரு கோயிலும் சமூகப் பணிகளுக்கு மையமாக இருந்து தெய்வீக ஒழுக்கத்துடன் இளைஞர்களை வளர்த்து விட்டால் இந்த நாட்டிற்கு இணையாக உலகில் வேறு எந்த நாடு இருக்க முடியும்?

விட்டுத்தான் போவார்களாம்.

"இந்த இடத்தில் ஏதோ ஒரு மகத் துவம் இருக்கிறது. அது அம்மா வுக்குத்தான் தெரியும்!" என்கிறார் கள்.

அன்று பௌர்ணமிக்கு முந்தைய தினம். பௌர்ணமி அன்றைக்கு அங்கே நிற்க முடியாத அளவு கூட் டம் இருக்குமாம். ஆனால் அன்று அமைதியாக அனைவரையும் ஆட்டுவிக்கும் மகாசக்தியைத் தரிசிக்க முடிந்தது.

"உள்ளே வாருங்கள். நீங்களே பூஜை செய்யுங்கள்" என கருவறைக் குள் அழைத்தபோது அப்படியொரு பழக்கமேயில்லாத நமக்குத் தயக்கம் தான் வருகிறது. வடநாட்டிலே கோயிலுக்குள் லிங்கத்தைத் தொட்



மகிழ்வுடன் அங்கிருந்த ஒரு தோட்டத்திற்குச் சென்றோம். அதுதான் அடிகளார் தியானம் செய்யும் இடமாம். அற்புதமான இயற்கைச் சூழலில் நடுவிலே ஒரு புற்று. பின்புறம் சுயம்பு. அதற்கு முன்பு நவ கன்னிகைகள், பிள்ளையார் என இப்போது பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அங்குதான் அடி களார் வெகு நேரம் தியானத்தில் ஆழ்ந்திருப்பாராம். அந்த இடத்தின் அதிர்வலைகள் நன்றாகவே அதனை உணர்த்துகிறது.

உலகெங்கிலுமுள்ள பக்தர்களை தன்பால் கவர்ந்திழுக்கும் அந்தக் கோவிலுக்குள் நுழையுமுன் அடிகளார் இருப்பிடத்திற்குப் பக்கத்திலுள்ள தென்னை மரத்தைக் காண்பித்தார்கள். ஒரே தென் னங்கன்றிலிருந்து மூன்றாக வளர்ந்த தென்னைமரம் உயர்ந்து நிற்கிறது. பரமாச்சார்யார் இந்த இடத்தில் அமர்ந்து தியானம் செய்தாராம். காஞ்சி சங்கராச் சார்யார்கள் எப்போது இவ்விடத்தைக் கடக்க நேர்ந் தாலும் இங்கு வந்து சிறிது நேரம் தியானம் செய்து

டுத் தொட்டு வணங்குவார்கள். அங்கே போகும் போது நமக்கு அந்தப் பழக்கம் இல்லாததால் தொடவே கை வராது. இங்கு அன் னையின் கருவறைக்குள் போன போது 'அம்மாவின் அருகில் போகி றோம்' என்ற பெருமிதம் ஏற்படத் தான் செய்கிறது. தமிழில், வார்த்தை கள் தெளிவாகப் புரியும்படி, மனதில் இருந்து ஒவ்வொரு போற் றியும் வர நூற்றியெட்டு போற்றி களைச் சொல்லி குங்கும அர்ச்சனை செய்யச் சொன்னார்கள். மனமும், உடலும் ஒன்றிணைந்து அந்த மகா சக்தியின் பாதத்திலே ஒன்றியது. தகதகக்கும் அன்னையின் ஆட்டுவிக் கும் சக்தியை பணிந்து வணங்கி நெகிழ முடிந்தது.

மங்கையர் மலர்

நவம்பர்
2001

இனிப்பும், சுவையும் சந்தோஷமுமாக



தீபாவளிச் சிறப்பிதழ்

இரட்டைச் சிறப்பிதழாக!

கனவு போல நிகழ்ந்த அந்த பூஜை முடிந்து பிரசாதம் பெற்று எதிரிலிருக்கும அதர்வண பத்ரகாளியை வணங்கினோம். வடநாட்டில் தேடித் தேடிப் பார்த்து மகிழ்ந்த பல சக்தி பீடங்களின் சாயலையும், அதிர்வுகளையும் இங்கே உணர்ந்தது என்னவோ சத்தியம்தான்.

இங்கு வழிபடும் மக்களிடையேதான் எத்தனை ஈடுபாடு, கட்டுப்பாடு, கண்ணியம்! 'ஓம் சக்தி' என வார்த்தைக்கு வார்த்தை சொல்லும் செவ்வாடை அணிந்த ஆயிரக் கணக்கான பக்தர்கள் அம்மா இட்ட ஆணையைச் செய்யக் காத்திருக்கிறார்கள். கோயில் வளாகத்தை ஒவ்வொரு வழிபாட்டு மன்றம் ஒவ்வொரு நாள் பராமரிக்கிறதாம். தங்கள் முறை வராதா என ஆவலோடு காத்திருந்து ஆத்மார்த்தமாக தொண்டு செய்வதால் எல்லா இடங்களிலும் நீக்கமற தெய்வீகம் பொலிந்து இருக்கிறது.

அந்த ஆதிபராசக்தி அன்னை இத்தனையும் செய்ய ஒரு 'தங்கமான' மகனைத்தான் தேர்ந்தெடுத்து இருக்கிறார்! 'பங்காரு' அடிகளார் அன்றும் இன்றும் என்றும் எளிமையுடன் அன்னையே வழிநடத்திச் செல்ல அம்மாவாக, காவல் தெய்வமாகவே இலட்சக்கணக்கான மக்களுக்காக வாழ்ந்து கொண்டு இருக்கிறார். அடிகளார்தான் மன்றங்களை ஆரம்பித்து நெறிமுறைகளை வகுத்து இன்று ஆலமரமாகக் கிளைபரப்பச் செய்திருக்கிறார். அடிகளாரின் துணைவியார் திருமதி. இலட்சுமி அம்மாள் எழுதிய 'ஒரு ஆத்மாவின் அனுபவங்கள்' எனும் புத்தகத்தில் ஆரம்ப நாட்களில் அடிகளாரின் வாழ்விலே எப்படியெல்லாம் சோதனைகள் வந்தன, அப்படியும் எத்தனை பண்பாளராக வாழ்ந்தார் என்பதையெல்லாம் குறிப்பிட்டு இருக்கிறார். ஒரு சிறந்த இல்லறத்தானாக தன்னை தெய்வீக வாழ்க்கைக்கு உயர்த்தினார் என மெய்சிலிர்க்கும்படி எழுதியிருக்கிறார்.

எத்தனை விஞ்ஞான முன்னேற்றங்கள் வந்தாலும், அடிப்படையாகத் தெய்வ நம்பிக்கையும், இறைத் தத்துவமும் கலந்திருந்தால் தான் உயர்நிலை அடைய முடியும். அப்போதுதான் நாடும், சமூகமும் நல்ல வழியில் செல்லும். அவ்வகையில் இதோ, சென்னைக்கு அருகிலேயே ஒரு 'ஆன்மீக அமைதிப் புரட்சி' அம்மா அடிகளாரின் தலைமையில் மலர்ந்து மணம் பரப்ப ஆரம்பித்திருக்கிறது. அதை ஏற்று பயன்பெற வேண்டியது நாம்தான்.

படங்கள் : **லக்ஷ்மிநாராயணன்**



• சுமதி இத்தாலியில் வைத்த கொலு

பண்டிகைகளைக் கொண்டாடும் போது கூடவே எழும்பும் மண்ணின் வாசம். ஆனால் வெளிநாடுகளில் இருப்பவர்கள் இந்த மாதிரி நேரத்தில் இந்தியாவை 'மிஸ்' பண்ணுகிறோமே என நினைப்பார்களா? சிலரை ஈமெயிலில் தொடர்பு கொண்டு கேட்டபோது –



• சித்ரா குமார் குடும்பத்துடன்...

வெளி நாட்டில்

இன்னும் ஆர்வத்தோடு..



• சுமதி

திருமதி ஆர். சுமதி :

(சென்னையில் திருமண வாழ்க்கையை ஆரம்பித்த இவர் பிறகு டெல்லி, சூரத் போன்ற இடங்களுக்குச் சென்று விட்டு தற்போது பத்தாண்டுகளாக சவுதி அரேபியாவில் இருக்கிறார். இவருடைய இரண்டு மூன் ஏஜ் மகள்களான பவித்ரா, நித்யாவுடன் இவர் எந்த ஒரு பண்டிகையையும் விட்டு விடாமல் விமரிசையாகக் கொண்டாடுகிறார்.)

"நாங்கள் சூரத்தில் இருந்தபோது கொண்டாடிய நவராத்திரி பண்டிகைகள்தான் மிகவும் சிறந்தவை. ஒன்பது படிகளை வைத்து செட்டு செட்டாக பொம்மைகளை வைத்து பிரம்மாண்டமான கொலு வைப்போம். என் மகள்களுக்கு இதில் நிறைய ஆர்வம் உண்டு.

ஒன்பது நாளும் ஒன்பது வகை சுண்டல் செய்து, நைவேத்தியம் செய்து வருபவர்களுக்கு வெற்றிலை பாக்குடன் வெள்ளி நாணயம் வைத்துக் கொடுப்பேன். குஜராத்திப் பெண்கள் எங்கள் வீட்டில் கர்பா நடனம் ஆடுவார்கள்.

பிறகு வெளிநாட்டிற்குச் செல்ல நேர்ந்தது. இங்கேயும் ஓரிடம்

என்றில்லை. இடையில் ஓர் ஆண்டு இத்தாலியிலும் ஒன்றரை வருடங்கள் லாஸ் ஏஞ்சல்ஸிலும் வசிக்க நேர்ந்தது. இதனால் நம்மூர் பொம்மைகளை எடுத்துக் கொண்டு போக முடிவதில்லை. பெரும்பாலும் அங்கேயே கிடைக்கும் ஷோ பீஸ் பொம்மைகளை வைத்துத்தான் கொலு வைக்க முடியும்.

நவராத்திரி இப்போதெல்லாம் ஒரு சமூக பண்டிகையாகத்தான் இருக்கிறது. இந்தச் சமயத்தில் நண்பர்களை குடும்ப சமேதராக வீட்டிற்கு அழைத்து விருந்தோம்பல் நடத்துவோம். அப்போது பெண்கள் எல்லோரும் கூடி பஜன் பாட்டுகள் பாடுவது, டான்ஸ் ஆடுவது என்றும் செய்வோம். கடைசி மூன்று நாட்கள் எங்கள் குடியிருப்பில் கர்பா டான்ஸ் நடக்கும்.

சவுதியில் நாங்கள் கொண்டாடும் பண்டிகை சர்வதேச பண்டிகை என்று கூறலாம். இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து வருபவர்களும் ஒன்றாகப் பழகுவதால் ஒருத்தர் வீட்டிற்கு ஒருத்தர் சென்று வருவோம். நவராத்திரி சமயத்தில் நான் வைக்கும் விருந்தில் பல ஐட்டம்கள் இருக்கும். முக்கியமாக வட இந்தியர்கள் விரதம் மேற்கொள்வதால் ஜவ்வரிசியும் உருளைக்கிழங்கும் சேர்ந்த கிச்சடி அல்லது வடைதான் பிரதான ஐட்டம்!

வருபவர்களுக்கு எப்பாடுபட்டாவது நான் வெற்றிலை தேடி வைத்துக் கொடுத்து விடுவேன். அங்கு கிடைக்கும் 'பான்' இலையை வாங்கி இங்கேயிருந்து கொண்டு போகும் பாக்கு, மஞ்சள் குங்குமம், அங்கே கிடைக்கும் ஆப்பிள் அல்லது ஆரஞ்சுப் பழத்துடன் வைத்துக் கொடுப்பேன.

இந்தியாவில் நவராத்திரியின் போது ஆன்மீக உணர்வு அதிகமாக இருக்கும். கோயில்களுக்குச் சென்று வரலாம். பாட்டுக் கச்சேரி, நடனம் பார்த்து விட்டு வரலாம்.

நம் நாட்டில் பண்டிகை நேரத்தை நாங்கள் ஒருவிதத்தில் மிஸ் பண்ணுகிறோம் என்பது உண்மை. ஆனால் நம் சம்பிரதாயங்களை முடிந்த வரைக்கும் கடைபிடித்து, எங்கேயிருந்தாலும் பல கஷ்டங்களுக்கும் மத்தியில் விட்டு விடாமல் தொடர்ந்து நடத்தி முடிப்பதே தனி திருப்திதான். கூடவே ஒரே ஒரு மாநிலத்துடன் நம் அனுபவம் நின்று விடாமல், நம் நாட்டின் அந்நிய மாநிலத்தவர்களுடன் பழக பண்டிகை நாட்கள் நல்ல சந்தர்ப்பங்கள்."



• ஜெயந்தி ரகுநாத்

திருமதி ஜெயந்தி ரகுநாத் :
(ராக்லேண்ட், ந்யூயார்க்)

''கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக வருடா வருடம் நான் நவராத்திரி பண்டிகையைக் கொண்டாடி வருகிறேன். ந்யூயார்க்கிலிருந்து சற்று தொலைவிலிருக்கும் எங்கள் இடத்தில் வடஇந்திய மற்றும் தென்னிந்திய நவராத்திரி கொண்டாட்டத்தை நாங்கள் அனுபவித்து வருகிறோம்.

எங்கள் நண்பர்களின் பல வீடுகளிலும் கொலு வைக்கிறார்கள். 'வீக் எண்ட்' என்னும் வார இறுதியில் நண்பர்களை அழைப்பார்கள். பஜனைகள் நடக்கும். இங்குள்ளவர்களுக்கு, இந்தியாவை வெகுவாக மிஸ் பண்ணுவதால், பண்டிகைகளை எந்தக் குறையும் இல்லாமல் நடத்தும் வெறி இருக்கிறது.

தென்னிந்திய கொண்டாட்டத்தைத் தவிர வட இந்திய, குறிப்பாக கர்பா/டாண்டா ராஸ் நடனங்களையும் கண்டு களிக்கும் வாய்ப்புகள் எங்களுக்குக் கிடைக்கிறது. ராக்லேண்டின் இந்திய கலாச்சார சங்கம் இதை நடத்துகிறது. நடனத்தில் ஆர்வம் உள்ள எங்களைப் போன்றவர்களுக்கு இது ஒரு நல்ல அனுபவம்.

நம் நாட்டில் இருந்தால் பண்டிகைகளைக் கொண்டாடும் படலம் நம் ஊரின்

சம்பிரதாயங்களோடு முடிந்து விடுகிறது. ஆனால் எங்களைப் போல் வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்கு இந்தியா ஒரு பரந்த, பெரிய நாடு என்கிற உணர்வும் நாட்டுப்பற்றும் ஏற்படுகிறது. வெளிநாடுகளில் வடக்கும் தெற்கும் இணைகிற அற்புதத்தைக் காணலாம்."

திருமதி சித்ரா குமார் (துபாய்) :

"என் மனதில் பசுமையாக இருக்கும் நவராத்திரி நாட்கள் நாங்கள் கான்பூரில் இருந்த அருமையான நாட்கள்தான். அங்கேயே ஜன்மாஷ்டமி சமயத்தில் விதவிதமான பொம்மைகள் கிடைக்கும். அப்போதெல்லாம் நாங்களே வண்ணக் காகிதங்களை வைத்து தோரணம் பூ போன்ற அலங்காரங்களைச் செய்வோம். நாங்கள் ரொம்ப கிராண்டா நவராத்திரி பண்டிகையைக் கொண்டாடுவோம்.

வெளிநாட்டிற்குச் சென்ற பிறகு அந்த மாதிரி எல்லாம் கொண்டாட முடிகிறதில்லை. அதுவும் நவராத்திரி வந்து விட்டால் நம் நாட்டில் நிலவும் அந்த ஸ்பெஷல் நவராத்திரி சூழலை ரொம்பவே மிஸ் பண்ணுகிறோம். நவராத்திரி சமயத்தில் நண்பர்களைச் சந்திப்பதுதான் பிரதானமான விஷயம். இந்தியாவில் உள்ளதைப் போல் பெண்களை மட்டும் தனியாகக் கூப்பிட மாட்டோம். ஒரு கெட் டு கெதர் மாதிரி குடும்ப சமேதராகத்தான் சந்தித்துக் கொள்வோம். அநேகமாக விருந்தும் உண்டு.

துபாயில் தேங்காய், வெற்றிலை, பாக்கு என்று நம்மூர் பூஜை சாமான்கள் அனைத்தும் கிடைக்கும். விருந்து முடிந்து எல்லோருக்கும் வெற்றிலைப் பாக்கு வைத்துக் கொடுப்போம். இந்தியாவிலிருந்து வாங்கி வந்திருக்கும் ரிட்டர்ன் கிஃப்ட்டும் வைத்துக் கொடுப்போம்.

இங்கே கோலமாவு கூடக் கிடைக்கும். எல்லோர் வீட்டு வாசலுக்கு முன் ரங்கோலியும் போடுவோம். பட்டுப் புடவை, நகைகளை தைரியமாக அணிந்து கொள்வோம். வட இந்தியாவில் பண்டிகை நாட்களில் நகை அணிவது பாதுகாப்பாக இல்லாததால் அந்த சுதந்திரத்தை துபாயில் அனுபவிக்க முடிகிறது.

என்ன இருந்தாலும் பட்டுப் பாவாடை சரசரக்க நகை நட்டுடன் நாலு பேர் வீட்டிற்குச் சென்று குங்குமச் சிமிழை நீட்டி அழைக்கும் படலத்தை இந்தியக் குழந்தைகள் மிஸ்தான் பண்ணுகிறார்கள்."

மின் அஞ்சல் வழித் தொகுப்பு : **ஸ்வாதி**

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : குளிர்கால 'மொறுமொறு'... *கடைசி தேதி : 15.10.2001*

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்


Sparkling Symphony Rattle
Sparkling Musical Rattle
Baby's First Blocks
Stack 'n Build Blocks
Stack 'n Build Animals
Sparkling Musical Rattle
Chatter Phone

அம்மாவின் பிரியத்திற்கு ஈடான துல்லிய பொம்மை.

...இன்முகத்துடன் கற்றுக்கொண்டே வளர
உதவும் பொம்மை.

பாதுகாப்பான பொம்மையும் இது தானே...

- 70 ஆண்டுகளுக்கும் மேலாக ஃபிஷர் ப்ரைஸ் தங்கள் குழந்தைகளின் ஆற்றலை மேம்படுத்த தாய்மார்களுக்கு உதவி வந்துள்ளது.
- குழந்தையின் 4 வயது வளர்ச்சிவரை ஒவ்வொரு கட்டத்திலும் அவனுக்கு ஏற்ற சீரணியை தயாரித்தளித்துள்ளது.
- பொம்மை தயாரிப்பு நிபுணர்களால் எங்கள் ஆய்வு மையத்தில் சோதனைக்குட்பட்டது.
- இதனால் உங்கள் சின்ன செல்லத்திற்கு மிக பாதுகாப்பான, நவீன ஆய்வுடன், நஞ்சற்ற பொம்மைகள் அவன் வளரும் போது கிடைக்கிறது.
- ஆம், ஃபிஷர் ப்ரைஸ் பொம்மைகளே அவனுக்கு கிடைக்கும் சிறந்த நண்பர்கள்.

Fisher-Price

உங்கள் நம்பிக்கைகுகந்த பொம்மைகள்

Fisher-Price, C/o Mattel Toys (I) Ltd., PO Box No. 16356, Lower Parel, Mumbai - 400 013



இயல்பு

டி.வியிலும் பத்திரிகைகளிலும் டாக்டர்கள் கீரையை ஆகாரத்தோடு நிறைய சேர்த்துக் கொள்ளச் சொல்லுகிறார்களா, அதோடு புவனாவிற்கு வாய்ப்புண் வேறு வந்ததில் வாசலில் வருகிற கீரைக்காரியை அடிக்கடி கூப்பிட்டு அகத்திக் கீரை, மணத்தக்காளிக் கீரை வாங்கியதில் அந்தக் கீரைக்காரிக்கு நெருங்கிய வாடிக்கையாளர் ஆகிவிட்டேன் நான்.

தினமும் காலை ஏழு மணிக்குள், 'அரைக்கிரெ, தண்டுக்கிரெ, அகத்திக் கிரெ, மொளகு தக்காளிக் கிரெ, மணத்தக்காளிக் கிரெ... என்று ராகம் பாடிக் கொண்டு வந்து விடுவான் ராசமணி.

நான் அவளை ராஜாமணி என்பேன். அதற்கு அவள்,

"அம்மா எம்பேரை எப்பிடியோ கூப்புட்றீஹ! எம்பேரு ராசமணிம்மா" என்பாள்.

"ஆமா! அதென்ன மிளகு தக்காளிக் கீரைன்னாலும் மணத்தக்காளிக் கீரைன்னாலும் ஒண்ணுதானே, நீ ரெண்டும் ரெண்டு வகை மாதிரி கூவுறியே" என்றேன்.

"ஆமம்மா. சில பேரு மொளகு தக்காளிம்பாஹ சில பேரு மணத்தக்காளிம்பாஹ. யாரு எப்பிடிக் கேக்குறாகளோ அவுகளுக்கு இந்த ஒரே கீரையைத்தான் குடுக்குறேன்" என்றாள்.

கீரைக்காரி என்பதோடு நில்லாமல் அவளுடைய பிரியமான பேச்சால் அவளைப் பிடித்துப் போய் விட்டது எனக்கு.

கீரை விற்று முடிந்து பத்துப் பதினோரு மணிவாக்கில் அவள் வீடு திரும்புகையில் நான் வாசல் நடையில் உட்கார்ந்திருக்கையில் கொஞ்ச நேரம் அவளும் நானும் ஏதாவது பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவது நாளடைவில் பழக்கமாகி விட்டது. வெய்யிலானால் தண்ணீர் கேட்டு குடித்து விட்டுப் போவாள். இதெல்லாம் என் மருமகள் புவனாவுக்குப் பிடிக்காது.

"வந்துட்டா ஒங்க சிநேகிதி!" என்று வாசலைக் காட்டி கிண்டலாய் சில சமயங்களில் சொல்லுவாள்.

"என்னமோ பொழுதுபோகாததுக்கு அவளோட ரெண்டு வார்த்தை..." என்பேன்.

கீரைக்காரியைப் போய் எனக்குப் பிடித்திருக்கிறது என்று சொன்னால் சிரிக்க மாட்டாளோ இந்த புவனா! மனதுக்குள், 'கீரைக்காரி என்றால் என்ன சிநேகிதம் கொள்ளக் கூடாதா,' என்றிருந்தாலும் ஒன்றும் சொல்லுவதில்லை. அவள் என்னோடு பிரியமாய் இருப்பதோடு மட்டுமில்லை, என் கையையோ இடுப்பையோ விட்டு இறங்கா



மல் பாட்டிக் கோண்டுவாய் இருக்கும் என் பேரன் ப்ரபுவிடமும் வாத்ஸல்யமாய் கொஞ்சுவாள். அவளைப் பார்த்தவுடனேயே ப்ரபுக் குட்டி தன் மழலையில் எச்சில் ஒழுக ஒழுக, 'யாஹூ" ஜூஹூ"' என்று கையைக் காலை ஆட்டி சந்தோஷப்படுவான். அவளும்,

"என்னய்யா, சொல்றீக, எங்கூட ரீ விக்க வாரம்ங்கிறீகளா?" என்று கொஞ்சலாய் அவனைத் தூக்கி உச்சிமோர்ந்து விட்டுத் தருவாள். குழந்தையைத் தூக்குவாளே தவிர்த்து நாம் பயப்படுகிற மாதிரி முத்தமெல்லாம் கொடுக்காமல் கொஞ்சுவாள். அவளிடம் அந்த நல்ல பழக்கம் எனக்கு ரொம்பப் பிடித் திருந்தது.

வெகு நாட்கள் அவளுக்கு இரண்டு வயதில் ஒரு குழந்தை இருப்பது தெரியாது. ப்ரபுவுக்கு ஜலதோஷமும் காய்ச்சலுமாய் இருக்கையில்தான் ஒரு நாள் சொன்னாள்,

"எம் மகனுக்கும் தாம்மா காச்சலு. வாதம் வராமயிருக்க சொட்டு மருந்து குடுத்தாக வீடு வீடாக வந்து. அதுல தான் காச்சல் வந்துருச்சோன்னு எனக்குப் பயம். ராப்பூரா கண்ணு முளிக்கல புள்ள. விடிஞ்சும் விடியாம டாக்டரம்மாட்ட மருந்து வாங்கிக் குடுத்துட்டு ஓடியாரேன்" என்றாள்.


"குழந்தைக்கு என்ன வயசு?" என்றேன்.

"இந்த ஆனி வந்தா ரெண்டு வயசு பூர்த்



கண்ணம்மா பகவதி





சிறிய அளவிலும் கொண்டாடலாமே!

எங்கள் வீட்டு பூஜையறை சின்னது. ஆனாலும் அலமாரியில் என் மாமனார் தோண்டிய குளத்தில் (காஞ்சிப் பெரியவா சொல்லி மெலட்டூரில்) எடுத்த பிள்ளையாரும் மாமியார் கொடுத்த பாதுகையும் (பெரியவா) துளஸி அம்மன் முகமும் வைத்துப் பூஜிப்பேன்.

துளஸி அம்மன் முகத்தை வைத்தே அலங்காரங்கள் செய்து சரஸ்வதி, துர்கை, லட்சுமி என்று ஒன்பது நாளும் கொண்டாடி சரஸ்வதி பூஜை அன்று பூஜை செய்வேன்.

— எஸ். தனலக்ஷ்மி.

டியா முடியுதும்மா'' என்றாள்.

''அடடா, கொழந்தையை யார்கிட்டே விட்டுட்டு வரே பத்திரமாப் பாத்துப்பாங்களா?'' என்றேன் கரிசனமாய்.

''என்ன செய்யம்மா வயிறு இருக்குதே. எங்கம்மா என் வீட்டோடதான் இருக்குது. அதுகிட்ட விட்டுட்டு வருவேன்'' என்றாள்.

நல்ல வெயில் காலம் ஆரம்பமாகி விட்டது. பதினோரு மணிக்கு நான் எலுமிச்சம் பழம் பிழிந்து குடிக்கிற நேரத்திற்கு வெயிலில் வதங்கி வாடி ஆஸ்ஊஸ் என்று காலிக் கூடையோடு வந்து திண்ணையில் உட்காருகிற ராசமணிக்கு பழைய சாதத் தண்ணீரோ இல்லை மோரோ கொடுப்பது இப்போது எனக்கு வழக்கமாகி விட்டது.

புவனா, ''குளிச்சாச்சுன்னா பழையதைத் தொட மாட்டேன்கிற காலமெல்லாம் மலையேறிடுத்தாம்மா?'' என்றாள் ஒருநாள் பேச்சோடு பேச்சாய்.

''வயித்துக்குப் போகிற ஆகாரம். அதையென்ன அபிஷேகமா பண்ணிக்கப் போறேன்? பாவம் வெயில் தாங்கல அவளுக்கு. நீராகாரம் இதமா இருக்கு அந்த ஏழைக்குன்னா, மடியையும் ஆசாரத்தையும் சித்தே பின்னுக்குத் தள்ளிக்க வேண்டியது தான்'' என்றேன் சற்றுக் கோபமாக.

அன்று ஞாயிற்றுக்கிழமை என் மகன் ரகுவும் மருமகள் புவனாவும் வீட்டிலிருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை என்ற சாவகாசத்தில் எல்லோருமே காலை எழுந்திருப்பதில், அடுப்பில் செய்வதில் எல்லாமே லேட். அதோடு ராசமணியையும் வெகு நேரமாய்க் காணவில்லை. 'என்ன அவளுக்குமா ஞாயிற்றுக்கிழமை சாவகாசம்?' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன். மணி ஒன்பதாகப் போகையில்தான் அவள் சத்தம் தெருமுனையில் கேட்டது. இடுப்பில் ப்ரபுவும் கையில் முறமும் காசுமாய் நான் வாசலுக்குப் போன போது, கீரைக் கூடை தலையிலும் இடுப்பில் குழந்தையுமாய் வந்து கொண்டிருந்தாள் ராசமணி. கிட்டே வந்ததும் அவள் குழந்தையைப் பார்த்தேன். குழந்தை கீரைக்காரியின் குழந்தை போலில்லாமல் நல்ல செழிப்பாய்த் துறுதுறுப்பாய்த் தெரிந்தது.

''ஒங்கொழந்தையா ராஜாமணி? என்ன பேரு?''

''அவுக தாத்தா பேரும்மா. செகவீர பாண்டியன்னு வச்சது... கூப்புட்றது பாண்டி பாண்டின்னு'' என்றாள் சிரித்தபடியே ராசமணி.

''ஏன் கொழந்தையைக் கூட்டிண்டு வந்தே. கூடையையும் பிள்ளையையும் சொமந்துண்டு எவ்வளவு தூரம் விப்பே?''

''ரொம்ப சிரமமாத்தாம்மா இருக்குது. வீடு வீடா இவனையும் இறக்கி கூடையையும் இறக்கி அதான் ரொம்ப லேட்டு வேற. என்ன செய்ய, எங்கம்மா, அது கூட பிறந்தது


மைசூர் ஸாண்டல்
அம்மாவின் அரவணைப்பைப் போலவே
அருமையும் இனிமையும் தருவது.
Baby
Powder

ஒரு தம்பி. எம் மாமா. அவருக்கு ரொம்ப முடியாம இருக்குன்னு நேத்து சாயங்காலம் பாக்கப் போயிருக்கு. மானாமதுரையில ஆசுபத்திரியிலயிருக்காராம் மாமா. பின்ன என்ன செய்ய? யாவாரத்த வுட முடியுமா... எப்பிடியோ சமாளிப்பம்முன்னு சரக்கும் எடுத்திட்டேன். இப்ப இவனையும் தூக்கி கூடையையும் தூக்கிங்கயில தெகமுட்டிக் கிட்டு வருது நடக்க முடியலை" என்றாள்.

அவள் கீழே இறக்கி விட்டிருந்த அவள் மகன் பாண்டியனை நோக்கி ப்ரபுக்குட்டி இரண்டு கையையும் நீட்டி சந்தோஷமாய்க் கத்திக் கொண்டு தானும் என் இடுப்பை விட்டுக் கீழே இறங்கினான். மறு நிமிஷமே இரண்டு குழந்தைகளும் ரொம்ப சகஜமாய் ஒன்றோடொன்று விளையாடத் துவங்கி விட்டனர். பாரம் சுமந்து இரண்டையும் இறக்கி வைத்த ஆசுவாசத்தில் பிள்ளைகள் விளையாடுவதைப் பார்த்தபடி நின்றாள் ராசமணி. நான் உள்ளே போய் கீரைக் கட்டை வைத்து விட்டு பாண்டியனுக்கு இரண்டு பிஸ்கெட்டுகள் எடுத்தேன்.

புவனா, "என்னம்மா, உங்க சிநேகிதம் அடுத்த சந்ததிகிட்டயும் தொடர்கதையா ஆரம்பமாறதா?" என்றாள்.

நான் அவளுக்கு பதிலேதுவும் சொல்லாமல் பிஸ்கட்டுகளைக் கொண்டு போய் குழந்தைகள் கையில் கொடுத்தேன்.

"இங்ஙனயே இந்தத் தம்பி கூடவே சித்த நேரம் வெளையாடிக்கிட்டிருக்கியா கண்ணு? அம்மா ஒரே ஓட்டமா கீரை வித்துட்டு வந்து ஒன்னெத் தூக்கிக் கிடறேன், வரயில ஒனக்கு முறுக்கும் கடலை மிட்டாயும் வாங்கீட்டு



பட்டர் பீன்ஸ் பொரியல் செய்யும் போது தேங்காயுடன் இரண்டு ஸ்பூன் சீரகமும், பச்சை மிளகாயும் வைத்து அரைத்துப் போடுங்கள். வித்தியாசமான மணத்துடன் இருக்கும்.
– அஞ்சலி மாரியப்பன்.

"வாரேன் அம்மா. என்ன பாண்டியா?" ராசமணி கேட்டுக் கொண்டிருந்தாள் தன் மகனிடம்.

பாண்டியனும் ப்ரபுவைப் பார்த்த மகிழ்ச்சியிலும் தின்பதற்கு பிஸ்கெட் கிடைத்த மகிழ்ச்சியிலும் பெரிதாய் மண்டையை ஆட்டி சம்மதம் சொன்னான்.

"யம்மா! பய இங்ஙன சித்தெ நிக்கட்டும்மா. தம்பி கூட வெளையாடிக்கிட்டிருக்கம்ங்கிறான். தூக்கி செமக்க முடியல. நடக்கிற புள்ளயும் இல்ல, தூக்குற புள்ளையும் இல்லையா சிரமமாத் தெரியுது" என்று இரக்கமாய்க் கேட்டாள் ராசமணி.

குழந்தை விளையாடிக் கொண்டிருக்கப் போகிறது, கீரை விற்று முடிந்து ஒரு மணி நேரமோ ஒன்றரை மணி நேரமோ ராசமணி வந்து தூக்கிக் கொள்ளப் போகிறாள் என்ற நினைப்பில்,

"சரி சீக்கிரம் வந்துடு. அழ மாட்டானே?" என்றேன்.

"அதெல்லாம் அழமாட்டாம்மா. தெனம் என்னைவுட்டு இருந்து பழக்கம்தானே. அதுவுமில்லாம கூட வெளையாட தம்பி வேற தோதா இருக்குல்ல" என்ற ராசமணி கீரைக் கூடையோடு பறந்தோடிப் போனாள்.

நான் வாசல் நடையில் உட்கார்ந்து கொண்டேன். தத்தக்காபித்தக்கா என்ற மழலையில் ப்ரபுவும் சற்றுக் கூடுதல் தெளிவான மழலையில் பாண்டியனும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் முன் வாசல் புல் தரையருகில்.

புவனா அடுக்களையை விட்டு வெளியில் வந்தவள், வாசலில் வந்து பாண்டியன் வரவு பற்றி விவரம் விசாரித்து விட்டு தனக்குப் பிடிக்கவில்லை என்கிறதை முகத்தை சற்றுக் கோணலாக்கி எனக்கு உணர்த்திவிட்டுப் போனாள்.

நான் வாசல் நடையிலேயே விளையாடும் பிள்ளைகளைக் காவல் காத்துக் கொண்டிருந்தேன்.

மணி ஓடிக் கொண்டிருந்தது. பத்தரை, பதினொன்று, பதினொன்றரை, பனிரெண்டு...

நான் உள்ளே திரும்பி மணியைப் பார்ப்பதும் ராசமணி வருகிறாளா என்று தெருக்கோடியைப் பார்ப்பதுமாகப் பொழுது போய்க் கொண்டேயிருக்க ப்ரபு 'லாலா' வேண்டுமென்று அழ அவனைத் தொட்டிலில் போட்டுத் தூங்கப் பண்ணினேன்.

பாண்டியன் தனியாக ஆனால் சமர்த்

எப்பொழுதும் காராமணி பயறு, கடலை என்று சுண்டல் செய்வதை விட மாறுதலாக மைக்ரோவில் என்று சங்கு மாதிரி ஒன்று இருக்கிறது. அதை வேகவைத்து வெல்லம் போட்டு, தேங்காய்த் துருவி ஏலக்காய் போட்டுச் செய்தால், வித்தியாசமாக இருக்கும்.

- சித்ரா ஸ்ரீதர்.



தாக திண்ணையில் காலைத் தொங்கப் போட்டபடி உட்கார்ந்து பராக்குப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் முகத்தில் சற்று முன் விளையாடும்போதிருந்த சந்தோஷம் இல்லை.

நேரம் மேலும் செல்லச் செல்ல அவன் அழ ஆரம்பிக்கிற மாதிரியான தோற்றம் தெரிந்தது.

"அம்மா! சாப்பிட வரல்லையா? ஏன் இன்னும் வாசல்லியே உட்கார்ந்திருக்கீங்க?" என்று கேட்டபடி வந்த புவனா பாண்டியனைப் பார்த்து விட்டாள்.

"இதென்ன அத்தே, ராசமணி பையன் இன்னமும் இங்கேயிருக்கான்? அவ வரல்லையா?"

புவனா குரலில் லேசான கோபம் தெரிந்தது. ஆமாம். எல்லா நேரமும் என்னை அம்மா என்கிறவள் கோபம், பிடிக்கவில்லை என்கிற தருணங்களில் உள்ளபடியான உறவு முறையாய் அத்தை என்பாள்.

"இதோ வந்துட்டேன்னு போனா. கீரை விக்கலியோ என்னவோ! இன்னும் காணலியே ராசமணியை?" என்றேன்.

"நல்லாத்தான் கீரை வித்தா போங்க. அதிருக்கட்டும் பசிக்கலையா உங்களுக்கு? வாங்க சாப்பிட!" என்றாள்.

எனக்கு மனசு வருமா அந்தக் குழந்தையை வாட விட்டுட்டு நான் சாப்பிடப் போக!

"பசியில்ல புவனா. நீயும் ரகுவும் சாப்பிடுங்க" என்று அவளை உள்ளே அனுப்பி வைத்தேன்.

புவனா போய் என்ன சொன்னாளோ சிறிது நேரத்தில் ரகு வாசல் நடைக்கு வந்து, "ஏம்மா சாப்பிடாம உக்காந்திருக்கே?" என்றவனிடம் பாண்டியனைக் காண்பித்து, "பாவம்டா குழந்தை" என்றேன்.

"உனக்கெதுக்கும்மா இப்படி வீண் வெட்டி வேலையும் விவகாரமும்? கீரைக்காரி குழந்தையை ஆயா மாதிரி நீ பாத்துக்கணுமா. அதான் கோபப்பட்டு புவனா... சரி போகட்டும். அந்தப் பையனுக்கும் சாதம் போட்டுட்டு நீயும் சாப்பிடேன்" என்றான்.

அவனுக்கு என் குணம் தெரியுமே. நான் உள்ளே எழுந்து போய், 'இதென்ன எங்கே போனாள் இந்த ராசமணி' என்ற புலம்பலோடு ஒரு சின்ன தட்டில் சாதம் பிசைந்து எடுத்து வந்து பாண்டியனிடம் சாப்பிடக் கொடுத்தேன்.

பசி நிறைய போலிருக்கிறது. வேக வேகமாய் சாப்பிட்டான் குழந்தை. ஒரு பருக்கை சிந்தாமல் அவன் சாப்பிட்ட லாவகத்தை ரசித்தேன்.

மணி இப்போது இரண்டரை. எனக்கு இப்போது ராசமணி மேல் கோபம் கோபமாக வந்தது. குழந்தையை அந்நியரிடம் விட்டுப் போயிருக்கிறாள், எப்படிப் பொறுப்பற்று... வந்தவுடன் நாலு வார்த்தை சூடாகக் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். நான் வாசல்படியில் சற்றுத் தலைசாய்க்க பாண்டியனும் திண்ணையிலேயே படுத்துத் தூங்கியிருந்தான். உள்ளே புவனா குழந்தை ப்ரபுவுக்கு பாலோ ஸெரிலாக்கோ ஊட்டிக் கொண்டிருக்கும் சத்தம் கேட்டது.

"அதோ கப்புப் பூனை ஒங்கிட்ட மம்மு கேக்குது பார். ஏய் கப்புப் பூனை! ஒனக்கில்லே, எங்க ப்ரபுக் குட்டிக்குத்தான் மம்மு இல்லையாடி தங்கம்" என்றபடியே குழந்தையும் கையுமாய் வாசலுக்கு வந்தவள் தூங்குகிற பாண்டியனைப் பார்த்து விட்டாள்.

வேண்டாத வம்பை விலைக்கு வாங்கி விட்டதாகவும் இப்போது என்ன செய்வது என்றும் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டாள். ராசமணியை ஒரு பாட்டம் திட்டித் தீர்த்தாள். ரகுவும் தன் தலையில் அடித்துக் கொண்டு,



"உஜாலா சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் மட்டுமே துணிகளுக்கு இணையற்ற வெண்மையின் ஜொலிப்பை தரும்"

INSTA-WHITENING SYSTEM

ஜோதி லேபின் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் ஆராய்ச்சி மூலம், பரிசுத்தமான, துணிகளை, சேதப்படுத்தும் இரசாயனக் கூறுகள் எதுவும் இதில் இல்லை என நிருபணம் பெற்ற மிக சிறப்பான ஃபார்முலாதான் உஜாலா சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம். தண்ணீரில் உடனடியாகக் கரைவதோடு, துணிகளின் நுட்பமான நூலிழைகளினுள் ஆழ்ந்து ஊடுருவி, துரிதமாக செயல்பட்டு, துணிகளில் வெண்மையின் வெளிச்சத்தை கொண்டு வருவது உஜாலா **சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டத்தால்** மட்டுமே முடிந்த ஒன்று.

விஞ்ஞான ஆதாரமற்ற முறையில் அல்லாத சாதாரணமான தயாரிப்புகளில் உள்ள தரங்குறைந்த இரசாயனங்கள் நாளடைவில் துணிகளில் நூலிழைகளை பாதித்து, வலுவற்றதாக்கிவிடும் துணிகளில் கறைகளை ஏற்படுத்தும்போது, உஜாலா சுப்ரீம் துணிகளுக்கு வலிமை குறையாதிருக்கச் செய்து வெண்மையை நிலை நிறுத்துகிறது.

விஞ்ஞான உண்மைகளை அறியாத ஒரு சிலர் உஜாலாவின் வாக்குறுதிகளையும் அதன் செயல்திறனையும் நம்ப மறுக்கலாம். அவர்கள் அறியாதது அதன் சிறப்பான ஃபார்முலாவையே.

நீங்களே சந்தேகங்களை போக்கிக் கொள்ள சுயமாக சோதித்துப் பாருங்கள்.



சாதாரண தயாரிப்புகளில் உள்ள தரம் குறைந்த இராசயனங்கள் துணிகளில் நூலிழைகளை சேதப்படுத்துகின்றன



உஜாலா சுப்ரீம் இன்ஸ்டா வைட்னிங் சிஸ்டம் துணிகளில் இணையற்ற **வெண்மையான வெளிச்சத்தை** தருகிறது



UJALA Supreme

வெண்மையின் புதிய நிறம்

A product of Jyothy Laboratories Ltd.

"ஏம்மா இப்பிடி வீண் வம்பில மாட்டிக்கிறே? இப்போ கீரைக்காரி எங்க போனா, அவ வீடு எங்கே இருக்கு, இது அவ குழந்தையா, கடத்திட்டு வந்திருக்காளா, என்ன விவரம் ஒண்ணுந் தெரியலை. அவ குழந்தைன்னா இத்தனை நேரம் வராமயிருப்பாளா? போலீஸ் கேஸு அது இதுன்னு காலம் போற போக்கு உனக்கெங்கே தெரியறது?" என்று பொரிந்து தள்ளினான்.

அவனாவது நியாயமாய்க் கவலைப்பட்டான். புவனாவின் இடைவிடாத அர்ச்சனை என்னைத் திணற அடித்தது. இதற்கிடையில் பாண்டியன் தூக்கம் கலைந்து எழுந்து கொண்டவன் முகத்தில் பெற்றவளைக் காணாத கலவரம் தோன்றி மிரண்டாலும் ப்ரபுவைப் பார்த்ததும் சட்டென்று சந்தோஷமாகி விளையாட ஆரம்பித்து விட்டான்.

புவனாவும் ரகுவும் உள்ளே தோட்டத்துப் பக்கம் இருந்த சிறிய மறைமுக இடைவெளியில், வேகமாய்ச் சிறிது காப்பி கலந்து எடுத்து வந்து பாண்டியனுக்குக் கொடுத்தேன். குழந்தைப் பசி கொடும்பாவமில்லையா?

இருட்டி வெளியிலும் கூட தெருவிளக்குப் போட்டு விட்டார்கள். ராசமணி வரும் சுவடே இல்லை. எனக்குள்ளும் 'என்னடா இப்படி எதிர்பாராத வம்பில் சிக்கிக் கொண்டு விட்டோமே' என்ற பரிதவிப்பு இடைவிடாமல் ஓடிக் கொண்டேயிருக்க பாண்டியனைப் பார்ப்பதும் தெருக்கோடியைப் பார்ப்பதுமாய் பொழுது நகராமல் நகர்ந்து கொண்டிருக்கிறது.

ஏழரை மணியிருக்கும். வாசலில் ரிக்ஷா ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து சிரமப்பட்டு பிடிகளைப் பிடித்துக் கொண்டு இறங்குவது... ராசமணிதான்.

அப்பா! எனக்கு உயிர் வந்தது. ஆனால் இருட்டில் உற்றுப் பார்க்க ராசமணி தலை, கை, கால், எல்லாம் ஆஸ்பத்திரி பாண்டேஜ்.

"அம்மா" என்று கூப்பிட்டபடி மெது வாய் வந்த அவள் கண்களில் கண்ணீர்.

"என்ன ராஜாமணி, என்ன ஆச்சு?"

நான் பதறியபடி கேட்க, அவள் தன் மகனை அந்த முடியாத நிலையிலும் அழுது கொண்டே கட்டிப் பிடித்துத் தூக்கினாள்.

"இந்தத் தெரு தாண்டி பெரிய பஜாருக்கு நுழையும்போதே ஒரு மோட்டார் சைக்கிள் காரக் கொடும்பாவி சடார்னு எம் மேல வண்டியை ஏத்திப்புட்டாம்மா. 'டோச்சுடா! மோதப் போறானே'ன்னு கண்ணு தட்டுற நேரம் மெரண்டதுதான் ஞாபகம் இருக்கு. அதுக்கப்புறம் ஒண்ணுந் தெரியாது. ரோட்டுல வந்துக்கிட்டிருந்த எந்த மகராசரோ பெரியாஸ்பத்திரிக்கிக் கொண்டுட்டுப் போயிருக்காங்க. சாயங்காலம் அஞ்சு மணிக்குத்தான் முழிப்பு வந்திருக்குது. நா பதர்றேன், புள்ளைய இப்பிடி ஒரு அம்மா வீட்ல விட்டுட்டு வந்திருக்கேன் போகணும்ய்யான்னு. டாக்டரும் உடமாட்டேங்கிறாரு, போலீஸ்காரரும் கேசு கேசுன்னு எழுதுறாரு உடமாட்டம்ங்கிறாரு. இந்தப் பக்கம் மேலு காலு வலி உசுரு போகுது. அதோட அவுக காலுகள்ல விழுந்து புலம்பி இப்படிப் புள்ளய விட்டுட்டு வந்திருக்கன்ய்யா அவுக தவிச்சு மறுகுவாகன்னு கெஞ்சி கூத்தாடி ரிக்சா புடிச்சு ஓடியாரேன்" என்று கண் கலங்கினாள்.

எனக்கு, 'நல்லகாலம், அவள் உயிர் பிழைத்து வந்தாளே' என்றிருந்தது.

புவனாவும் ரகுவும் சத்தம் கேட்டு வாசலுக்கு வந்திருந்தார்கள். 'பாண்டியன் தொந்தரவு பண்ணினானாம்மா' என்றெல்லாம் கேட்டு விட்டு வந்த ரிக்ஷாவிலேயே வீடு திரும்ப குழந்தையோடு ஏறப் போனவளை,


"ராசமணி இரு. கொஞ்சம் இரு" என்ற புவனாவின் குரல் நிறுத்தியது.

"கார்த்தாலேருந்து ஒண்ணும் சாப்பிட்டிருக்க மாட்டே. இரு. ஒரு வாய் சாதம் போட்றேன். சாப்ட்டுட்டுப் போ."

என்கிற புவனாவை என் மருமகளை நான் ஆனந்தத்தால் கண்ணீர் மேலிட சந்தோஷமாய்ப் பார்க்கிறேன்.

ராசமணிக்கும் அவள் குழந்தைக்கும் சாதம் எடுக்க உள்ளே விரைந்து கொண்டிருக்கிறாள் புவனா.

இட்லிக்குத் தேங்காய்ச் சட்னி அரைக்கும் போது இரண்டோ, மூன்றோ புதினா இலைகளைச் சேர்த்து அரைக்கவும். நல்ல சுவையாகவும், மணமாகவும் இருக்கும். – எஸ். சரஸ்வதி சுவாமிநாதன்.



மெழுகில் அழகான
தெய்வ முகங்கள்

"மூன்று வருடங்களுக்கு முன்பு பொழுதுபோக்கிற்காக ஆரம்பித்த வேலை இன்று வருமானம் ஈட்டித் தரும் பெரிய வேலையாக ஆகிவிட்டது" என்கிறார் சுபத்ரா.

வெள்ளியினால் செய்யப்படும் கடவுளரின் உருவங்களுக்கு மாற்றாக ஏதாவது கண்டுபிடித்துச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டதும், இவர் முதன் முதலாக லக்ஷ்மியின் முக உருவத்தைக் களிமண்ணில்



அமைத்து, பிறகு தேங்காயில் அந்த உருவத்தைப் பொருத்தினார். பிறகு அதற்கு அழகான அலங்காரங்கள் செய்தார். இவர் இப்படிச் செய்த லக்ஷ்மி உருவத்தை அக்கம் பக்கத்தவர் மற்றும் உறவினர்கள் வாங்கிச் சென்றனர்.



களிமண்ணினால் அச்சு கூட இல்லாமல் இவரால் உருவாக்கப்பட்ட முகங்களுக்கு டிமாண்ட் அதிகமாவதைப் பார்த்த சுபத்ரா கடவுளர் முகங்களை மெழுகில் அச்சு எடுத்து முயற்சி செய்தால் என்ன என்ற யோசனை எழுந்ததும் உடனடியாக முயற்சியில் இறங்கினார்.

முதன் முதலாக மெழுகில் முகம் செய்ய ஆரம்பித்த போது அச்சு இருக்கவில்லை. ஒவ்வொரு பாகமாக கையாலேயே முகத்தை உருவாக்கினார். அதற்குப் பிறகு மெழுகில் மகாலக்ஷ்மி, சரஸ்வதி, கிருஷ்ணர்,

சிவன், கௌரி என்று பல முகங்களை மெழுகு அச்சில் வார்த்துக் கொண்டு தற்போது அதிக அளவில் முகங்களை உருவாக்குகிறார். மெழுகை உருக்கி அச்சில் முதலில் வார்க்கிறார். பிறகு அது



நன்கு ஆறியதும் அதை நன்கு அலங்கரிக்கிறார்.

கௌரி, லக்ஷ்மி முகங்களுக்குக் கிரீடத்திற்கு கோல்டன் கலர் முதல் காதில் கல் பதித்த ஜிமிக்கி, தோடுகள், கல் பதித்த மாலைகள், மணி, கல், முத்து பதித்த கிரீடம், கண்ணைப் பறிக்கும் கல் மூக்குத்திகளுடன் இவருடைய தெய்வ முகங்கள் கண்ணைப் பறிக்கின்றன.

இவருடைய சகோதரி ஆடைகள் தைப்பதில் வல்லவர். முகத்துடன் பாவாடை அலங்காரம் வேண்டுபவர்களுக்கு சரிகைப் பாவாடை அலங்காரத்துடன் செய்து கொடுக்கிறார். சிவன் உருவத்திற்கு ருத்திராட்சை, க்ருஷ்ணர் தலைக்கு மயில் பீலி என்று பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்யும் நேர்த்தி மிகவும் பாராட்டத்தக்கது. கடவுளரின் முகங்களுக்காக அலங்காரம் செய்ய உபயோகிக்கப்படும் கல் நகைகள் உயர்ந்த விலைகளில் விற்பதால், கல் பதித்த நகைகள் உபயோகப்படுத்திச் செய்யப்படும் முகங்கள் 1000 ரூபாய்க்கு விற்கப்படுகின்றன. மெழுகின் அளவு மற்றும் உபயோகிக்கப்படும் நகை அலங்காரம் பொறுத்து இவருடைய அழகான தெய்வ உருவங்கள் 70லிருந்து ஆரம்பித்து 1000 ரூபாய் வரை விற்கப்படுகின்றன.

மகாலக்ஷ்மி விரதம், கோகுலாஷ்டமிக்காக கௌரி, மற்றும் கிருஷ்ணர் உருவங்களுக்கு தற்போது அதிக டிமாண்ட் இருப்பதாகக் கூறுவதை நேரில் பெண்கள் வாங்க வருவதைப பார்த்து அறிந்து கொள்ள முடிகிறது. சுபத்ராவின் பெண் அர்ச்சனாவும் அவரைப் போலவே மெழுகு உருவங்களை அழகாகத் தயாரிக்கிறார். ஜோடியாக சிவன் பார்வதி, லக்ஷ்மி நாராயணன் என்று பலரும் கேட்பதால் அதுமாதிரி ஜோடியாக பொம்மை உருவங்கள் தயாரித்துக் கொடுக்கிறார்.

குடும்பப் பெண்மணியாக இருந்து கொண்டு தன்னுடைய சொந்த முயற்சியால், சிறந்த மெழுகு உருவங்களைச் செய்து நல்ல வருமானம் ஈட்டுவதுடன், கடவுள் உருவங்களைச் செய்வதில் மிகவும் மனத்திருப்தி அடைவதாகக் கூறுகிறார் பெங்களூரில் இருக்கும் சுபத்ரா பத்ரிநாத்.

— இந்திரா கோபாலன்

இணைப்பு அட்டையில் : மெழுகுவார்ப்பில் **கௌரி அம்மன்**

வழிவந்த வழிபாடு



கைக்குள் கனவுகள்



சுக்ரா ஜுவல்லரி

ஆசியாவின் மிகப் பெரிய வெள்ளி நகை ஷோரூம்

42, வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை – 4.

☎ : 044 - 4940699, 4951195, 4610193 Fax : 044 - 4935232


Website http://www.sukra.com E-mail : sukra@md3.vsnl.net.in

நறுமணம்,
சென்னை.

எனக்குத் திருமணமாகி 32 வருடங்களாகிறது. என் மாமியார் வீட்டில் அன்பு, பண்பு என்னவென்று தெரிந்தும் வேண்டியவர்களுக்கு மட்டும் அளிக்கப்படும் கொடூரம். என் கணவரோ உயர்ந்த பதவி. ஆனால் மிக மிக சுயநலவாதி - திருத்த முடியாத வியாதியாகியது என் வாழ்வின் அவலம். பிள்ளைகளுக்கும் - அம்மா -பணம் பிடுங்கவே மட்டும். இங்கு எதிர்மாறான ஒன்றை எதிர் நீச்சலிட்டு வாழப் பிடிக்கலை. வயது 52. வசதி, படிப்பு உள்ளது. தனியாக இவர்கள் கண்ணுக்கு மறைவாகப் போய்விட இறையருளை வேண்டுகிறேன் - தங்களின் அறிவுரை.

உங்களைப் போல வாழ்க்கையில் விரக்தியாகிப் போன பல பெண்கள் தனியாகப் போக வேண்டும் என்று நினைக்கிறார்கள். எனக்கு அப்படிக் கடிதம் எழுதுகிறவர்கள் பல பேர்.

உங்கள் வருத்தம் புரிகிறது.



தனியாகப் போவது எப்போது என்றால் அந்தப் பிரிவு உங்களுக்கு ஒரு நிம்மதியை, புது வாழ்வை கொடுக்குமா என்று ஆலோசித்த பிறகு. அதற்கு உங்கள் மனம் குடும்பப் பற்றை முழுமையாகத் துறந்த நிலையில் இருக்க வேண்டும். இல்லையெனில் தனியாக வந்த பிறகு தனிமையும், கடந்த கால வாழ்க்கையின் வேதனையும் சேர்ந்து உங்களைக் கொத்தி எடுத்து விடும். இது அதைவிட நரகமாகிப் போய்விடும்.

அதற்குப் பதில் இருக்கும் இடத்திலேயே எப்படி நம்மை இவை பாதிக்காமல வாழ முடியும் என யோசிக்கலாம். அதற்கு நிறைய வழிகள் உள்ளன. மனம் மிகவும் துன்பத்தில் இருக்கும் போது எந்த முடிவையும் எடுக்காமல் இருப்பது நல்லது. குழம்பிய நீரில் எதுவுமே தெரியாது. ஓரளவு தெளிவாக இருக்கும் போது பாதையை வகுப்பது நல்லது.

பெயர் வெளியிட விரும்பாத வாசகி.


என் பிரச்னையே என் 18 வயது மகள்தான். என் ஒரே மகளை ரொம்ப செல்லமாக வளர்த்தேன். என் வளர்ப்பு சரியில்லையோ என்று இப்பொழுது ஏங்காத நேரம் கிடையாது. என் மகள் என்னிடம் ஒரு விரோதி மாதிரி நடந்து கொள்கிறாள். அதாவது ஏதாவது ஒன்றில் குறைகண்டுபிடித்துக் கொண்டே இருப்பாள். உடம்பு சரியில்லை என்றாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாமல் அவளது தேவை அத்தனையும் கஷ்டப்பட்டாவது நிறைவேற்றுவேன். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. எங்களைக் கண்டால் ஏன் பிடிப்பதில்லை? 18 வயது பெண் மனோதத்துவ டாக்டரிடம் வர மாட்டாள். தயவு செய்து எனக்கு ஏதாவது ஒரு நல்ல வழி காட்டுமாறு வேண்டுகிறேன்.

இந்த வயதில் அம்மா – குழந்தைக்கு இடையே இப்படி ஒரு விரிசல் வருவது சகஜமானதுதான். அது நீங்கள் ஏக செல்லம் கொடுத்ததால் கொஞ்சம் ஜாஸ்தியாகி இருக்கிறது. அவளுக்கும் திருமணமாகி ஒரு தாயாகும் போது உங்கள் கஷ்டத்தைப் புரிந்து கொள்வாள். தாய் – மகள் அன்பு, மகள் தாயான பிறகு எத்தனையோ வீடுகளில் வளர்ந்திருக்கிறது. நீங்களும் அவளை எதிர்க்காமல் ஒரு தோழியைப் போல நடத்த முயற்சி செய்யுங்கள். நிறைய வெளியிடங்களுக்குக் கூட்டிச் செல்லுங்கள். அல்லது அனுப்பி வையுங்கள்.



...களுடன்
...துரையாடல் –
...ந்சுளா ரமேஷ்





மாலனி. சேலம்.

'சொன்னால்தான் தெரியுமா?' சில வார்த்தைகள் என்ற கட்டுரையைப் படித்தேன். என்னுடைய 5 வருட மண வாழ்க்கையில் நடந்து கொண்டு இருப்பவற்றை எழுதுகிறேன். எனக்கு 23 வயதில் திருமணம் நடந்தது. காலை கோலம் முதல் இரவு படுக்கும் வரை குற்றம் குறைகளைத் தவிர வேறெதுவும் இல்லை. அவர்களின் பேச்சு என்னை மறந்துப் போகச் செய்து விட்டது.

ஐந்து வருடத்தில் ஒருமுறை கூட ஸ்நேகமாக சிரித்தது கிடையாது. எதுவும் வாங்கிக் கொடுத்தது கிடையாது. நீங்கள் எழுதி இருந்தீர்களே 'நயன ஸ்பரிசம்' – அது கூட அவங்க அம்மா சொல்படி. கல்யாணமான புதிதில் மட்டும்தான். ஒதுங்கி எத்தனை நாள் வாழ முடியும்? ஒரே வீட்டுக்குள் இருந்து கொண்டு நாமாக வலியப் போனால் 'ஒரு குடும்பப் பொம்பளைக்கு இந்த மாதிரியெல்லாம் தோன்றக் கூடாது. உனக்கு இந்த மாதிரி எண்ணங்கள் இருப்பதால்தான் நாம் தரித்திர நிலையில் இருக்கிறோம்' என்று கேவலமாக சொல்லும் கணவனிடம் காதல் எங்கே இருக்கிறது? பாராட்டினால்தான் வாழ்க்கையா? கொஞ்சினால்தான் வாழ்க்கையா?

சகோதரிகள் வழிசொல்லுங்களேன்...

நான் கடந்த 10 வருடமாக இடுப்பு வலியால் (லோ பேக் பெயின்) கஷ்டப்படுகிறேன். முதன் முதலில் எக்ஸ்–ரே எடுத்துப் பார்த்ததில் எலும்புத் தேய்மானம் என்று தெரிந்தது. அதற்குப் பிறகு நான் பார்க்காத வைத்தியம் இல்லை. சிறிது தூரம் நடந்தாலோ, படி ஏறினாலோ, தொடர்ந்து நின்று வேலை செய்தாலோ இடுப்பு வலி வருகிறது. பண்டிகை (அ) ஒரு விசேஷம் என்று வீட்டுக்குள் நான்கு நடை அதிகமாக நடந்தாலோ இடுப்பு வலி வந்து விடுகிறது. சமையல் வேலை ஒன்றுதான் நான் செய்யும் ஒரே வேலை. அடிக்கடி இந்த வலி வருவதால் சமையலையும் ஒழுங்காகச் செய்ய முடிவதில்லை.

வலி உள்ள நாட்களில் காலையில் வயிறு உள்ளே இழுத்துக் கொண்டு கூன் விழுந்தது போல் ஆகி விடுகிறது. அடி மேல் அடி எடுத்து முதுகு வளைந்தபடி தான் நடக்க வேண்டும். இப்போது இதற்கு நான் மருந்து எதுவும் எடுத்துக் கொள்வதில்லை. ஆயுர்வேத தைலங்களும் ஜெல்களும் நிறைய தடவியாயிற்று. பயனேதும் இல்லை. வலி வந்தால் ஒரு வாரம் படுத்துக் கிடப்பேன். மணிக்கணக்கில் படுத்திருப்பது போல் கொடுமையானது வேறெதுவும் இல்லை. அந்த நேரங்களில் நான் ஏன் உயிரோடு இருக்கிறேன் என்று தோன்றும்.

யோகா பற்றி நிறைய படித்தேன். அதையும் பார்க்கலாமே என்று யோகா தெரிந்த டாக்டரிடம் இடுப்பு வலிக்குரிய பயிற்சிகளைக் கற்றுக் கொண்டேன். ஒரு வருடமாக தொடர்ந்து செய்தும் வருகிறேன். அப்படியும் எனக்கு இடுப்பு வலி வருகிறது. யோகா பயிற்சிகளினால் உண்டாகும் நன்மைகளைப் பற்றி நிறைய படிக்கிறேன். என் விஷயத்தில் அது ஏன் பலிக்கவில்லை? உங்கள் மூலம் எனது இந்த வேதனைக்கு விடிவு காலம் வந்தால் நான் என்றும் உங்களை நன்றியோடு நினைத்துக் கொள்வேன்.

– ஒரு சகோதரி

வெளியில் சென்றால்தான் வாழ்க்கையா? பேசிக் கொண்டு இருந்தால்தான் வாழ்க்கையா? எதுதான் வாழ்க்கை? எப்படித்தான் வாழ்வது? நீங்களே எனக்குப் பதில் சொல்லுங்கள்.

இந்த மாதிரி நிறைய பெண்கள் எழுதி இருக்கிறார்கள். அவர்களின் எத்தனையோ வருட துயரங்களை எழுதி இருக்கிறார்கள். 'சொன்னால்தான் தெரியுமா' – சில பெண்கள் தேவையில்லாமல் வாழ்க்கையில் குழப்பிக் கொள்பவர்களுக்காகவும், தானே தன் நரகத்தைத் தேடிக் கொள்பவர்களுக்காகவும். எங்கேயும் சில விதிவிலக்குகள் உண்டு. பெண்களின் உணர்வு களை வேண்டுமென்றே மிதிப்பவர்கள் இருக் கத்தான் செய்கிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி இருக்கிறார். எப்போதும் அளவு கடந்த உற்சாகம், தன் தொழிலில் ஆழ்ந்த பற்றுடன் ஓயாத உழைப்பு. நண்பர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் எப்போதும் தன்னாலான உதவி என இருப்பார். ஒரு நிமிடம் கூட சும்மா இருக்க மாட்டார். தன் வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார். வீட்டிலோ அவருடைய கணவர் சந்தேகபிராணி. அவரை வார்த்தைகளால் கொத்தி எடுத்துக் கொண்டே இருப்பார்.

"அதனாலென்ன, அவர் சந்தேகப்பட்டால் அவருடைய மனதுக்கு சதா வேதனை. இதோ நான் இவை எதுவும் பாதிக்காமல் சந்தோஷமாகவே இருக்கிறேன்!" என்பார். மற்றவர்களின் சந்தேகம், கொடுமை, துர்வார்த்தை இவை ஏன் நம்மைப் பாதிக்கவிட வேண்டும்? உங்களுக்கென்று ஒரு உற்சாக வளையத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். முதலில் செயற்கையாக இருந்தாலும் நாளாவட்டத்தில் அதுவே இயற்கையாகி விடும். நம்மை நாம் உயர்த்திக் கொள்வதில்தான் இருக்கிறது. நட்பும், அன்பும் பெறவும், தரவும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இல்லாத இடத்தில் இல்லையே, இல்லையே என ஏன் அங்கலாய்க்கிறீர்கள்?

சியாமளா ராமஸ்வாமி, மைலாப்பூர்.

ஒரு பெண் ஒரு ஸ்தானத்திலிருந்து இன்னொரு ஸ்தானத்திற்கு வரும் போது குணம் மாறுபடுகிறதே ஏன்? உதாரணமாக அம்மா/மகள், அக்கா/தங்கை என்னும் போது இருக்கும் பாசம் மாமியார்/மருமகள், அண்ணி/நாத்தனார், மற்றும் ஓரகத்திகள் என்னும் போது பகையும் போட்டியும் பொறாமையுமே அதிகம் தலைதூக்குகிறதே இது ஏன்?

இவை அனைத்துமே ஓர் ஆணை மையப்

படுத்தி அவன்தான் சகலமும், அவன் நம் பக்கம் இல்லாவிட்டால் என்னவாகி விடுமோ எனும் பயம் சுயசார்பு இன்மையால் ஏற்படுவது தான். கணவன், மகன் என்பதும் ஓர் அற்புதமான உறவு. அது இடுப்பில் முடிந்து வைத்துக் கொள்ளும் மூட்டை இல்லை என்பதைப் பெண்கள் உணர வேண்டும். உணர்ந்து கொண்டு விட்டால் உறவுப் பெண்களிடையே அழகிய நட்பு மலரும்.

என். லட்சுமி, திருச்சி – 20.

ஒரு தாய் ஆசிரியை ஆகலாமா? முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிக் குழந்தைகள் படிப்பு முடிந்து மாலையில் நன்றாக விளையாடி விட்டு, வீட்டில் படிக்கும் பழக்கம் இருந்ததை எல்லோரும் அறிவோம். இந்தப் பாடம் இப்படித்தான் படிக்க வேணும் என கட்டாயப்படுத்தும் வழக்கம் இல்லை. தாய்மார்கள் குழந்தைகளை விளையாட விடாமல் எப்பொழுதும் படி; படி என நச்சரிப்பதுடன், அருகில் அமர்ந்து, குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கிறேன் என்று அடிப்பதுடன் மிகுந்த டென்ஷனை ஏற்படுத்துகின்றனர். நன்றாகப் படித்த நல்ல உத்தியோகம் பார்க்கும் தாய்மார்களும் இதனை உணருவதில்லை. தாத்தா பாட்டி ஏதாவது சொன்னால், உங்களுக்குத் தெரியாது. பிள்ளைகளை கண்டித்துப் படிக்க வைக்க வேண்டும் எனக் கூறி வீட்டில் ரகளை ஏற்படுத்துகின்றனர். இந்த நிலை அதிகமாகிறதே!

குழந்தைகளை தாய்மார்கள் படுத்தும் பாட்டைப் பற்றி நமது மலரில் நிறைய எழுதி யிருக்கிறோம். 'இந்தக் காலத்துல படிப்பு இல் லைன்னா ஒன்னும் இல்ல' என்று குழந்தை யைக் கிள்ளும் நிலை தேவையே இல்லை. அப்படி அடித்துப் படிக்க வைத்து ஐ.டி. பாஸ் பண்ண வைத்து அமெரிக்கா ஓட்டியதெல்லாம் வேஸ்ட் என்றாகி விட்டது. இன்று உலகம் நவீன தொடர்பு சாதனங்களினால் விரிந்து கிடக் கிறது. தொழில் திறமை, புத்திக்கூர்மைக்குத் தான் வாய்ப்பு பிரகாசம். இன்னும் கொஞ்ச நாள் போனால் என்ன படித்திருக்கிறாய் என்பதெல் லாம் கூட போய் விடும். ஒரு வேலையைக் கொடுத்து அதை எப்படிச் செய்கிறார்கள் என்று பார்த்துத் தேர்ந்தெடுக்கும் நிலை வரும்.

அன்னை அன்பான ஆசிரியையாக இருக்கும். அடிக்கும் பிரம்பாக இல்லை. ஆசிரியர் என்றால் 'வழிகாட்டுபவர்தான்.'

கதை சொல்லும் பொம்மைகள்

கடந்த ஆண்டு நடந்த 'நவராத்திரி விழா' வெற்றிகரமாக முடிய, கொலு பொம்மைகளை ஒவ்வொன்றாகக் காகிதத்தில் சுற்றி, அவற்றைப் பெட்டியில் அடுக்கிக் கொண்டிருந்தேன். அந்த பொம்மைகளை, குறிப்பாக என்னுடைய தாயார் திருமதி. சவுந்திரம் தாத்தாசாரி அவர்கள், பிரத்தியேகமாக, பல வருடங்களுக்கு முன் சேகரித்து இன்றும் மிகக் கவனமாக பாதுகாத்து வரும் 'கௌரி பொம்மை'களை பார்க்கும் பொழுது, மனத்தில் பரவசம் ஏற்படுகிறது. சுமார் 2 அடி உயரத்தில் மரத்தினால் செய்யப்பட்ட இந்த 'கௌரி பொம்மைகள்' மைசூரில் தயாரிக்கப்பட்டதால், இவற்றுக்கு 'மைசூர் பொம்மைகள்' என்ற பெயரும் உண்டு.



• வரதராஜ பெருமாள் தம்பதிகள்

என்னுடைய தாயாருக்கு, சிறு வயது முதற்கொண்டே பொம்மைகளைச் சேகரிக்கும் பழக்கம் இருந்ததால், அவரிடம் மிகவும் பழங்காலத்து 'இராமாயண பொம்மை செட்டுகள்' பூராவும் உள்ளன. அதுபோன்ற அழகிய பொம்மைகளை, இப்பொழுது காண்பது அரிது! அதே போல் 'கௌரி பொம்மைகளும்' இப்பொழுது சில வீடுகளிலேயே காண முடிகிறது.

இந்த மர பொம்மைகளின் தலை, கை, கால் போன்றவை யாவும் தனித்தனியே இருப்பதால், அவற்றை நாம் வேண்டியபடி ஒன்றிணைத்து, அந்தப் பொம்மைகளை நிற்கவோ, உட்காரவோ செய்ய முடியும். எங்களிடமுள்ள ஐந்து கௌரி பொம்மைகளை, மற்ற பெரிய 'சைஸ்' மண் பொம்மைகளுடன் சேர்த்து, ஏதாவது புராணக் கதையை, ஆண்டு தோறும் நவராத்திரி கொலுவின் பொழுது, சில காட்சிகளாக அமைத்து, விளக்குவது எங்கள் வழக்கம்.

அவ் வகையில் கடந்த ஆண்டு, கொலுவின் பொழுது, நாங்கள் தேர்ந்தெடுத்த கதை, வைணவ குருவான, 'ஸ்ரீமந் நிகமாந்த தேஸிகரை' பற்றியதாகும். ஸ்ரீ வைணவ ஸம்ப்ரதா



• ஸ்ரீ தேஸிகர் ரங்கநாயகி தாயார் அருகில்

யத்தை நிலைநாட்டிய ஸ்ரீஇராமானுஜரை பின்பற்றி, அவருக்குப் பிறகு, சரியாக 100 ஆண்டுகளுக்குப் பின், 1268ம் ஆண்டு, காஞ்சிபுரத்துக்கு அருகேயுள்ள 'திருத்தண்கா' என்ற ஊரில், ஸ்ரீ வேதாந்த தேஸிகர் அவதரித்தார்.

சிறு வயது முதற்கொண்டே, விஷ்ணு பக்தனாக திகழ்ந்த தேஸிகர், தென்மொழி, வட மொழி இரண்டிலும் நன்கு தேர்ச்சி பெற்றார். பின்னர் தனது 20வது வயதில், பெற்றோரின் விருப்பத்திற்கேற்ப திருமணம் புரிந்து கொண்ட தேஸிகர், கடலூருக்கு அருகிலுள்ள திருவஹீந்த்ரபுரத்துக்குச் சென்று, அங்கு வாழத் தொடங்கினார்.

ஆழ் தியானத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்த தேஸிகர், அங்குள்ள 'ஔஷதகிரி' என்ற மலையில், ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து, 'ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவ' பெருமாளை நினைத்து, இடைவிடாது தியானிக்கத் தொடங்கினார். அவரது பக்தியை மெச்சி அவருக்குத் தரிசனம் தந்த, குதிரை முகம் கொண்ட 'ஸ்ரீ ஹயக்ரீவ பெருமாள்', சிறந்த ஞானமும், சகல வித்தைகளில் வல்லமையும் பெற தேஸிகருக்கு அருள் பாலித்தார். தன் முன் தோன்றிய பெருமாளைக் கண்ட பரவசத்தில், தேஸிகர் உடனே இயற்றியதுதான் 'ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்திரம்'. இதனை பக்தியுடன் உபாசிப்பவர்களுக்கு, கல்வியும், சிறந்த ஞானமும், நிறைந்த அறிவும் கூடும் என்று கருதப்படுகிறது.



• ஸ்ரீ ஹயக்ரீவ பெருமாள் தேஸிகருக்கு சேவை தரும் காட்சி

இதே போன்று, தேஸிகர் வேறு பல ஸ்தோத்திரங்களை, வடமொழியில் இயற்றியுள்ளார். திருப்பதியிலுள்ள ஸ்ரீநிவாஸ பெருமாளைப் பற்றி அவர் பாடியுள்ள 'தயாசத'சத்தில், பெருமாளிடம் உள்ள 'தயை' என்ற குணத்தை மட்டும் பிரத்தியேகமாக எடுத்துக் கொண்டு

மங்கையர் மலர் சகோதரிகளுக்கு அறிமுகமான ஹோமியோபதி மருத்துவர் டாக்டர். ஆர். ஞானசம்பந்தம் வாசகியரின் ஐயங்களுக்கு விடையளிக்க முன்வந்துள்ளார். பட்டதாரி ஹோமியோபதி சங்க பொதுச் செயலாளரான இவர் ஹோமியோபதியால் அழகு சிகிச்சை முதல் சிறுநீரகக் கற்களுக்கான சிகிச்சை வரை எல்லா நோய்களுக்கும் தீர்வு காணலாம் என்கிறார். பாலியல் கோளாறுகள், மாத விடாய், குழந்தைப்பேறின்மை என நிறைய கேள்விகள் கேட்கலாம்.

ஹோமியோபதிக்கான ஓர் அறிமுகமாக, விளக்கமாக இப்பகுதியை எடுத்துக் கொள்ளலாம்... கேள்விகளை மங்கையர் மலருக்கு அனுப்பி வையுங்கள்.

விழாக்கால சலுகை



சென்னையில் டீலக்ஸ் அபார்ட் மெண்டுகள்
ரூ 3.45 லட்சம் முதல்!

இலவசப் பரிசு**
மொபட் அல்லது ஓர் தங்க நெக்லஸ்

HANSA GARDEN

ஹன்ஸா கார்டன்

தாம்பரத்திற்கு 5 கி.மீட்டருக்கு முன்னால் அமைந்துள்ள ஹன்ஸா கார்டன், நேர்த்தியான வடிவமைப்பு மற்றும் தரமிக்க கட்டுமானத்துடன் 1 - 2 படுக்கையறை கொண்ட அபார்ட்மெண்டுகளை வழங்குகிறது.
பிரிவு 1-ல் ஏற்கனவே குடும்பங்கள் குடியேறிவிட்டன.

- **விலை ரூ.3.45 - 6.10 லட்சம் ***
- செராமிக் டைல் ஃப்ளோரிங்
- டெலிபோன் மற்றும் டிஷ் ஆண்டெனா
- விளையாட போதுமான இடவசதி மற்றும் புல்வெளியமைந்த சுற்றுச்சூழல்
- காம்ப்ளக்ஸிற்கே சொந்தமான போக்குவரத்து வசதி
- பாரிமுனை, அண்ணாசாலை, வேளச்சேரி, தி.நகருக்கு நேரடி அரசு பேருந்து
- சிறந்த பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் அருகில் உள்ளன.

இடம் : மாடம்பாக்கம் பிரதான சாலை, ராஜகீழ்ப்பாக்கம், வேளச்சேரி - தாம்பரம் சாலை பிரிவில்.

HANSA VANDANA

ஹன்ஸா வந்தனா

குரோம்பேட்டை ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள ஹன்ஸா வந்தனா, 1, 2 மற்றும் 3 படுக்கையறை கொண்ட அபார்ட்மெண்டுகளை வழங்குகிறது.

- **விலை ரூ.4.20 லட்சம்* முதல்**
- செராமிக் டைல் ஃப்ளோரிங்
- தண்ணீர் சுத்திகரிப்பு வசதி

இடம் : நாயுடு ஷாப் ரோடு, ராதா நகர், குரோம்பேட்டை

புக்கிங்கிற்கு அணுகவும்:

ஹன்ஸா எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட்
சிவ்ராஜ் எஸ்டேட்ஸ், நான்காம் தளம்,
624, அண்ணா சாலை, சென்னை - 600 006.
போன் : 8293135 / 2315/ 2323
ஃபேக்ஸ் : 8293135.
email: hansaest@md4.vsnl.net.in

* வரிகள் மற்றும் டெபாசிட்டுகள் நீங்கலாக
** விதிமுறைகளுக்கு உட்பட்டது

சிக்கனமான விலையில் வசதியான வாழ்க்கை



புற்று நோய்க்கு தெய்வீக இயற்கை மூலிகை மருத்துவம்



நம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்களும் வளருகின்றன. ஒவ்வொரு நிமிடமும் பழைய செல்கள் அழிந்து புதிய செல்கள் உருவாகி கொண்டே இருக்கின்றன. இதற்கு இயற்கையாகவே ஒரு கட்டுப்பாடு உள்ளது. ஆனால் சில செல்கள் கட்டுப்பாடின்றி உடலில் எந்த இடத்திலும் பல்கிப் பெருக வளர ஆரம்பிக்கும். கட்டுப்பாடு இல்லாமல் வளர்ச்சியடையும் செல்கள் ஒரு கட்டியாக மாறுகிறது. இதைத்தான் புற்றுநோய் என்கிறோம். எல்லா ரக புற்று நோய்களுக்கும் சில வகை பழக்க வழக்கங்களே காரணமாக இருக்கின்றன. புகையிலை போடுவதால் வாயில் புற்று நோய், சிகரெட் பிடித்தல் காரணமாக நுரையீரல், தொண்டை, உணவுக் குழாய், மூத்திரைப் பையில் புற்று நோய், பொடி போடுவதால், மூக்கில் புற்று நோய், மது அருந்துவதால் காமாலை வந்தால் கல்லீரல், இரைப்பையில் புற்று நோய் அதிக குழந்தைகளை பெறுதல், பல் ஆண்களுடன் தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றை கர்ப்பப்பை புற்று நோய், ஏற்படுகின்றது. மேலும் நாம் உண்ணும் உணவு வகைகள் தயாரிப்பில் நிலங்களில் அதிகமாக இரசாயன உரங்கள், மருந்துகள் சேர்ப்பதாலும், சுகாதாரமற்ற சுற்றுபுற சூழ்நிலைகளாலும், அவ்வப்போது நாம் உபயோகிக்கும் இரசாயன மாத்திரைகளாலும் அதிகமான கோபம், பயம், மன உளச்சல், பரபரப்பு அடிக்கடி உணர்ச்சி வசப்படுதல் போன்றவற்றின் காரணமாக தோன்றும் நரம்புத் தளர்ச்சியாலும் புற்று நோய் வரலாம். ஒரு புற்று நோய் செல் பல்கி பெருகி புற்று நோய் கட்டியாக மாறுவதற்கு குறைந்தது 7 முதல் 10 ஆண்டுகள் ஆகும்.

புற்றுநோய் ஆரம்ப அறிகுறிகள் : ஒவ்வொரு உறுப்புக்கும் எந்தவிதமான நோய் வந்தாலும் ஒரே விதமான அறிகுறிகள் தான் தென்படுகின்றன. உதாரணமாக காச நோய், நிமோனியாக் காய்ச்சல் ஆகியன நுரையீரலைத்தாக்கும்போது இருமல், சளி, மூச்சு வாங்குதல், சளியில் இரத்தம் ஆகிய அறிகுறிகள் தென்படுகின்றன. நுரையீரலைப் புற்றுநோய் தாக்கும் போதும், இதே அறிகுறிகள்தான் இருக்கும். இதேபோன்று வயிற்றுப் புண்ணுக்கு இருக்கும் அறிகுறிகள்தான் இரைப்பையில் புற்றுநோய் வந்தால் இருக்கும். எனவே எந்த நோயின் அறிகுறிகளும் இரண்டு வாரத்திற்கு மேல்இருந்தால் உடனடி மருத்துவ ஆலோசனை அவசியம். எச்சில் துப்பும்போது ரத்தம் வந்தால் அலட்சியப்படுத்தக் கூடாது. ஏனெனில் புற்று நோய்க்கென தனிப்பட்ட அறிகுறிகள் கிடையாது. பொதுவான அறிகுறிகளுடன் புற்று நோய் இருக்க வாய்ப்புகள் அதிகம்.

புற்றுநோய்க்கு தெய்வீக மூலிகைகள் : வேப்பிலை, வில்வம், துளசி, மாவிலை, அருகம்புல், அத்தி, வெற்றிலை, தும்பை, கீழாநெல்லி, நித்திய கல்யாணி, முருங்கை, நெல்லி, கரிசலாங்கண்ணி, வல்லாரை ஆகியவைகளை பொடி செய்து பின் சம அளவில் ஒரு பாட்டிலில் கலந்து வைத்துக் கொள்ளவும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக காலை, பகல், இரவு ஆகிய மூன்று வேளையும் உட்கொள்ள வேண்டும். இம் மூலிகைகளினால் முதலில் புற்று செல்கள் பெருகி வளர்ச்சி அடைவது தடுக்கப்படுகின்றது. பின்னர் புற்று செல்கள் உருவாகாமலும், கட்டிகள் உடைந்து மெதுவாக வெளியேற்றப்படுகின்றது. இந்த தன்மை மேற்கூறிய மூலிகைகளுக்கு உண்டு என்பது மறுக்கப்படாத உண்மையாகும்.

புற்று நோய்களைத் (தவிர்க்கும்) தடுக்கும் உணவு வகைகள் : புற்று நோயாளிகளுக்கு பச்சை காய்கறிகள் நல்லது. மஞ்சள் நிறத்திலும், பச்சை நிறத்திலும் உள்ள காய்கறிகள் மற்றும் பழங்கள் புற்று நோயைத் தடுக்க கூடியவை. இவற்றில் வைட்டமின் A, C சத்துகள் அதிகம். வைட்டமின் A-வில் பீட்டாகரோட்டின் என்ற பொருள் உள்ளது. இது ஒரு ஆண்டி ஆக்சிடெண்ட் புற்றுநோயை தடுக்கும் குணம் இதற்குண்டு. **காரட், தக்காளி, மாம்பழம், பலாப்பழம், கொய்யா, ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை, எலுமிச்சை, நெல்லிக்காய், முட்டைகோஸ், பீட்ரூட் போன்றவற்றில் மேற்சொன்ன சத்துக்கள் அதிகமுள்ளன.** இவற்றை அடிக்கடி உண்பவர்களுக்கு புற்றுநோய் வரவாய்ப்பில்லை. இதேபோல் நார்பொருள் நிறைந்த உணவுகளை சாப்பிட்டால் பெருங்குடல் தொடர்பான புற்றுநோய்கள் வருவது குறைகிறது. கோதுமை, கம்பு, சோளம், கேழ்வரகு, தேங்காய், நிலக்கடலை, அவரை, கத்திரிக்காய், வெள்ளரிக்காய், வெண்டைக்காய், பட்டாணி, வெங்காயம், பேரிச்சம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றில் நார்ச்சத்து அதிகம். மேலும் முருங்கை கீரை, பொன்னாங்கண்ணி கீரை, மணத்தக்காளி கீரை, மஞ்சள், சீரகம், துளசி, கசகசா, வெள்ளைப்பூண்டு ஏலக்காய் ஆகியவற்றிலும் புற்று நோயைத் தடுக்கின்ற நொதிப் பொருட்கள் அடங்கியுள்ளன. ஆகவே இவைகளை அடிக்கடி நமது உணவுகளில் தவறாமல் பயன்படுத்துவது நல்லது.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, S/o Dr.C.K.மாணிக்கவாசகம்

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.) - 635 601 ✆ 04179-20469, 22769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 6424285, 6[illegible]27638

குறிப்பு : சென்னை, வேலூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, பெங்களூர், ஒசூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி, நாமக்கல், தர்மபுரி, திருப்பூர், உடுமலைபேட்டை, திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகர்கோயில், விருதுநகர், கரூர் போன்ற நகரங்களில் வைத்தியரை நேரில் சந்திக்க முகாம் - விவரம் தெரிந்து கொள்ள மேலே உள்ள முகவரிக்கு கடிதம் (அ) போன் மூலம் தொடர்பு கொள்ளவும்.

தகவல் : டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 27 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய **'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.70/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய **'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்'** என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.60/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.60/-ம் தலைமை முகவரிக்கு D.D. அல்லது M.O. அனுப்பவும்.

7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 4011589

18 & 19ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, : 5717126, 5723651

9ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை, ஹோட்டல் பிராட்வே, (கல்பனா தியேட்டர் அருகில்) கெம்பேகவுடா ரோடு : ✆ 080-2265[illegible], 2873013

அதை மிக அழகாக வர்ணித்துள்ளார். இதே போல், சக்ரவர்த்தித் திருமகனான ஸ்ரீ இராம பிரானைப் பற்றி தேஸிகர் இயற்றியுள்ள 'ஸ்ரீமஹாவீர வைபவம்' எனப்படும் 'ரகுவீர கத்யம்', அறிஞர்களால் பெரிதும் பாராட்டப் படுகிறது.

ஒரு சமயம், 'திருபுட்குழி' என்ற ஊரில் கடும் 'மலேரியா' குளிர் ஜுரம் வேகமாக பரவி, அதனால் பலர் இறக்க நேர்ந்தது. இதைக் கண்டு வருந்திய தேஸிகர், சக்கரத்தாழ்வானை குறித்து, 'ஸ்ரீ ஸுதர்சநாஷ்டகம்' என்ற ஸ்தோத் திரத்தை இயற்றி, பாராயணம் செய்தார். அது, அந்த ஊர் மக்களை, நோயிலிருந்து காப்பாற்ற உதவியது. இன்றும், இந்த ஸ்தோத்திரத்தை பக்தியுடன் ஜபித்தால், கடினமான நோய்களி லிருந்தும் நிவாரணம் பெறலாம் என்று நம்பப் படுகிறது.

இதுபோன்று பல அரிய ஸ்தோத்திரங்களை தேஸிகர் இயற்ற, அவரது பெயரும், புகழும் ஊரெங்கும் பரவத் தொடங்கியது. அவர் ஸ்ரீரங் கத்தில் வாசம் செய்த பொழுது, அவர் மேல் பொறாமை கொண்ட சிலர்; தேஸிகரின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த முயன்றனர். தன்னுடைய ஞானத்தாலும், பக்தியினாலும் தேஸிகரால் செல்வம் திரட்ட முடியுமா என்று சவால் விட்ட அவர்கள், ஓர் ஏழை பிரம்மச் சாரியை, செல்வம் வேண்டி தேஸிகரிடம் அனுப்பி வைத்தனர். இதன் காரணமாக 'லக்ஷ்மி'யை துதித்து, தேஸிகர் இயற்றியதுதான் 'ஸ்ரீ ஸ்துதி' என்ற ஸ்தோத்திரம். இதை அவர் துதித்த பொழுது, ஸ்ரீரங்கத்திலுள்ள, ரங்கநாயகி தாயாரின் கையிலிருந்து பொற்காசுகள் கொட்டி 'கனகதாரை' ஏற்பட்டது. இன்றும் லட்சுமியின் கடாக்ஷம் கிட்ட 'ஸ்ரீஸ்துதியை' கூறி வந்தால், அதற்கு நிச்சயம் பலன் கிட்டும் என்று நம்பப்படுகிறது.

ஆனால் இத்தகைய செல்வத்தில் சிறிதும் நாட்டமின்றி, ஒரு பற்றற்ற வாழ்க்கையை மேற் கொண்ட ஸ்ரீதேஸிகர், 28 அற்புத ஸ்தோத்திரங் களை இயற்றி, நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து, 1369ம் ஆண்டில் உயிர் துறந்தார். அவர் இயற்றிய இந்த ஸ்லோகங்கள் யாவும் வைணவ மக்களால், அரிய பொக்கிஷங்களா கக் கருதப்படுகிறது. ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ ரங்கநாயகி தாயாரே, ஸ்ரீ தேஸி கருக்கு 'ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரா' என்ற பட்டத்தை அளித்ததாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீ ஸ்வாமி தேஸிகரைப் பற்றிய மேற்கூறிய விளக்கங்களை டேப்ரிகார்டரில் பதிவுசெய்து வெளியிட்டு அத்துடன் பொம்மைகளை அலங் கரித்து நாங்கள் வைத்த கடந்த வருட நவராத் திரி கொலு; பெரும் வரவேற்பைப் பெற்றது. ஒருபுறம் ஔஷதகிரியின் மேல், தேஸிகருக்கு ஸ்ரீ ஹயக்ரீவ பெருமாள் காட்சி தர, மறுபுறம் பிரம்மச்சாரியின் முன் 'ஸ்ரீஸ்துதி' கூறியவுடன் லட்சுமியின் கைகளிலிருந்து பொற்காசுகள் கொட்டுவதை விளக்கியிருந்தோம். இதன் நடுவில், காஞ்சிபுரம் ஸ்ரீ வரதராஜ பெருமாள் தன் தேவியுடன் காட்சி தர, அவரைப் பற்றி தேஸிகர் 'ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்' என்ற ஸ்தோத்திரத்தை இயற்றியதைக் கூறினோம்.

நவராத்திரி கொலு பொம்மைகளைக் கொண்டு இதுபோன்ற சம்பவங்களையோ, புராணக் கதைகளையோ விளக்கும் பொழுது, அதை ஆர்வத்துடன் காண்பவர்களுக்கு, பக்தியும், ஞானமும் ஏற்படுவதைக் காண முடிகிறது. முக்கியமாக சிறுவர், சிறுமி களிடையே ஆன்மீக உணர்வைப் பரப்ப, இதுபோன்ற நவராத்திரி கொலு பெரிதும் உதவுகின்றன.

— நிர்மலா சந்தானம்

சொல்ல விரும்புகிறோம்!

✉ 'பாஷை தெரிந்த ஊரில் பட்ட கஷ்டங்கள்' நகைச்சுவைக் கட்டுரையில் சில மிகைப்படுத்தப்பட்டு இருந்தன. ஒருவேளை எல்லாரும் சிரிக்கட்டும் என்று அவர் எழுதியிருக்கலாம். அவர், நாகர்கோவிலில் பெண்கள் முண்டு அணிவது போல் எழுதியிருக்கிறார். ஆனால் இங்குள்ள பெண்கள் எல்லாரும் சேலை கட்டுபவரே. தாலி என்பது அவர்களுக்கும் ஸெண்டிமண்டலாக ரொம்பப் புனிதமான விஷயம்தான். ஒருவேளை இவருக்கு வேலை செய்த பெண்மணி மலையாளியோ, என்னவோ? அடுத்தது, அவயம். பெருச்சாளியை அவயான் என்றுதான் சொல்வார்கள். அவயம் என்று அல்ல. இந்த சகோதரி மலையாளத்தையும் தமிழையும் போட்டுக் குழப்பியிருக்கிறார். நாகர்கோவிலில் இன்னமும் வீட்டைத் தூக்கலையா என்றால் இன்னமும் வீட்டைப் பெருக்கலையா என்று அர்த்தம். இதை மலையாளத்தில் வீட்டை அடிச்சு வாரியில்லே என்று கேட்பார்கள். சென்னையில் துடைப்பம் எங்களுக்கு வாரியல். இப்படி எத்தனையோ.

நாகர்கோவில், ஏ. பகவதி அம்மாள்.

✉ 'சில வார்த்தைகள்' படித்தேன். மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். 'ஆத்ம பந்தம்' 'ஆன்மப் பிணைப்பு' பற்றி ஆசிரியை குறிப்பிட்டுள்ளார். ஆம், கணவன் - மனைவியரிடையே காதலோ, மோகமோ தேவையில்லை. ஆன்ம நேயம்தான் சாசுவதமானது. ஆசை அறுபது நாள் ('ஐ லவ் யூ') மோகம் முப்பது நாள் என்பார்கள். ஆனால் ஆன்ம நேயத்துக்குப் பாராட்டு வார்த்தைகளே தேவையில்லை. அதற்குக் கால வரம்பே கிடையாது. இதே கருத்தை நான் 1975-ம் வருடம் ஒரு போட்டிக் கட்டுரைக்கு முக்கிய கருவாகக் காட்டியிருந்தேன். பெரியவர்களாகப் பார்த்துச் செய்து வைத்த கல்யாணங்களில் 'ஆன்ம நேயம்' முக்கிய அங்கம் வகிக்கிறது என்று அந்த ஆண்டு 'விவாக வெள்ளி விழா' கொண்டாடிய நான் என் கட்டுரையில் விவரித்திருந்தேன். ('கதம்ப மாலை' என்ற என் புத்தகத்தில் இக் கட்டுரை சேர்க்கப்பட்டுள்ளது.) 'விவாகப் பொன் விழா'வும் நாங்கள் சென்ற ஆண்டு கொண்டாடி விட்டோம். எங்கள் அன்பு தொடர்கிறது - ஆம், 'ஆன்ம நேயம்' என்ற அடிப்படையில்.

பெங்களூர், க.ரா.

✉ 'பலன் தரும் பிரார்த்தனை' படித்தேன். உண்மைதான். பிரார்த்தனையால் மன அழுத்தம், நோய் குணமாவதும் மன அமைதி அடைவதும் நிஜம். என் இரண்டாவது பெண்ணுக்குக் கடந்த மார்ச்சில் டைபாய்டு வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். மாமியார் பி.பி. ஷுகர் அதிகமாகி மற்றொரு ஆஸ்பத்திரியில். இடையில் வருடாந்திரத் தேர்வு பெரிய பெண்ணுக்கும், இவளுக்கும். பரீட்சைக்குக் கொண்டு உட்கார வைத்து பரீட்சை எழுத வைத்து கஞ்சி கொடுத்து தனியாக வீட்டில் படுக்க வைத்து விட்டு ஜி.ஹெச். ஓடி அங்கு மாமியார் சேவை. அந்த 15, 20 நாட்களும் நான் தனி ஆளாக (இல்லை கடவுள் துணையுடன்) வீட்டு வேலை, மருத்துவமனை, வைத்தியம் என்று பாடுபட்டு பலன் பெற்றது இறைவனிடம் என் இடைவிடாத பிரார்த்தனைகளால்தான். நேரம் காலம் கிடையாது. விடாது அம்பாள் ஸ்லோகம் சொன்னேன். அவளைத்தான் நம்பினேன். கைவிட மாட்டாள் என்ற திடநம்பிக்கை. பிரார்த்தனை செய்வதால் கோபம் குறைந்து மன அமைதி கிடைக்கிறது. சிந்திக்கும் திறன் அதிகமா

வீட்டைத்

தூக்கலையா?

இ ற து .
யாருக்காகப் பிரார்த்திக்
இறோமோ அவர்களுக்கு நல்ல
பலன் கிடைக்கிறது.

மதுரை – 1, உமா ராதாகிருஷ்ணன்.

✉ இணைப்பு இதழில் வெளியான "எலி வெண்ணெய் தேடிய கதை" படித்துப் பிரமித்துப் போனேன். ஏனெனில் 1992 முதல் மகாராஷ்டிராவில் ஒரு தனியார் தொழிற்சாலையில் ஆபரேட்டர் ஆக பணிபுரிந்து வருகிறேன். 12 மணி நேரமும் ஓய்வின்றி வேலை தொடர்ந்தே செய்தாக வேண்டிய சூழ்நிலை. கடந்த 5 வருடமாக இந்த வேலையை விட்டு சுய (வியாபாரம்) தொழில் செய்ய எண்ணம். ஆனால் சுற்றியுள்ளவர்கள், உறவினர்கள் என்னை அதைரியப்படுத்தி 'வியாபாரத்தில் நஷ்டம் வந்தால் என்ன செய்வாய்? வேலை எனில் உள்ளே நுழைந்து விட்டால் அன்றைக்கு சம்பளம் உண்டு' என்றெல்லாம் கூறி என் மனதை தன்னம்பிக்கை ஏற்படாமல் செய்து வந்ததன் காரணத்தால் இங்கேயே அடிமை போல் வேலை செய்து வருகிறேன். இடையில் மனநலம் (இதன் காரணத்தால்) பாதிக்கப்பட்டு தொடர்ந்து மருந்து சாப்பிட்டு (தூக்க மாத்திரையும் அடங்கும்) ஒரு வித போதை நிலையிலேயே காலத்தை ஓட்டி வருகிறேன். "எலி வெண்ணெய் தேடிய கதை" எனக்காகவே பிரசுரிக்கப்பட்டதைப் போல் உணர்கிறேன். கூடிய விரைவில் முதலீட்டை தேவையான அளவிற்கு சேமித்துக் கொண்டு தமிழ்நாடு வந்து புதுவாழ்வைத் துவங்க மனதில் முடிவு செய்து விட்டேன். இக் கதை என் வாழ்வில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தி விட்டது.

மகாராஷ்டிரா, வி. ராஜசேகரன்.

✉ சென்னை மட்டுமல்ல. எங்குமே மழை நீர் சேகரிப்பு என்பது அவசியம். ஏனெனில் மழைநீர் போன்ற தூய்மையான நீர் கிடைப்பதெனில் என்ன வேண்டுமானாலும் செய்யலாமே! பயனுள்ள பல யோசனைகளைத் தந்தமைக்குப் பாராட்டுக்கள்!

பெத்தானியாபுரம், டி. அழகர்சாமி.

✉ "எல்லா நோயும் அழுத்தினால் போச்சு" கட்டுரை அனைவருக்கும் பயன்படுகிற வகையில் இருந்தது. எனக்குத் தலைவலி வந்த போது அவர்கள் சொன்ன முறையில் விரலில் அழுத்தம் கொடுத்தேன். என்ன மாயம்! அற்புதம்! தலைவலி பறந்தே விட்டது. 'டச்சிங் ட்ரீட்மெண்ட்'. நன்றி, மங்கையர் மலருக்கு.

சென்னை – 40, எஸ். ரமாமணி.

✉ சகோதரி வசுமதி, சமையலறை சுத்தத்திற்கு 'தின்னர்' உபயோகிக்க ஆலோசனை கூறுகிறார். 'தின்னர்' எளிதில் ஆவியாகும். எளிதில் நெருப்பு பற்றும் குணம், மூச்சுக் காற்று வழியே சென்று ஊறு விளைவிக்கக்கூடிய ரசாயனக் கலவை. மேலும், எரிவாய்வு அடுப்பு உள்ள (காஸ், ஓவன்) சமையலறைகளில் ஆபத்து அதிகம். பழக்கத்திலுள்ள மண்ணெண்ணெய், சோப்பு நீர் இவையே தொடரட்டும்.

கூடுவாஞ்சேரி, ந. தர்மேசுவரன்.

✉ மழைநீர் அறுவடை முறையை ஏற்படுத்தினால் ஒன்று முதல் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இலவசமாக நல்ல தண்ணீர் கிடைக்கும் என்ற பேட்டியைக் கண்டு மகிழ்ந்த பலரின் ஆவலைத் தணிக்க வேண்டும் வருண பகவான்!
வானம் விட்டு இறங்கி
வரத்தான் போகிறார்.

சென்னை – 82, தங்கம்.

படுக்கை அறையும் ஃபுங்ஸ்வே-யும்!

நாள் முழுவதும் உழை, உழை என்று உழைக்கும் மனிதன் ஓடிப் போய் புகலிடம் அடையும் இடம்தான் படுக்கை அறை. ஆனால் நாள் முழுவதும் உழைத்தும் கூட சிலருக்குத் தூக்கம் சரியாக வராது. மனம் முழுவதும் சலனங்களும் அதனால் வரும் சஞ்சலங்களும்தான் அவர்களை ஆக்ரமிக்கும்.

இதுபோன்ற எதிர்மறை எண்ணங்களை நீக்கி, படுக்கை அறையையே பரமானந்தமாக்கலாம் என்கிறது ஃபுங்ஸ்வே.

ஒரு நல்ல திசை காட்டி எடுத்துக் கொண்டு படுக்கை அறையின் திசைகளை குறித்துக் கொள்ளுங்கள். கிழே கொடுத்துள்ள சிறு சிறு மாற்றங்களைச் செய்து பாருங்களேன்.

வடதிசை :

படுக்கை அறையின் வடபகுதி உங்களின் வேலை அல்லது தொழில் முன்னேற்றத்திற்குரிய இடம். அங்கு ஒரு உலோக ஆமையை வைப்பது உங்கள் முன்னேற்ற வாழ்க்கைக்கு மிகச் சிறந்தது. ஆனால் இத் திசையில் ஒரு நாளும் மீன் தொட்டியோ, அல்லது நீர் சம்பந்தமான படங்களோ, உதாரணத்திற்கு நீர்வீழ்ச்சியின் படமோ வைக்கக் கூடாது.

வடகிழக்கு திசை :

படுக்கை அறையின் வடகிழக்கு அறை மிகவும் முக்கியமானது. அது நன்கு அமைந்தால் நல்ல வாரிசுகள் உருவாகும். ஆனால் ஒரு காரணமும் இன்றி, குறை ஒன்றும் இல்லாமலே தம்பதியினர் பலருக்கும் குழந்தைகள் பிறப்பதில்லை. அதற்குப் பரிகாரமாக ஒரு ஸ்படிக



கிண்ணத்தை ஒன்றும் போடாமல் நிறந்த மாதிரி வைப்பது மிகவும் பலனளிக்கும் என்கிறது ஃபுங்ஸ்வே. இத் திசையில் கம்ப்யூட்டரோ (அ) தொலைக்காட்சி பெட்டியோ வைத்திருந்தால் தவறாமல் அதைத் துணியால் (அ) கவர் போட்டு மூடி விட வேண்டும். ஏனென்றால் அவை எதிர் மறை அலைகளை பிரதிபலித்துக் கருவுறும் வாய்ப்புகளைத் தடுக்கும். வடகிழக்கு திசையின் பூமி அதாவது மண்ணின் அம்சத்தை அதிகரிக்கும். கிரிஸ்டல் பந்துகளைத் தொங்க விடுதலும் மிகவும் உகந்தது.

கிழக்கு திசை :

சிலருக்கு அடிக்கடி மனச்சோர்வு அதாவது டிப்ரஷன் வரும். பழைய மோசமான விஷயங்களை நினைத்து மருகி, மருகி மன அமைதி தொலைந்து தூக்கம் வராது. ஒரு புது வாழ்க்கையை ஆரம்பிக்க நினைக்கும் இவர்களுக்கு உகந்தது இத் திசை. சூரியன் உதயமாவது போன்ற ஒரு படத்தை இங்கு மாட்டி வைப்பது மிகவும் பலனளிக்கும்.

தென்கிழக்கு திசை :

லக்ஷ்மி குடிகொள்ளும் திசை இது. எனவே உங்கள் பணப் பெட்டி அல்லது பீரோவை வைக்க ஏற்ற இடம் இது. ஐஸ்வர்யத்தை அதிகரிக்க மூன்று ஸ்படிக பந்துகளை இத் திசையில் தொங்க விடுதல் சாலச் சிறந்தது என்கிறது ஃபுங்ஸ்வே. அல்லது சைனீஸ் வாஸ் கிடைத்தால் அதை வைப்பதும் பலனளிக்கும் என்கிறது.

தெற்கு திசை :

உங்கள் வாழ்க்கையை சிராகவும், ஒளி நிறைந்ததாகவும் ஆக்கவல்ல திசை இது. சுவர்க் கடிகாரத்தையும், இரவு விளக்குகளையும் இங்கு வைப்பது நல்லது. உங்கள் விசிட்டிங் கார்டுகளையும் வைக்க ஏற்ற இடம் இது. இரவு விளக்கு சிவப்பு நிறத்தில் இருப்பது உத்தமம்.

தென்மேற்கு திசை :

அன்பிற்கு, உகந்த திசை இது. கணவன் மனைவி உறவில் பாசமும், நேசமும் அதிகரிக்க இத் திசையில் இரு ஸ்படிக இருதயங்களை வாங்கி மாட்டலாம். மாண்டரின வாத்துக்கள் சீனர்களின் காதல் சின்னமாக விளங்குகிறது லவ் ஃபேர்ட்ஸ் போல. எனவே இரு மாண்டரின் டக்ஸ் பொம்மைகளையோ அல்லது படத்தையோ மாட்டி வைப்பது அன்பை அதிகரிக்கும். இத் திசையில் வெள்ளை அல்லது ரோஜா நிற ஸ்படிக திராட்சைகளையும் மாட்டி வைக்கலாம். கணவன், மனைவி அன்போடு சிரித்துக் கொண்டு எடுத்த புகைப்படத்தையும் மாட்ட ஏற்ற இடம் இது. அது மட்டும் அல்லாமல் குடும்பப் புகைப்படத்தை வைப்பது கூட பாசப் பிணைப்புகளை வலுப்படுத்தும்.

மேற்கு திசை :

உங்கள் நகைப் பெட்டியை வைக்க ஏற்ற இடம் இது. நகைப் பைத்தியம் யாரைத்தான் விட்டது? உங்கள் நகைச் சீட்டு ரசீதுகளையும் இங்கு வைக்கலாம். பொன்னை அதிகரிக்க, ஒரு வெள்ளிக் கிண்ணத்தில் காசுகளைப் போட்டு இவ்விடத்தில் வைக்கலாம். அதை வைக்க பர்ஸ் இடம் கொடுக்காவிட்டால் மலிவான விலையில் கிடைக்கும் ஸ்படிக கிண்ணத்தில் காசுகளைப் போட்டும் வைக்கலாம்.



இந்த ரகசியத்தை யார்கிட்டேயும் சொல்லிடாதீங்க!

எனக்கும் ஷீலாவுக்கும் எப்பவுமே போட்டிதான்.

ஸ்கூல்ல படிக்கறப்போ அவதான் வகுப்பில் முதல் ராங்க்.

எவ்வளவோ ட்ரை பண்ணியும் எனக்கு இரண்டாவது ராங்க்தான்.

அது மட்டுமா?

பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, விளையாட்டுப் போட்டின்னு எதுவானாலும் அவளுக்குத்தான் முதல் பரிசு. சில சமயங்களில் அவள்மீது பொறாமை கூடப் பட்டிருக்கிறேன்.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் இருவரும் ஒரே காலேஜில் சேர்ந்தோம்.

அங்கேயும் இதே கதைதான்.

படிப்பு முடிந்ததும் ஒரு வேலைக்கு விண்ணப்பித்திருந்தேன்.

அதே கம்பெனிக்கு அவளும் விண்ணப்பம் செய்திருந்தாள்.

இன்டர்வியூ கார்டு வந்தது இருவருக்கும். தனக்குத்தான் இந்த வேலை என்று ஷீலா உறுதியாக நம்பிக் கொண்டிருந்தாள்.

ஆனால், நான் ரகசியமாக எடுத்த ஒரு முடிவால் அந்த வேலை எனக்குத்தான் கிடைத்தது.

அது என்ன ரகசியம்?

ஷீலாவுக்குத் தெரியாமல் நான் ரகசியமாக விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்டின் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர்ந்திருந்தேன்.

அவர்கள் அனுப்பிய பாடங்களை வீட்டிலிருந்தபடியே படித்து, பிராக்டிஸ் செய்து ஈஸியாக இங்கிலீஷ் பேசக் கற்றுக் கொண்டேன்.

இன்டர்வியூவில் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் இங்கிலீஷில் டக் டக் என்று என்னால் பதில் சொல்ல முடிந்தது.

எனது ஆங்கிலப் புலமையைப் பாராட்டிய அவர்கள் **"Anitha, you are appointed"** என்றதும் முதலில் எனது நன்றியினை விவேகானந்தா இன்ஸ்டிட்யூட்டிற்கு மனசுக்குள் சொல்லிக் கொண்டேன்.

உனக்கு இந்த வேலை எப்படிக் கிடைத்தது என்று கேட்டு ஷீலா என்னை நச்சரித்துக் கொண்டேயிருக்கிறாள்.

இதுவரை நான் அவளிடம் இந்த ரகசியத்தை சொல்லவேயில்லை.

நீங்க அவகிட்ட சொல்லிடாதீங்க.

ப்ளீஸ்.

அனிதாவைப் போன்று நீங்களும் வீட்டிலிருந்தபடியே ஈஸியாக இங்கிலீஷ் பேசக் கற்றுக் கொள்ளலாம்.

கீழ்க்காணும் கூப்பனைப் பூர்த்தி செய்து **விவேகானந்தா இன்ஸ்டிட்யூட், 9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை-600 017** என்ற முகவரிக்கு இன்றே அனுப்புங்கள். கோர்ஸ் பாடங்கள் V.P.P. மூலம் உங்களது வீடு தேடி வந்துவிடும். தபால்காரரிடம் ரூ.395/- மற்றும் தபால் செலவை செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தயக்கமின்றி இங்கிலீஷில் ஈஸியாகப் பேச ஆரம்பியுங்கள்.

பாடங்களுடன் 416 பக்கங்கள் கொண்ட **இங்கிலீஷ் - தமிழ் டிக்ஷனரி இலவசம்.**

இதோ கூப்பன்

YES! நானும் ஈஸியாக இங்கிலீஷ் பேச விரும்புகிறேன். எனக்குப் பாடங்களை V.P.P. மூலம் அனுப்புங்கள். தபால்காரரிடம் ரூ. 395/- மற்றும் தபால் செலவைச் செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்கிறேன்.

பெயர்:...

முகவரி:...

....

.................................PIN.................

VIVEKANANDA INSTITUTE

9, மேட்லி ரோடு, தி.நகர், சென்னை - 600 017.

DCMM

10 / TAM / 01 / NAGA

E-Mail: vinglish@vsnl.com

Visit us at: www.vivekin.com



வடமேற்கு திசை :

உதவிக்கான திசை இது. மற்றவர்களின் தயவும், உதவியும் வேண்டும் என்று நினைப்பவரானால் இத் திசையில் ஒரு மேசை விடி விளக்கை எரிய விடவும். உங்கள் மொபைல் ஃபோனை வைக்கவும் ஏற்ற இடம் இது என்கிறது ஃபுங்ஸ்வே. இவ்விதம் செய்தால் உதவி செய்பவர்கள் தாமே உங்களை நாடி வருவார்கள்.

திசைகளனைத்தையும் எவ்விதம் வலுப்படுத்தலாம் என்று பார்த்தாகி விட்டது. இனி எப் பொருட்கள் எல்லாம் உங்கள் படுக்கை அறையில் இருப்பது நல்லதல்ல என்று பார்ப்போமா?

ஒருநாளும் உங்கள் படுக்கை அறையில் இருக்கக் கூடாதவை :

◆ படுக்கை விரிப்புகளும், திரைச்சீலைகளும் கடுமையான நிறங்களில் ஒருபோதும் தேர்வு செய்யாதீர்கள். அவை மன கிலேசத்தை உண்டுபண்ணும்.

◆ படுக்கை அறையில் ஒருபோதும் நிலைக்கண்ணாடிகளை வைக்காதீர்கள். கட்டிலுக்கு நேராக கண்ணாடி இருக்கவே கூடாது. ஏனென்றால் கண்ணாடிகள் எதிர்மறை சக்தியை பிரதிபலிப்பவை. கண்ணாடியை எடுக்க முடியாவிட்டால் தூங்கும் நேரத்தில் ஒரு துணியால் அதை மூடி விடுங்கள். புது வீட்டைக் கட்டுவதானால் கப்போர்ட்டிற்குள் கண்ணாடி வைப்பது போல அமையுங்கள்.

◆ படுக்கை அறையில் தொலைக்காட்சி, கம்ப்யூட்டர் வைப்பதும் நல்லது அல்ல. அவை இருந்தே ஆக வேண்டும் என்றால் மறக்காமல் அவற்றிற்கு இரவு உறை போட்டு விடுங்கள்.

◆ படுக்கை அறையில் ஒருபோதும் உணவு உட்கொள்ளாதீர்கள்.

◆ படுக்கை அறையை ஒருபோதும் விவாத அறையாக மாற்றாதீர்கள்.

◆ கணவன் மனைவி ஒருபோதும் தனித்தனியான இரு மெத்தைகளில் படுக்கவே கூடாது.

◆ படுக்கை அறையின் கதவிற்கு அருகில் தலைவைத்துப் படுக்கவே படுக்காதீர்கள். அது மரணத்தை வரவேற்பது போல என்கிறது ஃபுங்ஸ்வே.

◆ ஒரு நாளும் மீன் தொட்டி அல்லது ஃபௌண்டன்களை படுக்கை அறையில் வைக்கக் கூடாது.

◆ படுக்கை விரிப்புகள் மென்மையான வெள்ளை, ரோஜா நிறங்களில் இருக்கலாம். ஆனால் நீலநிற விரிப்புகளை பயன்படுத்தக் கூடாது.

◆ உயிர் உள்ள நிஜ செடிகளை படுக்கை அறையில் வைக்கக் கூடாது. மாதுளம் பழ செடி மட்டுமே இங்கு விதிவிலக்கு. அதை வேண்டுமானால் வைக்கலாம்.

இச் சிறு, சிறு மாற்றங்களை செய்து பார்த்தால் ஜம்மென்று தூக்கமும், சந்தோஷமும் மட்டுமல்லாமல் ஜிவ்வென்று வாழ்க்கைத் தரமும் உயரும் என்கிறது ஃபுங்ஸ்வே.

— மித்ரா முரளீதரன்

வாசல் தெளித்துக் கோலம் போட்டு, அவல் பாயசமும், அடையும் செய்து வைத்து விட்டு, நாளிதழ்களை மேய்ந்து, நடைக்கும் உள்ளுக்குமாய் நாலு முறை நடந்து, தேய்ந்து, இன்னும் கூட இரவாகவில்லை.

இந்த நாற்பதுகளின் முடிவுகளிலேயே வாழ்க்கை அலுத்து, சலித்துப் போய் விட்டது. பதினேழு வயதில் சச்சிதானந்தை கைப்பிடித்து பெரும் குடும்பத்திற்காக உழைத்து, தானும் நாலு பெற்று அதுகளுக்கும் வழி காட்டி, வழிப்படுத்தி... ம், ஆயிப்போனது இந்த ஆவணியோடு நாற்பத்தெட்டு வயசு...'

'சாவித்திரி சச்சிதானந்தம்' என்று கையெழுத்துப் போட

புதிய

கற்றுக் கொண்டு கிட்டத்தட்ட முப்பத்தியொரு வருடம் முடிந்தாகி விட்டது. இப்போதுதான் லேசாய் முன் உச்சியில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நரை தெரிகிறது. கசங்காத காஞ்சிபுரப் பட்டுப் போல் உடம்பும் ஒரு சுருக்கமும் இல்லாமல் இளமையாய் இருக்கிறது. ஆனால் இந்த பாழும் மனசு மட்டும் தொய்ந்து தளர்ந்து போனது.

அதற்கும் காரணமில்லாமல் இல்லை. ஆறில் ஒன்றாய் பிறந்தவள் சாவித்திரி. அவள் பிறந்தகத்தில் ஜேஜே என்று மூர் மார்க்கெட் போல் கூட்டமிருக்கும்... பிறந்ததுதான் அப்படி என்றால் வாழ்க்கைப் பட்டு வந்தது சென்ட்ரல்



உறவுகள்

எஸ். பர்வின் பானு



ஸ்டேஷனுக்கு. நாத்தி, நங்கை ஓர்படி, மச்சினர் என்று கொலு கொலுத்த நான்கு கூட்டு வீடு.

பதினைந்து வருடம் கூட்டுக் குடித்தனம். அதன் பிறகு இவள் பிள்ளைகளுக்கு சேவகம் என்று இதுவரைக்கும் காலம் சுறு சுறுப்பாய்த்தான் ஓடியது. மூத்தவன் வேணு கல்யாணமான கொஞ்ச நாளைக்கெல்லாம், தனக்கும் பொண்டாட்டி வத்சலாவுக்கும் பக்கமாய் இருக்கிறது என்று சொல்லி கோட்டூர் புரத்தில் வீடு பார்த்துக் கொண்டு போய் விட்டான்.

நீரஜா...! அடுத்தவள். கல்யாணமாகி கணவன் வீட்டிற்குப் போயாகி விட்டது. மூன்றாவது மகன் சோமு...! பெங்களூரில் வேலை பார்க்கிறான். கல்யாணமும் அந்தப் பக்கத்திலேயே அமைந்து போனது. கடைசியாய், இவளுக்குப் பிடிப்பாய் மீதமிருந்தது கடைக்குட்டி காதம்பரிதான். போன தையில் அவளும் கல்யாணமாகிப் போய் விட்டாள்.

சச்சிதானந்தத்திற்கு ப்ரமோஷனுக்கும், பண வரவிற்கும் குறையில்லை. புதிதாய் போன வாரம் ஜெனரல் மானேஜர் உத்தியோகம் கிடைத்திருந்தது. சதா நேரமும் சாட்டையும், பம்பரமுமாய், சுற்றத்தான் அவருக்குப் பொழுதிருந்தது.

காலையில் எட்டு மணிக்குப் போனால், இரவு பத்து கூட ஆகிவிடும் சில நாட்களில்... அதுவரைக்கும் சாவித்ரி என்ன செய்வாள்...? முங்கி முங்கிப் பார்த்தாலும் ரெண்டு பேருக்காய் சமைத்து ஒழிய ரெண்டு மணி கூட அவசியப்படாது. வசதிக்கு வசதியாய் அத்தனை பொருளும் வீட்டில் இருந்தது.

அழுது பிழியும் டீ.வி. நாடகங்களில் அவள் மனசு என்றைக்கும் லயித்ததில்லை. கடவுளின் கருணையால அவளுக்குக் கண்ணீரில்லாத காலமாய்த்தான் இத்தனை நாளும் இருந்து வந்திருக்கிறது. ஒப்பு வைத்து அழும் நாடகங்கள் மனசுக்கு நறுக் என்பதால், அதைத் தவிர்த்தாள்.

"நான் இந்த முறை வீட்ல கொலு வைக்கலாம்னு இருக்கேன்...!" தயங்கியபடி சொன்னாள்.

"ஓ பேஷா வையேன்..." ப்ரீப்கேஸில் இருந்து நிரப்பப்படாத செக்கை கிழித்துத் தந்தார்.

"சாவித்ரி, உனக்காக நான் டயம் ஒதுக்கலைங்கற குறை உனக்கு இருக்கறது எனக்கு நல்லாத் தெரியுது. நான் என்ன செய்ய...?, உனக்கு உன்னுடைய வேலைகள்ல இருந்து சீக்கிரம் ரிடையர்மெண்ட் வந்துட்டது. எனக்கு இன்னும் வரலயே... ஆனாகூட நீ உன்னுடைய நேரத்தை எத்தனை மனசாந்தியுடன் செலவு செய்ய முடியுமோ செய்" பக்குவமாய்

அவள் தோள் பிடித்துச் சொல்லவும், அவரின் அன்பைக் கண்டு, கண்ணீர் எட்டிப் பார்த்தது.

கொலு வைக்கப் போகின்ற எண்ணமே பரபரப்பைத் தர, வேலைகளில் மும்முரமானாள். முதலில் அவளோடு சேர்ந்து, சுத்தி அலைந்து வேலை செய்ய ஒருஆள் பிடிக்க வேண்டும். நீரஜாவை கூப்பிட்ட போது எல்.கே.ஜி. படிக்கும் அவளின் மூத்த பிள்ளைக்கு எக்ஸாம் டயமென்றாள். காதம்பரியைக் கூப்பிட்ட போது மாமியார் என்ன சொல்வாளோ என்று தயங்கினாள்.

வத்சலாவும், வனஜாவும் வேலைக்குப் போகும் பெண்கள். அவர்களைக் கூப்பிடுவதே அநாகரீகம். ஓர்ப்படி பிள்ளை, நாத்தனார் மருமகள்கள் என்று எல்லோரும் தட்டிச் சொன்ன போது, சட்டென வந்து நின்றவள் ஆராயி...! பக்கத்து ப்ளாட் வக்கீல் வீட்டு வேலைக்காரி.

"இன்னா மாமி, வெளில வாசல்ல போய்ட்டு வர, தோதா ஆளு வேணும்ட்டு மாமியண்ட சொன்னியாமே...! நான் வரட்டா...?" அவள் தோரணையாய், தோரணையாய்தான் கேட்டாள் என்றாலும் அதில் கல்மிஷமில்லை.

கறுத்த முகத்தில் பளிச்சென்ற விபூதியும், குங்குமமும் பாந்தமாய் இருந்தது அவளுக்கு.

வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பினாள் சாவித்திரி. வாய் ஓயாது பேசிக் கொண்டே வந்தாள் ஆராயி.

கொலுப்படி செய்ய வேணும் எனறதும், மரக்கடை மாணிக்கத்திடம் அழைத்துப் போனாள். அவனும் நல்ல மாதிரிதான் தெரிந்தான். ஆர்டர் வாங்கிக் கொண்டு அடுத்த நாளே தருவதாகச் சொன்னான்.



தேங்காயும், வெல்லமுமாக சேர்த்து பூரணம் செய்து வைத்துக் கொண்டால், சுகியன், வெல்ல கொழுக்கட்டை, சோமாஸ், போளி, இலை அடை என்று ஒவ்வொரு நாள் ஒவ்வொன்று செய்யலாம்.

– சரஸா.

அடுத்தது பொம்மை வேட்டை... பெரிய ஷோரூமில் இருந்து, ப்ளாட்பாரக் கடை வரை, பார்த்துப் பார்த்து எடுத்தாகி விட்டது. உண்மையைச் சொன்னால் ஆராயியின் சமயத்துக்குத் தகுந்த அறிவுரையும் இவளுக்குத் தேவையாய்த்தான் இருந்தது.

"மாமி, மரப்பாச்சி பொம்மை விக்குது பாரு. வூட்ல இல்லாட்டி எடுத்துக்க..." சமயோசிதமாய் நியாபகப்படுத்தினாள்.

"போற வழியண்ட மார்வாடி கடைல வண்டிய நிறுத்தி முந்திரி, திராட்சை வாங்கிடு. இங்க சரக்கும் நல்லா இருக்கும். வேலையும் முடியும். வெலை கூட கணக்கா இருக்கும். வக்கீல் வூட்ல இங்கேயேதான் வாங்கறது..."

"மாமி உங்க வீட்ல மரப்பெட்டி கீதா...? இல்லாட்டி மாணிக்கம் அண்ணாத்தைகிட்ட சொல்லி, ஒண்ணு செஞ்சு வாங்கிக் குடு மாமி. சல்லிசா செஞ்சு தரும். நாளைக்கு பொம்மைகளை மேலே ஏத்தறப்போ இன்னா செய்வே..."

இப்படி ஒவ்வொன்றுக்குமாய், அவளுடைய உதவியும் ஒத்தாசையும் ரொம்பத் தேவையாய்ப் பட்டது சாவித்ரிக்கு. அவளின் ஆசைக்கு உயிர் குடுத்தவளாய் நின்றாள் ஆராயி.

கொலுப்படி இறக்கி, வண்ணமடித்து, பூஜை செய்து, பொம்மை அடுக்கி, கொலு வைத்தாகி விட்டது. முதல் நாளே நிறையக் கூட்டம் வந்தது. வேலைகளுக்கு நடுவே நீரஜாவும் ஒரு நடை வந்து தலைகாட்டி விட்டுப் போனாள்.

புஷ்ப வில்லைகளும், சுண்டலும் விநியோகித்துக் கொண்டிருந்த ஆராயியைப் பார்த்ததும் அவளின் முகம் ஏதோ போலானது.

"யாரும்மா இது...? எல்லா இடத்துலயும் நடுப்பற வர்றா?"

"ஆராயிடி. பக்கத்து பிளாட் வேலைக்காரி. இப்ப எனக்கு சகலத்துக்கும் அவதான். ரொம்ப ஒத்தாசையா இருக்கா..."

நீரஜா ஒப்புக்குத் தலையாட்டினாள் என்றாலும், அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதை, அவளின் முகப்போக்கைக் கொண்டு சாவித்திரியால் உணர முடிந்தது. நீரஜா கிளம்ப ஆயத்தமான போது, சுண்டலும், பலகாரங்களையும் டபராக்களில் அடைத்துத் தந்தாள் சாவித்ரி. பதறிப் போய் விட்டாள் நீரஜா.

"ஐயே, எதுக்கும்மா இதெல்லாம்...? அத்தை வீட்ல நிறைய பண்ணியிருக்காங்க. நீ இங்கயே யாருக்காச்சும் கொடு."

"அப்புறம் நாளைக்கு என்னோட ஓர்படி, நாத்தனார், மாமியார், எல்லாம் வரேன்னாங்க. நீ பாட்டுக்கு இந்த ஆராயியை உள்ள விட்டுட்டு நிக்காத. எங்க மாமியார் என்னை கொடுக்கி எடுத்துடுவா."

நீரஜா பலகாரம் வேண்டாமென்ற காரணம் பளிச்சென்று புரிந்து போனது.


ஆராயி அசூசையானவள் இல்லை. பணக்காரியாக இல்லை என்பதைத் தவிர்த்து அவளிடம் எந்தக் குறையுமில்லை. அப்படி இருக்க, நாளை என் சம்பந்தி வீட்டார் வருகிறார் நீ வராதே என்று எப்படிச் சொல்ல...?

குழப்பம் மேலிட சாவித்ரி தவித்தாள். வேலைகள் முடிந்து, அலம்பி துடைத்து விட்டு ஆராயியும் போய் விட்டாள்.

அடுத்த நாள் –

வழக்கத்தை விட சீக்கிரமாய் எழுந்து தன்னுடைய வேலைகளை துவக்கி விட்டாள். குளித்து முடித்து, பருப்பு ஊற வைத்து விட்டு நிமிர்ந்த போது, ஆராயி வந்து கதவு தட்டினாள். தர்மசங்கடமாய் இருந்தது சாவித்ரிக்கு.

கூடவே வேலைகளை செய்து முடித்தாள். எல்லோரும் வருகிறார்கள் என்பதால் ஸ்பெஷலாய் இரண்டு பலகாரம் செயது வைத்தாள். கணக்கு பார்த்து ஐந்து வெள்ளிக் குங்குமச் சிமிழ்களை வாங்கி வந்து, குங்குமம் நிரப்பி வைத்தாள், அவர்களுக்குத் தருவதற்காக.



நீரஜா கிளம்பி விட்டதாய் போன் செய்ததும் அவள் கேட்ட முதல் கேள்வி.

"அந்த சர்வென்ட் பொம்பளையை அனுப்பிட்டியா?" என்பதுதான்.

ஆனால் ஆராயியிடம் பக்குவமாய் சொல்லத் தயங்கித் தயங்கிச் சொன்ன போதும், அவள் முகம் கோணவில்லை. மாறாக,

"த மாமி இன்னாத்துக்கு நீ ரோசனையா பேசற...? உன் சம்பந்தி மனுஷங்க வர்ற போது நான் அந்தண்ட ஜகா வாங்கிக்கறேன். போதும்தான...?" என்றாள் யதார்த்தமாய்.

அவர்கள் வந்து போகும் வரை அவள் உள்ளே வரவேயில்லை. சாவித்ரிக்கு தவிப்பாய் இருந்தது. அவளுடைய உணர்வுகளை காயப்படுத்துகிறோமோ என்று கவலை படர்ந்தது. அவர்கள் எல்லோரும் கிளம்பிப் போனதும் தவிப்பாய் அவளிடம் போனாள்.

"ஆராயி, நீ ஒண்ணும் தப்பா நினைக்கலியே...? எனக்கு ரொம்ப, ரொம்ப கஷ்டமா இருக்கு...! வா வந்து சாப்பிட்டு உன் வீட்டுக்கும் எடுத்துப் போ..." பின்பக்கமாய் அமர்ந்திருந்த ஆராயியிடம் சொன்னாள்.

"இன்னாத்துக்கும்மா நீ இம்மா விசனப் படற...? எனக்கு இதெல்லாம் புதிசு இல்ல.." அவள் இயல்பாய் சொன்னாலும் அதில் நிறைய துக்கமிருந்தது.

கொலுவின் நாலாம் நாள் மூத்தவன் வேணு அவன் குடும்பத்துடன் ஆஜராகி விட்டான். அடுத்த நாள் சோமுவும் வந்து சேர்ந்து விட்டான். அடுத்தடுத்து நீரஜாவும் காதம்பரியும் கூட வந்து சேர்ந்து விட, வீடே கும்மாளம் பூட்டிக் கொண்டது. இப்போதிருந்த தண்ணீர் கஷ்டத்தில் தண்ணீர் மட்டும் தினம் ஒரு வாரி அடிக்க வேண்டி வந்தது.

"ஏய், ஆராயி, பையன் ஆய் போயிட்டான். அவனுக்குக் கால் அலம்பி சுத்தம் பண்ணி விடு..." வாக்மேனில் காது பொருத்தி இருந்த வத்சலா கட்டளையிட்டாள். அவளின் இரண்டு வயது மகன் ஹரீஷை அழைத்துப் போய், கால் அலம்பி விட்டுத் துடைத்து உடை மாற்றி விட்டாள் ஆராயி.

அதற்குள் வனஜாவின் கைக்குழந்தை நீனா பெட்ரூமில் உச்சா போய் விட, மூன்

நாவது முறையாய் ஆராய் வீடு துடைத்தாள். அவர்கள் வந்த பிறகு சாவித்ரியை விட ஆராயிக்குத்தான் வேலை கனத்தது. கூட்டி, பெருக்கி, சுத்தம் செய்யும் வேலையே நாளைக்கு நான்கைந்து முறை இருந்தது.

இவர்கள் எல்லாம் வந்தால் தன்னுடைய வேலை குறையுமென்ற நினைத்த சாவித்ரிக்கு எந்தப் பலனும் இல்லை. வத்சலா ஆர்டர் செய்து சாப்பாடு வாங்கிக் கொண்டு, டீவியும் சீரியலும், மீதி நேரத்தில் அரட்டை, அம்ப லாட்டம் என்று இருந்தாள்.

வந்த பெண்கள்தான் இப்படி என்றால், பிறந்ததுகள் எல்லாத்துக்கும் மேல். அண்ணி களின் நகைகளையும் சம்பிரதனையும் கண்டு ஒன்றுக்கொன்று உரசிப் பேசவே நேரம் சரியாய் இருந்தது.

இது அத்தனையும் பகலில்தான்.. பொழுது விழுந்ததும் ஜோராய் உடுத்திக் கொண்டு கொலுக்கூடம் வந்து நின்று விடுவார்கள். அத்தனையும் கட்டிக் காத்தவர்கள் போல் ஜோடனை பண்ணிக் கொண்டு அலம்பு வார்களே ஓர் அலம்பல்...! சாவித்ரி எதுவும் கேட்டுக் கொள்வதில்லை. பண்டிகை, நாளென்று சேருவதே பெரிய பாடாகிப் போனதால் எதற்கு வீண் வேதனை என்று விட்டு விட்டாள்.

இன்று வக்கில் வீட்டு மாமி வந்தாள். மாமிக்கு வெண்ணெயில் வழுக்கும் சாரீ ரம். இன்றைக்கெல்லாம் கேட்கும்படியாய் அழகாய்ப் பாடினாள். எல்லோரும் வியித் துப் போனார்கள். ஆராயிக்கு அதெல்லாம் புரிந்ததோ இல்லையோ மனசுக்கு சந் தோஷமாய் இருந்தது.

"ஆராயி, எல்லாருக்கும் பலகாரம் குடு..." சாவித்ரி கட்டளை இடவும், பேப் பர் பிளேட்டில் எடுத்து வைத்திருந்த பல காரங்களை ஆளுக்கொன்றாய் விநி யோகம் செய்தாள் அவள்.

"என்ன சாவித்ரி, ஆராயிய உனக்கு ரொம்பப் பிடிச்சுட்டது போல...! நான் அனுப்பி வச்சா சும்மாவா...!" மாமி பெருமிதமாய்க் கேட்டாள்.

"பின்ன இல்லாமயா... இத்தனை கூட் டத்தை சமாளிச்சு, நான் கட்டிக் காக்க ஆராயி இல்லாட்டி ஒண்ணும் முடிஞ்சிருக் காது. இல்லடி..." என்று சாவித்திரி ஆரா யிடமே கேட்கவும், அவளுக்கு நாணத்தில் முகம் சிவந்து போனது.

"பாவம் சாவித்ரி அவ. எட்டு வயசுல இருந்து வீட்டு வேலைதான் ஜீவிதம். கல் யாணம் பண்ணி போய்க் கூட அப்பா, அம்மா கூடத்தான் இருக்கா. அதுனால தான் அவ புருஷன் கூட சண்டையே...! கல்மிஷம் இல்லாத மனுஷி..."

வக்கில் மாமி நெகிழ்வாய் நினைவு கூறவும், இன்னும் ஓரிரு பெண்கள் அவளைப் பற்றி நல்லதனமாய் பேச, திடீரென அவ ளுக்குத் தரப்பட்ட முக்கியத்துவம் யாருக்கும் பிடிக்கவில்லை...

விடிந்தால் சரஸ்வதி பூஜை. தசமி பூஜை முடிந்த கையோடு எல்லோரும் கிளம்பி விடு வார்கள். எல்லோர்க்கும் நல்லதாய்ப் பரிசு தர வேண்டும்.

என்ன தரலாம்...! நிறைய யோசித்தாள். தானே முடிவு செய்வதை விட, நீரஜாவிடம் கேட்கலாமென்று தோன்றியது.

"நீரஜா, எல்லாத்துக்கும் என்ன வாங்கித் தர்றதுன்னு..."

"ம்கும். எல்லாத்தையும் அந்த ஆராயி கழுதைய வச்சே முடிவு பண்ணிடு. பின்ன கைக்கு கை எதுக்கு நீரஜா...? ஊறுகா கணக்கா..." நீரஜா போய் விட்டாள்.

மனசெல்லாம் அயர்வாய் தளர்வாய் இருந்தது. இந்தப் பெண் குழந்தைகளுக்கு மட்டும் பொறாமை போகவே போகாதா...?

"இன்னா மாமி சோர்ந்து கிடக்க...? நல்ல

நோவுதா...?" தலையில் கைவைத்துப் பார்த்தாள் ஆராயி.

"இல்ல ஆராயி. குழந்தைக நாளை கழிச்சு கிளம்பறாங்க. இது மொதல் வருசத்திய கொலு. எதுனாச்சும் நினைவா வாங்கித் தரலாம்னு தோணிச்சு. என்ன தர்றதுன்னுதான் ஐடியா இல்ல..."

"இதுக்கு இன்னாத்துக்கு கொயம்புறே...! உன் புள்ளைக என்ன துணிமணி இல்லாமயா கெடக்கு...? என்னை மாதிரி பொம்பளைங்கதான் ஆனுட்டு துணிக்கு அலையுவோம்...! த. பின்னாலேயே தீவளி வருது. அதுக் கொண்டி நீ எடுக்காம இருப்பியா...? ஒரே கணக்கா எல்லாத்துக்கும் நகையா எடுத்துடுமா" என்றாள்.

அதுதான் சரியென்றும் பட்டது. நீரஜாவிடம் சொன்ன போது கள்ளென்று எரிந்து விழுந்தாள்.

"அம்மா, எனக்கு நகையெல்லாம் வேணாம். எங்க வீட்ல வாஷிங்மெஷின் கெட்டாச்சு. பேசாம எனக்கு வாங்கித் தந்துடு..." என்றாள்.

"பத்தாயிரத்துக்கு மேலே ஆகுமேடி. என்னோட எஸ்டிமேட் ஐயாயிரம்தான். உனக்குப் பத்தாயிரம் தந்தா காதம்பரி சும்மா இருப்பாளா...?"

"அது சரி. நானும் அவங்களும் ஒண்ணா...! நான் தெரியாமத்தான் கேட்கறேன். இந்தக் கொலுவுக்கு நீ இத்தனை செலவு செய்ய வேண்டியது அவசியமா...? ஊர் கூடி தேர் இழுப்பே. நான் கேட்டா மட்டும் இருக்காது." நீரஜா கொட்டித் தீர்த்தாள்.

"நல்லா கேளு நீரஜா. எங்க மாமியார் வீட்ல ஊர் உலகம் போல பிராண்டி எடுக்கற ரகமில்லைதான். அதுக்காக நாமும் இப்படியே இருந்துட்டா நல்லா இருக்குமா...? அவர் கம்ப்யூட்டர் வாங்கணும்னு சொல் லிட்டு இருக்கார். சட்னு நாம புரிஞ்சுட்டு வாங்கித் தரணும்..."

"ஏம்மா அப்பாக்கு மாசம் பதினைஞ்சு, பதினாறுன்னு சம்பளம் வருதே. ரெண்டு பேருக்கு அத்தனை ஆயிடுதா...? எங்க குடும்பத்துல பாரு. ஏழெட்டு உருப்படி. மாசம் பட்ஜெட் போட்டு செலவு செஞ்சாலும் பத்தாயிரம் கூட தாண்டறதில்ல. அத்தனை சிக்கனம் நாங்க" தன் புகுந்த வீட்டு பெருமை சொன்னாள் காதம்பரி.

வத்சலா பவ்யமாய் இடம் வாங்க காசு கேட்டாள். வனஜாவும் தம் பங்கை விட்டு வைக்கவில்லை. எல்லோரும் பணத்தைப் பற்றுவதிலே குறிக்கோளாய் நின்றார்கள்.

இரவு வெகு நேரமாகியும் சாவித்ரிக்கு உறக்கம் பிடிக்கவில்லை. புரண்டு புரண்டு படுத்தும் மனசு மட்டும் சிந்தனை வயப் பட்டே நின்றது. சச்சிதானந்தம் அவளின் புஜம் பற்றித் திருப்பினார்.

"தூங்கலையா சாவித்ரி..? உடம்புக்கு ஏதாச்சும் பண்ணுதா...?" அவர் இதமாய்க் கேட்டதும் உடைந்து போனாள்.

"என்ன சொல்லங்க...? நாம பெத்த குழந்தைக தானே எல்லாம்...? இப்ப என்னையே கேள்வி கேட்குதுங்க. உனக்கு என்ன செலவுன்னு கேட்குதுங்க... இத்தனை நாள்ல ஒரு நாளாவது வந்து என்னம்மா எப்படி இருக்கே, உனக்கு உடம்பு நல்லா இருக்கா, மனசு நல்லா இருக்கான்னு கேட்டதில்லை..."

"அடடா, எதுக்கு சாவித்ரி அழறே...?"

"இல்லங்க. இத்தனை காலம் அவங்களுக்காய் உழைச்சேன். அதுங்களுக்கு எது சந்தோஷம்னு பார்த்துப் பார்த்து செய்தேன். இப்ப என்னைப் பத்தி அவங்களுக்குக் கவலையில்லை. வாய்க்கு வாய் என் வீடு, என் குடும்பம்... அப்ப நான் யாராம்...!" குழந்தை போல் விசும்பினாள்.

"சாவித்ரி, இது போல நீ கவலைப்படறதுல எந்த அர்த்தமும் இல்லம்மா. அவரவர்க்கு ஆயிரம் தேவை இருக்கும். தன்னுடைய தேவைக்கு அம்மான்னு உன்கிட்ட வந்து கேட்கறாங்க.

இனிமேல் இதுபோன்ற விஷயங்களில் உன்னை வருத்திக்காதே. குழந்தைகளை நல்ல

கொலுவில் குளத்தில் தண்ணீர் விட்டு, அதில் ஒரே ஒரு சொட்டு நீலம் விட்டு, அந்த நீல நீருக்குள் பச்சை, மஞ்சள், சிவப்பு நிறமுள்ள சமிக்கிகளை மிதக்க விடுங்களேன். மாலை மெல்லிய நீல விளக்கொளியில் உங்கள் கொலுவில், குளம் பிருந்தாவனம் போல் அழகாக இருக்கிறதா?

– கே. ராஜலக்ஷ்மி.



நிலைக்கு உசத்தியாச்சு. இனிமேல் இயல்பா வாழ நீ கத்துக்கோ. இத்தனை காலம் இந்தக் குடும்பத்திற்காகவும் பிறருக்காகவும் காலமெல்லாம் உழைச்சே. போதும்மா.

உனக்கு பாகற்கா பிடிக்காது. எனக்காக சாப்பிடக் கத்துட்டே. எங்கம்மாக்கு பிடிக்காதுங்கறதுக்காக நீ கருப்பு உடுத்தறதை விட்டுட்டே. பூனைன்னா உனக்கு பயமான பயம். குழந்தைக ஆசைப்பட்டு வளர்த்தப்போ அதையும் ஏத்துகிட்டே.

இனி யாருக்காக உன்னை மாத்திட்டு நீ வாழணும்...? கரிதார் போடறயா போட்டுக்க. பரதம், வீணைன்னு கத்துக்க ஆசையா...? கத்துக்க. சோஷியல் ஒர்க் பண்றியா...? பண்ணு. ஏத்துக்கறவங்க ஏத்துக்கட்டும் இல்லாட்டி போகட்டும்'' அவர் உறுதியாய் கூறி அவள் தலைகோதினார்.

அவள் மெல்ல தன்னுடைய ஆசையை வெளியிட்டாள்.

இன்று தசமி பூஜை. வீடு விளக்கொளியில் மின்னியது. பட்டும், குங்குமமுமாய் நிறைய பெண்கள் கூட்டம். கூட்டத்தை மீறிய பூ வாசமுமாய் நிறைந்திருந்தது.

உறவுக்காரர்கள் நிறையப் பேர் வந்து போனார்கள். சாவித்ரி எல்லோர்க்குமாய் சேர்த்து ஒரே போல் சவரன் மோதிரமும், மைசூர் சில்க் புடவையும் எடுத்திருந்தாள்.

மேலுக்காய் சிரித்துக் கொண்டாலும், உள்ளுக்குள் குறைபாட்டுடன் வாங்கிக் கொண்டார்கள். அவர்களின் வெறுப்பை வெளிகாட்டவும் சாவித்ரியே வழியமைத்துக் கொடுத்தாள். அவர்களுக்குப் போலவே, பூப்பழ தட்டுடன் புடவையும், நகையும் வைத்து ஆராயிடம் தரவும், ஆராயி துணுக்குற்றுப் போனாள்.

''ஐயோ, இன்னாத்துக்கும்மா இதெல்லாம்...? நான் இதுக்காக காட்டிக்கும் இங்க வேலைக்கு வரல. என் வூட்ல ஆயிரம் கஷ்டம். ஏதோ இதுபோல சாமி காரியத்துல துணையா இருந்தா, ஒரு விடிவு வராதானுட்டுத்தான் நான் வந்தது. வேணாம்மா இதெல்லாம்...'' நெகிழ்ந்து போய்க் கண்ணைக் கசக்கினாள்.

''அம்மா, உனக்கென்ன பைத்தியமா...? ஐயாயிரம் மதிப்புள்ள பொருள்களை என்னவோ தேங்கா பத்தைய தூக்கி தர்றாப் போல தர்றியே. அவ என்ன நீ பெத்த பொண்ணா...? வேலக்காரி மா அவ'' நீரஜா வந்து காதைக் கடித்தாள்.

''அப்பாவுடைய சம்பாத்தியம் எல்லாம் எப்படி வேட்டு படுதுன்னு பாரு நீரஜா. நம்ப கேட்டா மட்டும் அம்மாக்கு இல்லாம ஆயிடும்...'' என்றாள் காதம்பரி.

''எல்லாம் எனக்குத் தெரியும்...! இந்தப் பதினைஞ்சு நாளா என் கூடவே இருந்து, வேலை செய்து, தூசு துரும்பைக் கூட உதவியா மாத்தினவோ அவ. பொண்ணுக்குத்தான், வாரித் தரணும்னு எந்தச் சட்டத்திலயும் இல்ல.

எனக்கு வேறெதுவும் வருத்தமில்லடி. ஏம்மா நீ எப்படி இருக்கேன்னு ஒரு வார்த்தை கேட்கறதில்ல. எனக்கு அதக் குடும்மா, இதக் குடும்மான்னு கேட்க மட்டும் வர்றீங்க.

மனசு தொடற எல்லாரும் உறவுதான். ஆராயியும் எனக்கு அப்படித்தான்.

நான் ஆராயிய துணைக்கு வச்சுட்டு, நம்ம மாடில ஒரு க்ரச் ஓபன் பண்ணப் போறேன். நம்ம ப்ளாட்ல உள்ள வேலைக்குப் போற பொண்களோட கஷ்டத்தை போக்கின மாதிரியும் ஆச்சு. வரும்படிக்கு வரும்படியும் ஆச்சு.

ஆராயிக்கும் உதவினா மாதிரி இருக்கும். இந்த வருமானத்துல, இதுபோல ஏழைங்களுக்கு நிறையச் செய்யணும். இதெல்லாம் விட முக்கியமா என்னுடைய கொடுமையான தனிமை போகும்.

சதா நேரமும் மோட்டுவளைய பார்த்துட்டு, யாராவது வரமாட்டாங்களான்னு ஏங்கற நிலைமை போகும். நீங்க எல்லாரும் உங்க வாழ்க்கைல பிஸியா இருக்கீங்க. சந்தோஷமா இருக்கு. நானும் அதைப் போல என்னை மாத்திக்கிடறேன்.

அப்புறம், பண்டிகை நான்னு சேர்றது பணத்துக்காக மட்டும்னு நினைக்காதீங்க. பணம் தானா வரும், போகும். உறவும் அன்பும் அப்படி இல்ல...''

அம்மாவின் உதட்டசைவில் விக்கித்து நின்றார்கள் குழந்தைகள். எப்படி அவளுக்கு இத்தனை தெளிவும் திடமும் வந்தது. தெளிவையும் சக்தியையும் ஒருசேர தந்தது இந்த நவராத்திரியா...? ❑

கறுத்துப் போன வெள்ளி சாமான்களை தாம்பூல சுண்ணாம்பு கொண்டு தேய்த்துப் பாருங்கள். சும்மா பாலீஷ் போட்டது போல வெள்ளி சாமான்கள் டாலடிக்கும்.

– பத்மஜா ராமகோபால்.






ஸ்ரீ



தருமத்தின் வடிவமான தருமரும், திருமாலின் அவதாரமான ஸ்ரீ ராமரும், தங்கள் வெற்றிக்கு நவராத்திரி விரதத்தை அனுஷ்டித்தனர். தனது மாங்கல்யம் குறையாமல இருக்க சாவித்திரி இதைக் கடைப்பிடித்தாள். புராண - புருஷர்களும் இதிகாச மணிகளும் மேன்மை பெற விளக்கேற்றி வைத்தது நவராத்திரி விரதமே!

அம்பிகையை வழிபட மாதங்களில் தையும், ஆடியும் மிகச் சிறந்தது. வாரங்களில் செவ்வாய், வெள்ளி உகந்தன. திதிகளிலே அஷ்டமியும் சதுர்தசியும், பௌர்ணமியும் மிக்க மேன்மையானவைகள். நக்ஷத்திரத்தில் உத்திர நக்ஷத்திரம் அம்பிகைக்கு ஏற்றது. ஒவ்வொரு நாளும் வரும் இரவுக் காலம்



அம்பிகை. பூஜைக்கே உரியது. இரவில் செய்யப்படும் எல்லாவிதமான பூஜைகளும் அன்னையைத்தான் சாரும்.

முன் நாட்களில் நவராத்திரி பூஜை - துர்கா பூஜை என்றே வழங்கப்பட்டு வந்தது. இந்தப் பூஜையில் ஸ்ரீ வித்யா மந்திரங்களும், உபதேச மந்திரங்களும் ஜெபம் செய்யப் பெற்று, உருஏற்றப் பெற்று தங்களை வலுவாக்கிக் கொண்டார்கள்.

இராவணனுடைய வலிமை, அவன் தவத்தினால் பெற்ற வரங்கள் இவைகளை உணர்ந்த ஸ்ரீ ராமன், அவனை வெல்லும் வழியைச் சிந்தித்து இருந்தான். லோபா முத்திரையின் கணவரும், சித்தர்களில் மூத்தவரும், உருவத்தால் குறுகி, மந்திரத் திறனாலும், அறிவுத் தெளிவாலும் உயர்ந்த அகத்தியர் இராமரின் சிந்தனைக்கு முடிவு கட்டினார்.

அதாவது ஸ்ரீ ராமனுக்கு இராவணனை சம்ஹாரம் செய்யும் பூரண வலிமையைக் கொடுக்கும் "ஸ்ரீ பஞ்ச தசாக்ஷரி" என்ற வித்யா மகா மந்திரத்தை வலது காதிலே உபதேசித்தார். அதிலிருந்து ஸ்ரீ ராமன், தேவி பக்தனாக மாறிப் புரட்டாசி மாதம் சுக்ல பக்ஷபிரதமை முதல் நவமி முடிய ஒளியான ஒன்பது நாட்களிலும் ஸ்ரீதேவியைப் பூஜித்ததாகச் சொல்லப்படுகிறது.

ஸ்ரீராமன் அன்

துர்கா நவராத்திரி

ணையை இந்த ஒன்பது நாளும் இரவில் நியம நிஷ்டையுடன் பூஜை செய்தது முதல் இது சிறந்த நவராத்திரியாக ஒளிர்விட்டது. இராமனும் அன்னையை வழிபட்டு தசக்ரீவனை சம்ஹாரம் செய்தான். ஸ்ரீ கண்ணபிரானும் கூட பிருந்தாவனத்தில் இவ்விதமே நவராத்திரி பூஜை செய்து அன்னையின் அருளைப் பெற்றதாகக் கூறப்படுகிறது.



பத்தாவது நாளில் விஜயதசமி என்று கொண்டாடுகிறோம். இந்த விஜயதசமி எப்படி வந்தது?

பஞ்ச பாண்டவர்கள் துர்யோதனாதியரிடம் தோற்றதால் நாட்டை இழந்து வாடும் நிலை ஏற்பட்டது. அவர்கள் காட்டில் மறைந்து வாழ்ந்த காலத்தில், தங்கள் ஆயுதங்களை ஒரு பெரிய வன்னி மரத்தின் பொந்தினுள் ஒளித்து வைத்திருந்தார்கள். அவர்களின் அஞ்ஞாதவாச பன்னிரெண்டு ஆண்டுக் காலத்தில் வன்னி மரம்தான் அவர்கள் ஆயுதங்களின் பாதுகாப்புப் பெட்டகம் ஆயிற்று.

அவர்கள் மறைந்து வாழும்போது, மற்றவர்களால் தெரிந்து கொள்ளப்படாமல் இருப்பதற்கும் அக்காலத்தில் தங்கள் துன்பங்கள் தங்களைத் தாக்காமலும் இருக்கவும் என்ன வழி என்று தேடினார்கள். வனத்தில் தவம் செய்யும் பெரும் முனிவர்களை அண்டி வணங்கினார்கள். முனிவர்கள் மன்னர்களுக்கு ஸ்ரீ துர்க்கா தேவியின் புகலிடத்தைக் காட்டினார்கள்.

துன்பங்களில் இருந்து காப்பவளும், துன்பங்க்ளை விடுவிப்பவளும் துர்க்கையே துர்க்காதேவியை அண்டியவர்களுக்குத் துன்பத்தின் சாயல் கூடத் தொடராது; தாரித்திரியம், துக்கம், பயம் இவைகளைப் போக்கி உலகுக்கு உபகாரம் செய்பவளே துர்க்கை. இதை நன்கு அறிந்த பாண்டவர்கள் தருமரை முதலாகக் கொண்டு தேவியை வழிபட்டார்கள்.

மகரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட "ஸ்ரீ துர்க்கா நக்ஷத்ரமாலிகா துதி" என்ற இருபத்தேழு ஸ்லோகங்களைக் கொண்ட துதியால் நாள்தோறும் துதித்தார்கள். இதனால், தேவியின் திருவருள் கிட்டியது. அசுவினி முதல் ரேவதி முடிய உள்ள இருபத்தேழு நக்ஷத்திர அதிதேவதைகளும், நக்ஷத்திரங்களும் இவர்களுக்கு ஆசி கூறி நன்மைகளை வழங்கத் தயாராய் நின்றன.

அக்ஞாத வாசம் முடிந்ததும் வன்னிமரப் பொந்தில் இருந்து தங்கள் ஆயுதங்களை எடுத்து அம்மரத்தடியில் வைத்துப் பூஜித்தார்கள். வன துர்க்கையாகவும், எல்லாச் சங்கடங்களையும் சங்கரிப்பவளாயும், தீமைகளை அடக்கி ஒடுக்கி நன்மைக்கு வெற்றி தருபவளாயும் விளங்கும் தேவியை ஒன்பது நாட்கள் வழிபட்டார்கள். தசமியில் ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள்.

விஜயம் தரும் தசமி இது என்பதாலும், விஜயனால் மிகவும் பயபக்தியுடன் பூஜிக்கப்பெற்றது என்பதாலும் இது "விஜயதசமி" என்ற பெயரைப் பெற்றது. இதை விஜய நவராத்திரி என்றும், வன்னி நவராத்திரி என்றும், வன துர்க்கா நவராத்திரி என்றும் அழைப்பது வழக்கம்.

இவைகளைப் பற்றி எல்லாம்

விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் "தேவி மகாத்மியமும், மார்க்கண்டேய புராணமும், தேவி பாகவதமும், அருணாசல மான்மியமும், லலிதம்" முதலிய நூல்களும் பேசுகின்றன.

ஒன்பது நாட்களும் "வபனம்" (முடி நீக்குதல்) ஆகாது; மருந்துண்ணல் கூடாது. பொய் நீக்கிய வாழ்வும் அன்னை புகழ் பேசும் நாவும் கொண்டு விளங்க வேண்டும். நவராத்திரியில் ஒன்பது நாட்களும் முறையே சைலபுத்திரி, பிரும்மச்சாரிணி, சந்திர காண்டா, கூஷ்மாண்டா, ஸ்கந்த மாதா, காத்யாயனி, காலராத்ரி, மகா கௌரி, சித்திதா என்ற நவதுர்க்காவாக நவ நாட்களிலும் ஒளிர் விடுகிறாள். இதனால்தான் கன்யா பூஜையில் அந்தந்த நாளுக்குரிய தேவியாக பெண் குழந்தைகள் வரித்து பூஜை செய்யப் பெறுகின்றனர்.

இரவில் பட்டினி இருத்தல் வேண்டும். ஒருசிலர் பகலெல்லாம் நோன்பு இருந்து, இரவில் அன்னையின் வழிபாடு நிறைந்த பின்னர் சிற்றுணவு கொள்வதும் உண்டு. இதுவும் ஏற்றதே! இந்த ஒன்பது நாட்களிலும் பானகமும், தேனும் நிவேதிப்பது மிகவும் அவசியம். இக்காலத்தில் வீட்டிற்கு வரும் எல்லா சுவாசினிகளையும் ஜன்ம விரோதியாக இருந்தாலும் அன்னையாகவே பாவித்து அவர்களுக்குரிய மரியாதைகளைச் செய்தல் வேண்டும்.

முதல் மூன்று நாட்கள் துர்க்கா அஷ்டோத்ரம், சகஸ்ர நாமமும், அதற்குஅடுத்த மூன்று நாள் லக்ஷ்மி அஷ்டோத்ரம், சகஸ்ர நாமமும், அதற்கு அடுத்த மூன்று நாளில் சரஸ்வதி அஷ்டோத்ரம், சகஸ்ரநாமமும் ஜெபிப்பதும் அருச்சனை செய்வதும் சிறப்பு.

உபாசகர்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஜெபம் செய்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு வலுப்பெறுகிறார்கள். தேவி மகாத்மிய பாராயணத்தை ஏழு பகுதிகளாகப் பிரித்தோ அல்லது முழுவதுமாகவோ இந்த நாட்களில் படிப்பவர்கள், தங்கள் குலத்தின் பாவமூட்டைகளை எரிக்கிறார்கள். எவன் ஒருவன் இந்தத் தேவி மகாத்மியம் படிக்கப்படும் இடத்தில் அமர்ந்து கேட்கிறானோ அவன் தனது பஞ்ச இந்திரியங்களினால் செய்த பாவங்களில் இருந்து விடுபடுகிறான். பணக் கவலையும், மனக்கவலையும், குலக் கவலையும் முழுவதும் தீர "தேவி மகாத்மியம்" ஒன்றுதான் சிறந்த வழி.

வாழ்க்கையின் பாதை தெரியாமல் தத்தளிக்கும்போது, இந்தத் தேவி மகாத்மியத்தை நவமியில் ஒரு தடவை படித்தால் அல்லது படிக்கச் சொல்லிக் கேட்டால் அல்லது கேட்பவனின் வாய் மூலம் சொல்லிக் கேட்டாலும் கூட அவனுக்கு நல்ல வழி கிடைக்கிறது.

நவராத்திரியில் முதல் மூன்று நாட்களில் எலுமிச்சம் பழசாதம், எள்ளு சாதம், தயிர் சாதம் இவைகளே சிறப்புடையன. அடுத்த மூன்றில் சர்க்கரை அன்னம், பால்சாதம், கற்கண்டு அன்னம், கனிவுடையன. அடுத்த மூன்றில் வெண் பொங்கல், தேங்காய் சாதம், பால்சாதம் பலன் தருவன.

முதல் மூன்று நாட்களில் செம்மை நிற, மஞ்சள் நிற, நீலவண்ண மலர்கள் சிறப்புடையன. அடுத்த மூன்று நாளில் செண்பகப் பூ, வில்வ தளம், செந்தாமரை மலர், ரோஜா, கதம்பம் இவைகள் நன்மை தருவன. அடுத்த மூன்று நாட்களில் மல்லிகை முல்லை, நீல சம்பங்கி, நந்தியா வர்த்தம், வெண் தாமரை, துளசி இவைகள் பலன் தருவன.

— "சன்மிஷ்டை"

புள்ளி கோலத்தில் உள்ளபடி



– நித்யா கிருஷ்ணசுவாமி, பெங்களூர்.

இம்மாத இல்லத்தரசி



பொருள் : சமீபத்தில் கற்றுக் கொண்டது

முதல் பரிசு
ரூ. 500/-



• வி. கமலக்கண்ணி

எனது மகள் வீட்டுக்குக் கோவை சென்றிருந்தேன். என் மகளின் தோழி நன்றாகச் சமைப்பாள். அவள் சமையலை ருசித்துச் சாப்பிட்டேன். "இது என்ன காய்?" என்று கேட்டேன். "தெரியவில்லையா? பப்பாளிக் காய்" என்றாள். அது மட்டுமல்ல. பப்பாளிக் காயில் தான் செய்யும் அயிட்டங்களையும் கூறினாள். மிகவும் நன்றாக இருந்தது. நோய் எதிர்ப்பு சக்தியும், வைட்டமின்களும், மருத்துவ குணங் களும் நிறைந்த பப்பாளிக் காயில் செய்த டிப்ஸுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.





• பாரதி

புளிச்சேரி என்று கேரளாவில் கூறப்படும் வெள்ளைக் கறி :



தேவையான பொருட்கள் : பப்பாளிக் காய் தோல் சீவி வெட்டியது - 1 கப், தேங்காய்த் துருவல் - ½ கப், பெரிய வெங்காயம் - 2, முருங்கைக்காய் - 2, கத்தரிக்காய் - 3, தக்காளி - 2, வரமிளகாய் அல்லது மிளகாய்ப் பொடி - 1 டீஸ்பூன், சீரகம் - 1 சிட்டிகை, மஞ்சள் தூள் - ½ ஸ்பூன், தாளிப்பதற்கு எண்ணெய் - 100 கிராம், கடுகு, உ. பருப்பு, கருவேப்பிலை - தேவைக்கேற்ப, உப்பு - ருசிக்கேற்ப, புளி - ஒரு எலுமிச்சையளவு

செய்முறை : காய்களை ஒரே அளவாக வெட்டிக் கொண்டு, ஒரு பாத்திரத்தில் ½ தம்ளர் தண்ணீர் ஊற்றிக் காய்களை கழுவிப் போட்டு உப்பும் மஞ்சள் தூளும் போட்டு வேகவைக்கவும்.

தேங்காய்த் துருவலையும், மிளகாய், சீரகம் சேர்த்து அரைத்துக் கொண்டு வேகவைத்த காயுடன் இந்த மசாலாவைக் கலந்து கொதிக்க வைக்கவும். இரண்டு கொதி வந்ததும் இறக்கி புளியைக் கரைத்து சக்கை நீக்கி விட்டு



• சாரதா



மீண்டும் இரண்டு கொதி கொதிக்க விடவும். எல்லாம் சேர்ந்து மசால் வாடை போனதும் இறக்கி வைக்கவும்.

பின் ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி கடுகு உ. பருப்பு, சிறிதளவு வெங்காயம், கருவேப்பிலை போட்டு தாளித்துக் குழம்பில் கொட்டவும். புளிக்குப் பதிலாக மாங்காய் ஒன்றும் சேர்க்கலாம். இப்போது சூப்பர் புளிக்கறி என்ற வெள்ளைக் கறி சாதத்துக்கும் இட்லி தோசைக்கும் வெகு சூப்பராக இருக்கும்.

2. பப்பாளி கேரட் அல்வா :

தேவையான பொருட்கள் :

பப்பாளிக்காய் தோல் நீக்கி துண்டுகளாக்கியது - 1 கப் (துருவியது),
சர்க்கரை - 1½ கப்,
துருவிய கேரட் - ½ கப்,
நெய் அல்லது டால்டா - ½ கப்,
முந்திரி - 25 கிராம்,
திராட்சை - 20 கிராம்,
ஏலக்காய் - 4,
கேசரிப் பவுடர் - சிறிதளவு (ஒரு சிட்டிகை)
ரோஸ் எஸென்ஸ் - 1 டீஸ்பூன்
அலங்கரிக்க தேங்காய் சிறு சிறு வெட்டிய சில்கள் - 4 டீஸ்பூன்

செய்முறை :

ஒரு வாயகன்ற வாணலியில் 2 ஸ்பூன் நெய் விட்டு, துருவிய காய்களைப் போட்டு வதக்கவும். நன்றாக வதங்கியதும் 2 கையளவு தண்ணீர் ஊற்றி வேகவைக்கவும். குக்கரிலும் வேகவைக்கலாம். நன்றாக வெந்ததும் பருப்பு கடையும் மத்தினால் நன்றாக மசிக்கவும்.

பின் சர்க்கரையை சேர்க்கவும். தீயை நிதானமாக எரிய விடவும். பின் சிறிது சிறிதாக நெய்யை ஊற்றிக் கிளறிக் கொண்டே இருக்கவும். அடி பிடிக்காமல் கிளற வேண்டும். நன்றாகச் சுருண்டு வரும் போது தூள் செய்த ஏலக்காய் பொடியைச் சேர்க்கவும். முந்திரி திராட்சையை சிறிது நெய்யில் வறுத்துப் போடவும். ரோஸ் எஸென்சையும் விட்டுக் கிளறிக் கொண்டே இருக்கவும்.

கையில் ஒட்டாமல் வரும் பதத்தில் இறக்கி நெய் தடவிய தட்டில் ஊற்றி சமப்படுத்தி, சிறிது ஆறியதும் துண்டுகள் போடவும். இதுவே பப்பாளி- கேரட் அல்வா ஆகும். அலங்கரிக்க தேங்காய் வில்லைகளை நெய்யில் வறுத்துக் கேசரி பவுடருடன் கலந்து அலங்கரிக்கலாம்.

3. பப்பாளிக்காய் வறுவல் :

தேவையான பொருட்கள் :

இக் காயை வட்ட வட்டமாய் தகடு போல வெட்டியது - 1 கப்,
மிளகாய்த் தூள் - 1 டீஸ்பூன்,
மிளகுத்தூள் - ½ டீஸ்பூன்,
எண்ணெய் - பொரிப்பதற்கு 100 கிராம்,
சிறிதளவு மஞ்சள் தூள்,
உப்பு - தேவைக்கேற்ப.

செய்முறை :

வாணலியில் எண்ணெய் ஊற்றி காயவைக்கவும். காயில், மிளகாய்த் தூள், மிளகுத் தூள், உப்பு, மஞ்சள் தூள் இவைகளைக் கலந்து பிசிறி கொஞ்ச நேரம் வைக்கவும்.

சிறிது நேரம் கழித்து காய்ந்த எண்ணெயில் காய்களைப் போட்டு கிளறிக் கொண்டே இருக்கவும். தண்ணீர் ஊற்ற வேண்டாம். மூடி வைத்து சிறிது சிறிது நேரத்தில் திறந்து கிளறி விட வேண்டும். நன்றாக கண்டி கலர் மாறி எண்ணெய் விட்டு வரும் போது இறக்கி விட வேண்டும். பெரிய அளவிலான மொறு மொறு இல்லாமல் வெகு சுவையுடன் இருக்கும். எல்லா வகை சாதத்துக்கும் பப்பாளி வறுவல் படு சூப்பராக இருக்கும்.

– வி. கமலக்கண்ணி, ஈரோடு.

நம் ஊர் சாப்பாட்டில் மெதுவாக நுழையத் துவங்கியிருக்கும் சீஸ் புரோட்டீன் சத்து நிறைந்தது மட்டுமல்ல, கால்சியம், வைட்டமின் ஏ சத்தும் கொண்டது. எனவே சீஸ் பயன்படுத்திச் செய்யும் பதார்த்தங்களை தவிர்க்காமல் சாப்பிடுங்கள்.

– பத்மஜா ராமகோபால்.



இரண்டாம் பரிசு ரூ. 300/-

மலேசியன் பிரைட் ரைஸ்

தேவையான பொருட்கள் :

பாசுமதி அரிசி - 1 கப்,
தேங்காய்ப் பால் - 2 கப்,
அன்னாசிப் பழத் துருவல் - ¼ கப்,
மாங்காய்த் துருவல் - ¼ கப்,
கேரட் துருவல் - ¼ கப்,
வெள்ளரிக்காய் துருவல் - ¼ கப்,
வெங்காயம் (பெரியது) - 1,

Heinz
Trust • Taste • Nutrition


இலவசம்



ஒரு ஜூஸர்*

ஒவ்வொரு ஃபாரெக்ஸ் பேக்குடன்

இப்போது ஃபாரெக்ஸிலிருந்து உங்கள் குழந்தை ஊட்டச்சத்தை மட்டும் பெறவில்லை. அதோடு கூட ஒரு கவர்ச்சியான ஜூஸரும் ஃபாரெக்ஸ் உடன் கிடைக்கிறது. இலவசமாக! உங்களின் பிரியமான குழந்தைக்கான உணவை நீங்கள் வாங்க இன்னும் ஒரு காரணம்!







Farex®
GROWING UP RIGHT

*இச்சலுகை சரக்கு உள்ள வரையே. இச்சலுகை தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் மட்டுமே. இச்சலுகை இல்லாத சரக்கும் கிடைக்கும்.

IMPORTANT NOTICE / महत्वपूर्ण सूचना: MOTHER'S MILK IS BEST FOR YOUR BABY. INFANT FOOD SHALL BE INTRODUCED ONLY AFTER 4 MONTHS OF AGE.

முக்கிய அறிவிப்பு: தாய்ப்பாலே உங்கள் குழந்தைக்கு சிறந்தது. குழந்தைக்கான உணவை அதற்கு 4 மாதமான பிறகே கொடுக்க ஆரம்பிக்கவும்.

தயவு செய்து, பேக்கின் வெளிப்புறமுள்ள ஆகாரம் கொடுக்கும் வழி முறைகளை படிக்கவும்.

ஃபாரெக்ஸ் பேபி புக்லெட்டை இலவசமாகப்பெற கீழ்கண்ட விபரங்களுடன் எழுதுங்கள்:

குழந்தையின் பெயர்: ____________

பிறந்த தேதி: ____________

தாயின் பெயர்: ____________

முகவரி: ____________

எழுதவேண்டிய முகவரி: ஹெய்ன்ஸ் இந்தியா பி. லி. ஜி.பி.ஓ. எண். 1907, மும்பை 400 001.

CONTRACT.FRX.26921.TA



பகளாபாத் தயாரிக்க சாதம் வைக்கும் போது ஒரு ஆழாக்கு அரிசிக்கு ஒரு டேபிள் ஸ்பூன் அல்லது சிறிதளவு சேமியாவை கலந்து செய்தால் குழைவாயிருப்பதோடு ருசியும் பிரமாதமாக இருக்கும்.

– சி. மாலதி.

மிளகாய் வற்றல் – 4 (அ) 5 (தேவைக்கேற்ப)
உப்பு – தேவைக்கேற்ப,
நெய் – 2 டீஸ்பூன்,
ஏலக்காய் – 2,
கிராம்பு – 2,
சீரகம் – ½ டீஸ்பூன்.

செய்முறை :

பாசுமதி அரிசியை 10 நிமிடம் ஊறவைத்து வடிகட்டி வைக்கவும். வெங்காயத்துடன் மிளகாய் வற்றலைச் சேர்த்து மிக்ஸியில் நறநற வென்று அரைத்துக் கொள்ள வேண்டும். தேங்காய் அரை மூடி துருவி எடுத்து, தேங் காய்ப் பால் 2 கப் எடுத்துக் கொள்ளவும். கடா யில் நெய் ஊற்றி, சீரகம், ஏலக்காய், கிராம்பு தாளித்து வடித்து வைத்து இருக்கும் அரிசியைப் போட்டு ஈரப்பசை போகும் வரை வறுத்து, பிறகு பாத்திரத்தில் போட்டு, 2 கப் தேங்காய்ப் பால் ஊற்றி வெங்காயம், மிளகாய் வற்றல் விழுதினைக் கலந்து தேவையான அளவு உப்பு சேர்த்து குக்கரில் வைத்து சமைக்கவும்.

சாதம் ஆனவுடன் வாயகன்ற பாத்திரத்தில் இந்த சாதத்தைக் கொட்டி, அதன் மேல் அன்னாசிப் பழத் துருவல், மாங்காய்; வெள்ளரி, கேரட் துருவல்களைத் தூவி நன்கு கலந்து பரிமாறவும். இத்துடன் தேவைப்பட் டால் முந்திரிப் பருப்பை நெய்யில் பொரித்து சேர்க்கலாம்.

(ஒரு விடுமுறை நாளில் பொழுது போகா மல் தொலைக்காட்சி பெட்டியில் சேனல் மாற்றி சேனல் பார்த்துக் கொண்டிருந்தபோது ஏதோ ஒரு சேனலில் இந்த பிரைடு ரைஸ் செய்முறை விளக்கம் நடந்து கொண்டிருந்தது. அதனை செய்து பார்த்தபோது நன்றாக சுவையாக இருந்ததாக வீட்டிலும், கல்லூரி யிலும் கூறினர்.)

– பாரதி சேதுமாதவன், சென்னை – 53.

மூன்றாம் பரிசு ரூ. 200/-

என்னுடைய பல சிநேகிதிகளிடமிருந்து கற்ற சிலவற்றைக் கீழே தந்துள்ளேன்.

1. குஜராத்தி டிஷ் : அமீரி கமண்

ஒரு தம்ளர் கடலை பருப்பை ஊற வைக்க வும். பிறகு உப்பு சேர்த்து அரைக்கவும். அதில் 1 ஸ்பூன் தயிர், 1 ஸ்பூன் சர்க்கரை, 2 பச்சை மிளகாய் சின்னதாக கட் பண்ணி சேர்க்கவும். குஜராத்தியர்கள் ¼ ஸ்பூன் சமையல் சோடா அந்த மாவில் கலப்பார்கள். நமக்கு ஏற்ற ருசிக்கு, உங்கள் இஷ்டம் போல் எது வேண் டுமோ அதைக் கலக்கவும். காலையில் அரைத்து வைக்கவும். மாலையில், இட்லி செய்வது போல், அந்த மாவை ஸ்டீம் பண்ணவும். நன்றாக ஆறின பிறகு, உதிர்த்துக் கொள்ளவும். அதன் மேல் கடுகு தாளித்துக் கொட்டவும். சாப்பிடும் முன், கொத்துமல்லி, கருவேப்பிலை, துருவிய தேங்காய், புளி சட்னி, புதினா சட்னி, பிகானேரி சேவ் (நம்மூர் ஓமப்பொடி) போட்டு டிபன் தட்டில் பரிமாறினால் அந்த டெக்னிக் கலருக்கே, இந்த புது ருசியான டிபனை குழந் தைகள் விரும்பிச் சாப்பிடுவார்கள். டெகரேஷ னுக்கு தக்காளி கட் பண்ணி போட்டால் ருசி கூடும்.

2. சிந்தி கடி :

4 ஸ்பூன் எண்ணெயில் ஒரு ஸ்பூன் சீரகம் போடவும். அது சிவந்த பிறகு, ஒரு கரண்டி கடலை மாவு அதன் மேல் போட்டு வாசனை வரும் வரை வறுக்கவும். பிறகு ஒரு கடோரி டமேடோ க்ரேவி அதன் மேல் ஊற்றி கொதிக்க விடவும். வேண்டிய உப்பு போடவும். வேறு ஒரு பாத்திரத்தில், முன்னாலேயே மிளகாய், முருங்கைக்காய், வெண்டை, பீன்ஸ் வேகவைத்துக் கொள்ளவும். டமேட்டோ கெட்டியாகும் சமயத்தில், இந்தக் காய்கறி களைப் போட்டு கொதிக்க விடவும். கடுகு, கொத்துமல்லி, கருவேப்பிலை, பெருங்காயம் தாளித்து, சுடச்சுட புல்கா ரொட்டியுடன் சாப் பிடக் கொடுத்தால், குழந்தைகள் நாக்கை சப்புக் கொட்டிக் கொண்டு, அம்மாவின் கைவண் ணத்தை புகழுவார்கள்.

3. ஸாயி சப்ஜி :

பாலக், புளி கீரை, தண்டுக் கீரை பொடி யாக நறுக்கவும். சின்ன துண்டு சேனை, பரங்கி, உருளை, பீர்க்கு முதலியவைகளை அதன் கூட சேர்த்து உப்பு போட்டு குக்கரில் வேகவிடவும். நன்றாக வெந்தவுடன், இஞ்சி, பூண்டு, அரைத்து நன்றாக மசிக்கவும். பிறகு, கடுகு, சீரகம் தாளிக் கவும். மிளகாய்ப் பொடி, மசாலா அவரவர்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. **Tel & Fax: 237 6129.**
E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our Website at: www.sspeetam.org

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற 120 மாணவர்களும் 30 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

விருப்பம் போல் கலக்கவும்.

– இந்திரா ராகவன், புனே.

ஆறுதல் பரிசு ரூ. 100/-

பின்னல் அடை

தேவையான பொருட்கள் :

புழுங்கலரிசி – 1 தம்ளர்,
பச்சரிசி – 1 தம்ளர்,
கடலை பருப்பு – ¾ தம்ளர்,
துவரம் பருப்பு – ¾ தம்ளர்,
உளுத்தம் பருப்பு – ½ தம்ளர்,
காய்ந்த மிளகாய் – 10,
உப்பு – தேவையான அளவு,
பெருங்காயத் தூள் – ½ டீஸ்பூன்,
தேங்காய்த் தூள் – ½ கப்,
கொத்துமல்லி (பொடியாக நறுக்கியது)– ½ கப்,
ஓ.கே. ஆயில் (அ) ரீபைண்ட் ஆயில் – 1 கப்

செய்முறை :

கடலை பருப்பு, உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, புழுங்கலரிசி, பச்சரிசி இவைகளை நன்றாகச் சுத்தம் செய்து, எல்லாவற்றையும் ஒன்றாக ஒரு பாத்திரத்தில் போட்டு, அதனுடன் காய்ந்த மிளகாய் வற்றலையும் போடவும். இதை மாவு அரைக்கும் மிஷினில் கொடுத்து நைஸாக அரைக்கவும். (இந்த மாவு அரைத்து வைத்துக் கொண்டால் எப்பொழுது தேவையிருக்கிறதோ உடனேயே செய்ய வசதியாக இருக்கும்.)

இந்த மாவை ஒரு பாத்திரத்தில் போட்டு உப்பு, பெருங்காயம் சேர்த்து கெட்டியாகப் பிசையவும். முறுக்கு செய்யும் அச்சில் ஓமப்பொடி வில்லையைப் போட்டு மாவை அதில் நிரப்பிக் கொள்ளவும். தோசைக் கல்லை அடுப்பில் போட்டு நன்றாகக் காய்ந்ததும் இந்த மாவை ஓமப்பொடி பிழிவது போல் பரவலாகப் பிழியவும். தேங்காய்த் துருவலையும், கொத்துமல்லியையும் அந்த ஓமப்பொடி போன்ற அடையில் பரவலாகத் தூவவும்.

அதன் மேலேயே மறுபடியும் ஒரு 'லேயர்' மாவைப் பிழிந்து சுற்றி தோசைக்கு விடுவது போல் எண்ணெய் விட்டு ஒருபுறம் சிவந்ததும் மறு பக்கம் திருப்பிப் போடவும். மறுபடி ஒரு ஸ்பூன் எண்ணெய் விட்டு, அந்தப் பக்கமும் சிவந்ததும் எடுத்து விடவும். இந்தப் பின்னல் அடைக்கு மிளகாய்ப் பொடி, வெல்லம் அல்லது விழுது நெய், வெல்லப்பாகு, அவியல் இவற்றைத் தொட்டுக் கொண்டு சாப்பிடலாம். அப்படியேவும் சாப்பிடலாம்.

– ராஜேஸ்வரி கணபதி, திருச்சி – 5.

ஆறுதல் பரிசு ரூ. 100/-

மின் டீ ரோல்

தேவையான பொருட்கள் :

முதலில் ரோல் செய்ய தேவையான பொருட்கள் :

மைதா – 1 கப்,
குருமிளகுப் பொடி– 1 ஸ்பூன்
உப்பு – தேவைக்கேற்ப,
பொரிக்க – எண்ணெய்.

புதினா சட்னி :

புதினா, கொத்துமல்லித் தழை, இஞ்சி, சிறிது பூண்டு, ப. மிளகாய், உப்பு தேவைக்கேற்ப வைத்து அரைத்து வைக்கவும்.

அலங்கரிக்க :

வெள்ளரி, காரட், பீட்ரூட் துருவி வைக்கவும். 1 பெரிய வெங்காயமும்.

செய்முறை :

மைதாவில் ஒரு ஸ்பூன் சூடான எண்ணெய், உப்பு, மிளகுப் பொடி போட்டு சப்பாத்தி மாவு போல் பிசைந்து சின்னச் சின்ன சப்பாத்தியாக இடவும். இதில் புதினா சட்னியை உள்ளே பரவலாக தேய்த்து அதை ரோல் போல் உருட்டவும். பின் இந்த ரோலை சின்னச் சின்ன பீசாக கட் செய்யவும். அதை எண்ணெய் காய வைத்து அதில் போட்டுப் பொரித்து எடுக்கவும்.

பின் இதை வைத்து இதன் மேல் அலங்கரிக்க பீட்ரூட், கேரட், வெள்ளரி, மல்லி சிறிது உப்பு, மிளகுப் பொடி, சிறிது எலுமிச்சை சாறு கலந்து இந்தக் கலவையை அதன் மீது தூவி அலங்கரிக்க இதைப் பார்க்கவே மிக மிக அழகாக இருக்கும். மிக சத்தானது, சுவையான தும் கூட.

– சாரதா நரசிம்மன்,பொள்ளாச்சி – 2.

நகரங்களைத் தவிர மற்ற இடங்களில் வீட்டின் அருகே முளைத்திருக்கும் தும்பைச் செடியை இரவில் படுப்பதற்கு முன் கைகளால் நன்கு கசக்கி உடல் முழுவதும் நன்கு தேய்த்துக் கொண்டால் கொசு முதல் பாம்பு வரை எந்தப் பூச்சியும் கடிக்காது. மேலும் பக்கத்திலேயே வரவே வராது.

– பி. பாபு



நடுவயதிலும் சாதிக்கலாம்! 4



நடுத்தர வயதில் வாழ்க்கை முறையை மாற்ற விரும்புபவர்களை இரு வகையாகப் பிரிக்கலாம். சிலர் பொருளாதார பலம், வசதியான வாழ்க்கை இவற்றை ஏற்கெனவே பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய முக்கியத் தேவை social recognition ஆக இருக்கும். அதிகம் உடலால் உழைக்க விரும்பாமல், பிரசித்தி பெற விரும்புவார்கள். பத்திரிகைகளில் தங்களைப் பற்றிய செய்திகள், விஷயங்கள் வெளிவருவதில் திருப்தியடைந்து விடுவார்கள்.

"கார், டிரைவர், வீடு, வசதி எல்லாம் இருக்கு. ஆனால் என்ன செய்யறதுன்னு புரியவில்லை" என்பவர்களுக்கு நான் பொதுவாகக் கூறுவது, லயன்ஸ், ரோடரி போன்ற நிறுவனங்களில் சேருங்கள். ஆர்வமாக அவர்களின் சமுதாய சேவைகளில் ஈடுபடுங்கள். உண்மையாக பொதுநோக்குடன் திட்டமிட்டு உழையுங்கள். கட்டாயம் சமுதாய அங்கீகாரம் கிடைக்கும்.

இவையெல்லாம் வெறும் டின்னர் மீட்டிங் கூட்டங்கள் என்று ஒதுக்காதீர்கள். போலியோ ஒழிப்பில் ரோட்டரியின் சாதனையும், கண் தானத்தில் லயன்ஸின் பங்கும் பிரம்மாண்டமானது. சென்னை போன்ற பெரிய நகரங்களில் வசிப்பவர்கள் எக்ஸ்னோராவுடன் இணைந்து செயல்படுங்கள். இத்தகைய சமுதாயத் திட்டங்களில் ஈடுபடுபவர்கள் ஒவ்வொரு நாளும் முழு நேரமாக உழைக்கத் தேவையில்லை. மாதத்தில் ஐந்தாறு நாட்கள் வேலை செய்தால் போதுமானது.

தங்களைப் பற்றித் தாழ்வு மனப்பான்மை கொண்டுள்ள சில பெண்கள் இத்தகைய மையங்களில் சேருவதால், தாழ்வு மனப்பான்மை களையப்படுகிறார்கள். பிற பெண்களுடன் அல்லது குடும்பங்களுடன் பழகும் வாய்ப்பு பெறுகிறார்கள். சமூக சேவையைப் போல் மனநிறைவு தரும் விஷயம் வேறு எதுவுமில்லை. நடுத்தர வயதில்





இத்தகைய சமூக சேவையில் ஈடுபடுபவர்கள், சமூக சேவை தரும் மனநிம்மதியை உணர்ந்து, தீவிரமான சமூக சேவகிகளாக மாறி, வாழ்க்கையில் நிம்மதியும் திருப்தியும் பெறுவதைக் கண்டிருக்கிறேன்.

பொழுதுபோக்கு எங்கள் விருப்பமல்ல. என் வாழ்க்கையின் இறுதிக்குள் ஆதரவற்றவர்களுக்கு ஏதாவது சேவை செய்ய விரும்புகிறேன். ஆட்டோ, டாக்ஸி, கார் என்று பணம் செலவழிக்க எனக்கு வசதி போதாது என்பவர்கள் கான்சர் ஆஸ்பத்திரி, வி.எச்.எஸ். உதவும் கரங்கள், காக்கும் கரங்கள் அல்லது உங்கள் ஊரிலுள்ள சேவை மையங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். மனிதராக உள்ள அனைவரிடமும் பிறருக்கு அளிக்க ஏதாவது ஒன்று இருக்கிறது. நம் நேரம், அன்பு, உழைப்பு இவற்றை நம்மால் பகிர்ந்து கொள்ள முடியும்.

"எனக்கு சமூக சேவையில் விருப்பமில்லை. நான்

உஷா சுப்ரமணியன்

பொருளாதார லாபம் தரும் தொழிலில் ஈடுபட மிகவும் விரும்புகிறேன்" எனும் நடுத்தர வயதுப் பெண்கள் திட்டமிடத் துவங்குங்கள். ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்து, நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள் என்று ஒரு பக்கம் எழுதுங்கள். மறு பக்கத்தில் உங்களிடம் என்னென்ன தகுதிகள் உள்ளன என்று வரிசைப்படுத்துங்கள்.

பிஸினஸ் செய்ய விரும்புகிறேன் என்று எழுதாமல் என்ன பிஸினஸ் செய்ய விரும்புகிறேன் என்று எழுதுங்கள். ஏற்றுமதி, இறக்குமதி பிஸினஸ் செய்ய விரும்புகிறேன் என்று இடதுபக்கம் எழுதிய பெண்ணின் வலது பக்கத் தாளில் அழகாக இருப்பேன், 28 ஆண்டுகளுக்கு முன் பி.எஸ்ஸி., கணிதத்தில் முதல் வகுப்பு எடுத்தேன், நன்றாகப் பேசிப் பழகுவேன், கம்ப்யூட்டரை உபயோகிக்கத் தெரியும், கார் ஓட்டத் தெரியும், நன்றாக சமைப்பேன், வேலைக்காரர்களை நிர்வகிப்பதில் புலி, நல்ல தாயார், அருமையான மனைவி, எக்ஸ்ட்ரா... எக்ஸ்ட்ரா... என்று எழுதியிருந்தால், சிந்தித்துப் பாருங்கள். நீங்க ஏற்றுமதி, இறக்குமதி பிஸினஸ் துவங்கத் தயாரா என்று.

உண்மையில், ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் பற்றிய ஒரு பிரமிப்பை நீங்கள் எங்கோ பெற்றிருக்கிறீர்கள். அந்தப் பிரமிப்பு நிஜமாக வேண்டு

மானால், அடுத்த ஆறு மாதத்திற்குள் export - import trade பற்றிய ஒரு வகுப்பில் சேர்ந்து பயிலுங்கள். உங்களுக்குத்தான் கார் ஓட்டத் தெரியுமே. இந்தத் தொழிலில் இருப்பவர்கள் பலரைச் சந்தித்து விவரம் சேகரியுங்கள். உங்கள் கம்ப்யூட்டர் அறிவைப் பயன்படுத்தி ஒரு ஆயிரம் பக்கமாவது விவரம் சேகரியுங்கள். முக்கியமாக, பொதுவாக ஏற்றுமதி, இறக்குமதி என்று பேசாமல் எந்தப் பொருளை எங்கே ஏற்றுமதி செய்ய விரும்புகிறீர்கள் என்று திட்டமிட்டு, உங்கள் பொருளை வாங்கக் கூடியவர்களை பற்றிய லிஸ்ட் தயார் செய்து, அவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். பொதுவாக நூறு கடிதம் அனுப்பினால் இரண்டு அல்லது மூன்று பதில்தான் வரும்.

ஏற்கெனவே இந்தத் தொழிலில் உள்ளவர் எவருடனாவது பார்ட்னராக சேர முடியுமா என்று முயன்று பாருங்கள். இத்தகைய 'விவரமறிந்த ஆள்' உங்கள் முழுமையான நம்பிக்கைக்குப் பாத்திரமானவரா என்று கவனமாக இருங்கள். இந்தத் தொழிலுக்கு தேவையான ஆரம்பப் பொருளாதாரம், வொர்க்கிங் கேபிடல் எல்லாவற்றையும் திட்டமிடுங்கள். மார்க்கெட் பிரகாசமாகத் தெரிந்தால், ஒரு கன்ஸல்டன்டுடன் அமர்ந்து பிராஜெக்ட் ரிப்போர்ட் தயார் செய்யுங்கள். இந்த ஸ்டேஜுக்கு நீங்கள் வருவதற்குக் குறைந்தபட்சம் ஒன்று அல்லது ஒன்றரை வருடமாகலாம். இந்த ஒன்றரை வருடத்தில் உங்கள் பணம், நேரம் இரண்டுமே கணிசமாகச் செலவிடப்பட்டிருக்கும்.

இத்தனை முயற்சிக்குப் பின்னரும் உங்களால் தொழில் துவங்க முடியாமல் போகலாம். அல்லது இந்த முன்னேற்பாட்டின் போது எதிர்பாராத புதிய ஒரு துறையை நீங்கள் தேர்ந்தெடுக்கக்கூடும்.

நான் அறிந்த ஒரு நபர் கிரானைட் கற்கள் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று நிறைய முயற்சி செய்தார். நிறைய சாம்பிள்கள் அனுப்புவதிலேயே சில லட்சங்கள் செலவிட்டார். வெற்றி நெருங்கக் காணோம். ஒருநாள் டிரேட் ஜர்னல் ஒன்றில் விங்கா ரோஸியா என்ற செடி வேருடன் தேவை என ஆப்ரிக்க மருந்துக் கம்பெனியின் விளம்பரத்தைக் கண்டார். அது முன்பின் கேட்டிராத பெயர், அதோடு அவருக்கு செடி, விதைகள் பற்றி எதுவும் தெரியாது. இருந்தாலும், விவரமறிந்தவர்களை விசாரித்ததில் ப்ளட் கான்ஸருக்கான மருந்து இந்தச் செடியின் வேரிலிருந்து தயாராகிறது என்று அறிந்து கொண்டார். அதோடு வியப்பான விஷயம் நம்மூரில் வெள்ளையும், ரோஸுமாகத் தெரு ஓரங்களில் வளரும் செடிதான் இது.

இளைஞர் அதிவேகமாகச் செயல்பட்டார். ஏற்கெனவே இச் செடியை வளர்ப்பவர்களிடம் சாம்பிள் வாங்கி அனுப்பினார். சாம்பிள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிராஜெக்ட் ரிப்போர்ட்டை மாற்றினார். இலக்கை மாற்றினார். இரண்டே ஆண்டுகளில் தொழிலில் நிலைத்துவிட்டதுடன், இப்போது வேறு பல மருத்துவ மூலிகைகளும் ஏற்றுமதி செய்கிறார். வாய்ப்புகள் நாம் முயன்ற இடத்தில் கிடைக்காமல் போகலாம். எதிர்பாராத சமயங்களில் தோன்றலாம். தோன்றாமலும் போகலாம். ஆனால் அயராத திட்டமிடலும், முயற்சியும் தொடர வேண்டும்.

சில சமயங்களில் மிகச் சிறிய ஆரம்பம் கூட பெரிய பலனைத் தரக்கூடும். அன்பு, அனுசரணையின் காரணமாக தன் ப்ளாட்டில் வசித்த வயதான தம்பதிகளுக்கு சமைத்து அனுப்பத் துவங்கிய பெண்மணி, இன்று இருநூறு முதியவர்களுக்கும், பிரம்மச்சாரிகளுக்கும் சாப்பாடு அனுப்புகிறார்.

"ஆரம்பத்தில் இதை நான் பிஸினஸாகச் செய்யவில்லை. பலருடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முயன்ற போது இதை வியாபாரமாக மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வியாபாரம் என்றவுடனே முதலீடு, தொழிலாளர் நியமனம், தரக்கட்டுப்பாடு, டிஸ்ட்ரிப்யூஷன் என்று பலவித நுணுக்கங்களைக் கற்க வேண்டியிருந்தது. டாக்டரான என் கணவருக்கோ இத்தகைய விஷயங்கள் எதுவும் தெரியாது. எனவே, வங்கியில் மானேஜராக இருந்து சமீபத்தில் ரிடையரான என் உறவினரின் உதவியை நாடினேன். சமையல் என்கிற தொழிலுக்கான டெக்னாலஜி நான் அறிந்ததுதான். ஆனால் வியாபார நுணுக்கங்களை நான் இப்போதுதான் கற்று வருகிறேன். தெரிந்த விஷயத்தை வியாபாரமாக மாற்றுவதில் நிறையவே சௌகரியங்கள் இருக்கின்றன" என்கிறார்



சுண்டலைத் தாளிதம் செய்து இறக்கியபின், இரண்டு டீஸ்பூன் அவலை வறுத்து, பொடித்துத் தூவினால் சுண்டல் சூப்பராக இருக்கும்.

– விசாலாட்சி.



எலுமிச்சை ஊறுகாயுடன் சிறிது வதக்கிய இஞ்சித் துண்டுகள் சேர்த்துக் கொண்டால் ருசி கூடும்.

- கி. அன்னு.

இவர்.

நண்பர்களுக்கு, சமையற்காரர், வேலைக்காரர், டிரைவர்கள் என்று தேடித் தருவதில் நீங்கள் புலியா? அதிகக் கஷ்டப்படாமல் இதை பிஸினஸாக மாற்றலாம். வேலை தேடி வருபவர்களுக்குத் தக்க பயிற்சியளித்து, வேலையாட்கள் தேவைப்படுபவர்களுக்கு நடுவே ஒரு பாலமாக அமைந்து செயல்படலாம். வீடு தேடித் தருவது, பார்ட்டிகளுக்கு ஏற்பாடு செய்வது போன்றவை அதிக முதலீடற்ற வியாபாரங்கள்.

தன் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல ரிக்ஷா, ஆட்டோ, கார் என்று திண்டாடிய பெண்மணி முதலில் ஒரு பழைய வேன் வாங்கி ஆறு குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்துச் சென்றார். இப்போது அவரிடம் நான்கு வேன்களும், ஐந்து டிரைவர்களும் வேலை செய்கிறார்கள். சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் குடும்பத்துடன் பிக்னிக், கோவில், குளம் என்று வேன்கள் சதா புக்காகி உள்ளன. அவரிடம் இந்த பிஸினஸுக்கென்று தனியான ஆபீஸோ, செகரட்டரியோ இல்லை. வீட்டிலிருந்தபடியே வெற்றிகரமாக பிஸினஸ் நடக்கிறது.

எத்தனையோ பெண்கள் தங்கள் வீட்டிலிருந்தபடியே புது டிசைன் சல்வார் கமீஸ் தைப்பது எம்பிராய்டரி போட்டுத் தருவது போன்ற தொழில்களை ஓரிரு உதவியாளர்களுடன் செய்து வருகிறார்கள். இத்தகைய வியாபாரத்தில் பல லாபங்கள் – முதலீடு குறைவு, தொழில் நம் நேரடிக் கண்காணிப்பில் நடக்கும், நம் சௌகரியப்படி நேரத்தை ஒதுக்கலாம், அதோடு ஆரம்பம் முதலே நாமே 'பாஸ்' ஆக இருக்கலாம்! ஆனாலும் பல பெண்கள் வீட்டிலிருந்து வியாபாரம் செய்வது கௌரவக் குறைவு என்று எண்ணுகிறார்கள். இது வருத்தப்பட வேண்டிய விஷயம்.

நான் சந்திக்கும் பல நடுத்தர வயதுப் பெண்கள் டீவி., சினிமா போன்ற பொழுதுபோக்குச் சாதனங்களில் பங்குபெற விரும்புகிறார்கள். ரேவதி சங்கரன், பாம்பே ஞானம், கௌசல்யா சிவகுமார் போன்ற உயர் குடும்பத்துப் பெண்கள் இத் துறையில் பெற்றுள்ள வெற்றி பலருக்கு ஊன்றுதலாக அமைந்துள்ளது. கவர்ச்சிகரமான தோற்றமும் இனிய குரலும் உடைய பெண்களுக்கு இது நல்ல துறைதான்.

உலகில் நடிக்கத் தெரியாதவர்களே கிடையாது. பயிற்சியாலும், பழக்கத்தாலும் யாரும் நடிப்புத் துறையில் ஈடுபட முடியும். ஆனால் இத் துறையில் ஈடுபட விரும்பும் பெண்கள் மிகவும் கவனமாக இருத்தல் அவசியம். நன்கு பெயர் பெற்ற கௌரவமான கம்பெனிகளையும், மாடல் கோ-ஆர்டினேடர்களையும் மட்டும் அணுக வேண்டும்.

அதோடு இத் துறை பற்றிப் புரிந்து கொள்ளுதலும் அவசியம். இத்துறை ஆபீஸுக்குப் போவது போல் குறித்த நேரத்தில் நடப்பது இல்லை. வேளை கெட்ட வேளையில், நடு இரவு தாண்டி வீடு திரும்ப நேரிடலாம். இத் துறையில் பலதரப்பட்ட மக்களுடனும் பழக நேரிடுவதால், வயதுக்கான மதிப்பு கிடைக்காமல் போகலாம். அதோடு ஒவ்வொரு ஷாட்டுக்கும் இடையில் மணிக்கணக்காகக் காத்திருக்க வேண்டும். குடும்பத்தினர் அனுசரணையாக இல்லாவிட்டால் குடும்பத்தில் அமைதி குறையும். நடிக்க என்று வந்த பிறகு 'இந்த ரோலில்தான் நடிப்பேன், இதில் நடிக்க மாட்டேன்' என்றெல்லாம் கூற முடியாது.

"என் மனைவி கண்டவனுடைய பெண்டாட்டியாக நடிக்க நான் சம்மதிக்க மாட்டேன்" என்று உங்கள் கணவர் பொங்கி எழுந்தால், இத்தனை நாள் கட்டிக் காத்த குடும்பமா, அல்லது உங்கள் சுயநிறைவா என்பதை நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும். மிகவும் நிறைவு தரும் துறை இது. திடீரென நீங்கள் எங்கும் அடையாளம் கண்டுகொள்ளப்படுவீர்கள். பாராட்டப்படுவீர்கள். அதே சமயம் சில கேவலமான கமெண்டுகளும் கிடைக்கும். கவலைப்படாதீர்கள்.

நாம் ஏற்கெனவே அறிந்த துறையை வியாபாரமாக மாற்றுவது பற்றி நான் அடிக்கடி எழுதுவதன் காரணம், நடுத்தர வயதில் வியாபாரம் துவங்க இது மிகச் சரியான ஆரம்பமாக அமையும் என்பதால்தான்.

வித்யா கணிதத்தில் எம்.எஸ்ஸி., படித்து இருபது ஆண்டுகளுக்கும் மேலாயிற்று. மகனோ கணக்கில் மிகவும் 'வீக்'. அவனுக்குக் கணக்கு ட்யூஷன் எடுப்பதற்கெனவே புதிய கணிதம் கற்று, பழைய கணக்கையும் தூசு தட்ட வேண்டியிருந்தது. மகனுடன், அவன் கிளாஸ் மேட் இருவரும் சந்தேகம் கேட்டு வந்தார்கள்.



வசதிகள் நிறைந்த தனி வீடு, ப்ளாட் வாங்கும் விலையிலே.

என்னுடைய பட்ஜெட்டுக்கு ப்ளாட் தான் கிடைக்கும் என்று எண்ணியிருந்தேன், ஆனால் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவினால் வசதியான தனி வீடே கிடைத்தது.

ரூ. 600 மில்லியன் ஸ்ரீவத்ஸா குழுமத்தின் ஒரு ஒப்பற்ற படைப்புதான் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ. நகரத்தின் எல்லைக்குள் எழில் மிகுந்த சூழலில் அமைந்திருக்கும் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ என் குடும்பத்திற்கு அமைதியையும் ஆனந்தத்தையும் அளிக்கிறது.

ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவை தனித்தன்மை வாய்ந்த ஒரு வீடாக காட்டும் சிறப்பு அம்சங்கள்

ரூ. 7.5 லட்சம் விலையில் தொடங்கும் தனி வீடுகள்: ஆம். குறைந்த பட்ச நில அளவு 60X40 கொண்ட தனி வீடுகள் குறைந்த பட்ச விலையாக ரூ. 7.5 லட்சம் முதல் தொடங்கும் தனி வீடுகள். தனி வீடுகளுக்கு நீங்கள் கொடுக்கும் விலை இது மட்டுமே.

ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட்ஸ் (பி) லிட்.

தனியானதோர் வீடு வாங்கி வந்தேன்.

Sreevatsa Hill View
KOVAIPUDUR

ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ

750 சதுர அடி முதல் வீடுகள் தேர்ந்தெடுக்கலாம்: செலக்ட் செய்ய ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவில் 750 சதுர அடி முதல் 2000 சதுர அடி வரையில் உங்கள் பட்ஜெட்டுக்கு ஏற்ற வகையில் தேர்ந்தெடுத்து வடிவமைக்கப்பட்டது.

எண்ணற்ற டிசைன்கள்: ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவில் தனி வீடுகளுக்கு பல வகை வீட்டு டிசைன்கள். இத்தகைய டிசைன்கள் உங்கள் தேவைக்கேற்ப மாற்றியமைக்கும் வசதியுடன் உங்களுக்கு அளிக்கப்படுகின்றன.


நெரிசல் இல்லாத சொர்க்கம்: 12 ஏக்கரில் அமைந்துள்ள ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ 140 தனி வீடுகளை மட்டுமே கொண்டது. எனவே உங்கள் வீட்டை சுற்றி நிறைய காலியிடம். குறைந்த வீடுகள். அதிக காற்றோட்டம். அதிக வசதி. ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ உங்களுக்கே உரித்தான தனி சொர்க்கம்.

மிகச் சிறந்த பாதுகாப்பு: அதிக பாதுகாப்பு கொண்ட அரண்மனை போல ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ, கான்க்ரீட் மதிற் சுவர் பாதுகாப்பு கொண்டது. ஒரு நுழைவாயில் மட்டுமே கொண்டதால் உங்களுக்கு கிடைப்பது அதிக நிம்மதி.

சரியான இட அமைப்பு: பாலக்காடு சாலையில் கோயமுத்தூர் ரயில் நிலையத்திலிருந்து 7 கி.மி. தூரத்தில் அமைந்துள்ளது ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ. மிகச் சிறந்த பள்ளிகள், கல்லூரிகள், மற்றும் வங்கிகள் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவிற்கு அருகில் அமைந்துள்ளது சிறப்பு அம்சம்.

24 மணி நேர குடிநீர் வசதி: ஆழ் கிணறுகள் மூலம் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவுக்கு 24 மணி நேர சுவையான குடிநீர் வசதி அளிக்கப்படுகிறது. இனிமையான சூழலுக்கு சுவையான குடிநீர் வசதி.

பொழுது போக்கு அம்சங்கள்: தினமும் மாலைகளில், விடுமுறை நாட்களில் இனிதாக பொழுதை கழிக்க வசதிகள் கொண்ட மினி க்ளப்பும், குழந்தைகளுக்காக அழகிய பூங்காவும் ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவில் அமைக்கப்படவுள்ளன.



ஷாப்பிங் வசதி: ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ வளாகத்தினுள் மிக விரைவில் ஷாப்பிங் வசதிகள் நிறுவப்பட உள்ளது.

M/s. சங்கர் & அசோசியேட்ஸ் அவர்களால் திட்டமிட்டு டிசைன் செய்யப்பட்டது ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூ. உங்கள் வீட்டுக்கு ஸ்ரீவத்ஸாவின் பயன்களைப் பெறுங்கள். ஸ்ரீவத்ஸா ஹில் வ்யூவில் வாழும் வாய்ப்பு 140 பேருக்கு மட்டுமே கிடைக்கவுள்ளது.

இத்திட்டம் எல் ஐ சி ஹவுசிங் ஃபைனான்ஸ், ஹெச் டி எஃப் சி, சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட், எஸ் பி ஐ ஹவுசிங் ஃபைனான்ஸ், கேன்பின் ஹோம்ஸ் லிமிடெட், மற்றும் பி ஓ பி ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட். ஆகிய நிறுவனங்களில் கடன் வசதி பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.


Anugrah 2890 R

Visit us at: www.sreevatsaonline.com

கோவை: 8/2, மேட்டுப்பாளையம் சாலை, கோவை 641 043, இந்தியா. போன்: 91-422-437422, 432184, 432574, 441481, 454817, 432042, பேக்ஸ்: 91-422-430899, கிராம்ஸ்: SRIVATSACO, *Email: Sreevatsa@eth.net. / Sreevatsacbe@vsnl.com*
சென்னை: 7, காமராஜ் பார்க் தெரு, சென்னை 600 013, இந்தியா. போன்: 91-44-5953149, 5960270, 5957953, 5965401-05, 5961029-31 பேக்ஸ்: 91-44-5950055, 5965032, 5224087, *Email:Sreevatsa@vsnl.com* மும்பாய்: திரு. ஜி. ஜி. பரதன், ப்ளெஸ்ட் எக்ஸிம் (இந்தியா) லிமிடெட், ப்ளாட் எண் 37, 1 திவ்யா கமர்சியல் காம்ப்ளெக்ஸ், கீழ் தளம், 17வது சாலை, செம்பூர், மும்பாய் 400 071, இந்தியா. போன்: 91-22-5287241, டெலிபாக்ஸ்: 91-22-5285716 (அ) 91-22-5570025 (வீடு).

தொடர்ந்து கணக்கில் 'வீக்'கான அடுத்த வீட்டுக் குழந்தை, எதிர் வீட்டு மாணவி என்று சேர்ந்தார்கள். ஒரு கட்டத்தில், வித்யாவின் சாப்பாட்டு மேஜையில் பல வகுப்பு மாணவ, மாணவிகள் பாடம் கற்றுக் கொள்ள அமர்ந்திருப்பார்கள். தொடர்ந்து பி.காம்., மாணவர்கள், வங்கி பரீட்சைக்குப் படிப்பவர்கள் என்று வித்யாவின் மாணவர் கூட்டம் பெருகி விட்டது. இனிமேல் புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளவே முடியாது என்கிற நிலை! இன்னும் அவரது வகுப்புகள் டைனிங் டேபிளில்தான் நடக்கின்றன. மாதம் இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம், முதலீடு என்று தனியாக எதுவுமில்லை. அதோடு எத்தனை நிறைவு, திருப்தி, சமுதாய அங்கீகாரம். சிந்தித்துப் பாருங்கள். இதே பெண்மணி எலெக்ட்ரானிக் தொழிலில் ஈடுபட முயன்றிருந்தால் இவ்வளவு சுலபமாக வளர்ச்சி பெற்றிருக்க முடியுமா என்று?

சென்னையில் பெண்களுக்கு கார், ஸ்கூட்டர் பயிற்றுவிக்கும் துர்காவை அறியாதவரே இருக்க முடியாது. கணவன் வெளிநாட்டில் இருந்ததால், ஒரு டூவீலரில் குடும்பத் தேவைகளைக் கவனிக்க பயணம் செய்து கொண்டிருந்த இந்தப் பெண்மணி, பத்து ஆண்டுகளுக்கு முன் தன் சகோதரிக்கு ஸ்கூட்டர் ஓட்டக் கற்றுக் கொடுப்பதைப் பார்த்திருக்கிறேன். எத்தனையோ பெண்கள் கார், ஸ்கூட்டர் ஓட்டுகிறார்கள். ஆனால் இந்தச் சின்ன விஷயத்தைத் தொழிலாக மாற்றும் முயற்சி எடுத்துக் கொண்ட துர்கா எனும் பெண்மணி மட்டும் அத்துறையில் வழிகாட்டியிருக்கிறார். நம்மை நாமே, நமக்கு வெளியேயிருந்து பார்க்கும்போதே பல வியாபார ஐடியாக்களை பெறலாம். அதை விட்டு விட்டு ஏற்கெனவே பலர் ஈடுபட்டுள்ள, நமக்குப் பழக்கமில்லாத துறைகளைத் தேர்ந்தெடுப்பது முட்டாள்



பருப்புப் பொடி அரைக்கும் போது இரண்டு ஸ்பூன் ஓமம் சேர்த்து அரைத்தால் மணமாகவும் இருக்கும், ஜீரணத்திற்கும் நல்லது.

— பத்மஜா ராமகோபால்.

தனமே.

செட்டிநாட்டுப் பாரம்பரியக் குடும்பத்துப் பெண்கள் இன்று antique furniture வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது, விவசாயக் குடும்பத்துப் பெண்கள் நகரத்தில் தோட்டக்கலை வடிவமைப்பில் ஈடுபடுவது போன்றவை நல்ல ஆரம்பங்கள். ஒரு பெண்மணி புடவைகளுக்கு கஞ்சி போட்டுத் தருவதை ஒரு பிஸினஸாகவே துவங்கியுள்ளார்! தெரிந்த தொழில் துவங்குவதில் ஒரு லாபம். வியாபாரம் கற்றால் போதும். அதோடு நம் தொழில் துறை அறிவை தூசு தட்டி, இடம் மாற்றிப் போட்டால் போதும்.

பெண்களுக்கு நான் கூற விரும்பும் மற்றொரு விஷயம். கணவர், குடும்பத்தினரின் உதவி பெற மாட்டேன் என்று பிடிவாதம் பிடிக்காதீர்கள். பெரும்பாலான பெண்கள் நடுத்தர வயதில் தொழில் துவங்குவது தங்கள் கணவருடன் போட்டியிடவோ அல்லது அவர் திறமைகளை சவால் செய்யவோ எனவே எண்ணுகிறார்கள். நம்முடைய திறமைகளை உணருவதுடன், நமக்கு நெருங்கியவர்களுடைய அறிவையும், திறமைகளையும், பயன்படுத்திக் கொண்டால் முன்னேறுவது சுலபமாக இருக்கும். வீட்டுக்கு வெளியே வேலைக்குப் போகாத உங்களை விட, பல ஆண்டுகள் ஆபீஸுக்குப் போன உங்கள் கணவருக்குக் கட்டாயம் தொழில் துறை பற்றிய அறிவு அதிகமே இருக்கும். உங்களுக்கு இன்றைய தேவை ஆதரவும், அரவணைப்புமே தவிர ஈகோ பிரச்னையல்ல.

ட்யூஷன் போன்ற சுயஅறிவுப் பரிமாறல் தவிர, மற்றபடி உதவியாளர்கள், இடம், முதலீடு, ஃபோன், பாக்ஸ், கம்ப்யூட்டர், ஆபீஸ் தேவைப்படும் எந்தத் தொழிலானாலும், ப்ராஜக்ட் ரிப்போர்ட் தயாரிக்காமல் இறங்காதீர்கள். பெண் தொழில் முனைவோர் மையம், சிறு தொழில் மையம் இவற்றின் உதவி ரிபோர்ட் தயாரிக்க இலவசமாகவே கிடைக்கும். செலவை அறுதியிட்டுக் கணிக்காமல் எந்தத் துவக்கமும் செய்யக் கூடாது.

உங்களிடம் கையில் ஆர்டர் இருந்தால் தவிர, வங்கிகளிடம் கடன் வாங்காதீர்கள். குறிப்பாக வியாபார சந்தை நிலையற்ற சர்வீஸ் இண்டஸ்ட்ரியில் இருந்தால் வங்கிக் கடனை நாடாதீர்கள். சிறு தொழில் ஆரம்பிக்கும் பலர் தலைதூக்க முடியாமல் மூழ்கிப் போக வங்கிக் கடனே காரணம். அனாவசிய நகைகளை விற்று முதலீடு செய்யுங்கள். குடும்பத்தினரிடம் கடன் வாங்குங்கள். ஆனால், வியாபாரம் நிலைத்து லாபம் நிச்சயமாகும் வரை வங்கிகளை நாடாதீர்கள். பெரும்பாலான வங்கிகள் நாற்பது வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்குக் கடன் தருவதுமில்லை....

(தொடரும்)

இளம் பெண்கள் கொண்டாடும்

• மைத்ரேயி



இந் நாளைய இளம் பருவத்துப் பெண்கள் இப் பண்டிகையை ரசித்துக் கொண்டாடுகிறார்களா என்று கேட்கப் போனால் ஒரே ஷாக்காக இருந்தது சிலரின் போக்கு!

''என் பெண்ணிடம் போய் இதெல்லாம் கேட்காதீர்கள். அவளுக்கு என்ன தெரியும் நவராத்திரி பற்றி? பள்ளியிலோ கல்லூரியிலோ இதைச் சேர்த்து லீவ் விட்டால் தோழிகள் சேர்ந்து ஏதாவது சினிமா போவார்கள் அல்லது எம்.ஜி.எம். போவார்கள். மற்றபடி பண்டிகையில் எல்லாம் ஈடுபாடு கிடையாது. சுண்டல் செய்து தந்தால் 'ஹை ப்ரோடீன்' உணவு என்று கூறி சுவைத்து மகிழ்வாள் அவ்வளவுதான்'' என்றார்.



அம்மாக்கள்தான் இப்படிச் சொல்கிறார்கள். பருவப் பெண்களை நேரடியாகவே கேட்போம் என்று அணுகினால், ''என்ன ஆன்ட்டீ? நவராத்திரி படி வைத்து கொலு வைக்கவெல்லாம் யாருக்குப் பொறுமையும் நேரமும் இருக்கிறது? மற்றவர் வீட்டிற்குப் போய் அழைப்பது என்பதெல்லாம் முடியாத காரியம். கடவுளை மனத்தில் ஒரு நிமிடம் மனதார நினைத்து வேண்டிக் கொண்டு கிளாசைப் பார்க்கப் போய்க் கொண்டே இருக்க வேண்டியதுதான். அம்மாவைப் பாருங்கள்! பின்னால் தெருவில் ஒரு வீட்டில் வாங்கி வந்த தாம்பூலத்தை அப்படியே அடுத்த வீட்டு மாமியை அழைத்துத் தருகிறாள். இவ்வாறு பண்டிகையை எல்லாம் பெரிது படுத்திக் கொண்டாடுவதால் பூக்காரன், பால்காரன் என அனைவரும் அநியாய விலை வைத்து கொள்ளையடிக்கிறார்கள். ஒரு நாள் கொண்டாடுவதே சிரமம். ஒன்பது நாளா நினைத்தாலே வியப்பாயிருக்கிறது'' என்றனர்.

வியந்து நின்றது அவர்களல்ல! நாம்தான்! பண்டிகை, கொண்டாட்டம், கலாசாரம், பண்பாடு என்பவையெல்லாம் குறைந்து விட்டதா? பருவ வயதுக் குழந்தைகளின் மனம் இவற்றையெல்லாம் விரும்பவில்லையா? அம்மா வைத்துத் தைத்த தாழம்பூவின் மணம் நம் ஜடையில் இன்னும் வீசும் போது, பருவப் பெண்களின் மனதில் பண்டிகையின் பரவசம் மொட்டாக மலரவில்லையா என்ற ஏக்கம் ஏற்பட்டது. இன்னும் இவற்றில் எங்கள் பெற்றோரின் வழிகாட்டுதலால் ஈடுபாடு கொண்டிருக்கிறோம் என முன் வந்து

நவராத்திரி பண்டிகை

நான்கு பெண் குழந்தைகள் கூறியபோது ஆறுதலாக இருந்தது.

மைத்ரேயி :

"எங்கள் வீட்டில் பண்டிகையை மிகவும் சிரத்தையாகக் கொண்டாட வேண்டுமென்பதில் அப்பாவுக்கு ஆர்வம் அதிகம். அதற்கு வேண்டிய ஒத்துழைப்பை, அலுவலகம் சென்றாலும் அலுத்துக் கொள்ளாமல் அம்மா தருவாள். நானும்



• வர்ஷா



என் தங்கையும் கொலு வைக்க விரும்பியதால் முதலில் வீட்டிலுள்ள பெட்டிகளையும், அலமாரிகளையும் நகர்த்தி படிகட்டி கொலு வைத்தோம். ஒருமுறை பரணில் அப்பா கொலு பொம்மை எடுக்கப் பார்த்த போது பின்னால் பல வருடங்களாக எடுக்கப்படாத நான்கு பெட்டிகள் இருந்தன. திறந்து பார்த்தால் அத்தனையும் பாட்டி அந்த நாட்களில் கொலுவில் வைத்த பொம்மைகள்! அந்த வருடமே கொலுப்படி பெரிதாக வாங்கி விட்டோம்.

அப்பா மேலே உள்ள படிகளில் பொம்மைகளை வைத்து விடுவார். கீழ்ப் படிகள் முழுவதும் நானும் என் தங்கையும் இணைந்து வைப்போம். இந்த சந்தோஷத்திற்காக படிப்பையெல்லாம் முன்னாலேயே முடித்து விடுவோம். பொம்மைகள் இத்தனை இருந்தாலும் வருடா வருடம் ஒரு புது பொம்மையாவது வாங்க அப்பா கடைக்கு அழைத்துச் செல்வார்.

நவராத்திரி என்றால் நாம் மற்றவருக்குக் கொடுத்து, நாமும் பெற்றுக் கொள்ளும் பண்டிகை Giving and sharing festival என்பதே அப்பா சொல்வது. எத்தனை வயதானாலும், பரிசுகளைப் பெறும் போது மனத்தில் மகிழ்ச்சி பிறக்கிறதில்லையா?"

வர்ஷா :

"என் அப்பாவிற்குக் கட்டாயம் வருடா வருடம் புதுப்புது பொம்மைகள் வாங்க வேண்டும். வைக்கவே இடமில்லை என்று அம்மா புலம்பும் போதும் அப்பா ஏன் மேலும் மேலும் வாங்குகிறார் என சிறு வயதில் நினைத்துப் பார்ப்பேன். ஒரு தடவை நவராத்திரிக்கு முன் மாட வீதியில் ராதாகிருஷ்ணர் பொம்மையை வாங்கிக் கொண்டிருந்தோம். திடீரென சடசடவென மழை பெய்யத் தொடங்கி விட்டது. முதலில் சொன்ன விலையை பேரம் கூடப் பேசாத போதும் பாதி விலைக்குத் தரு

கிறேன் என்றார் கடைக்காரர். பரிதாபத்துடன் முதலில் சொன்ன விலையே கொடுத்து விட்டு, அவர்களின் கலைநயத்தைப் பாராட்டினார் அப்பா. அன்றுதான் வருடா வருடம் ஏன் புது பொம்மை வாங்குகிறார் என்று புரிந்தது.

நவராத்திரியில் மற்றொரு பிடித்தமான விஷயம் பட்டுப் பாவாடை அணிவது தான். நான் நடனம் பயிலும் நிருத்யோதயாவில் கூட மிகப் பெரிய அளவில் கொலு வைப்பார்கள். கொலுவினைப் பார்க்கப் பலர் வருவார்கள். அவர்கள் வரும் போது மாணவிகளான நாங்கள் பட்டுப் பாவாடை, தாவணி, நகைகள், பூவென அனைத்தும் அணிந்து பாரம்பரிய உடையுடன் வரவேற்கும் போது எங்களுக்கும் ஆனந்தமாக இருக்கும். வருபவர்களின் முகத்திலும் மகிழ்ச்சி புன்னகையாக மலரும்."

ஸ்வேதா – ஸ்வாதி (இரட்டைச் சகோதரிகள்)

"எல்லோரும் நவராத்திரி என்றால் பொம்மை வாங்கவும், அலங்காரப் பொருட்கள் வாங்கவும் திட்டம் போடுவார்கள். நாங்களிருவரும் கொலுவில் ஒவ்வொரு வீட்டிலும் என்ன பாட்டு பாடலாம் என்று திட்டம் போடுவோம். அதிலும் பாடிய பாட்டையே திருப்பித் திருப்பிப் பாடக்கூடாது என்பதில் எங்கள் பாட்டு டீச்சர் மிகவும் கவனமாக இருப்பார். எங்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்கள் முன், எங்கள் நண்பர்கள், உறவினர்கள் வீட்டில், பாட்டு டீச்சரின் உறவினரின் வீட்டில் மற்றும் வீட்டின் அருகே உள்ள கோயில்களில் நவராத்திரியில் பாடுவோம்.

இரட்டையர்களாக இருப்பதால் ஒரே மாதிரி பாவாடை அணிந்து செல்வதால் பலரின் கவனம் எங்கள் பக்கம் திரும்பும். முன் நாளில் பட்டுப் பாவாடை அணிய அவர்களுக்கு நிறைய சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால் இந் நாளில் தீபாவளிக்குக் கூட மாடர்ன் டிரஸ்ஸைத்தான் வாங்கிக் கொள்கிறோம். அதனால் கலாசாரப்படி உடையணிய இந்தப் பண்டிகை ஒன்று தான் நல்ல வாய்ப்பைத் தருகிறது."

தொகுப்பு : ராஜ்யஸ்ரீ சந்திரசேகர்



நவராத்திரி கொலுவில் காந்தி, இயேசு பொம்மைகளுடன் ராமர், கிருஷ்ணர், கீதோபதேசம் போன்ற பொம்மைகள் அழகாய் வைத்திருந்தோம். வெறும் பொம்மைகளை வைக்காமல் கீதோபதேச பொம்மை கீழ் கீதோபதேசம், காந்தி, இயேசு போன்ற பொம்மைகளின் கீழ் அவர்களின் பொன்மொழிகள். ராமர் பொம்மையின் கீழ் ஒரு ராமாயண ஸ்லோகம், கிருஷ்ணர் பொம்மையின் கீழ் அவரது யுத்த தந்திரங்கள் என எழுதி வைத்தால் நன்கு இருக்கும்.

சின்னச் சின்ன குழந்தைகள் இவையெல்லாம் படித்துப் பழகுவது மட்டுமின்றி நம் பண்பாடு, இலக்கியம் அறிய வாய்ப்புள்ளது.

செட்டியார் பொம்மையின் கீழ் வியாபார நெளிவு சுளிவு வாசகம், போர் வீரர்களின் கீழ் தியாகம் வீரம் பற்றிய வாசகங்கள் எழுதலாம். திருவள்ளுவர் பொம்மை கீழ் திருக்குறளை எழுதினால் குழந்தைகள் மனப்பாடம் செய்யும் வாய்ப்பு உள்ளது.

பார்க், மலை போன்ற இயற்கைக் காட்சி அமைக்கும் போது மரம் வளர்ப்போம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, தண்ணீர் சிக்கனம் பற்றி எழுதலாம்.

– என். சாந்தா

மெகா பரிசுப் போட்டி – 9

வாசகர்களே வாசகர்களுக்காக நடத்தும் இந்த மெகா பரிசுப் போட்டியின் ஒன்பதாவது நடுவர் குழு சென்னையில் கூடியது. 'என்ன திருப்பியும் சென்னை?' என முணுமுணுக்கிறீர்களா? நூற்றுக்கும் மேற்பட்ட சென்னை வாசகியர் நடுவர்களாக இருக்க விரும்பி மனு செய்திருந்ததுதான் காரணம். வந்த விண்ணப்பங்களில் முக்கால்வாசி சென்னை!

இலக்கியத்திலும், பத்திரிகைகளிலும் ஆர்வம் கொண்ட பலதரப்பட்ட நிலைகளில், ஏரியாவில் உள்ள பெண்களாகப் பார்த்துப் பார்த்துத்

எனக்கே எனக்காக...!

தேர்ந்தெடுத்தோம். அந்த வகையில் பெரம்பூர் சாந்தி சுந்தர், குரோம்பேட்டை ஞானம் இராமநாதன், கிழக்குத் தாம்பரம் கோமளா ராமன், தி. நகர் விமலா வாசுதேவராவ், அடையாறு மகாலட்சுமி ஆகிய ஐந்து பேரும் அலுவலகத்தில் கூடினார்கள்.

வந்திருந்த அத்தனை கட்டுரைகளையும் படித்து, தங்களைக் கவர்ந்த கட்டுரைகளைக் குறிப்பெடுத்து, எண்களைக் குறித்துக் கொண்டு என இரண்டு நாளும் ஒரே பிஸி. பிறகு ஆசிரியரும் இறுதிச் சுற்றில் அமர காரசாரமான விவாதம்.



• சாந்தி சுந்தர்

"மொத்த கட்டுரைகளையே மூன்று வகையாகப் பிரித்து விடலாம். சிறு வயதிலிருந்து தான் போற்றிப் பாதுகாப்பது, பெரிய மகான்கள் கொடுத்த அரிய பொருட்கள், தான் இழந்தவர்களின் நினைவாக வைத்துக் கொண்டிருப்பது..."

(இவை எதிலும் சேராமல் தனித்து நின்றதால் முதல் பரிசைத் தட்டிச் சென்றது கிரிஜாவின் கட்டுரை!)

"எல்லோரும் பொருட்களைப் பற்றியே எழுதியிருக்கிறார்கள். ஆனால் எனக்கே எனக்காகன்னு இந்தக் கொள்கையை வைத்திருக்கிறேன்னு யாருமே எழுதலை...!"

"இல்லையே, தலைப்பை அறிவிக்கிறப்போ அதைச் சொல்லலியே!"

• கோமளா ராமன்



"ஆனா முதல் பரிசு பெற்ற கட்டுரை, சொல்லாத ஒரு கருத்தைத் தானே எடுத்துக் கொண்டு இருக்கிறது!"



• ஞானம் இராமநாதன்

இப்படி சுவாரஸ்யமாகச் சென்றது நடுவர்களுடனான உரையாடல். எல்லா நடுவர்களுக்கும் ஒரே சந்தோஷம். "வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம்" என்றார்கள். "எவ்வளவு பெருமையாக இருக்கு தெரியுமா?" என்று பூரித்துப் போனார்கள். "இரண்டு நாட்கள் போனவிதமே தெரியலை. இத்தனை மணி நேரம் உட்கார்ந்து படித்தது என்பது இதுதான் முதல் தடவை" என்றார்கள். (ஒரே சிரிப்பும் விவாதமுமாக மூன்று மணி நேரத்திற்கு மேலாகி விட்டது. வழக்கம் போல அற்புதமான கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து இருந்தார்கள். அவற்றை முறைப்படுத்தி காரணங்களோடு முதல், இரண்டாம் பரிசு வரிசைகளை அமைத்த போது எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

டி.வி. சீரியல்களில் வர ஆரம்பித்திருக்கும் சாந்தி சுந்தர், தமிழார்வம் மிக்க ஓய்வுபெற்ற ஆசிரியை கோமளா ராமன், மகன்கள் அமெரிக்காவில் இருக்க இங்கே ஏதேனும் சுறுசுறுப்பாக செய்ய விரும்பி உற்சாகமாக இருக்கும் விமலா வாசுதேவராவ், பல விவாத மேடைகளில்





• மகாலட்சுமி

வென்றிருக்கும் மகாலக்ஷ்மி, சென்னை வானொலி இசைக் கலைஞர், டி.வி.யிலும் பாடியுள்ள ஞானம் இராமநாதன் என அழகிய கூட்டமைப்பு நடுவர்கள் தேர்ந்தெடுத்த கட்டுரைகளின் தரத்திற்குக் கேட்பானேன்!

மகிழ்வோடு கடைசி பரிசுப் போட்டிக்கு நகருவோம்!

• விமலா வாசுதேவராவ்



படங்கள் : ஜி. சுரேஷ்

காலையில் ஹேய்... மாலையில் பை!





கிராமப்புறத்தில் ஒரு மேனிலைப் பள்ளியில் முதுகலை ஆசிரியையாக இருக்கிறேன். நான் குடியிருக்கும் இடத்திலிருந்து இரண்டு பஸ்கள் பிடித்து, பின் பத்து நிமிடங்கள் நடந்து, நான் வேலை பார்க்கும் பள்ளியை அடைய முடியும்!

எல்லார் வீட்டிலும் நடப்பது போல காலை நேர கலாட்டா, டென்ஷன், வீட்டு வேலைகள்! "பாத்ரூமை விட்டு வெளியே வா!" "என்ன டாய்லெட்டில் பேப்பர் படிப்பு?" ஆளுக்கு ஆள், மூலைக்கு மூலை பரப்பும் அதிகார குரலொலிகள்! ஒருவழியாக வேலைகள் அனைத்தும் முடித்து, சாப்பாட்டுக் கூடையை கையில் எடுக்கும் போது காலை மணி 7.30. பின் 15 நிமிட ஓட்டப் பயணம்! பின் பஸ் பிடித்து பள்ளிக்குள் நுழைந்தால், மாலை 4½ மணி வரை மூச்சு விட முடியாத பணி. கிராமப்புற மாணவர்களுடன் மல்லுக்கு!

பின் திரும்பவும் பஸ் பயணம்! வீடு நோக்கி ஓட்டம்! மாலை நேர சந்தடிகள், இரவு டிபன் தயாரிப்பு! பள்ளியிலிருந்து எடுத்து வந்த வேலைகள்! இதற்கிடையில் விருந்தாளிகளின் வருகை! பின் டிபன்! பிறகு தூக்கம்! விடியற் காலையில் பள்ளியெழுச்சி! டென்ஷன்! டென்ஷன்! என்னைப் பற்றி நினைக்கக் கூட நேரமில்லை!

20 வருடங்களாக இப்படியே வீட்டு வேலை! பள்ளிப் பணி! என்று என்னைத் துரத்தி அடிக்கும் காலத்தை எதிர்த்து எதிர்நீச்சல் போடுகிறேன். என் கால்களுக்கு வலியெடுத்து, சோர்ந்திருக்குமே தவிர, என் மனம், எண்ணங்கள் சோர்ந்து போனதில்லை! மாறாத தளராத உற்சாகத்



தோடு பணி செய்து நல்ல பெயர் வாங்கி வருகிறேன்!

இதற்கெல்லாம் காரணம்...? பஸ்ஸில் பயணம் செய்யும் 1½ மணி நேர வைரத் துளிகள்...! எனக்கே எனக்காக, கடவுள் வாரி வழங்கிய பொன்னான நேரம்! பஸ்ஸில் ஏறியவுடன் ஜன்னல் ஓரம் உட்கார்ந்து கொள்வேன்!

சாலையின் இரு பக்கம் கைகோர்த்து நிற்கும் என் மௌன மொழி பேசும் மரத் தோழிகள். 'ஹேய் கிரி, குட் மார்னிங்' என்று கூற, பச்சைக் கம்பளம் விரித்துப் போர்த்திக் கொண்டு கிடக்கும் வயல் அம்மா! தூரத்தில் நீலவானம் பூமித்தாயை முத்தமிடும் இடத்தில் கைகோர்த்துச் சிரித்து நிற்கும் குள்ள மரத் தோழிகள், "ஹேய் கிரி, உனக்கும் எங்களுக்கும் ஓட்டப் பந்தயம்! யார் ஜெயிப்போம் பார்ப்போமா?' என்று கலகல சிரித்துக் கொண்டு ஓடும்!

காலையில் ஏற்பட்ட டென்ஷன் அனைத்தும் டக்கென்று மறந்து, எங்களுக்குள் ஏற்படும் மௌனமொழி

வார்த்தைகளை எங்களின் மூச்சாக, காற்றில் அனுப்பி, எங்களின் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்வோம்! ரொம்ப உற்சாக மனதோடு பள்ளிக்குள் நுழைவேன். மாலையில் வேலை தரும் பளு களைப்பை ஏற்படுத்த, வீடு திரும்ப பஸ்ஸில் வர, எனக்காகக் காத்திருக்கும் என் மௌன மொழி பேசும் தோழிகள், நான் வருகிறேனா என்று எட்டிப் பார்த்து நிற்கும்! என் களைப்பைக் கண்டு வாசமிகு தென்றல் காற்றை, தன் கிளைகள், இலைகளை அசைத்து உண்டாக்கி, பை சொல்லி அந்த மென் காற்று என்னை மெல்ல வருடிச் செல்லச் செய்யும்! பூரித்துப் போவேன்! என் அன்புத் தோழிகள் எனக்குச் செய்யும் பணிவிடைகளை உணர்ந்து!!!

புது தெம்போடு வந்து வீட்டு வேலைகளைச் செய்வேன்! இதய நோயாளியான அப்பா! உலகம் தெரியாத அம்மா! வாழத் தெரியாமல் திரும்ப வந்து விட்ட தங்கை! வாழ்வே இல்லாமல் போய் விட்ட நான்! பந்தத்தை வெறுக்கும் உறவுகள்! இப்படி, எத்தனையோ கஷ்டங்களை, கலங்கும் கண்களோடு மௌன மொழியால் கூறுவேன்! மழையிலும், வெயிலிலும் அசைய முடியாதபடி நிற்க வைத்து விட்ட கடவுளின் மீது உங்களுக்குக் கோபம் இல்லையா? என்று புலம்புவேன். இதற்கெல்லாம் ஒரே பதிலாக தன் கை எனும் கிளைகளையும் இலைகளையும் சரசர வென்று அசைத்து கலகலவென்று பூக்களைக் கொட்டிச் சிரித்துக் கொண்டு, எனக்கு ஆறுதல் சொல்லும் இயற்கையன்னை பெற்று எடுத்த அந்த மரத் தோழிகள்; அந்தப் பூக்களின் பொறுமையின் பெருமையை உணர்ந்து, மனம் லேசாகி ஆனந்தக் கண்ணீர் வடிப்பேன்!



இதைப் படிப்பவர்களுக்கு 'இது என்ன கிறுக்குத்தனம்' இவள் என்ன மனநோயாளியா என்று எண்ணத் தோன்றும். ''மரங்களோடு, செடிகளோடு, பூக்களோடு பேசுகிறாளாம்! நல்ல வேடிக்கை! என்று நினைக்கலாம்.

ஆனால், மேலே நான் எழுதியது அனைத்தும் சத்தியமான உண்மை! எனக்கே எனக்காக உருவாக்கப்பட்ட இந்த 1½ மணி நேரத் துளிகளை, நான் யாருடைய இடையூறும் இல்லாமல் அனுபவித்து அமைதி காண்கிறேன்! மகிழ்ச்சி அடைகிறேன்.

வேலை, வேலை என்று டென்ஷனாகி, இயந்திரமாகி, மரத்துப் போன நெஞ்சங்களே...! உங்களைச் சுற்றி இயற்கையன்னை அமைத்துத் தந்திருக்கும் இயற்கை பூஞ்சோலையை நேசக் கண்களோடு நோக்குங்கள்! அவை உங்களுக்குத் தரும் மௌன மொழி பரிவு வார்த்தைகளையும் பணிவிடைகளையும் பெற்று, நலமோடு, வளமோடு வாழுங்கள்!

— வி. கிரிஜா, சிதம்பரம்.





1984-ம் வருடம் செப்டெம்பர் 20ம் தேதி அகில இந்திய பதினோராவது நர்ஸஸ் பைனியல் கான்பிரன்ஸ், மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் தலைமையில் டெல்லி தால்கட்டோரா ஸ்டேடியத்தில் துவக்கி வைக்கப்பட்டது. இதில் பல்வேறு மாநிலங்களிலிருந்து மாணவர்கள் போட்டியில் கலந்து கொண்டார்கள். நான் லக்னோவில் மிலிடரி நர்ஸ் டிரெயினிங் எடுத்துக்


கொண்டு இருந்தேன். நான் எங்கள் துறையின் பிரதிநிதியாக போட்டியில் கலந்து கொண்டேன். வெற்றியும் பெற்றேன். செப்டெம்பர் 25ம் தேதி பிரதமர் கையால் பரிசு பெற்றேன். செப். 26ம் தேதி வெற்றி பெற்ற மாணவர்களுக்காக பிரதமர் இல்லத்தில் டீ-பார்ட்டி. அதில் நான் அவருடன் இணைந்திருந்து போட்டோ எடுத்துக் கொண்டேன். அன்று நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

ஒரு மாத லீவில் நான் தஞ்சை சென்ற போது என் அம்மாவிடம் (தந்தை இல்லை) போட்டோவைக் காண்பித்தேன். என் அம்மா, "நீ கைநிறைய சம்பாதிச்சு கொடுப்பது பின்னால் இருந்தாலும் இந்திரா காந்தி அம்மா கையால் பரிசு வாங்கி வந்தாயே! அது ஒண்ணே போதும். நான் செத்தாலும் மோட்சத்திற்குப் போவேன்" என்று சொல்லி பெருமைப்பட்டார்கள்.

அக்டோபர் 31ம் தேதி இந்திரா காந்தி இறந்த போது நான் வீட்டில் இருந்தேன். என் அம்மா ஒப்பாரி வைத்து அழுதார்கள். இறுதிச் சடங்கு முடியும் வரை பச்சைத் தண்ணி கூட குடிக்கவில்லை. அன்று நான் என்னிடமிருந்த போட்டோவை பார்த்தவண்ணம் இருந்தேன்.

லீவு முடிந்து நான் லக்னோ திரும்பினேன். டிசம்பர் 12ம் தேதி என் தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்பட்டது. அதில் என்னைத் தவிர மற்ற அனைவரும் தேர்ச்சி பெற்று விட்டார்கள். 12 பேர் கொண்ட என் குழுவில் நான் தனியே விடப்பட்டேன். பிறப்பிலிருந்து அண்ணன், தம்பி என்ற எந்த உடன்பிறப்பும் இல்லாது தனியே வளர்ந்த எனக்கு எந்த துக்கமோ, வருத்தமோ கண்ணில் நீரோ வரவில்லை. எப்போதும் போலவே இருந்தேன்.

என்னைப் பார்த்த என் பிரின்சிபல் டியூட்டர் அதிர்ச்சி அடைந்தார். டிசம்பர் 18ம் தேதி என் வீட்டிலிருந்து வந்த கடிதம் என் கண்களைக் குளமாக்கியது. வீடு தீ பற்றியதில் நான் பிரதமருடன் இணைந்து எடுத்த போட்டோவும் எரிந்து விட்டது என்ற செய்தி என்னை எரிக்காமல் எரித்தது. இச் செய்தி என் தலைவருக்கும் தெரியவந்தது. இத்துடன் மனம் தளராமல் நான் மீண்டும் என் படிப்பைத் தொடர்ந்தேன்.



இச் சூழ்நிலையிலிருக்கும் போது 1985 ஜனவரி 26ம் தேதி ஆர்.டி. பரேட் காண்பதற்குரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. நானும் என் பிரின்சிபல் மேடமும் சென்றிருந்தோம். பரேட் பார்த்து விட்டு திரும்பிக் கொண்டிருக்கும்போது வழியில் மைதானத்தில் ஒரு ஐந்து ரூபாய் நாணயம் என் கண்ணில் தென்பட்டது. குனிந்து எடுத்து நோக்கிய என் கண்ணில் இந்திரா காந்தியின் தலை, பகுதி - அதன் கீழ் அவர் வாழ்ந்த காலப் பிரிவு எழுதியிருப்பது பட்டது. அந்தப் புத்தம் புது நாணயம் சூரிய வெளிச்சத்தில் வெள்ளி போல் மின்னியது.

நான் அதனை எனக்கே எனக்காக கிடைத்த புதையலாக நினைத்தேன். அன்று அந்த நாணயம் என் இழந்த சந்தோஷத்தைத் திருப்பித் தந்தது. நான் பழைய நினைவுகளை அசைபோட்ட வண்ணம் லக்னோ திரும்பினேன். இன்று வரை அந்த நாணயத்திற்கு என் பீரோவில் தனி இடம் கொடுத்து வைத்திருக்கிறேன்.

– திருமதி. ஜெயா பன்னீர்செல்வம்

இமயத்தை நீயும் தெற்கே நகர்த்து!








அப்போது எனக்கு வயது பதினாறு. என் தந்தை திடீரென்று எனக்குத் திருமணம் செய்யப் போவதாய் அறிவித்தார். மாப்பிள்ளையை முடிவு செய்து விட்டதாகவும் தாய் தந்தை இல்லாத அவர் தஞ்சையில் தன் சகோதரி வீட்டில் வசிப்பதாகவும் மிக, மிக நல்லவர் என்றும் தெரிவித்தார். எனது தாயாருக்கோ வீட்டில் நடக்கும் முதல் சுபநிகழ்ச்சி என்பதால் மகிழ்ச்சி.

ஆனால் நான் இயற்கையிலேயே பயந்த சுபாவம் என்பதால் மடந்தைப் பருவம் தாண்டாத நான் பயத்தில் மருண்டு போனேன். என் மீது அதீத பாசம் வைத்திருக்கும் எனது தந்தையின் அன்பை மதித்தேஆக வேண்டிய கடமை எனக்கு. எனவே ஒப்புக் கொண்டேன். ஆனால் பயத்தில் முற்றிலும் சோர்ந்து மெலிந்து போனேன்.

எனது திருமணம் நடந்தேறியது. எல்லா நிகழ்ச்சிகளும் முடிந்து நானும் என் கணவரும் அவர் சகோதரி வீட்டிற்குச் சென்றோம். என் இரண்டாவது தாயாய் அவரை மனத்தில் வரித்துக் கொண்டு அவர் காலில் விழுந்து நமஸ்கரித்தேன்.அன்று மாலையே என்னை என் கணவர் தஞ்சை பெரியகோவிலுக்கு அழைத்துச் சென்றார். பிரகாரம் சுற்றி முடித்து இரவு ஒன்பது



மணிவாக்கில் இல்லம் திரும்பி காம்பவுண்டுக்குள் நுழைந்தோம். எங்கள் வீட்டிலிருந்து முதல் நாள் அனுப்பிய சீர் சாமான்கள் எல்லாம் வாசலில் அலங்கோலமாய் கிடந்தன. கையோடு நான் கொண்டு வந்த சூட்கேஸ் என் கணவரின் துணிகள் எல்லாம் வீசப்பட்டுக் கிடக்க வீட்டின் கதவில் பெரிய பூட்டுப் போட்டு பூட்டியிருந்தது.

கிராமத்தில் எளிய முகங்களைக் கண்டு பழகிய நான் முதன் முதலாய் ஒரு கோர வடிவம் கண்டு திகைத்துப் போனேன். தன் சகோதரி நிம்மதியாய் நிழலில் வாழ சூரியனை சுமந்த என் கணவர், அவமானத்தால் குன்றிப் போனார். துக்கம் என் நெஞ்சையும் சோர்வு என் கால்களையும் தாக்க சுயநினைவிழந்து தரையில் விழுந்து விட்டேன்.

எனக்குத் தைரியம் சொல்லித் தேற்றி அன்றிரவே என்னை அழைத்துக் கொண்டு எங்கள் இல்லம் வந்து விட்டார்.

"நண்பர்களிடத்தில் உதவி கேட்டுப் பார்க்கிறேன். எதுவும் கைகூடாத பட்சத்தில் சென்னை செல்கிறேன்" என்று சொல்லி விட்டார் கணவர். எல்லா நண்பர்களும் நிஜமுகம் காட்ட அவர் சென்னை செல்ல முடிவெடுத்தார். திருமணமாகி ஒரே வாரத்தில் பிரிவா? விடாப்பிடியாய் சென்னை புறப்பட்டு விட்டார். அவ்வளவுதான் முற்றிலும் நான் பலகீனமாகி படுத்த படுக்கையாய் ஆகிவிட்டேன். என் நிலையைக் காண சகிக்காமல் என் தந்தையும் மாரடைப்பால் காலமாக வாழ்க்கையே இருண்டு போனது. தலைதீபாவளியும் கொண்டாட முடியாமல் போக பொங்கல் நாள் வந்தது. சென்னையிலிருந்து என் கணவர் தான் வர இயலாது என்று தெரிவித்து விட்டு கடிதத்தோடு ஒரு பொங்கல் வாழ்த்து அட்டையும் அனுப்பியிருந்தார். ஓய்வு நேரக் கவிஞரான என் கணவர் நான் சோர்ந்தே கிடைப்பதை அறிந்து -

ஒவ்வொரு நாளும்
சூரியனை நீ எழுப்பு
சொர்க்கத்தின் கதவுகள்
திறக்கும் உனக்கு

கனவுகள் மெய்ப்பட
கைகள் இருக்கு
சோர்வுக்கும் உனக்கும்
சுயவரம் எதற்கு

வியர்வையில் நித்தமும்
வேள்விகள் நடத்து
இமயத்தை நீயும்
தெற்கே நகர்த்து...

என்று குறிப்பிட்டிருந்தார். அதைப் படித்ததும் உடம்பில் புது ரத்தம் பாய்வது போல உணர்ந்தேன். அன்றிலிருந்து சோர்வை விட்டொழித்தேன். எதையும் தைரியத்தோடு அணுகவும், துன்பங்களை எதிர்நோக்கவும், வாழ்வை வசப்படுத்தவும் கற்றுக் கொண்டேன். என் வீட்டையும் நிலங்களையும் நானே நிர்வகித்துக் கொண்டு இன்று வரை அடிக்கடி சென்னை சென்று என் கணவரை பார்ப்பதும் அவர் சென்னையிலிருந்து திருவையாறு வந்து என்னைச் சந்திப்பதுமாய் - பதினைந்து ஆண்டுகள் கழிந்து விட்டன.

பழைய நாட்களை ஞாபகப்படுத்தவும் புதிய நாட்களை தைரியத்தோடு எதிர்கொள்ளவும் இன்று வரை என்னை இயக்கிக் கொண்டிருப்பது நான் பூஜையறையில் வைத்துள்ள என் கணவர் எனக்காக அனுப்பிய இந்த பொங்கல் வாழ்த்து அட்டைதான். அதில் உள்ள வரிகள்தான் எனக்குக் காயத்ரி மந்திரம்.

- கலைமணிமாறன், திருவையாறு.



ருசி 'தண்டம்' ஆனது!



வருடா வருடம் தவறாமல் எங்கள் குடும்பத்தினர் சாதுர்மாஸ்ய விரதத்திற்கு காஞ்சீபுரம் சென்று ஆச்சார்யாளை தரிசித்து விட்டு வருவது வழக்கம்.

1956-ம் வருடம் என்று நினைவு. மயிலாடுதுறையிலிருந்து காஞ்சீபுரம்... அங்கேயே தெரிந்தவர் ஒருவர் வீட்டில் இரவு தங்கி விட்டு மறுநாள் காலை தரிசனம். பிரசாதம் கொடுக்கும் சமயம். ஆச்சார்யாள் எல்லோருக்கும் தாமரைப் பூ மற்றும் பழங்கள் கொடுத்துக் கொண்டிருந்தார். என் முறை வந்த போது எனக்கு மருக்கொழுந்து இலைகளற்ற

வெறும் காம்புக் குச்சி மட்டும் இரண்டு அவர் கையில்...

எனக்கோ அழுகையே வருகிறார் போல... எல்லோருக்கும் புஷ்பம்... எனக்கு மட்டும் வெறும் குச்சியா.... நிமிர்ந்து பார்த்தால்... ஆச்சார்யாள் சிரித்துக் கொண்டே கையை அபய ஹஸ்தம் முத்திரையில் வைத்துக் கொண்டு....

எனக்கு அந்த நிமிடம் என்ன தோன்றியது என்றே தெரியவில்லை. அந்தக் குச்சியை ஒரு பேப்பரில் மடித்து என் கைப்பையில் வைத்துக் கொண்டேன்.

திரும்பி வரும்போது நாங்கள் பஸ்ஸில் வந்தோம். எனக்கு நல்ல தூக்கம். கண் அயர்ந்து விட்டேன். என் அருகில் ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தார்... நான் நடுவில் உட்கார்ந்து இருந்தேன். சட்டென முழிப்பு வந்து பார்த்தால் என் கைப்பர்ஸ் அந்த வலப்புறம் அமர்ந்திருந்த பெண்மணியின் கையில்... சரி, தூக்கத்தில் கீழே விழுந்த பர்ஸை எடுத்து வைத்திருக்கிறார் போல இருக்கிறது என்று நினைத்து.

''பர்ஸைக் கொடுங்கள்'' என்று நான் கேட்க...

''என் பர்ஸை நீ ஏன் கேட்கிறாய்?'' என்று அப் பெண்மணி குரல் உயர்த்திக் கத்த... புத்திசாலித்தனமாக என் பர்ஸில் இருந்த பணத்தைக் கணக்காக அவள் பார்த்து வைத்துக் கொண்டு, 'விஷயம் என்ன' என்று விசாரித்தவர்களிடம் கரெக்டாக அவள் கூற, எனக்கு உண்மையிலேயே என்ன செய்வது என்றே தெரியவில்லை. உண்மையில், அவள் கூறிய அளவு எனக்குக் கூட சரியாக என் கைப் பர்ஸிலிருந்த பணம் மற்றும் சில்லறை அளவு தெரியவில்லை...

சட்டென்று எனக்கு கைப்பர்ஸின் பக்கவாட்டு 'ஜிப்'பில் ஆசார்யாள் கொடுத்த மருக்கொழுந்து காம்பு ஒரு பேப்பரில் சுற்றி மடித்தது நினைவிற்கு வர, ''கண்டக்டர், அந்த சைடு ஜிப்பில் ஒரு முக்கியமான பொருள் இருக்கிறது. அது என்ன என்று அந்த அம்மாவை சொல்லச் சொல்லுங்கள்'' என்று நான் கூற...

மேலே வளர்த்துவானேன்... மற்றவர்கள் கண்களுக்கு அது சாதாரண குச்சி... ஆனால் எனக்கோ அது ஆச்சார்யாளின் திருதண்டம். வீட்டிற்கு வந்ததும் என் அப்பா, (என் மானம் காத்த) அந்தக் குச்சிக்கு ஒரு பெட்டி ஒன்று சிறிய சைஸில் வாங்கித் தந்தார்...

நான் திருமணமாகி புகுந்த வீட்டிற்கு வந்த போது அந்தப் பெட்டி என்னுடன் வந்தது... என்னுடைய சுவாமி அறையில் தனி செல்வாக்குடன் உட்கார்ந்து கொண்டது... எத்தனையோ ஊர் விட்டு ஊர் மாறும் போது என்னுடைய பல சாமான்கள் தொலைந்து போயின. சில சமயம் பெட்டிகள் தொலைந்து போனதும் உண்டு. ஆனால் அந்தச் சிறிய பிளாஸ்டிக் பெட்டி எப்போதும் பத்திரமாகவே இருக்கும்.

இதோ 45 வருடங்கள் ஆகிவிட்டன.... என் குழந்தைகள் ஆளுக்கொரு திக்கில் இருக்கிறார்கள். என் வாழ்வில் எத்தனையோ சுகதுக்கங்கள்... ஏற்றத் தாழ்வுகள்.... யார் வாழ்வில்தான் இல்லை... ஆனால் அவை அனைத்தையும் தாங்கிக் கொள்ள ஒரு பக்குவ மனம் வேண்டுமே அதை அந்தத் தண்டம் கொடுத்துள்ளது.



என் மகன் மேற்படிப்பு முடித்து அமெரிக்கா சென்றான்... முதல் நமஸ்காரம் அந்த பிளாஸ்டிக் பெட்டிக்கு.... நம்பினால் நம்புங்கள். என்னுடைய சோதனையான வேதனையான காலங்களில் அந்தப் பெட்டியின் முன் அமர்ந்து லலிதா சஹஸ்ரநாமம் சொன்னால், மலை போல வந்த கஷ்டங்கள் பனி போல விலகியது உண்டு...

– சுவர்ணா, சென்னை.

Franch™ OIL NH*

Heals common ailments. Naturally.

❝ குடும்பத்தில் நிலவிடும் உற்சாகம்
நிலைத்த ஆரோக்யம்.
சரும தொல்லைகள் இல்லை யாருக்கும்.
Franch Oil NH*க்கு நன்றி. ❞



சென்னை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியில் Franch Oil NH* சிறந்த ஆயுர் வேத மருந்து என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஃப்ரான்ச் ஆயில் NH* ஆயுர்வேத மருந்து பலவகை நிவாரணி, சருமப் பாதுகாப்புக்கும் பலவிதமான வலிகளுக்கும் சிறப்பான குணம் அளிப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இயற்கை நிவாரணியான இது முற்றிலும் பக்க விளைவுகள் அற்றது. உங்கள் குடும்பத்தையும் ஆரோக்கியப் பாதுகாப்பில் வைத்துக் கொள்ள ஃப்ரான்ச் ஆயில் NH* மட்டும் போதும்.

இயற்கை முறையில் குணம் பெற்றிடவே பயன்படுத்துங்கள் ஃப்ரான்ச் ஆயில் NH*

பலவிதமான வலிகளுக்கு ஒரே நிவாரணி ஃப்ரான்ச் ஆயில் NH*

- விளையாட்டு வீரர்களின் பாதப்புண்கள்
- கால் ஆணிகள்
- பாத வெடிப்புகள்
- புருவங்கள்
- குளிரினால் ஏற்படும் பாதிப்புகள்
- தீக்காயங்கள்
- வயிற்றுப் புண்கள்
- உதடு வெடிப்புகள்
- சருமக் கோளாறுகள்
- முகப்பருக்கள் மற்றும் கரும்புள்ளிகள்
- நகங்கள்
- வம்சாவழி சரும வியாதிகள்
- தொப்புள் புண்கள்
- வயிற்றின் மீது கருக்கங்கள்
- சானிட்டரி நாப்கின் மூலம் கோளாறுகள்
- மாதவிலக்கு சமயங்களில் உண்டாகும் வயிற்று வலி
- சுளுக்கு மற்றும் மூட்டு வலி
- சொறி சிரங்குகள்
- முகத்திற்கான எண்ணை

*NH = Natural Healing

அம்மாவா சொன்னீர்கள் பெரியவர்கள் என்று...

என் நாத்தனார் பெண் சந்திராவின் மச்சினனுக்கு நாளை கல்யாணம். உறவு என்பதோடு போக்குவரத்து அதிகம். போதாததற்கு சந்திராவின் கடைக்குட்டி நாத்தனார் என் மகளுக்குப் பிரிய சிநேகிதி. இருவரும் ஒரே கல்லூரியில் ஒரே வகுப்பில் இன்ஜினியரிங் படிப்பு போன வருடம் முடித்தவர்கள். எனவே என் பெண்ணும் கண்டிப்பாக வரவேண்டும் என்று சொல்லியிருந்தார்கள்.

என் மாமியாரை வீட்டுக்குக் காவல் வைத்து விட்டு வேலைக்காரி வந்தால் வேலைகளை செய்யச் சொல்ல அவர் இருக்கச் சொல்லிவிட்டு நானும் என் பெண்ணுமாக போகலாம் என்று முடிவு செய்தோம். என் கணவரும் சமயம் பார்த்து ஆபீஸ் டூர் போய் விட்டார். வாரக் கடைசியில்தான் வருவார். காலை மாமியாருக்கு மட்டும் கொஞ்சமாக சமைத்து வைத்து விட்டு ஒரு ஆட்டோ பிடித்தால் மைலாப்பூரில் இருந்து தி.நகர் போக அரைமணி கூட ஆகாது. ஒன்பது மணிக்கு முகூர்த்தம். ஏழரை, எட்டுக்குக் கிளம்பலாம் என்று நானும் என் பெண்ணும் பேசிக் கொண்டிருந்தபோது என் மாமியார் கூப்பிட்டார்.

"ஏண்டி லட்சுமி. சந்திரா மச்சினனுக்கு நாளைதானே கல்யாணம்."

''ஆமாம்மா. கார்த்தால ஒன்பது மணிக்கு முகூர்த்தம். நானும் ரம்யாவும் ஏழரை, எட்டுக்குக் கிளம்பலாம் என் திருக்கிறோம். உங்களுக்கு மட்டும் சமைச்சு வச்சுட்டுப் போறோம். போட்டுச் சாப்பிட்டுக்கங்க. வேலைக்காரி வந்தால் பாத்திரம் தேய்ச்சு, துணி துவைச்சு வேலையெல்லாம் முடிச் சுட்டு போகட்டும். சாயங்காலம் அவள் வரச்சே சொல்லி வெச்சுடறேன்."

"அதென்னடி போறோம்? ஏன் நானும்தான் வரணும். அந்தப் பொண்ணு வந்து, "பாட்டி கட்டாயம் கல்யாணத்துக்கு வாங்கன்னு சொல்லிட்டு போயிருக்கு. அவ மாமியாரும் போனில் அழைச்சிருக்கா. நான் வரல்லேன்னா நாளைக்கு அவங்க முகத்திலே எப்படி முழிக்கிறது சொல்லு?"

எனக்குப் பகிரென்றது. அவரைக் காவல் வைக்கலாம் என்றால் அவரே கிளம்புகிறாரே. காலை ஐந்து மணிக்கே எழுந்து ஆறு மணிக்கெல்லாம் தயாராகும்படி உயிரை வாங்கி விடுவார். வெளியே வந்தால் தூசு பட்டால் போதும். ஆஸ்துமா மூச்சிரைக்கும். போதாததற்கு பி.பி. ஷுகர் எல்லாம். கல்யாண வீட்டில் கட்டுக்கடங்காமல் சாப்பிட்டு விட்டால் பிறகு என் கணவருக்கு யார் பதில் சொல்வது? எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்.

என் பெண், ''பாட்டி வரதானா நான்



வரல்லே. நீ பாட்டியோட போ. நானும் நீயும் வேணா இன்னிக்கு ரிசப்ஷனுக்குப் போகலாம். நாளைக்கு நான் வீட்ல இருக்கேன்" என்றாள். இதுவும் நல்ல ஐடியாவாகத்தானிருந்தது. என் மாமியாரிடம் சொன்னேன்.

"நல்லாயிருக்குமடி. ரிசப்ஷன் எல்லாம் சிநேகிதாதான் போவா. பத்தாததுக்கு சன்னா, புலவ்னு எதையாவது சாப்பிடப் போடுவா. சாப்பிடவும் முடியாது. ரம்யாவும் நாளைக்கு முகூர்த்தத்துக்கு வரதுதான் நல்லது. பேசாம மூணு பேரும் நாளைக்குப் போகலாம். சொன்னதைச் செய்."

உத்தரவிட்டு விட்டார். ரம்யாவை சமாதானப்படுத்தி ஒருவழியாக வேலைக்காரியையும் மதியத்திற்கு மேல் வந்து வேலை செய்யச் சொல்லி ஒருவழியாக காலை கிளம்ப முடிவு செய்தோம்.

எதிர்பார்த்தபடி காலை ஐந்து மணிக்கே எழுந்து விட்டார். "வெந்நீர் போடு. சீக்கிரம் கிளம்பணும். சரியா முகூர்த்தத்துக்குப் போனா நல்லா இருக்காது. கொஞ்சம் முன்னாடியே போகணும். ரம்யாவை நல்ல பட்டுப் புடவையா கட்டிக்கச் சொல். நல்லதா செயினும் பவுன் தோடுமா போட்டுக்கச் சொல். பித்தல் எல்லாம் வேண்டாம். நாலு பேர் கல்யாணத்துக்கு வந்தா பார்க்கக் கௌரவமாயிருக்கணும்."

அதிகாரம் தூள் பறந்தது. என் பெண்ணும் முணுமுணுத்தபடியே சூரிதாரிலிருந்து புடவைக்கு மாறி, மேட்சாக முத்து செட் போட்டுக் கொண்டு வர ஒருவழியாக ஏழு மணிக்கே கிளம்பி ஏழரைக்கெல்லாம் சத்திரத்துக்கு வந்தாகி விட்டது.

சந்திராவின் மாமியாருக்கு எங்கள் மூவரையும் பார்க்க பரம சந்தோஷம். "வாங்க, வாங்க" என்று உபசரித்தபடி சந்திராவையும் என் நாத்தனாரையும் அழைத்து டிபன் சாப்பிட அழைத்துக் கொண்டு போகச் சொன்னார். (என் மாமியார் ஸ்வீட்டையும் ஐஸ் வாட்டரையும் சாப்பிட்டது வேறு விஷயம்.)

டிபன் முடித்து கல்யாணம் நடக்கும் ஹாலுக்கு வந்தோம். காசி யாத்திரை முடித்து பெண்ணும் பிள்ளையும் மணமேடையில் அமர்ந்து சடங்குகள் நடந்து கொண்டிருந்தது. என் மாமியார் மெள்ள எழுந்து தனக்குத் தெரிந்தவர் உறவுக்காரர்கள் தன் பெண்ணின் சம்மந்தி என்று கொஞ்ச கொஞ்ச நேரம் எல்லோருடனும் பேசிக் கொண்டிருந்தார். என் பெண் சிநேகிதிகளுடன் அரட்டை அடிக்கப் போய் விட்டாள்.

சற்று நேரத்தில் முகூர்த்தம் முடிந்தது. என் மாமியாரும் கூட ஒரு வாலிபனும் என்னை நோக்கி வந்தது கண்டு எனக்கு வியப்பாக இருந்தது. அந்தப் பையனை இதுவரை பார்த்ததில்லை. என் மாமியார், "லெட்சுமி, இந்தப் பையன் யாருன்னு தெரியறதா? சந்திராவோட கடைசி மச்சினராம். இங்கே இன்ஜ்னியரிங் படிப்பும் அமெரிக்காவில் எம்.எஸ். படிப்பும் படித்து விட்டு அங்கே வேலையிலே இருக்கிறானாம். நல்ல சம்பளம். பாலாஜிதானேப்பா உன் பேரு?"

என்று என்னிடமும் அந்தப் பையனிடமும் பேசினார். அவன் எனக்கு வணக்கம் சொல்லி இரண்டொரு வார்த்தை மரியாதையுடன் பேசிவிட்டு அகன்றான். அவனைப் பார்த்ததுமே பெண்ணைப் பெற்ற எனக்கு, 'ரம்யாவுக்கு இவனைப் பார்க்கலாமே' என்ற எண்ணம் வந்தது.

"என்ன யோசிக்கிறே. ரம்யாவுக்கு பாக்கலாம்னுதானே. அதுக்காகத்தான் ரம்யாவை இன்னிக்கு வரச் சொன்னேன். பையன் இன்னிக்கு விடியற்காலம்பற இரண்டு மணிக்குத்தான் வந்தானாம். நான் பேசினவரை நல்ல பையனாத் தெரியறான். ஆறாயிரம் டாலர் சம்பளமாம். தனி அபார்ட்மென்ட்லே சமைச்சி சாப்பிட்டுண்டு இருக்கானாம். கார் வெச்சிண்டிருக்கானாம். சம்மந்தியம்மா ரம்யாவைப் பார்த்திருந்தாலும் பையன் ரம்யாவை பாக்கணும் இல்லியா? அதுக்குத்தான் இன்னிக்குப் போகலாம்னேன்."

என் மாமியார் ரம்யாவை பட்டுப் புடவை கட்டிக் கொள்ளச் சொன்னது, ரிசப்ஷனுக்குப் போக வேண்டாம் என்று சொன்னது தானே நேரில் வர பிடிவாதம் பிடித்தது எல்லாவற்றின் அர்த்தமும் விளங்கியது. இழுப்பையும் பி.பி.யையும் பொருட்படுத்தாமல் வலிய போய் நாம் கேட்கத் தயங்கும் கேள்விகளை பிள்ளையிடம் நேரேயே சகஜமாகக் கேட்டு எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லும் தைரியம் அவருக்கே உரித்தானது.

பிறகென்ன? பையன் கல்யாணத்திலேயே என் பெண்ணைப் பார்த்துப் பேசி சம்மதம் சொல்ல அவன் ஊருக்குப் போய் அடுத்த ஆறாவது மாதத்தில் திரும்ப வந்து என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டது எல்லாம் கனவு மாதிரி மளமளவென்று நடந்து விட்டது. என் மாமியார் மட்டும், "சும்மாவா சொன்னா அந்தக் காலத்திலே ஒரு கல்யாணத்திலேதான் இன்னொரு கல்யாணம் நிச்சயமாகும்னு" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்.

— சியாமளா ராமஸ்வாமி


தேங்காய் பர்பி கிளறும் போது பழுத்த மாம்பழம் ஒன்றை, தோல் சீவி துருவிக் கலந்து விட்டேன். கலர்ஃபுல் பர்பி... ஆஹா... அட்டகாசமாய் இருந்ததுங்க! – மும்பை அருணா



இந்த மாதம் எப்படி?

அக்டோபர் 2001

		சனி (வ)	குரு ராகு
	10.10.2001 - கன்னி - சுக்கி 11.10.2001 - கன்னி (புதன் (வ) 17.10.2001 - துலா - சூரியன் 18.10.2001 - மகர - செவ் 22.10.2001 - புதன் - வநி.		சுக்கிரன்
கேது செவ்வாய்		புதன் (வ) சூரியன்	



மேஷ ராசி :


அஸ்வினி, பரணி, கிருத்திகை 1 - ஆம் பாதம்

இராசிநாதன் அங்காரக பகவான் 9ஆம் இடத்தில் சஞ்சரிப்பது நல்லது. என்றாலும், கேதுவுடன் கூடியிருப்பதாலும், புதன் மாத ஆரம்பத்தில் 7ஆம் இடத்தில் வக்கிரம் பெறுவதாலும், உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் திருப்திகரமாக அமையாவிட்டாலும் சிறிது காலம் பொறுமையாய் இருப்பது அவசியம். தொழிற்பிரிவினர் படிப்படியான முன்னேற்ற நிலையைக் காண முடியும். அரசாங்கத்தில் உயர்பதவியில் இருப்பவர்களுக்கு சோதனைகள் குறையும். இயந்திரக் கருவிகளை வைத்துத் தொழில் நடத்துவோர் சில சிரமங்களைச் சந்திக்க நேரும். கலைஞர்களின் முயற்சிகள் சில சாதாரணமான வாய்ப்புகளையே பெற்றுத் தரக்கூடும்.

மாணவமணிகள் பெற்றோரை மகிழ்விக்கும் வகையில் கல்வியில் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருவீர்கள். வியாபாரிகள் ஓரளவு திருப்தியடையக் கூடிய வகையில் வியாபாரம் குறைந்தபட்ச அளவில் நடைபெற்று வரும். குடும்ப நிர்வாகத்தில் சிறப்பான கவனம் செலுத்தி பெண்கள் நற்பெயரைப் பெற்று மகிழ்வீர்கள்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே சுமுகமான நிலை நிலவி வரும். கொடுக்கல் வாங்கலில் தாராளப் போக்கு காணப்படும். சொந்தப் பணம் இல்லாவிட்டாலும் யாருடைய பணமாவது உங்கள் கையில் தாராளமாகவே புழங்கி வரும். மற்றவர்களுக்கு உதவும் எண்ணம் வளரும். பயணம், விருந்து போன்றவற்றின் மூலம் மகிழ்ச்சியடைவீர்கள். எனினும் பயணத்தின் போது கவனம் தேவை. உடல்நலத்தில் கவனம் தேவை. பிற இனத்தவரின் உதவி உண்டு. வழக்கு இருப்பவர்களுக்கு முடிவு சாதகமாக அமையாது. குழந்தைகளுக்கு மருத்துவச் செலவு செய்ய நேரும்.

நீங்கள் தினமும் அதிகாலையில் சூரிய பகவானை வணங்கி வருவதும், ஆதித்ய ஹ்ருதயம் ஸ்தோத்திரத்தைப் படித்து வருவதும், உங்கள் கவலைகளைக் குறைத்து இனிய சூழ்நிலையை ஏற்படுத்தும்.



ரிஷப ராசி :

கிருத்திகை 2, 3, 4 -ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 - ஆம் பாதங்கள்.

இராசிநாதன் சுக்கிரன் 4-ஆம் இடத்தில் சூரியனுடன் பரிவர்த்தனம் அடைவதால் உத்தியோகஸ்தர்கள் சிறிய சங்கடங்களை சந்திக்க நேரும். சிறு பொருள்கள் தொலைவதாலும், தேவையற்ற பேச்சுக்களாலும் சிலரின் விரோதங்களை அடைய நேரலாம். என்றாலும் குருபகவான் அருளால் உயர் அதிகாரிகளின் ஆதரவு ஆறுதல் தரக்கூடும். தொழிற்பிரிவினர் ஓரளவு முன்னேற்றத்தைக் காண்பீர்களாயினும் வருமானப் பற்றாக்குறை தொடரவே செய்யும். மாணவமணிகள் படிப்பில் மட்டுமின்றி போட்டி, பந்தயங்களிலும் வெற்றி காண்பீர்கள்.

வியாபாரம் நல்லமுறையில்

நடைபெறுமென்றாலும் வியாபாரிகள் வேலையாட்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்காவிட்டால் பொருள்கள் களவு போக இடமுண்டு. கலைஞர்கள் கைவசம் உள்ள வாய்ப்புகளில் கவனம் செலுத்தி வந்தாலே போதுமானது. குடும்பத்தில் ஓரிரு பிரச்னைகள் தலைதூக்கினாலும் சாமர்த்தியமாக சமாளித்து பெண்கள் நற்பெயரைப் பெறுவீர்கள்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே இணக்கமான போக்கு இருந்து வரும். அரசியல் தொடர்பு உள்ளவர்களால் சில அனுகூலங்கள் ஏற்பட இடமுண்டு. பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். சுபநிகழ்ச்சி குறித்து முயற்சிகள் வெற்றி பெறும். கடன் கொடுக்கும் தொகை திரும்பி வருவது கடினம் தான். வாகன வகையில் செலவுகள் உண்டு. உறவினர் வருகை மூலம் சுபச் செய்தி ஒன்று கிடைக்க இடமுண்டு. எதிரிகளின் பலம் குறையும். அதிர்ஷ்ட வாய்ப்புகளால் சில ஆதாயங்கள் அமையக்கூடும். எதிலும் நிதானமாகச் செயல்படுவது அவசியம்.

நீங்கள் தினமும் 108 முறை ஸ்ரீராமஜெயம் எழுதி வருவதுடன் மகாவிஷ்ணுவுக்கு துளசி மாலை அணிவித்து வணங்கி வருவதும் உங்கள் கவலைகளைக் குறைத்துக் களிப்பை உண்டாக்கும்.

சர்க்கரை டப்பாவை எறும்புகளிடம் இருந்து காப்பாற்றுவது பெரும் போராட்டமாகவே இருக்கும். நாலு கிராம்பை டப்பாவில் சர்க்கரையின் மீது போட்டு மூடி வைத்து விட்டால் எறும்புகள் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓடி விடும். எறும்பைப் பிடித்து உள்ளே விட்டால் கூட ஓடி விடும்.

— ப.பாபு.



மிதுன ராசி :



மிருகசீரிஷம் 3, 4 – ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர் பூசம் 1, 2, 3 –ஆம் பாதங்கள்.

இம்மாதம் கிரக சஞ்சாரங்கள் நன்மையும் தொல்லையும் தரக்கூடிய விதத்தில் அமைந்துள்ளன. மேலும் நீச்ச சூரியனுடன் புதனும் சேர்வது சிறு வழக்குகளை உண்டாக்கச் செய்யலாம். உத்தியோகஸ்தர்கள் அலுவலகம் தொடர்பான பிரச்னைகளில் முழுமையான பலன்களைப் பெற முடியாவிட்டாலும் ஓரளவு திருப்தியடையும் வகையில் சில நன்மைகளைப் பெற்று மகிழ்வீர்கள். மற்றவை தள்ளிப் போக நேரும். தொழிற்பிரிவினர் ஓரளவு வளர்ச்சியைக் காணலாம். கூட்டுத் தொழில் செய்வோர் என்றாலும் கணக்குகளை ஒழுங்காக வைத்திருப்பது அவசியம். மாணவமணிகள் படிப்பில் முன்னணி நிலைக்கு உயரக்கூடிய வகையில் இப்போதே ஆயத்தங்களை மேற்கொள்வீர்கள்.

வியாபாரிகள் ஓரளவு திருப்தியடையக் கூடிய வகையில் சுமாரான குறைந்தபட்ச வியாபாரம் நடைபெறுவதில் தடையிராது. கலைஞர்கள் சுமாரான முன்னேற்றத்தை மட்டும் காண முடியுமேயன்றி, புதிய வாய்ப்புகளைப் பெறுதல் சாத்தியமில்லை. குடும்ப நிர்வாகத்தில் பெண்கள் சிறப்பான முறைகளைக் கையாள்வதன் மூலம் பலருடைய பாராட்டுக்களையும் பெறுவீர்கள்.

குடும்ப நிலையில் கணவன் – மனைவியிடையே பரஸ்பர நல்லுறவு நிலவி வரும். பழைய நண்பர்களின் சந்திப்பு உற்சாகமூட்டும். வழக்குகள் இருப்போர் இப்போது அவசரப்பட வேண்டாம். தள்ளிப் போவதே நல்லது. பெண்களால் சிலருக்குக் கௌரவக் குறைவான நிலை ஏற்படக்கூடும். அரசு வழிக் கடிதங்கள் சிலருக்கு நன்மை தர இடமுண்டு. குடும்பத்தில் யாருக்காவது மருத்துவச் செலவு உண்டு. புதிய முயற்சி எதிலும் ஈடுபடாதீர்கள்.

நீங்கள் தினமும் சௌந்தர்ய லஹரி ஸ்தோத்திரத்தைச் சொல்லி அம்பாளை வழிபட்டு வருவதன் மூலம் உங்கள் கவலைகள் யாவும் நீங்கும், சுபிட்சநிலை ஏற்படும்.



கடக ராசி :

புனர்பூசம் 4–ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

இம்மாதம் 4–ஆம் இடத்தில் நீச்சம் பெற்ற சூரியனுடன் புதன் கூடினாலும் சூரிய பகவான் சுக்கிரனுடன் பரிவர்த்தனம் அடைவதால் தொல்லைகளுக்கு இடையில் மறைமுக லாபம் உண்டு.

நண்பர்களால் சிறு பிரச்னைகளைச் சந்திக்க நேரும். வேற்று மொழி பேசக்கூடியவர்களால் முக்கியத் திருப்பம் உண்டாகும். தண்ணீர் சம்பந்தப்பட்ட விஷயத்தில் வீண் விரயங்கள் உண்டாகும். அது தண்ணீர் தொட்டி கட்டுவதாகவோ, குழாய் எடுப்பதாகவோ அமையலாம். என்றாலும் சிறு லாபங்களையும் மாத மத்தியில் சந்திக்க நேரும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்தபடி இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றைப் பெற்று மகிழ்வீர்கள். உயர் அதிகாரிகளின் ஆதரவு இதற்கு உறுதுணையாய் அமையும். தொழில் புரிவோர் உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் தடை ஏதும் இராது. மாணவமணிகள் பாடங்களில் கவனம் செலுத்துவது குறையக்கூடிய நிலை தென்படுகிறது. இருப்பினும் மாதப் பிற்பகுதியில் இந்நிலை மாறி பாடங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்வீர்கள்.

வியாபாரம் நஷ்டமில்லை என்ற அளவில் ஓரளவுக்கு நடைபெறுவது வியாபாரிகளுக்கு முழு திருப்தியைத் தர இயலாது. சில பழைய பாக்கிகள் வசூலாவது சிறிது ஆறுதல் தரக்கூடும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற முயற்சி செய்வதில் ஓரளவே வெற்றி பெற முடியும். ஆடை, ஆபரணச் சேர்க்கை, பெண்களுக்கு மகிழ்ச்சி தருமாயினும், உடல்நலத்தில் கவனம் செலுத்துவது அவசியம்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே இனிமையான போக்கே தென்படும். எதிலும் நிதானமாக நடந்து கொள்வது அவசியம். பழைய நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். குழந்தைகளின் நலத்தில் கவனம் செலுத்த நேரும். தாய்வழி உறவினர் ஒருவரின் சுபநிகழ்ச்சிக்காகப் பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். உறவினர் வருகையால் செலவுகள் கூடும். பெண்கள் தனியாகப் பயணம் செய்ய நேரும். பயணத்தின் போது மிகுந்த கவனம் தேவை. வாகன வகையில் செலவுகளுக்கு இடமுண்டு.

நீங்கள் சங்கடஹர சதுர்த்தி நாளன்று விநாயகப் பெருமானுக்கு அருகம்புல் சாத்தி வணங்குவதுடன், அபிஷேகத்துக்குத் தேவையான பொருள்களையும் வாங்கித் தருவதன் மூலம் உங்கள் சிரமங்கள் யாவும் அகலும், செழிப்பு ஏற்படும்.



சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1-ஆம் பாதம்

இராசிநாதன் சூரிய பகவான் நீச்சம் பெறுவதாலும், ஜென்ம ராசியில் சுக்கிரன் அமர்ந்து சூரியனுடன் பரிவர்த்தனம் அடைவதாலும், உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றைப் பெற முயற்சி செய்வதில் இப்போது நற்பலன்களை எதிர்பார்ப்பதற்கில்லை. மேலும் சிறு பிரச்னைகளை பெரிதுபடுத்த வேண்டாம். சமரசமாகவே செல்வதற்கு முயற்சிக்கவும். மாத ஆரம்பத்தில் பூமி சம்பந்தப்பட்ட பிரச்னை ஏற்பட்டு சரியாகும். மாணவமணிகள் பாடங்களில் மிகுந்த அக்கறை காட்டி புகழும் பெருமையும் அடைவீர்கள். தொழிற்பிரிவினர் உழைப்பிற்கேற்ற ஊதியத்தைப் பெற்று மகிழ்வீர்கள்.

வியாபாரிகளுக்குப் பண நெருக்கடி ஏற்படாத அளவில் வியாபாரம் சுமாராக நடந்து வரும். கலைஞர்களுக்குப் பொருளாதார முன்னேற்றம் எதையும் தரக்கூடியதாக இல்லாமல் சாதாரண வாய்ப்புகளே அமையும். பெண்கள் மகிழ்ச்சியும் நிம்மதியும் அடையக்கூடிய வகையில் குடும்பத்தில் நிகழ்ச்சிகள் யாவும் மகிழ்ச்சி தருவதாகவே அமையும்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே பரிவும் பாசமும் கலந்து நிலவி வரும். பெண்களின் மூலம் சில நன்மைகள் ஏற்பட இடமுண்டு. மூன்றாம் மனிதர் ஒருவரால் கணவன் - மனைவியிடையே சிறு சச்சரவு தோன்றி மறையும். மனத்துணிவு குறைந்து சலனமடைய நேரும். காது, பல் போன்றவற்றில் வலி ஏற்பட்டு நீங்கும். கௌரவம் கருதிக் கடனாகக்

எண்ணெயில் வறுபடும் எந்தப் பண்டமானாலும் சரி, கரகரப்பாகவும், எண்ணெய் அதிகம் குடிக்காமலும் இருக்க, பொட்டுக் கடலையை (ஒரு பிடி) பொடித்து, மாவாக்கி மாவுடன் பிசைந்து பொரிக்கவும். சேப்பங்கிழங்கு ரோஸ்ட், உருளை ரோஸ்ட்டுக்கும் மேலே தூவலாம். போளி செய்வதற்குப் பூரணமாகவும், கொஞ்சம் சர்க்கரை பொடி சேர்த்துப் பயன்படுத்தலாம்.

– ஆர். சித்ரா



திதி போன்ற நாட்களில் அரிசி ரவை பாயஸம் செய்யும் பொழுது சாதா அரிசி ரவைக்குப் பதில், பாஸ்மதி அரிசியை ரவையாக உடைத்து வேகவைத்து வெல்லம், தேங்காய்ப் பால் விட்டு செய்து பாருங்கள். கமகமவென மணமுடன், சுவையும் கூடுதலாகி நன்றாக இருக்கும்.

- பால்சரஸ்வதி



கொடுத்த பணம் திரும்பி வராது. புதிய நண்பர்களின் அறிமுகம் ஏற்படும். புதிய தொழில் தொடங்குதல், தொழில் நிலையத்தின் இடமாற்றம் சிலருக்கு ஏற்படும்.

நீங்கள் சனிக்கிழமைதோறும் ஆஞ்சநேயப் பெருமானுக்கு துளசியும், வெண்ணெயும் சாத்தி வணங்கி வருவதன் மூலம் உங்கள் இன்னல்கள் யாவும் மின்னலென மறையும்.



கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4 - ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 - ஆம் பாதங்கள்.

இரண்டாமிடத்தில் சூரியன் நீச்சம் பெற்றாலும், புதபகவான் அருளால் உத்தியோகஸ்தர்கள் எதிர்பாராத நன்மைகளைப் பெற்று மகிழ்வீர்கள். தொழிற்பிரிவினர் முன்னேற்றம் எதையும் எதிர்பார்க்க இயலாது. வருமானமும் மந்த நிலையிலேயே காணப்படும். சொந்தத் தொழிலை விரிவுப்படுத்துவதையோ அல்லது சீட்டுப் பணம் பைனான்ஸ் போன்றவற்றை எதிர்பார்ப்பதையோ தற்போது தவிர்க்கவும். மாணவமணிகள் பாடங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக விளையாட்டுப் போக்கினராகக் காணப்படுவீர்கள். எனினும் மாதப் பிற்பகுதியில் பாடத்தில் ஆர்வம் தோன்ற இடமுண்டு.

கலைஞர்கள் தொடர்ந்து முயல்வதன் காரணமாக ஓரிரு சாதாரண வாய்ப்புகளை மட்டுமே காண முடியும். சக கலைஞர்களின் போட்டிகளைச் சந்திக்க நேரும். வியாபாரம் குறைந்த அளவிலேயே நடக்கும் என்பதால் வியாபாரிகள் மகிழ்ச்சி கொள்ள வாய்ப்பில்லை. பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் மிகச் சிறப்பாக இயங்கி நற்பெயர் பெறக்கூடுமாயினும் உடல்நலத்தில் கவனம் செலுத்த நேரும்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே கலகலப்பு நிறைந்திருக்கும். ஒரு சிறு சச்சரவு தோன்றி மறையவும் இடமுண்டு. அரசியல்வாதிகளின் நட்பு நன்மை தரக்கூடும். புத்திர வழியில் பெரும் மகிழ்ச்சி காண இடமுண்டு. குடும்பத்துடன பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். காண்ட்ராக்ட் தொழிலில் உள்ளவர்களுக்கு பணம் கிடைக்கத் தாமதம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. ரத்த அழுத்தம், வயிற்றுப் புண் சிலருக்குத் தொல்லை தரக்கூடும். கர்ப்பிணிப் பெண்கள் மிகுந்த கவனமாக இருப்பது அவசியம். பழைய நண்பர்கள் சிலர் உங்கள் முயற்சிகளுக்கு உதவுவார்கள். சுபநிகழ்ச்சி குறித்த கடிதத் தொடர்பு நன்மை தரும்.

நீங்கள் பார்த்தசாரதிப் பெருமானுக்கு சனிக்கிழமை தோறும் துளசி மாலை அணிவித்து வணங்கி வருவதன் மூலம் உங்கள் கவலைகள் யாவும் விலகி சுபிட்சம் ஏற்படும்.



துலாம் ராசி :

சித்திரை 3, 4 - ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 - ஆம் பாதங்கள்.

லக்னாதிபதி 11ஆம் இடத்தில் வீற்றிருப்பதாலும், 9ஆம் இடத்தில் உள்ள குரு சஞ்சாரத்தாலும், பிரச்னைக்கிடையே ஆதாயங்களை அடைவீர்கள். மேலும் உத்தியோகஸ்தர்களுக்கு அமையக்கூடிய இடமாற்றம் விருப்பமில்லாததாகவே அமையும் இதற்கு சக பணியாளர்களின் தடங்கல்தான் காரணம் என்பதால் அவர்களை அனுசரித்துப் போவதன் மூலமே உங்கள் விருப்பப்படி இடமாற்றம் பெற்று மகிழ்வீர்கள். மாத மத்தியில் ஒரு முக்கியமான நபரை சந்திப்பீர்கள். வெற்றி உங்களைத் தேடி வர இருக்கிறது. அதற்குச் சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டும். தொழிற்பிரிவினர் முன்னேற்றமான சூழ்நிலையையும் கைநிறைய வருமானத்தையும் பெற்றுக் களிப்படையலாம். எனினும் கூட்டாளிகளிடையே மனவேற்றுமை ஏற்படவும் இடமுண்டு.

கலைஞர்களுக்குக் கைவசம் உள்ள வாய்ப்புகளில் கவனம் செலுத்தி வருவதே போதும், வியாபாரம் மந்த நிலையிலேயே காணப்படும். மாதப் பிற்பகுதியில் சற்று முன்னேற்றத்தைக் காணக்கூடும். மாணவமணிகள்



பிளாஸ்டிக் ஸ்ட்ராவின் நுனியில் இலேசாகக் கீறி, அதில் ஜம்கியை (பெரிய ஜம்கி) பாதி அளவு நுழைத்து பார்க்கில் ஆங்காங்கு மணலில் செருக பார்க்கே பளபளக்கும்...


— என். கோமதி

குறைகாண இயலாத அளவில் படிப்பில் அக்கறை செலுத்தி வருவீர்கள். பெண்கள் குடும்பப் பிரச்னைகளில் செலுத்தி வரும் அக்கறையையும் திறமையையும் குடும்பத்தினர் எல்லாரும் பாராட்டுவார்கள்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவி யிடையே களிப்பு பொங்கும் நிலை உண்டு. ஓரிரு சிறு சச்சரவுகளும் ஏற்பட்டு நிவர்த்தி யாகும். உறவினர் சந்திப்பால் மகிழ்ச்சிகரமான தகவல் ஒன்றைப் பெற முடியும். மறைமுக எதிரிகள் தொல்லை தந்தாலும் தெய்வ அருளால் அவை உங்களைப் பாதிக்காது. வெள்ளை அல்லது நீலக்கல் பதித்த ஆபரணத்தை வாங்கி அணிந்து பெண்கள் மகிழக்கூடும். பெரிய மனிதர்களின் சந்திப்பு உண்டு. வெளியூர்ப் பயணம் உண்டு. ரத்த அழுத்தம் போன்ற தொல்லை ஏற்பட்டு நீங்கும், சகோதர வழியில் செலவு உண்டு.

நீங்கள் துளசி செடி வாங்கி ஆலயங்களில் நடுவது இம்மாதம் நன்மை செய்யும். மேலும் சண்முக கவசம் சொல்லி வருவதும் நன்மை தரும்.

விருச்சிக ராசி :




விசாகம் 4 -ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

எட்டாமிடத்தில் குரு இருந்தாலும், வாக்கு ஸ்தானத்தில் உள்ள அங்காரக பகவானால் விசேஷ நன்மைகள் உண்டு. மேலும் சுக்கிர சஞ்சாரத்தால் உத்தியோகஸ்தர்கள் உங்கள் நீண்ட நாள் எதிர்பார்ப்புகளை எளிதில் நிறைவேற்றிக் கொள்வீர்கள். உங்கள் வாக்கு சாதுர்யத்தால் உயர் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்ற நீங்கள் மறைமுக வருமானத்தையும் பெற்று மகிழ்வீர்கள். எதிர்பாராத சிறிய தொகை உங்களை தேடி வரக்கூடும். சக பணியாளர்களும் ஒத்துழைப்பார்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறுவதற்காகச் செய்யும் முயற்சிகள் மாதப் பிற்பகுதியிலேயே வெற்றி பெறக்கூடும். தொழிற்பிரிவினர் வளர்ச்சி நிலையை எட்டுவதுடன், தொழிலை விரிவுபடுத்தவும் திட்டமிடும் அளவுக்குப் பொருளாதார முன்னேற்றத்தையும் பெற்று மகிழ்வீர்கள்.

மாணவமணிகள் சுறுசுறுப்பாகவும், ஆர்வத்துடனும் இயங்கி, வர இருக்கும் தேர்வில் முன்னணி நிலையை அடைய இப்போதே தயாராவீர்கள். கலைஞர்களுக்கு முயற்சிகளின் பேரில் சாதாரணமான சில வாய்ப்புகளே கிடைக்கக்கூடும். வியாபாரம் மிகச் சிறப்பான முறையில் நடந்து வருவதுடன் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையும் பெருகி வருவது வியாபாரிகளுக்கு மகிழ்ச்சி தரக்கூடும். குடும்ப நிலையிலும், வெளிவட்டாரப் பழக்கங்களிலும் பெண்கள் நற்பெயரையே பெற்று மகிழ்வீர்கள்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே குதூகலம் நிரம்பிக் காணப்படும். சகோதர வழி, உறவினர் ஒத்துழைப்பு திருப்திதராது. இரு குடும்பங்கள் உள்ளவர்களுக்கு ஒன்றில் அமைதியும், ஒன்றில் அமைதியின்மையும் காணப்படும். அரசியல்வாதிகளிடம் விலகியே இருங்கள். வாகன வகையில் செலவுகள் ஏற்படும். சுபநிகழ்ச்சிகளின் தொடர்பாக ஒரு பயணத்தை மேற்கொள்ள நேரும். பெரிய மனிதர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு உண்டு. தர்மப் பணிகளில் நாட்டம் ஏற்படும். பழைய நண்பர்களின் சந்திப்பால் பயனுண்டு.

நீங்கள் சண்முக கவசம் தினமும் படித்து வருவதுடன், முருகப் பெருமானை சிவப்பு மலர்களால் அர்ச்சனை செய்து வணங்கி வருவதும் உங்கள் கவலைகளைப் போக்கி களிப்பை ஏற்படுத்தும்.



தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1 - ஆம் பாதம்.

குரு, செவ்வாய் சஞ்சாரம் அனுகூலமாக இருப்பதால் உங்களது கடின முயற்சிகள் வெற்றியாக முடியக்கூடிய நேரம். உத்தியோகஸ்தர்கள் பாராட்டு சிறிய உயர்வு போன்ற நற்பலன்களைப் பெற்று மகிழலாம். உயர் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவதன் மூலம் வேறு சில அனுகூலங்களையும் பெறக் கூடும். தொழிற்பிரிவினர் சிறப்பான முன்னேற்றத்தையும், திருப்தியான வருவாயையும்

சீஸ், பனீர் போன்ற பால் பண்டங்கள் கேரட் துருவலில் துருவும் பொழுது கண்களில் பாதி துகள்கள் ஒட்டிக்கொண்டு வேஸ்ட்டாகி விடுகிறது. இதைத் தவிர்க்க, துருவும் முன்பு, துருவலின் கண்களின் உட்புறமும், வெளிப்புறமும் ரீபைண்ட் ஆயிலை கொஞ்சம் தடவி விட்டு, துருவினால் ஒட்டிக் கொள்ளாமல் சுத்தமாகத் துருவ வரும்.

– ஆர். சித்ரா



பெறக்கூடும். எனினும் கூட்டுத் தொழில் புரிவோருக்குக் கூட்டாளிகளின் மனக்கசப்பைச் சரிகட்ட வேண்டிய நிலை உண்டு. மாணவமணிகள் கல்வியில் முன்னேற்றமான சூழ்நிலையை அமைத்துக் கொள்ள ஆயத்த மாவீர்கள்.

வியாபாரிகள் திருப்தியடையும் அளவுக்கு வியாபாரம் குறைந்தபட்ச லாபத்தைத் தரக் கூடிய அளவில் நடைபெற்று வரும். கலைஞர்களுக்கு ஓரிரு புதிய வாய்ப்புகள் அமையுமென்றாலும் வருமான முன்னேற்றம் காணப்பட வழியில்லை. பெண்களுக்கு மறைமுகச் சேமிப்பு பெருகுவதும், குடும்ப நிம்மதியும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். பொன் நகைகள் சேரும் நிலை உண்டு.

குடும்ப நிலையில் கணவன் – மனைவியிடையே கருத்து ஒற்றுமை காணப்படுவதால் கவலைக்கு இடமில்லை. உடல்நலத்தில் கவனமும், ஓய்வும் தேவை. பயணம் ஒன்றைத் திட்டமிட்டபடி மேற்கொள்ள இயலாமல் தள்ளிப் போட நேரும். பணம் கொடுக்கல் வாங்கலில் சிக்கல் ஏற்படக்கூடும். காதல் முயற்சிகள் திருமணத்தில் முடியும் வாய்ப்பு சிலருக்கு உண்டு. நண்பர்கள் தக்க சமயத்தில் உதவுவார்கள்.

நீங்கள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இராகு, கேதுவுக்கு ப்ரீதியாக இராகு காலத்தில் துர்காதேவிக்கு தீபமேற்றி வணங்கி வருவதன் மூலம் உங்கள் சிரமங்கள் யாவும் அகலும். செழிப்பு கூடும்.



மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4 – ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 – ஆம் பாதங்கள்.

தற்போது சுக்கிர, சூரிய சஞ்சாரம் அனுகூலமாக இல்லை. பிரச்னைகளை கவனமாகக் கையாளவும். எதிலும் முன்னெச்சரிக்கையாக செயல்படுங்கள். உத்தியோகஸ்தர்கள் உங்கள் அலுவல் தொடர்பான விஷயமாக சில கோரிக்கைகளை முன்வைத்து முயற்சி செய்வீர்களாயினும் சில தடங்கல்களுக்குப் பின்னர் கடுமையான முயற்சிகளாலேயே வெற்றி பெறக்கூடும். சக பணியாளர்களை அனுசரித்துச் செல்ல முயலுவது அவசியம். தொழிற்பிரிவினர் ஓரளவு வளர்ச்சி நிலையை எட்டுவதுடன், வருமான உயர்வையும் பெற்று மகிழ்வீர்கள். கலைஞர்கள புதிய வாய்ப்புகளைத் தேட வேண்டிய அவசியமில்லை. கைவசம் உள்ளவற்றில் கவனம் செலுத்தினாலே போதுமானது.

மாணவமணிகள் பலரும் பாராட்டும் அளவுக்குப் பாடங்களில் ஆழ்ந்த அக்கறை செலுத்தி வருவீர்கள். வியாபாரிகள் திருப்தியடையக்கூடிய அளவுக்குச் சிறப்பான முறையில் வியாபாரம் நடைபெற்று வரும். குடும்பத்தில் ஓரிரு குழப்பங்களைச் சரிக்கட்டி நற்பெயர் பெறக்கூடிய பெண்கள், வெளிவட்டாரத்தினராலும் பாராட்டப் பெறுவீர்கள்.

குடும்ப நிலையில் கணவன் – மனைவியினிடையே கனிவான போக்கே காணப்பட்டு வரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் தள்ளிப் போக நேரும். அரசியல்வாதிகளின் தொடர்பால் அனுகூலம் ஏற்படக்கூடிய வாய்ப்புண்டு. தாய் வழி உறவினர் உடல்நல பாதிப்பை அடைய நேரும். கவனம் தேவை. நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். இரு குடும்பஸ்தர்கள் ஏதேனும் ஒன்றில் அதிருப்தி நிலையைக் காண்பீர்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகளில் பணத்தைச் செலவிடாதீர்கள். வழக்குகள் இருப்போர் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இப்போது தொல்லை தராது.

நீங்கள் பிரதோஷ நாளில் சிவாலயத்துக்குச் சென்று சிவபெருமானுக்குத் தேவையான அபிஷேகப் பொருள்களை வாங்கித் தந்து சிவ தரிசனம் பெற்று வருவதன் மூலம் உங்கள் பிரச்சனைகள் அகலும், செளபாக்யம் உண்டாகும்.

கும்ப ராசி :



அவிட்டம் 3, 4 –ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 – ஆம் பாதங்கள்

தற்போது இராசிநாதன் சனி சஞ்சாரமும், அஷ்டமாதிபதி புத சஞ்சார


மும் அனுகூலமாக இல்லை. ரகசியங்களை வெளியிட வேண்டாம். குடும்பத்தில் வரும் சிறு குழப்பங்களை பெரிதுபடுத்தாதீர்கள். உங்கள் வழக்கமான படபடப்பான குணத்தை விட்டு நிதானத்தைச் சற்று கையாளுங்கள். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்ற அலுவலக விஷயங்களில் எளிதாக நன்மைகளைப் பெற முடியாது. சில தடங்கல்களைத் தாண்டியே வெற்றி காண முடியும். தொழிற்பிரிவினர் தொழிலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்வீர்கள். கலைப்பிரிவினர், புதிதாக கிடைக்கக்கூடிய வாய்ப்புகளின் மூலம் புகழும் பெருமையும் அடைவீர்கள். திரைவசனகர்த்தா இசைப் பாடலாசிரியர்கள் போன்றோர் கூடுதல் வாய்ப்பு பெறக்கூடும்.

மாணவமணிகள் சுறுசுறுப்பாக இயங்கி பாடங்களில் தீவிரக் கவனம் செலுத்தி வருவீர்கள். வியாபாரம் சுமாராகக் காணப்பட்டாலும், வாடிக்கையாளர்களிடமிருந்து சில பாக்கிகள் வசூலாவது வியாபாரிகளுக்கு மகிழ்ச்சி தரும். குடும்பத்தில் காரணமின்றிச் சில சச்சரவுகள் தோன்றுவதைச் சமாளித்து பெண்கள் குடும்ப நிம்மதியைக் காப்பாற்றுவீர்கள்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே கலகலப்பான போக்கு காணப்பட்டாலும், சில சலசலப்புகளும் எழக்கூடும். பெரிய மனிதர்களின் சந்திப்பு உண்டு. பண நடமாட்டம் சீராக இருந்து வரும். எழுத்து, பத்திரிகைத் துறையினர் ஏற்றமான நிலையைப் பெற முடியும். அரசியல்வாதிகளின் நட்பு பலன் தரும். தந்தை, தாய் வழியில் துக்கச் செய்தியைக் கேட்க நேரும். திடீர்ப் பயணம் உண்டு. குடும்ப விஷயங்களில் மிகவும் சாமர்த்தியமாகச் செயல்படுவது அவசியம். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடைபெறலாம்.

சுண்டல்களை வித்தியாசமாகச் செய்ய சிறிது ஓமப் பொடியை மேலாகத் தூவவும். பேல்பூரி போல சுவையாக இருக்கும்.

— உஷா



நீங்கள் ஆலயங்களில் நவக்கிரக சந்நிதியிலுள்ள இராகு பகவானுக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் அர்ச்சனை செய்து வணங்கி வருவதன் மூலம் உங்கள் கவலைகள் விலகும், களிப்பு பெருகிக் காணப்படும்.

மீனம் ராசி :



பூரட்டாதி 4 - ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

தற்போது பத்தாமிடத்தில் உள்ள செவ்வாய், கேதுவால் நன்மை அடைய முடியும். கடந்த கால பிரச்னைகள் தற்போது தீரும். மேலும் உங்கள் முயற்சிகள் அனுகூலமாக மாறக்கூடிய சூழ்நிலை வருவதற்கு சந்தர்ப்பம் அமைகிறது. பணம் கொடுக்கல் வாங்கல் சற்று திருப்தியாக அமையும். அரசாங்க வழக்குகள் முக்கிய திருப்பத்தை சந்திக்கப் போகிறது. உத்தியோகஸ்தர்கள் அலுவலக விஷயங்கள் எதுவாயினும் உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வருமானங்கள் மகிழ்ச்சி தரும். தொழிற்பிரிவினர் சிறிது தேக்க நிலையையே சந்திக்க நேரும். கூட்டுத் தொழில் புரிவோர் கவனமாகச் செயல்படுவது அவசியம். கலைஞர்களுக்கு முன்னணி நிறுவனங்களிலிருந்து சில வாய்ப்புகள் தேடி வரலாம்.

மாணவமணிகள் படிப்பில் மட்டுமின்றி, போட்டி பந்தயங்களிலும் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். வியாபாரம் சிறப்பாக நடைபெறுவதன் காரணமாக வியாபாரிகள் மகிழ்ச்சி கொள்ளத் தடையிராது. குடும்ப நிகழ்ச்சிகள் குழப்பமின்றி நடந்து வருவதன் காரணமாக பெண்களுக்குப் பிரச்னை எதுவும் எழ வாய்ப்பின்றி நிம்மதி கிடைத்து வரும்.

குடும்ப நிலையில் கணவன் - மனைவியிடையே இனிய நல்லுறவு இருந்து வரும். கடன் கொடுத்தவர்களிடமிருந்து உங்களுக்கு வர வேண்டிய பணம் உரிய காலத்தில் வந்து சேர்வது கடினம். அரசியல்வாதிகளை நம்பி புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடாதீர்கள். பண நெருக்கடி அவ்வப்போது தோன்றுமாயினும் கடைசி நேரத்தில் எப்படியாவது பணம் வந்து சேர்ந்து விடும். பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். உதவியும் புரிவார்கள். தூரத்திலிருந்து நல்ல செய்தி ஒன்று தேடி வரும். வழக்குகள் இருப்போர் இப்போது முடிய வேண்டும் என எதிர்பார்க்காதீர்கள். நீடிப்பதே நல்லது.


நீங்கள் தினமும் குருபகவான் காயத்ரியை 18 முறை சொல்லி, தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவதன் மூலம் உங்கள் துயரங்கள் மறையும், இனிய நல்வாழ்வு மலரும்.

— ஸ்வாமி கண்ணன்பட்டாச்சார்யா

மீண்டும் உங்கள் மனம் ஃபட்டர்பிளையை நாட இதோ மற்றுமொரு காரணம்

சேமிப்பீர்

ரூ.715 வரை



Stainless Steel ATB-Pan

Butterfly
Steel Mate

12லிட். அலுமினியம் பிரஷர் குக்கர்	~~Rs.1478/-~~
SS ATB SR மூடியுடைய பான்	~~Rs.1190/-~~
	~~Rs.2668/-~~
சூப்பர் சேமிப்பு ஆஃபரில்	Rs.1950/-
சூப்பர் சேமிப்பு	Rs. 715/-

Butterfly®
Good for a lifetime


முந்துங்கள்! உண்மையான சலுகை குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே!

Gangadharam Appliances Ltd., JVL Plaza, 4th Floor, 501 Anna Salai, Chennai - 600 018 - Ph: 4345313, 4346385. Fax: 4343522 E-mail: gal@butterflyindia.com Visit us at www.butterflyindia.com • DISTRIBUTORS : Butterfly Home Appliances, 272, Mount Road, Teynampet, Chennai - 600 018. Ph: 4345199, 4344612 • Butterfly Home Appliances, Sindur shopping Centre, Block No x-42, ShopNo. B-14, 2nd Avenure, Anna Nagar West, Chennai - 600 040. Ph: 6260801 • Pee Pee Appliances Pvt Ltd.,378, Mint street, Chennai 600 079. Ph: 5229076, 5229161, 5224906 • Prakash Electronics, 87, Gandhi Road, Kancheepuram - 631 501. Ph: 22626, 23461. • Kanchan Agency, No. 45 Dhanappa Mudali Street, 1st Floor, P.B.No.228, Madurai - 625 001. Ph: 747270 • Butterfly Distributors & Traders 42, Vysial Street, Coimbatore - 641 001. Ph: 397179, 392694, 394981 • Thulasi Agencies, No. 11, K.V.S. Chetty Street, Vellore - 632 004. Ph: 227734 • Shivas, Bombay Dyeing Show Room, 372, C.S.I Complex, Brough Road, Erode -1 Ph: 258646 • Century Marketing, No. 61, Perumal West Car Street, Tirunelveli - 627 001. Ph: 3378901 • Sakuntharama Vessels Corporation, No.1 , Daily Market, Block No 19, Main Bazar, Neyveli - 607803. Ph:352612 • Sri Saravana Enterprises, 13, Someswar Sannathi, 2nd Floor, Kumbakonam - 612 001. Ph 423294 • Butterfly Distributors (V.C.R) 8-B, Second Agraharam, Salem - 636 001. Ph: 260205, 262393 • Sri Poomagal Agencies, 56-B, Rangar Sannathi Street Namakkal - 637 001. Ph: 31383, 32383, 31883

Available at all leading stores

நியூஸ் சாலட்!


உலகப் போர் மூளுமா?



• தரையை நோக்கி 'டிவின் டவர்'

✈ உலகிலேயே முதன் முதலாக புதிய முறையில் மிக பயங்கரமான தீவிரவாத தாக்கு தலுக்கு உள்ளானது அமெரிக்கா. செப்டெம்பர் மாதம் 11ம் தேதி காலை 8.45 மணிக்கு கடத்தப்பட்ட இரு உள்நாட்டு அமெரிக்க ஏர் லைன்ஸ் விமானம் மூலம் நியூ யார்க்கின் "டிவின் டவரை" பத்து நிமிட இடைவெளியில் நேரடியாக மோதி இடித்துச் சிதறச் செய்தனர். இதே போல் வாஷிங்டனில் "பென்டகன்" ராணுவப் பகுதியை, கடத்தப் பட்ட இன்னொரு விமானம் மூலம் சேதமடைய வைத்திருக் கிறது தீவிரவாத அமைப்பு.

பென்சில்வேனியா மாவட்டத்தின் அருகே பறந்து கொண் டிருந்த மற்றொரு கடத்தப்பட்ட உள்ளூர் விமானம், "பிட்ஸ்பர்க்" அருகே வெடித்துச் சிதறியது.



• அடுத்தடுத்து தாக்கப்பட்ட காட்சி

உலக உளவுத் துறையின் தலைசிறந்த மையம் எனும் பெருமை கொண்ட மையமான பென்டகன் ராணுவப் பகுதி வெகுவாக சேதமடைந்திருக்கிறது. 110 மாடிகள் உள்ள "டிவின் டவரில்தான்" சர்வதேச வர்த்தக மையம் செயல்பட்டு வருகிறது. இந்தக் கட்டடத்தில் 50,000 ஊழியர்கள் வேலை செய்து வருகிறார்கள். விமான திடீர் தாக்குதலால் 10,000த்திற்கும் மேற்பட்டோர் இறந்திருப்பார்கள் என்று அமெரிக்கா அஞ்சுகிறது.

இத்தனை மோசமான நாச வேலை செய்த தீவிர அமைப் பையும் அந்த அமைப்பிற்கு ஆதரவு தந்த நாட்டையும் தண்டிப் போம் என போர் பிரகடனம் செய்துள்ளார் அமெரிக்க ஜனாதி பதி ஜார்ஜ் புஷ். அமெரிக்க உளவுத் துறை கணிப்புப்படி உலகத் தீவிரவாதி, ஒஸாமா பின் லேடனின் சதியாக இந்தத் தாக்குதல் இருக்கலாம் என்று தெரிகிறது.

பல நாடுகளும் அமெரிக்காவிற்கு எதிரான இந்த பயங்கர வாதத்தைக் கண்டித்துள்ளன. இந்தியாவும் தன் ஆதரவுக் கரத்தை நீட்டியுள்ளது. போர் மேகங்கள் சூழ்ந்துள்ள இந் நிலையில் மூன்றாம் உலகப் போர் மூண்டுவிடுமோ எனும் அச்சம் அனை வரிடமும் உள்ளது.

ஜெயலலிதா பதவி விலகினார்

✈ டான்சி நிலபேர ஊழல் மற்றும் பிள சன்ட் ஸ்டே ஓட்டல் வழக்குகளில் முதல்வர் ஜெயலலிதாவிற்கு தனி கோர்ட் அளித்த சிறைத் தண்டனையால் தேர்தலில் போட்டி யிட தகுதியிழந்த பிறகும் தேர்தலில் அ.தி.மு.க. விற்குக் கிடைத்த அமோக வெற்றியால் அப்போதைய கவர்னர் பாத்திமா பீவியால் முதலமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

குற்றம்சாட்டப்பட்ட ஒருவரை முதல



• ஒஸாமா பின்லேடன்

மைச்சராக்கியது குற்றம் என்று சுப்ரீம் கோர்ட்டில் ஆறு வக்கீல்கள் பொதுநல மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த வழக்கை உச்சநீதி மன்றத்தின் நீதிபதிகள், பருக்கா தலைமையில் ஐந்து பேர் அடங்கிய அரசியல் சட்ட பெஞ்ச் ஆறு நாட்கள் பரபரப்பாக விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கியது.



• செல்வி ஜெயலலிதா

ஊழல் வழக்கில் மூன்று ஆண்டுகள் தண்டனை பெற்று அதனால், தேர்தலில் போட்டியிடும் தகுதியை இழந்த ஜெயலலிதா முதல்வராக நியமிக்கப்பட்டது அரசியல் சட்ட விதிமுறைகளை மீறியது. அவர் பதவியேற்ற நாளில் இருந்தே அவரது நியமனம் ரத்தாகிறது எனவும், மக்கள் தீர்ப்பு அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதே என்றும் நீதிபதிகள் அறிவித்தனர்.



• மூப்பனார்

இதனைத் தொடர்ந்து செல்வி ஜெயலலிதா, தமிழகத்தின் புதிய முதல்வராக பெரியகுளம் தொகுதி எம்.எல்.ஏ. திரு ஓ. பன்னீர்செல்வத்தை நியமித்தார். அமைச்சர்களும் மீண்டும் பதவி பிரமாணம் எடுத்துக் கொண்டனர். புதிய முதல்வர் தலைமையில் அதி.மு.க. ஆட்சி தொடர்கிறது.

டான்சி மற்றும் பிளசன்ட் ஸ்டே ஹோட்டல் வழக்குகளை சென்னை ஹை கோர்ட்டில் புதிய நீதிபதியின் கீழ் அக்டோபர் 1ம் தேதிக்கு மேல் மீண்டும் விசாரணை தொடங்கவிருக்கிறது.

✈ தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் அவர்கள் தனது 76வது வயதில் காலமானார். காமராஜரின் சீடரான இவர் இந்திரா காந்தி ஆட்சி செய்த காலத்திலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் முக்கியத் தலைவராக இருந்து வந்தார். "கிங் மேக்கர்" என்று போற்றப்பட்ட இவர் சிறந்த காங்கிரஸ் கட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து தந்திருக்கிறார். ஆனால் கடைசி வரை அவர் நாட்டை ஆளும் ராஜாவாகாமல் காலமாகிவிட்டார். 1996ல் தேசிய காங்கிரஸ் தலைவர் நரசிம்மராவ் அ.தி.மு.க.வோடு தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டார் என்ற கருத்து வேறுபாட்டால் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைத் தனியாகத் தொடங்கினார். ஆனால் காலத்தின் கட்டாயத்தால் அவரே கடந்த தேர்தலில் அதி.மு.க. வுடன் கூட்டணி அமைத்தார். பல கட்சித் தலைவர்களும் திரு. மூப்பனாரின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்தனர்.



• பால்ய விவாஹம்

பயப்படும் காஷ்மீர் பெண்கள்

✈ ஜம்மு காஷ்மீரில் லக்ஷர்-இ-தோய்பா என்ற தீவிரவாத அமைப்பு, தாலிபான் ஸ்டைலில் காஷ்மீர் முஸ்லீம் பெண்கள் கண்டிப்பாக "பர்கா" போட்டுக் கொண்டு வெளியே இறங்க வேண்டும் என்றும் பஸ்ஸில் ஆண்களுக்கு அடுத்து உட்காரக் கூடாது என்றும் மீறினால் காலுக்குக் கீழ் சுடப்படுவார்கள் என்றும் அறிக்கை விட்டுள்ளது. அதே போல் முஸ்லீம் அல்லாத பெண்கள் நெற்றித் திலகமோ (சிந்தூர்) இல்லை காவி கலரில் துப்பட்டாவை தலையைச் சுற்றி அணிந்து கொண்டோ வர வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள். வீட்டிலிருந்து வெளியே இறங்கவே பயப்படுகிறார்கள் காஷ்மீர் பெண்கள்.



அம்மா மடியில் கல்யாணம்!

✈ ராஜஸ்தான் ஜோத்பூர் மாவட்டத்தில் உள்ள பாலி கிராமத்தில் வாழும் தேவாஸி இனத்தினர் கணேஷ் சதுர்த்தி அன்று 80 சிறுமிகளுக்கு பொது திருமணம் வைத்திருக்கிறார்கள். பல சிறுமிகளுக்கு அம்மா'வின் மடியில் தூங்கிய வண்ணம் கல்யாணம் செய்து வைக்கப்பட்டது மிக வேதனைக்குரிய விஷயமாகும். இதுவரை பெற்றோர் மீது போலீஸ் நடவடிக்கை எடுக்காதது குறித்து பத்திரிகை வட்டாரங்கள் ஆச்சரியப்படுகின்றன. இதில் விசேஷம் என்னவென்றால் இந்தக் கல்யாண "பாராத்" (மாப்பிள்ளை ஊர்வலம்) அந்த ஊர் போலீஸ் ஸ்டேஷன் வழியாகத்தான் சென்றதாம். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களாம் போலீஸ் ஊழியர்கள்.

தங்கையை வென்ற தமக்கை!

✈ யு.எஸ். ஓபன் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ் தன் தங்கை செரினா வில்லியம்ஸை 6–2, 6–4 என்ற கணக்கில் தோற்கடித்தார்!

✈ இஸ்ரேல், பாலஸ்தீன் நாடுகளுக்கிடையே நடந்து வரும் முடிவில்லா சண்டை நீடித்துக் கொண்டிருந்தாலும் அங்கே வாழும் மனிதர்கள் இன்னும் மனித தன்மையை இழக்காமல் இருப்பது மிகவும் ஆச்சரியப்பட வேண்டிய ஒன்று. "மாஜென் ஜீலானி" என்ற 33 வயது பாலஸ் தீனிய மருந்துக் கடைக்காரர் ஒரு யூதரால் தலையில் சுடப்பட்டு இறந்த போது அவருடைய தந்தை எவ் பிள்ளையின் உடல் பாகத்தில் இன்னொரு உயிர் பிழைத்துக் கொள்ள வழியிருந்தால், தான் அதற்குச் சம்மதிப்பதாக கூறியிருக்கிறார். தானம் பெறப் போகிறவர்கள் எந்த மதத்தினராக இருந்தாலும் பரவாயில்லை. (ஏன் யூதர்களாக இருந்தாலும்) என்று சொன்னதின் பேரில் இஸ்ரேல் மருத்துவமனையில் 4 யூதர்களுக்கு இவருடைய உடல் பாகங்கள் பொருத்தப்பட்டன. இதுதான் பாலஸ்தீனியரால் இஸ்ரேலியருக்குக் கொடுக்கப்பட்ட முதல் உடல் தானமாம்.



• பட்டினி கொடுமை!

✈ 'திரு ஜங்கார்க் சிங் ஷ்யாம்' மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு புகழ்பெற்ற ஆதிவாசிக் கலைஞர். இவருடைய ஓவியங்கள் ரூப்பங்கர் மியூஸியம் மற்றும் போபால் விதான் பவனை அலங்கரிக்கின்றன. இந்திய ஜப்பான் கலாசார பரிமாற்றம் பேரில் டோக்கியோவில் உள்ள "நிய்காடா மதிலா" ம்யூஸியத்தில் ஓவியங்கள் வரைவதற்கு இவர் அழைத்துச் செல்லப்பட்டாராம். இதற்காக இவருக்கு மாதம் 12,000 ரூபாய்தான் தரப்பட்டிருக்கிறது. இந்தியா திரும்பிப் போக பல தடவை அனுமதி கேட்டபோது மறுக்கப்பட்டதால் விரக்தியடைந்து தற்கொலை செய்து கொண்டு விட்டார். நல்ல ஓவிய கலைஞரை இந்தியா இழந்து விட்டது. பழங்காலப் பொருட்கள் மற்றும் ஓவியங்களைப் பாதுகாப்பதைப் போல் கலைஞர்களையும் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமையல்லவா?

✈ ராமநாதபுரம் ஜில்லா ஏர்வாடி கிராமத்திற்கு அருகில் ஒரு தனியார் மனநோயாளி சிகிச்சை காப்பகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 25 மனநோயாளிகள் கொடூரமாகத் தீக்கிரையாகி விட்டனர். கூரை வேயப்பட்ட காப்பகமானதாலும், மன நோயாளிகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தாலும் தப்ப முடியாமல் தீயில் கருகி இறந்தனர். இதில் மிகுந்த வேதனையான விஷயம் இவர்களை காப்பகத்தில் சேர்த்த குடும்பத்தினர் பொய் விலாசம் தந்திருந்ததாகவும், இறந்தவர்களின் குடும்பத்திற்கு நஷ்டஈடாக 50,000 ரூபாய் தருவதாக அரசு தெரிவித்தவுடன் தாங்கள் தான் நோயாளிகளின் உண்மையான சுற்றத்தினர் என்று ஓடி வந்ததும்தான் என்று கூறுகிறார்கள்.



• உடல் தானம்


✈ ரோலண்ட் பெரி எழுதிய "பிராட்மேன்ஸ் பெஸ்ட்" என்ற புத்தகத்தை ஆகஸ்ட் 13-ம் தேதி சிட்னி மற்றும் லண்டனில் வெளியிட்டிருக்கிறார்கள். கிரிக்கெட் சகாப்தத்திலேயே புகழ்பெற்ற பேட்டிங் அரசர் என்று அழைக்கப்படும் "சர் டோனால்ட் பிராட்மேன்" என்ற கிரிக்கெட் வீரரைப் பற்றிய புத்தகம்தான் இது. அந்தப் புத்தகத்தில் "பிராட்மேன் உலக IX டீம்" என்ற தன்னுடைய கனவு அணியில் இந்தியாவின் பேட்டிங் மாஸ்ட்ரோ என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர்

அன்பே சிவம்! ஓம் நமசிவாய சிவமே செல்வம்!

அகிலம் போற்றும் அன்னபூரணி க்ஷேத்ரமான காசியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் மாதாமாதம் அமாவாசை அன்று புனித க்ஷேத்ரமான காசியில் அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...



ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்டின் மூன்றாம் ஆண்டில் தொடர்ந்து அன்னதான சேவை!

பேரன்புடையீர்! வணக்கம். தங்களின் வேண்டுதல்கள் நிறைவேறவும், மங்கலம் உண்டாகவும் அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி அன்னை அருள்புரியட்டும்.

"பிரபஞ்சம் முழுமைக்கும் உணவுபடைக்கும் தாயாக விளங்கும் ஸ்ரீஅன்னபூரணி மாதா கொலுவீற்றிருக்கும் காசியில் மாதாமாதம் அமாவாசை அன்று அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆன்மிக அன்பர்கள் அனைவராலும் காசியில் அன்னதானமிட முடியும் என்ற இறைசிந்தனையோடு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" என்ற தனி அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இந்த அன்னதான இறைபணிக்கு தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி "இறையருளால் காசியில் ஏழைகளுக்கும், அடியார்களுக்கும் அன்னம் அளிப்பதில் நாமும் ஓரளவேனும் பங்குகொண்டோம்" என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

- ★ தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ★ ரூ.500/ - அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.1000/ - அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.5000/ - அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இருபது ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்."

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமண நாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் மேலும் தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு கங்கை தீர்த்தத்துடன் கூடிய காசி சொம்பும் காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மிக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்து தொடர்ந்து இருபது வருடங்கள் பிரசாதமும், "ஆன்மீகம்" மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்நிதியின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மிக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத் கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

காசி, கயா, பிரயாகை (திரிவேணி சங்கமம்) ஆகிய இம்மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் புண்ணிய காரியங்கள், பித்ரு காரியங்கள், பிண்டம் போடுதல், தர்மங்கள், சிராத்தம், திவசம், தர்ப்பணம் போன்றவற்றை அவரவர் விருப்பப்படி அன்னதானக் கைங்கர்ய அன்பர்களுக்கு செய்து தரப்படும்.

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்டப்பிரதானம் மற்றும் தர்ப்பணம் காசியிலும், கயாவிலும், பிரயாகையிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்" மூலம் செய்யப்படுகிறது.

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 1000/- அனுப்பும்போது யாருக்கு சிராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். பிண்ட பிரதானத்திற்காக ரூ.5000/ = அனுப்பும் ஆன்மிக அன்பர்கள் சார்பாக தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை இருபது ஆண்டுகளுக்கு மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் எந்த இடத்தில்யாருக்குச்சிராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுக்கு சிராத்தம் செய்யப்படும். பித்ரு காரியங்களுக்குப் பணம் அனுப்பும் ஆன்மிக அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான 'அக்ஷய வடத்தின்' படமும், கயாவில் உள்ள விஷ்ணு பாதத்தின் படமும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் சிராத்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு அக்ஷய வடத்தில் (ஆலமரம்) பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூட்டமே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

அன்னதான சேவையில் ஈடுபடும் ஆன்மிக அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque/D.D/M.O மூலம் (Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கலியுகத்தில் அன்னதான சமுதாயப்பணி மகத்தான தெய்வீகப்பணியாக காசி திருத்தலத்தில் தழைத்திட உதவுமாறு அன்புகூர்ந்து வேண்டுகிறோம்.

Cheque/D.D./M.O அனுப்ப வேண்டிய முகவரி:

ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street, (Opp: Sri Kapaleeswarar Temple), Mylapore, Chennai - 600 004.

Tel: 4959302 Fax: (044) 4616311 E-mail:siva siva@vsnl.net

காசியில் அன்னதானமிடுவது வாழ்வில் பெரும் புண்ணியத்தைக் கொடுக்கும்!

பெயர் இடம்பெற்றுள்ளதாம். உலகப் புகழ் பெற்ற கிரிக்கெட் வீரர்களுடன் தன்னுடைய பெயரையும் பிராட்மேன் சேர்த்ததைப் பற்றிப் பெருமையுடன் மகிழ்ச்சி தெரிவித் திருக்கிறார் சச்சின் டெண்டுல்கர்.

✈ உலகத்திலேயே அதிகமாக காற்றில் (நச்சு) மாசுள்ள நகரமாக டெல்லி கணிக்கப் பட்டிருக்கிறது. அதனால் டெல்லியில் ஓடும் வாகனங்கள் பெட்ரோலைத் தவிர்த்து அழுத் தப்பட்ட இயற்கை எரிவாயுவான சிஎன்ஜி வாயுவை மாத்திரம் உபயோகப்படுத்த வேண் டும் என்று டெல்லி உச்சநீதிமன்றம் உத்தர விட்டது.

அதன் பேரில் வாகனங்களில் சில மாறுதல் களைச் செய்து இயற்கை எரிவாயுவிற்கு மாற்றி வருகின்றனர் டெல்லிவாசிகள். ஆனால் இன்று இயற்கை எரிவாயு சப்ளையில் பற்றாக்குறை இருப்பதால் குறிப்பிட்ட நேரத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு பேருந்துகள் வருவதில்லை என்று மாணவ மாணவிகள் கண்டன ஊர் வலம் நடத்தினர். இந்த வழக்கின் போது இயற்கை எரிவாயு சப்ளை அதிகமாக இருப்ப தாகவும் ஆனால் அது சரியாக விநியோகிக்கப் படவில்லை என்று பெட்ரோலிய அமைச்சகம் கூறுவதாக சுப்ரீம் கோர்ட் கருத்து தெரிவித் திருக்கிறது. அடுத்த விசாரணை வருவதற்குள் தேக்கநிலை சரியாக்கப்பட வேண்டும் என்று கோர்ட் கூறியிருக்கிறது.

தொகுப்பு : **சியாமளா சுவாமிநாதன்**



• சாராய ஒழிப்பு

கொலை செய்ய .காம்!

✈ இப்போது இன்டர்நெட் மூலமாக கொலை செய்வதற்குக் கூட விளம்பரம் செய்கிறார் கள்! தாவூத் இப்ராஹிம்.காம் என்ற இணையத்தின் விளம் பரம் இதுதான் : "யாரையாவது தீர்த்துக் கட்ட வேண்டுமா? ஆள் சாதாரணமானவராக இருந்தால் தலையின் விலை ரூ. 2 லட்சம்தான். அரசியல் வாதிக்கு 50 லட்சம்! வேலைக்கு ஆள் தேவை என்ற விளம்பரம் வேறு. மும்பை மற்றும் கோல் கத்தா போலீஸ், இது வேடிக் கையா சீரியஸா என்று தெரி யாமல் திண்டாடிக் கொண் டிருப்பதாகக் கேள்வி!

– வஸுந்தா முரளி

தமிழகப் பெண்ணுக்கு விருது

✈ கள்ளச் சாராயத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்திய தமிழகத்திலுள்ள திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. யசோதாவுக்கு, கௌரவம் மிக்க நீர்ஜா பனோட் விருது, சண்டிகர் மாநில நிர்வாக ஆலோசகர் நீருந்தாவால் சண்டிகரில் வழங் கப்பட்டது. "கிராம மகளிர் முன்னணி" என்ற அமைப்பின் தலைவர் யசோதா. இந்த அமைப்பு இப் பகுதியில் கள்ளச் சாராயத்தை எதிர்த்துப் போராடி வருகிறது. கள்ளச் சாராய வியாபாரிகளின் கோபத்துக்கு ஆளானதன் காரணமாக யசோதாவின் மகளும் சகோதரியும் கடந்த ஆண்டு டிசம்பர் 6ம் தேதி கொல்லப் பட்டனர். இதன் பின்னும் இவர் உறுதி தளரா மல் போராடி வருகிறார்.

இனிய அமைச்சர்

✈ மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் திருமதி. சுஷ்மா ஸ்வராஜ், குருவா யூர் கோவிலுக்கு விஜயம் செய்து துலாபாரம் செலுத்தினார். அவர் தன் எடைக்கு எடை கொடுத்த பொருள் சர்க்கரை. 65 கிலோ சர்க் கரைக்காக அவர் கோயிலில் செலுத்திய பணம் ரூ 781.

– சியாமளா ராஜகோபால்.

• 'துலாபாரம்'



✈ ஒரிசாவில் பட்டினிச் சாவு அதிகரித்து வருகிறது. காசிபூர் வட்டத்தில் இதுவரை பத்தொன்பது பேர் இறந்துள்ள னர். போதிய உணவு கிடைக்கா மல் அங்குள்ள மலைவாழ் மக் கள் மாங்கொட்டையை கஞ்சி யாக்கி உணவாக உட்கொள்கின் றனர். சமீப காலமாக புயல், வெள்ளம், வறட்சி என்று மாறி, மாறி இயற்கையின் சீற்றத்தால் ஒரிசாவில் கடும் வறட்சி நிலவி வருகிறது. இதனைத் தடுக்க ஒரிசா அரசு போதிய நடவடிக் கைகள் மேற்கொள்ளவில்லை என்று தற்போது எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. ஆனால் இந்தச் சாவிற்கு மக்களின் சுகா தாரமற்ற நிலைதான் காரணம் என்று அரசு கூறி வருகிறது.



பொன்னூர் மாரியம்மன்

பெங்களூர், ஒக்கேனக்கல் தேசிய நெடுஞ்சாலையில் பொன்னூர் மாரியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இத் திருக்கோவில் மிகவும் பழமை வாய்ந்த ஸ்தலமாகக் கருதப்படுகிறது. இவ்வழி செல்லும் வாகன ஓட்டிகளுக்குக் காவல் தெய்வமாக விளங்குகிறாள் என்கின்றனர்.

பண்டைய காலத்தில் கன்னடர்கள் ஆட்சிக்கு உட்பட்ட இப் பகுதிகளில் மைசூர் சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த 'மொரசு' நாட்டு பூர்விக மக்கள் இவ்வூரில் குடியேறி வளமோடு வாழ்ந்து வந்ததாக வரலாறு கூறுகிறது. பிறகு கால ஓட்டத்தில் கன்னடர்களும் தமிழர்களும் குடியேறி வாழ ஆரம்பித்தனர்.

அப்போது இங்குள்ள மக்களுக்கு வழிபடவும், சுபிட்சமுடன் கும்பிடும் தெய்வமாகவும் சிறப்புப் பெற்றவள் தான் இந்தப் "பொன்னூர் மாரியம்மன்."

செல்வச் செழிப்பையும், வளத்தையும் அள்ளிக் கொடுத்து பொன்னாங்காட்டியூர் மக்களுக்கு வழிகாட்டும் தெய்வமாக இருந்து அருள் பாலித்து வந்த இத்திருத்தலம் திப்புசுல்தான் ஆட்சிக் காலத்தில் கொள்ளையடிக்கப்பட்டு முற்றிலுமாக தரைமட்டமாக்கப்பட்டதாக ஸ்தல வரலாறு கூறுகிறது.

அதன் பிறகு அடர்ந்த தோப்பாகவும், வனவிலங்குகள் நிறைந்த காடாகவும் மாறி விட்ட இந்தப் பகுதிகளில் விசேஷ காலங்களில் மட்டும் இங்குள்ள அம்மனுக்கும், வீரன் சிலைக்கும், அனுமன் பாதத்திற்கும் பகல் நேரங்களில் மக்கள் பூஜை செய்து வழிபட்டு வந்துள்ளனர். தற்போது காடுகள் அழிக்கப்பட்டு பல சிற்றூர்கள் தோன்றி விட்ட நிலையில் இந்தக் கோயிலும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு பக்தர்கள் வந்து வணங்கும் தலமாக மாறி வருகிறது.

இன்று பல பக்தர்களால் நன்கொடை அளிக்கப்பட்டு அம்மனுக்குக் கோபுரம் எழுப்பப்பட்டு சிறப்பாக கும்பாபிஷேகமும் செய்விக்கப்பட்டுள்ளது. பொன்னூர் மாரியம்மனை குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வாழ்ந்து வரும் குடும்பத்தினர் அனைவரும் தங்களது முயற்சியினால் ஆலயத் திருப்பணியை செவ்வனே செய்து வருகின்றனர்.

— ஷாந்தி

புக் ஷெல்ஃப்



ஸ்ரீ வைபவலக்ஷ்மி பூஜையும் கதையும்

மனத்திற்கு அமைதியையும், செல்வத்தையும் அள்ளித் தரும் ஸ்ரீ வைபவலக்ஷ்மி பூஜை செய்யும் முறைகளும், அதன் வரலாறும் தெளிவாக தரப்பட்டுள்ளது. ஸ்தோத்திரப் பாடல்களும் இடம்பெற்றிருக்கின்றன. ஆசிரியர் ஆர். பொன்னம்மாள்

பக்:64

விலை ரூ. 10.00

(அன்னை புத்தகாலயம், 28, உண்ணாமலை அம்மன் தெரு, தியாகராயநகர், சென்னை - 600 017)

வளமான வாழ்வளிக்கும் மந்திரங்கள்

மகப்பேறு உண்டாக, செல்வம் பெருக, திருமணம் நடக்க என்று இப்படி பலப்பல தேவைகளும் எளிதில் பூர்த்தியாக நாம் பூஜை செய்து வழிபட வேண்டிய யந்திரங்களும், ஸ்லோகங்களும் தக்க படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் வேங்கடவன்.

பக். 128, விலை ரூ. 27.00

(சுகமதி பிரசுரம், 17/2, ராஜா பாதர் தெரு, பாண்டிபஜார், தி. நகர், சென்னை - 600 017)

சந்திப்பில் உதித்த சிந்தனைகள்

பழம்பெரும் பத்திரிகையாளரும், எழுத்தாளருமான செம்பூரான் பல பிரபலங்களோடு நடந்த சந்திப்புக்களை, உரையாடல்களை நினைவுகூர்ந்துள்ளார். இந்த நூல் வளரும் பத்திரிகையாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும்.

பக். 225

(Mumbai Bharathi Pathipagam, 403, Ankur Greenfield CHS, Sector - 16A, Vashi, Navi, Navi Mumbai - 400 703)

ஃபெங்சுயி எளிய வாஸ்து பரிகாரங்கள்

சீன வாஸ்துவில் சொல்லப்பட்டிருக்கும் வீடு கட்டும் முறைகளும், அமைப்பும் விளக்கப்படங்களுடன் இடம்பெற்றுள்ளன. கட்டிய வீட்டை சீன வாஸ்துப்படி மாற்றி அமைக்க எளிய பரிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆசிரியர். எம்.ஜி. அண்ணாதுரை.

பக். 112, விலை ரூ. 27.00


(நர்மதா பதிப்பகம், 16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார், தி.நகர், சென்னை - 600 017)

காட்டு நாயக்கன் வரலாறு

காட்டு நாயக்கன் எனும் சமூகத்தைப் பற்றிய முழு ஆய்வு நூலாக அமைந்துள்ளது. இவர்கள் கடைபிடித்து வரும் வாழ்க்கை முறைகளையும், பழக்க வழக்கங்களையும் தெள்ளத் தெளிவாக படம்பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர் எஸ். காளிமுத்து.

பக். 284 விலை ரூ. 70.00

(தமிழ்நாடு காட்டுநாயக்கன் சமூக சீர்திருத்த சங்கம், பதிவு எண் 26/61, 323,



மங்காபுரம் தெரு, இராஜபாளையம்)

புத்தகம் இல்லா பள்ளி

குழந்தை வளர்ப்பில் உள்ள பல நுணுக்கங்களை எடுத்துரைக்கிறார் ஆசிரியர் சிந்தை ஜெயராமன். பெற்றோர்களும், ஆசிரியர்களும் படித்துப் பயனடையலாம்.

பக். 200 விலை ரூ. 100.00

(வினோத் பதிப்பகம், 11, ஈ.பி.காலனி, லட்சுமிபுரம், திருநின்றவூர் - 602 024)

சமயோகப் பயிற்சி

யோகாசனம் பற்றிய அரிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன இந் நூலில். பலவித ஆசனங்கள் செய்யும் முறைகளும் விளக்கப் படங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் சுத்தானந்த பாரதியார்.

பக். 96 விலை ரூ. 20.00

(சங்கர் பதிப்பகம், 21, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, இராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை - 49)

யந்திர ஜாலம்

இரண்டு நாவல்கள் அடங்கிய புத்தகம். முதல் கதையில் ஒரு ஏழை அந்தணரின் வாழ்வில் நடக்கும் அதிசயங்களும் அற்புதங் களும் படிக்கச் சுவையாக இருக்கிறது. இரண் டாவது நாவல் இளம் காதலர்கள் எதிர்ப்பு களை சந்தித்து வாழ்வில் எப்படி இணை கிறார்கள் என்பது பல சுவாரஸ்யமான திருப் பங்களோடு சொல்லப்பட்டுள்ளது.

ஆசிரியர் இந்திரா சௌந்தர்ராஜன்.

பக். 200, விலை ரூ. 49.00

(திருமகள் நிலையம், 55, வெங்கட் நாராயணா சாலை, தி. நகர், சென்னை - 600 017)

விடுகதைகள்

வழக்கத்திலிருந்து மறைந்து விட்ட பல சுவையான விடுகதைகளைப் படிக்கப் படிக்க ஆனந்தமாக இருக்கிறது. அறிவுக்குத் தீனி போடும் விதமாகவும் உள்ளது. தொகுப்பு எஸ். லீலா.

பக். 72 விலை ரூ. 20.00

(கண்ணப்பன் பதிப்பகம், த.பெ. எண் - 8859, 19, கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை - 600 017)

பாசத்தில் பிழையில்லை

சிறுகதைத் தொகுப்பு. பெண்களின் வாழ்க்கையை மையமாக வைத்துப் பின் னப்பட்ட கதைகள். ஆசிரியர் ஜெயந்தி ரமேஷ்.

பக். 152 விலை ரூ. 24.00

(மணிமேகலைப் பிரசுரம், த.பெ. எண் - 1447, பழைய எண் - 7, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 600 017)

கனவுகள் ஒரு கை விளக்கு

எண்ணற்ற கனவுகளை நாம் காண் கிறோம். அதற்குரிய பலன்களைச் சொல்

கிறார் ஆர்.எஸ். ராவ்.

பக். 64 விலை ரூ. 16.00

(ஜெய்சங்கர் பப்ளிகேஷன்ஸ், 38, நடேச அய்யர் தெரு, தி. நகர், சென்னை - 600 017)

பயணம்

சமூகச் சிந்தனைகள் நிரம்பிய கவிதைத் தொகுப்பு. குடும்பம், சமூகம் இவற்றைச் சுற்றி அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிகளை கவிதையாக வடித்துள்ளார் சிவசுந்தரி போஸ்.

பக். 129, விலை ரூ. 50.00

(Plans & Prints, 16/2 Lawsons Road, Cuntonment, Trichy - 620 001)

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் அமுத மொழிகள்

ஆன்மீகத்தில் நம் மனதை ஈடுபடுத்தி வாழ்க்கையைச் சீராக நடத்திச் செல்ல பாபாவின் அமுத மொழிகள் பெரிதும் வழி காட்டுகின்றன. அனைவரும் படித்து நலம் பெறலாம். ஆசிரியர் பால முருகன்.

பக். 112, விலை ரூ. 25.00

(குறிஞ்சி, 20 ஏ, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு, இராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை - 600 049)

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளரான மார்க்ஸிம் கார்க்கி எழுதிய நாவல். இதை தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார் அ. சிங்காரவேலு. இதே போல் நான்கு பிரெஞ்சுக் கதைகளும் க. கணபதி என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இதில் இடம் பெற்றுள்ளன. மொழிபெயர்ப்பு என்பதே தெரியாமல் சீரிய நடையில், எளிய தமிழில் கதைகள் படிக்க மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது.

பக். 172, விலை ரூ. 35.00

(இந்திரா பதிப்பகம், 60, முதல் தெரு, தீனதயாளு நகர், திருவெறும்பூர், திருச்சி - 620 013)

அகத்தியர் அருளிய வைத்திய சாரம்

அகத்தியர் இயற்றிய மருத்துவப் பாடல்களுக்குத் தமிழில் விளக்கமும் உரையும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் மருத்துவம் பயில்வோர்க்கும் மற்றும் அனைவருக்குமே பயனுள்ள நூலாக இருக்கும். தொகுப்பு: உதயவேந்தன்.

பக். 192, விலை ரூ. 37.00

(மயிலவன் பதிப்பகம், 18, தெற்கு பெருமாள் கோவில் முதல் தெரு, வடபழனி, சென்னை - 600 026)

கேசட்


NADAYOGA BHAGAVAD GITA CHANTING


மிக மதுரமான குரலில் பகவத் கீதையின் பதினெட்டு அத்தியாயங்களையும் கூறியிருக்



கிறார் ஸ்வாமினி சத்யவிரதானந்த சரஸ்வதி. சந்நியாசம் மேற்கொண்டு ஆன்மிக வாழ்வில் திளைத்திருக்கும் ஸ்வாமினி உள்ளார்ந்த பக்தியோடு பகவத் கீதையைப் பாராயணமாகக் கூறியிருப்பதைக் கேட்க மனதுக்கு இதமாக இருக்கிறது. நான்கு பாகங்களாக இதனை வெளியிட்டுள்ளனர். நான்கு கேசட்டுகளும் விலை ரூ. 250/-

(கிடைக்குமிடம் : B-8, 1st Floor, Silver Park Apartments, Thanikachalam Road, T. Nagar, Chennai - 600 017. Ph : 432 8087)









புன்னகை பூக்கும் முகத்துடன் இருக்கும் அம்பாளின் அழகை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் விசேஷ பூஜைகள் நடக்கிறது. திறந்த மனதுடனும் சிரத்தையுடனும் அம்பாளிடம் வேண்டிக் கொள்வது கண்டிப்பாக பலிக்கும், நடந்தே தீரும் என்பது இங்கு வரும் பக்தர்களின் நம்பிக்கை.

ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையன்றும் பஜனை நடைபெறுகிறது. விடியற்காலை நாலு மணிக்குக் கோவில் திறந்தால் இரவு பத்து மணிக்கு மூடுகிறார்கள். பக்தர்கள் 'மொக்கு-படி' எடுத்துப் போகிறார்கள். தேங்காய், மஞ்சள், காசுகள் மற்றும் குங்குமம் கலந்த அரிசியைத்தான் அப்படிச் சொல்கிறார்கள்.

எல்லா வரமும் தரும் எல்லம்மா!

ஸ்ரீ ரேணுகா எல்லம்மா தேவாலயம்...

செகந்திராபாதில் இருக்கும் சக்திவாய்ந்த கோவில். சுமார் முப்பது வருடங்களாக இந்த ஆலயத்தில் குடிகொண்டிருக்கும் அம்பாள் பக்தர்களின் பிரார்த்தனையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாள். பார்வதியின் அவதாரமாக ரேணுகா எல்லம்மா தோன்றினாள் என்பது இக்கோயிலின் பூசாரியின் கருத்து.

நினைத்த காரியம் பலித்தவுடன் வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப பூக்கள், புடவைகள், தேங்காய், ஆபரணங்கள் என சக்திக்கேற்றவாறு அம்பாளுக்கு செய்து மகிழ்ந்து போகிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான கஷ்டம்.



முக்கியமாக பிஸினஸில் ஈடுபடுபவரின் தொல்லைகளை அம்பாள் தீர்த்து வைக்கிறாள் என்பது பரவலான நம்பிக்கை. "எனக்கு பிஸினஸில் திடீர் நஷ்டம். செய்வதறியாமல் திகைத்துப் போனேன். அப்போது அம்பாளிடம் மனமுருகி பிரார்த்தனை செய்தேன். என்ன மாயம்! இப்போது கஷ்டங்கள் படிப்படியாக விலகி பிஸினஸும் பிக்-அப் ஆகிவிட்டது" என்கிறார் மகிழ்ச்சி பொங்க அஞ்சி ரெட்டி.

சரும வியாதிகளைத் தீர்த்து வைப்பதிலும் அம்பாள் சக்திவாய்ந்தவளாக விளங்குகிறாள். குழந்தைகளைத் தாக்கும் வியாதிகளிலிருந்து அம்பாள் நிவாரணம் தருகிறாள்.


பிள்ளை வரம் கேட்டு வரும் தம்பதிகளுக்கு, அவர்கள் பிரார்த்தனையை அம்பாள் உடனேயே நிறைவேற்றி வைக்கிறாள். "இந்தக் கோவிலுக்கு வந்து வேண்டினால் குழந்தை உண்டாகும்னு கேள்விப்பட்டேன். இரண்டு தடவைதான் வந்தேன். இப்போது எனக்கு நான்கு மாதம், எல்லாம் அந்த தல்லியின் கருணை" என்கிறாள் பரவசத்துடன் ஸ்ரீலக்ஷ்மி.

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 20ம் தேதி அம்பாளின் பிறந்த நாளாக வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. அன்று பெண்கள் பலர் சேர்ந்து கொண்டு ஏழை எளியோருக்கு அன்னதானமும் சேலைகளும் வழங்குகிறார்கள்.

கோவிலில் தாயார் சந்நிதிக்கெதிரே பக்தர்கள் காணிக்கையாக செலுத்திய துணியில் கட்டப்பட்ட தேங்காய்கள் தொங்கவிடப்பட்டிருக்கிறது. வெள்ளியில் சிறிய தொட்டில்கள் செய்து அம்பாளுக்கு காணிக்கை செய்கிறார்கள்.

ஜனசந்தடி மிக்க ஒய்.எம்.ஸி.ஏ. பகுதியிலிருக்கும் இந்தச் சிறிய கோவிலில் இருக்கும் அம்பாளின் கீர்த்தி மிகப் பெரியது. நம்பிக்கையுடனும் பக்தியுடனும் நாம் கோரிக்கைகளை வைத்தோமானால் ஒருநாளும் தாய் நம்மை கைவிட மாட்டாள் என்பது நிச்சயம்!

கட்டுரை, புகைப்படம் : **லதா சேகர்**



சாதாரணமாக நம் வீட்டில் வாங்கி வரும் ஐஸ்கிரீமுடன் கிடைக்கும் பிளாஸ்டிக் ஸ்பூன்களை நாம் பயன்படுத்துவதே இல்லை. அம்மாதிரி பயன்படுத்தாத ஸ்பூன்களை (ஃபேமிலி பேக் எனில் நிறையவே சேர்ந்து விடும்) சேகரித்து வைப்பது என் வழக்கம். வீட்டில் கொத்தனார் வேலை நடந்த போது ஸ்பார்டெக்ஸ் தரை போடுகையில் நிறைய உடைந்த டைல்ஸ் குவிந்தன. (அந்த வேஸ்ட்டையும் நான் விடவில்லை)

அவற்றில் தேவையான சில துண்டுகளை எடுத்து நன்கு சுத்தம் செய்தபின், தேர், சர்ச், மசூதி, சக்கரம், ஸ்வஸ்திக் என விதவிதமாக டிசைன் பண்ணி ஒரு பிளைவுட் பலகையில் ஃபெவிகால் உதவியுடன் ஒட்டினேன். ரதத்தின் நடுவில் ஒரு ஸ்வாமிப் படத்தையும் ஒட்டி, சுற்றிலுமாக வண்ண வண்ணமான பிளாஸ்டிக் ஸ்பூன்களை அழகுற ஒட்டி, நவராத்திரி கொலுவுக்கு அருகில் ஒரு மேஜை மேல் வைத்தேன்.

இந்த வருஷம் எங்கள் பொம்மைக் கொலுவை இரண்டாமிடத்துக்கே தள்ளி விட்டது இந்த வேஸ்ட் ஆர்ட்! ஒரே பாராட்டும், புகழாரமும்தான் போங்கள்!

– பத்மா ராகவன்.

மங்கள் & மங்கள் மாபெரும் பாத்திரக்கடல்

20 ஆம் ஆண்டு விழா

1981 – 2001

வாடிக்கையாளர்கள் வருடம்

31.03.2002 வரை

20% தள்ளுபடி

எவர்சில்வர்

பித்தளை

அலுமினிய பாத்திரங்கள்

பிளாஸ்டிக் பொருட்கள்

● கட்டில் ● பீரோ ● கிரைண்டர் ● எலக்ட்ரிக்பொருட்கள் ● குக்கர்

மிக்ஸி ● கேஸ் அடுப்புகள் ● அலங்காரப்பொருட்கள் ● பரிசுப்பொருட்கள்

மற்றும் அனைத்து வீட்டு உபயோகப்பொருட்களின் விலைகளில்

அதிரடி தள்ளுபடி விற்பனை !!

தரம் நாடுவோர் தவறாமல் நாடுவது

மங்கள் & மங்கள்

மாபெரும் பாத்திரக்கடல்

என்.எஸ்.பி.ரோடு, திருச்சி–2. போன்: 702755,707975.

திருச்சியிலும் வேறுபகுதிகளிலும் எங்களுக்கு கிளை நிறுவனங்கள் கிடையாது.

Sukkrish

மீண்டும் மீண்டும் (உற்சாகமாய்) உயிர்த்தெழலாம் – 6



உண்பவனே உண்பவளும் ஜாக்கிரதை!

இனிய சிநேகிதியை அறிமுகப் படுத்தும் போது என் இருபத்தி மூன்று வயதிலிருந்தே இணைபிரியாத் தோழியான ரத்த அழுத்தக்காரி – 'அதெப்படி பின்னால் வந்தவளுக்கு முதல் அறிமுகம்' என்று பட படக்கிறாள்.

இவள் எப்பொழுதுமே ஆத்திரக்காரி. கிளம்பி விட்டால், அத்தனை சீக்கிரத்தில் ஆசுவாசப்படுத்தி உட்கார வைக்க முடியாது. இருந்தாலும் சமாதானப்படுத்தி, கெஞ்சி, 'சமர்த்தோன்னோ... கொஞ்சம் பொறு... நீயில்லாம இந்தத் தொடர் முழுமையாகுமா... பருப்பில்லாமல் கல்யாணமா' – என்றெல்லாம் கொஞ்சி, சாந்தப்படுத்தி விட்டு...

சர்க்கரை பற்றிச் சொல்கிறேன்.

என் முப்பத்து மூன்றாவது வயதில்தான் எனக்கு 'டயபடீஸ்' இருப்பது தெரிந்தது. அதற்கு முன்னால் எப்பொழுதிலிருந்து இருந்ததோ... கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

என் இருபதாவது வயதில் மூத்தவள் சுதா பிறந்தாள். இருபத்தியிரண்டாவது வயதில் சின்னவள் சுபா.. அப்பொழுது எனக்கு கர்ப்ப காலத்தில் சாதாரணமாய் வரக் கூடிய 'தற்காலிக டயபடீஸ்' கூட இல்லை.. ரத்த அழுத்தம் மட்டும் கொஞ்சம் இருந்தது... (ஆனால் பத்தொன்பதில் திருமணமாகி, இருபத்தியிரண்டில் சின்ன

அனுராதா ரமணன்

வள் பிறந்த அந்த நான்கு வருடங்களில், நானே எண்ணெய்க் கொப்பரைக்குள் உட்கார்ந்திருந்த மாதிரி இருந்தேன்... ஆதலால், ரத்த அழுத்தமென்ன... மண்டையே வெடித்திருந்தாலும் ஆச்சர்யமில்லை. (அப்புறம் போகப் போகப் பழகிப் போச்சு எல்லாமே) உப்பு, ஊறுகாய் ஏன் கூட அப்பளம் கூட சாப்பிடாமல், கடும் விரதமிருந்து சின்னவளைப் பெற்றேன்.

சின்னவள் குண்டாய், 'கழுக் மொழுக்'கென்று இருந்தாள். ஒன்பது பவுண்டுக்கு மேலே.. அப்பொழுது ஒரு பிரபல பால் பவுடர் விளம்பரத்துக்காகக் கூட மருத்துவமனையிலேயே குண்டட்ட்டானக் குழந்தையின் போட்டோ வேணும் என்று, இவளை போட்டோ எடுக்க, என் பாட்டியிடமும், அம்மாவிடமும் அனுமதி கேட்டதும், அவர்கள், 'பொறந்த குழந்தையை போட்டோ எடுக்கறதாவது...' என்று மறுத்து, விரட்டியதும் இன்றும் நன்றாக நினைவிருக்கிறது.



மந்தைவெளியில் டாக்டர் லீலாவதி நர்ஸிங் ஹோமில்தான் இரண்டு பிரசவமும். சின்னவளைப் பார்த்துப் பார்த்துப் பூரித்த என் பாட்டியின் பூரிக் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளியபடி டாக்டர் சொன்ன வார்த்தைகள்...

"என்னா பாட்டிம்மா... கொள்ளுப் பேத்தி, கை கனக்கறாப்பல இருக்காளா... ரொம்பத்தான் சந்தோஷப்படாதீங்க. இன்னிலேயிருந்து பத்து வருஷத்துல உன் பேத்தி அனுவுக்கு டயபடீஸ் வரப் போகுது. ஜாக்கிரதை... பிள்ளைப் பெத்த பொண்ணுக்கு நெய்யைக் கொடுக்கறேன், எண்ணெயைக் கொடுக்கறேன்னு கிளம்பிடாதீங்க. உப்பு, சர்க்கரை, அரிசி, நெய், எண்ணெய் எல்லாமே அளவா இருக்கட்டும்..."

இப்பொழுது டாக்டர் லீலாவதியைத் தேடிப் போய், ஒரு பிடிச் சர்க்கரையை அவர் வாயில் போட்டு, 'உங்க வாக்கு பலிச்சிடுத்து டாக்டர்' என்று சொல்ல வேண்டும் என்றுதான் ஆசை. அவருக்கு இப்பொழுது ஷுகர் ஒத்துக் கொள்ளுமோ இல்லையோ...

சரி... முப்பத்து மூன்று வயசில், கல்லைத் தின்றாலும் செரிமானம் ஆகிற வயசில் டயபடீஸ் எப்படி வந்தது....

சாதாரணமாக நீரிழிவு நோய் இரண்டு வகைப்பட்டது என்கிறார் டாக்டர் ஆர். ரத்னசபாபதி அவர்கள். இவரும் தேவகி மருத்துவமனையைச் சேர்ந்தவர்தான்.

"முதல் வகை – பரம்பரையாக வருவது.. உடல் பருமன் மிக அதிகமாக இருப்பது. இரண்டாவது வகை – நான்

பட்ட சிறுநீரகப் பிரச்சனை. யூரினரி இன்பெக்ஷன், தோலில் ஏற்படும் புண்கள் ஆறாமல் இருப்பது. உடல் இளைத்துக் கொண்டே போவது. நாளமில்லாச் சுரப்பிகளின் குறைபாடு.. இவைகள்.

நம்ம சர்க்கரை - என் அப்பாவின் வழி வந்த சொத்து. அப்பாவைப் பெற்ற தாத்தாவுக்கு அவரது முப்பத்து மூன்றில் வந்ததாம். அப்பாவுக்கும் அதே வயதில். எனக்கும் அப்படியே... போதாக்குறைக்கு நடந்தால் மூச்சிரைக்கிற அளவுக்குப் பருமன். சொன்னால் நம்ப மாட்டீர்கள்... 1980களில் - 92 கிலோ இருந்தேன்...

இந்த நோயின் சரித்திரத்தைத் தோண்டிப் பார்த்தால் - ரொம்ப வேடிக்கை.

அப்போது மேட்டூரில் இருந்தேன். ஓரளவுக்கு வீட்டு வேலைகள் செய்வேனே தவிர - எங்க அம்மாவைப் போல என் தங்கையைப் போல - லேடீஸ் கிளப் போட்டிகளில் முக்கியமாய் டென்னிஸ், அது இது என்றெல்லாம் உற்சாகமாய் கலந்து கொள்ள மாட்டேன். சாதாரணமாகவே கொஞ்சம் கூச்ச சுபாவம். போதாக்குறைக்கு தெருவில் நடந்தால், சின்னப் பசங்கள் 'அனுகுண்டு' என்று கத்தி விட்டு தலையை உள்ளே இழுத்துக் கொள்ளும்கள். அதோடு சேர்ந்து, கணவர் இறந்து சில வருடங்களே ஆகியிருந்தது.

வெளியே போனால், சிரித்தால், கலகலவெனப் பேசினால், யார் என்ன சொல்வார்களோ என்கிற உறுத்தல். நடுவில் சில காலம் சென்னையில் ஒரு பத்திரிகையில் ஓவியராக இருந்திருந்தாலும் - அந்தச் சின்ன ஊர், என்னை எப்படி அங்கீகரிக்குமோ என்கிற பயம்.

நான் கிளப்புக்குப் போனால், சங்க அங்கத்தினர்களுக்கு ஓவியம் சொல்லித் தருவேன். லைப்ரரியில் புத்தகம் எடுத்துப் படிப்பேன். மற்றபடி வீடு.. குழந்தைகள்.. வரைவது.. அம்மாவுக்கு ஒத்தாசையாய் இட்லி, தோசைக்கு அரைப்பது (அப்போது கிரைண்டர் இல்லை) இதை விடவும் பெரிய வேலை கிடையாது.

ஆனால் சோர்ந்து சோர்ந்து படுப்பேன். உட்கார்ந்த இடத்திலேயே கும்பகர்ணனை சேவிப்பேன். பசி வந்தால், என் இயல்புக்கு மாறாக ஒரு பிடி பிடிப்பேன்.

முன்பெல்லாம் உடம்பு சதை போடுகிறதே என்கிற கவலை இருந்தது. டாக்டர் லீலாவதி கூறியது போல, நெய், சர்க்கரை, மற்ற மாவுப் பண்டங்களை ஜாக்கிரதையாகப் பார்த்துப் பார்த்து சாப்பிடுவேன். ஆனால், இனிமேல் என்ன இருக்கிறது வாழ்க்கையில் என்கிற விரக்தியும், அட, சாப்பாட்டையாவது அனுபவிப்போமே என்கிற எண்ணமும் வலுத்து விட....

ஒருநாள், எங்கள் ஊர் டாக்டர், திரு. ராமசுப்ரமண்யம் என்பவர், "என்ன இப்படி பலூன் கணக்கா ஊதறே..." இப்படிக் கேட்டு... "எதற்கும் ஈரோடு போய் டாக்டர் பை என்பவரிடம் நான் சொன்னேன் என்று சொல்லி - தைராய்ட், சர்க்கரை எல்லாம் டெஸ்ட் செய்து கொண்டு வா' என்று விரட்ட....

இங்கே ஒன்றைச் சொல்ல வேண்டும்.

ஈரோடுக்கு நான் போனது, டாக்டர் 'பை'யைப் பார்த்து, சர்க்கரை முதலான சமாச்சாரங்களை அறிந்து கொள்ள. நானும், என் தங்கை ஜெயந்தியுமாகத்தான் போனோம். அப்பொழுதெல்லாம் மேட்டூர் விட்டால் சேலம். இல்லாவிட்டால் ஈரோடு. பஸ்ஸில்தான் பிரயாணம்.

'பசேல்' என்று வயல்வெளியைப் பார்த்துக் கொண்டு, பக்கத்தில் பளபளவென கறுத்த ரவிக்கையில்லா மேனியும், வெற்றிலைப் பாக்கு புகையிலை வாடையுமான பெண்களின் பரந்த புன்னகையை ரசித்துக் கொண்டு, பஸ்ஸில் 'என்னடி மீனாட்சி... சொன்னது என்னாச்சு' ஒலிநாடா சுழல... என்னமோ பிக்னிக் போகிற மாதிரி (வேறு ஏது பொழுதுபோக்கு...)

ஈரோடில் என் பெரியப்பா பிள்ளை வேணு... அவன் மனைவி லட்சுமி.. எனக்கு



கொலுவில் 'பார்க் அமைக்கும் போது தரையில் வைக்காமல் டீப்பாய் அல்லது டேபிளில் வைத்தால் வருபவர்கள் நின்ற படியே பார்க்கலாம். குழந்தைகளும் இருந்த இடத்திலிருந்தே பார்க்க வசதியாயிருக்கும்.

- சி. விஜயலக்ஷ்மி.

"செட்டியார் அசத்துகிறார்ப்பா. அந்தக் கம்ப்யூட்டர் மையப் பகுதி என்ன நேர்த்தியாக சொல்லித் தரும் அழகைப் பாருங்கள். அடுத்து அந்தப் பூங்காவில் கோலாட்டம் போடும் மாமிகள், ரோட்டிலே பாருங்க எவ்வளவு விதவிதமான கார்கள் வாகனங்கள்" – இப்படியாக நீங்கள் அமைத்த கொலுவைப் பற்றின விளக்கங்களை வர்ணனைகளோடு பேசி டேப்பில் பதிவுசெய்து ஆன் செய்து விடுங்கள். குரல் எங்கிருந்து வருகிறதென்று ஆச்சரியத்துடன் உள்ளே நுழைபவர்கள் இந்தப் புதுமையான வரவேற்பை ரசித்து மகிழ்வர்.

– வி. ராஜம் ராமன்.



அண்ணா – மன்னி முறை. எங்கள் தலையைக் கண்டதுமே லட்சுமி மணக்க மணக்க ரவா கேசரி.. முந்திரிப் பருப்பை தாராளமாய் வறுத்துப் போட்டுச் செய்து விடுவாள். தவிர, பீட்ரூட் பொரியல், தேங் காய் அரைத்து விட்ட பிட்லை... பொரித்த அப்பளம்... ராத்திரிக்கு பூரிக் கிழங்கு... (இத் தனையையும் வெட்டி விட்டுத்தான் டாக் டரிடம் சென்றேன்)

டாக்டர் 'பை' என்னைப் பார்த்து, "அறி யாச் சிறுமியே... உனக்கு எதற்கு வரப் போகி றது ஷுகர்... பார்த்தால் கொழுப்பு நிறைய சேர்த்து வைத்திருப்பது தெரிகிறது. எதற்கும் நாளைக்கு விடியற்காலை, பல் மட்டும் தேய்த்து விட்டு, மற்றபடி காபி, டீ, தண் ணீர் எதுவும் குடிக்காமல், வெறும் வயிற் றோடு வா... ஜி.டி.டி. டெஸ்ட் எடுத்துப் பார்த்து விடலாம்" என்று பரிவாய் கூறிச் சிரித்தார்.

முதல் நாள் மாலை பூரிக்கிழங்கு போதா தென்று, வேணு எனக்குப் பிடிக்குமே என்று நடுச்சாலை மாம்பழம் வாங்கி அருமையாய் நறுக்கிக் கொடுத்தான். அதையும் தின்று வைத்தேன்.

மறுநாள் – வெறும் வயிறு என்று பெயர் தான். இப்பொழுது நினைத்துப் பார்த்தால், 'நாம்தான் அப்படிச் சாப்பிட்டோமா' என்று இருக்கிறது...

G.T.T. டெஸ்ட் என்பதன் முழு விரிவுச் சொல் Glucose Talerent Test என்பதாகும். போனதும் பெரிய உயரமான லோட்டாவில் குளுகோஸ்ஸைக் கரைத்துக் கொடுத்து குடிக்கச் சொல்வார்கள். அப்புறம் ஒன்றரை மணி கழித்து ஒருதரம் – ரத்தத்தில் சர்க் கரை விகிதம் எப்படி, எத்தனை அளவு ஏறுகிறது என்று பார்க்கத் தொடங்கி – நாலைந்து முறை ரத்தம் எடுத்துப் பார்ப் பார்கள்.

சாதாரணமாய் ஆரம்பத்தில் 80mg சர்க் கரை நமது ரத்தத்தில் இருந்தால், இந்த G.T.T.க்குப் பிறகு படிப்படியாய் உயர்ந்து ஓர் உச்ச நிலையை அடைந்து, பின் அதே போல சமர்த்தாய் இறங்கி வர வேண்டும்...

அடியேனுக்கு ஆரம்பமே ராக்கெட் வேகத்தில் 250mg. பிறகு அதுபாட்டுக்கு உயர உயரப் போய், 'சாரி இதற்கு மேல் போக இடமில்லை' என்பது போல 450க்கு மேல் எகிறி விட்டது.

டாக்டர் பை மலைத்துப் போனார். ஒரு வேளை லேபரடரியில் தான் சரியாகக் கவனிக்கவில்லையோ என்று அதற்குப் பிறகு – Post Pranctial, Random என்று ஏதேதோ டெஸ்ட் எல்லாம் செய்து விட்டு, மறுநாள் Fasting லும் ஒரு டெஸ்ட் எடுத்து விடுவோம் என்று சுரத்தே இல்லாமல் சொன்னார்.

அதிலும் 250mg என்று ரிசல்ட் வர....

அப்பொழுதுதான் அவர் முகம் அதி தீவிரமானது. மளமளவென எங்கள் ஊர் டாக்டருக்கு ஒரு லெட்டர்... எனக்கு மருந்து.

நான், என் நிலைமை உணராது அப்பாவியாய் கேட்டேன் :

"இந்த மாத்திரை – சாப்பாட்டுக்கு முன் னாலேயா இல்லே, அப்புறமாவா டாக்டர்?"

"அம்மா... மாத்திரையை எப்படிச் சாப் பிடறதுங்கறது அப்புறம் இருக்கட்டும். முதல்லே நீ செய்ய வேண்டிய ஒரு உடற் பயிற்சி இருக்கு. அவசரமா, இன்னிக்கே, ராத்திரியிலே இருந்தே ஆரம்பிக்கணும்..."

"என்ன டாக்டர்?"

"குழம்பு சாதம் சாப்பிடறே பாரு... அப்ப, ரசத்துக்கு சாதம் போடட்டுமான்னு உங்க அம்மாவோ, பாட்டியோ கேட்கறப்ப மட் டும், தலையை இடதுபக்கத்துல இருந்து வலது பக்கம்.. அப்புறம் வலது பக்கத்துல இருந்து இடது பக்கம்... நாலு தடவை பலமா ஆட்டு..."

நான் விழித்தேன். புரிவதற்குக் கொஞ்சம் நேரமாயிற்று...

'ஓ.. பாதி சாப்பாட்டுல எழுந்திருக்க சொல்றார் போல'

நான், பரிதாபமாய் அழமாட்டாத குறையாய் டாக்டரிடம் கேட்டேன்.

"ரொம்பப் பசிக்குதே டாக்டர்..."

"குழந்தை.. ஒரேயடியாப் பசிக்க விட்டு - அப்புறம் மூக்குல மூணு பருக்கை வர்ற வரைக்கும், வச்சு அடைக்காதே... உனக்குன்னு ஒரு டயட் சார்ட் கொடுக்கறேன். அதும்படி சாப்பிடு. ஆமா... என்ன வேலை செய்யறே?"

"இப்போதைக்கு வீட்டுலதான் இருக்கேன்..."

"தப்பு... ஏதாவது செய். உனக்குப் பிடிச்சதை... மனசை - சாப்பாடு, நொறுக்கறது, இதுல இருந்தெல்லாம் திசை திருப்பப் பார்.... மிச்சத்தை உங்க டாக்டர் பார்த்துப்பார்..."

இதுதாங்க ஆரம்பம்....

மனசை வேறு எதிலாவது திருப்பு என்று டாக்டர் சுலபமாகச் சொல்லி விட்டார்.

வரைவது பிடிக்கும். ஆனால், அதற்கான கேன்வாஸ், பிரஷ், பெயிண்ட் இதற்கெல்லாம் நிறையச் செலவாகும். ஏற்கெனவே, நானும் என் குழந்தைகளும் அப்பாவுக்கு பாரமாய் உட்கார்ந்திருக்கிறோம்...

இந்த உபகரணங்கள் வாங்குவதை விடவும், குழந்தைகள் படிப்புக்கு செலவழிப்பது முக்கியம்...

வேறென்ன செய்யலாம்...

அப்போதுதான் ஜெயந்தி சொன்னாள்...

"எழுதி எழுதி டைரிக்குள்ளேயே வச்சுக் கறியே.. எழுதேன். 'கொஞ்சம் பேப்பர்... ஒரு பாட்டில் இங்க்... நல்லா எழுத ஒரு பேனா...' போதாது?"

"அது சரி... முக்கியமானதுகளை விட்டுட்டே.. எழுதறதுக்கு நிறைய கற்பனை... எல்லாத்தையும் உற்று கவனிச்சு, மனசுல ரிகார்ட் செஞ்சு வச்சுக்கற சக்தி, கடின உழைப்பு, தன்னம்பிக்கை எல்லாமும் வேணும்..."

"அதெல்லாம் இல்லேங்கறே? வீட்டுக்குள்ளேயே இருந்தாலும் வெளியுலகத்தைப் பார்க்க முடியும். அதுவும் உன்னாலே..."

நாங்களிருவரும் வேறு வீட்டுக்கு வந்த போது, லட்சுமி தேங்காய் பர்ஃபியும், ரிப்பன் தேன்குழலும் செய்திருந்தாள்.

ஆற்றாமையுடன் 'நோ, தாங்க்ஸ்' என்றேன். நான் சாப்பிடாததால் ஜெயந்தியும் 'வேண்டாம்'என்று கூறி விட்டாள்.

மேட்டூர் வந்து, வீட்டில் சொல்ல, என் அப்பா - என் தம்பிக்கு உபநயனம் செய்வித்த போது, எப்படி மேல் அங்கவஸ்திரத்தால் தன்னையும், பிள்ளையையும் மூடிக் கொண்டு பிரும்மோபதேசம் செய்வித்தாரோ -

அதில் எள்ளளவும் குறையாத அக்கறையுடன் எனக்கு, 'டயபடோபதேசம்' என்கிற மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்தார்.

"உணவும் நானே... உண்பவனும் நானே...

உண்பவனை உண்பவனும் நானே...

இப்படி உபநிஷத் சொல்றது அனு - அதனாலே..."

- அப்பா தொடர்ந்தார்...

(உபதேசம் தொடரும்)

பிங்க் அல்லது லைட் கலர் ட்ரேயில் வெல்கம், வணக்கம் என எழுதி, அதன் மீது பெரிய பெரிய வேண்டாத கலர் மாத்திரைகளை பெவிக்கால் போட்டு ஒட்டி விட்டால், பார்க்க அழகாக இருக்கும். குட்டிப் பூக்களால் எழுதியது போன்றும், புதுமையாகவும், இந்தத் தட்டை உங்கள் வீட்டு கொலுப்படி வாயிலில் வைத்தால் சூப்பராக இருக்கும்.

- விசாலாட்சி.





யன்று ஸ்தாபனம் செய்யப்படும் கலசத்தினுள் அரிசியோடு மஞ்சள், குங்குமம், பாக்கு, மை, கருகமணி போன்ற மங்கலப் பொருட்கள் சேர்க்கப்பட்டு மேலே மாவிலைக் கொத்து, தேங்காய் வைக்கப்படுகிறது. இந்த ஒன்பது நாட்களும் தினமும் ஒரு வகைப் பாயசம், வடை, இனிப்பு கலந்த சாதம் பகலில் ஸ்வாமிக்குப் படைக்கப்படுகிறது. மாலையில் ஏதாவது ஒரு சுண்டல் செய்யப்பட்டு நைவேதனம் செய்தபின் வரும் பெண்களுக்குப் பிரசாதமாக விநியோகம் செய்யப்படுகிறது.

பொதுவாக அந்தக் காலத்திலிருந்து எந்த நாள் எந்த தானியத்தை கடவுளுக்குப் படைக்கச் செய்ய வேண்டுமென்று பழக்கத்தில் உள்ளதென்று பார்த்தால் -

திங்கள் - காராமணி

செவ்வாய் - துவரை

புதன் - பச்சைப்பயறு

வியாழன் - கொண்டைக்கடலை

வெள்ளி - பச்சைப் பட்டாணி

சனி - எள்

ஞாயிறு - கோதுமை (முளை கட்டியது)

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரோக்கிய ரீதியாக பார்க்கும் போது சுண்டல் வகைகளில் முழு பயறு அல்லது பருப்பு வகைகளை உபயோகப்படுத்திச் செய்வதால் நமக்குத் தேவையான புரதச்சத்து வைட்டமின் சத்து, தாதுச் சத்துக்கள் கிடைக்கிறது. மற்றும் தோலுடன் கூடிய பயறு வகைகளில் 'நார்ச்சத்து' கிடைக்கிறது. சுண்டல் வகைகளில் மிகக் குறைந்த அளவே எண்ணெய் சேர்ப்பதால் உடலிற்கு மிகவும்

சுண்டல் செய்யலாம்!

எஸ். மல்லிகா பத்ரிநாத்

நவராத்திரி பண்டிகை வடக்கில் ஒருவிதமாகவும், தெற்கில் ஒருவிதமாகவும் கொண்டாடப்படுகிறது. வங்காளத்தில் காளி பூஜையாகவும், வடக்கில் - ராவணனை ராமன் வென்ற நிகழ்ச்சியை நமக்கு நினைவுறுத்தும் பொருட்டு - சூரசம்ஹாரம் செய்யப்படும் நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தும் தெற்கில் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி என்ற மூன்று அம்பிகைகளை வழிபடும் விதமாகவும் அமைந்துள்ளது.

மஹாளய அமாவாசை

நல்லது.

நவராத்திரியில் தினமும் சுண்டல் செய்வதால் வெவ்வேறு விதமாக தயாரித்தால் சாப்பிடுபவர்களுக்கு போரடிக்காமல் இருக்கும். இன்று பொதுவாக எந்தெந்த விதங்களில் சுண்டல் செய்வது வழக்கம் என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

1. இனிப்பு சுண்டல்

காராமணி, பச்சைப் பயறு, முளை கட்டிய கோதுமை மூன்றிலும் இந்த சுண்டலைச் செய்யலாம்.

தேவையான பொருட்கள் :
காராமணி – 1 ஆழாக்கு,
துருவிய வெல்லம் – ½ ஆழாக்கு,
துருவிய தேங்காய் – 2 டேபிள் ஸ்பூன்
நெய் – 2 டீஸ்பூன்.
ஏலக்காய்ப் பொடி – 2 சிட்டிகை.

செய்முறை :
காராமணியை 1 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்கவும்.

2. குக்கரில் நேரடியாகப் போட்டால் ஒன்று அல்லது இரண்டு விசில் சத்தம் வரும் வரை வேகவைக்கவும்.
3. வெந்தபின் தண்ணீரை முழுவதும் வடித்து விடவும்.
4. ஒரு வாணலியில் சிறிது நெய் விட்டு அதில் துருவிய வெல்லம், தேங்காய் இரண்டையும் வெந்த காராமணியோடு சேர்த்துப் போடவும்.
5. வெல்லம் கரைந்து கெட்டிப்பட ஆரம்பித்ததும் ஏலப்பொடி தூவி கலந்து இறக்கவும்.

குறிப்பு : பச்சைப் பயறு செய்வதால் ஒரு விசில் சத்தம் வரும் வரை வேகவைத்தால் போதுமானது. முளை கட்டிய கோதுமையானால் குக்கரில் ஆவியில் வேகவைத்தாலே போதும்.

2. பச்சைப் பட்டாணி சுண்டல்

தேவையான பொருட்கள் :
உலர்ந்த பச்சைப் பட்டாணி – 1 கப்,
துருவிய மாங்காய் – 2 டேபிள் ஸ்பூன்,
தாளிக்க – எண்ணெய் – 1 டேபிள் ஸ்பூன்,
கடுகு, உ. பருப்பு, கருவேப்பிலை,
பெருங்காயம் ருசிக்கேற்ப.
இடித்துக் கொள்ளவும் :
துருவிய தேங்காய் – 1½ டேபிள் ஸ்பூன்,
பச்சை மிளகாய் – 3,
இஞ்சி – ½ அங்குலத் துண்டு,
உப்பு – ¾ டீஸ்பூன்


செய்முறை :
பட்டாணியை 8 மணி நேரம் முன்பு ஊறவைக்கவும்.

2. குக்கரில் நேரடியாகப் போடடால் வெயிட் வைத்தபின் 1 விசில் சத்தம் வரும் வரை வேகவைத்து வடிகட்டவும்.
3. ஒரு வாணலியில் எண்ணெய் விட்டு சூடானதும் கடுகு, உ. பருப்பு, கருவேப்பிலை, பெருங்காயப் பொடி சேர்த்து வேகாவைத்து வடித்த பட்டாணியை சேர்க்கவும்.
4. நல்ல தணலில் ஒரிரு நிமிடங்கள் பட்டணி நன்றாக சூடாகும் வரை கலந்து விடவும்.
5. இடித்த பொருட்களைச் சேர்த்து நன்றாகக் கலந்து இறக்கவும்.

குறிப்பு: இதே போல வெள்ளைப் பட்டாணி, மொச்சை போன்ற சுண்டல் வகைகளைச் செய்யலாம்.

3. கடலை பருப்பு சுண்டல்

தேவையான பொருட்கள் :
கடலை பருப்பு – 1 கப்,
உப்பு – ருசிக்கேற்ப,
எண்ணெய் – 1 டேபிள் ஸ்பூன்,
நறுக்கிய கொத்துமல்லி,
துருவிய தேங்காய் – சிறிதளவு
தாளிக்க :
கடுகு – ¼ டீஸ்பூன்,



புதிய செல் போட்டும் சுவர்க் கடிகாரம் ஓடாமல் நின்று விட்டால் மெஷினை மட்டும் கழற்றி உள்ளே தூய பெட்ரோல் ஊற்றி நன்கு குலுக்குங்கள். பெட்ரோல் ஆவியாகி போனவுடன் மெஷின் வேலை செய்ய ஆரம்பித்து விடும்.

– ப. பாபு

இந்தோனேஷியாவில் ஆராய்ச்சிப் படிப்பு படித்த டாக்டர்கள் தங்களது பெயருக்கு முன்னால் Drs. என போட்டுக் கொள்கிறார்கள். (இவர்கள் மருத்துவம் பார்ப்பவர்கள் அல்ல என புரிந்து கொள்ளலாம்). இவர்கள் மருத்துவம் படித்தவர்கள் அல்ல என புரிய வசதியாக உள்ளது. மருத்துவம் படித்தவர்கள் வழக்கம் போல் Dr. என போட்டுக் கொள்கிறார்கள். இது போல் நம் நாட்டிலும் இந்த முறையைப் பின்பற்றலாமே! செய்வார்களா?

– பாலசரஸ்வதி இராஜேந்திரன்.



உளுத்தம் பருப்பு – ½ டீஸ்பூன்,
கிள்ளிய சிகப்பு மிளகாய் – 2,
நீளவாக்கில் அரிந்த பச்சை மிளகாய் – 2,
கருவேப்பிலை – சிறிதளவு,
பெருங்காயப் பொடி – 1 சிட்டிகை.

செய்முறை :

1. கடலை பருப்பை பதமாக வேக வைத்து வடிகட்டவும்.
2. ஒரு வாணலியில் எண்ணெய் விட்டுச் சூடாக்கி கடுகு, உ. பருப்பு சேர்த்து, பொரிந்ததும் சிவப்பு மிளகாய், பச்சை மிளகாய், கருவேப்பிலை, பெருங்காயம் சேர்த்து பிறகு வெந்த பருப்பை சேர்க்கவும்.
3. நன்றாகச் சூடாகும் வரை கிளறி விட்டு கடைசியில் உப்பு, தேங்காய்த் துருவல், கொத்துமல்லி சேர்த்துக் கலந்து இறக்கவும்.

குறிப்பு : இதே போல பாசிப் பருப்பு, முழு பச்சைப் பயறு இரண்டிலும் செய்யலாம். பாசிப் பருப்பு சுண்டலுக்குக் கடைசியில் எலுமிச்சை ஜூஸ் பிழிந்தால் ருசியாக இருக்கும். பொதுவாக சுண்டல் வகைகளுக்கு சிவப்பு மிளகாய் மட்டும் தாளிப்பதை விட, பச்சை மிளகாயும் தாளிப்பதில் சேர்த்தால் ருசி கூடும்.

4. கொண்டைக்கடலை சுண்டல்

தேவையான பொருட்கள் :
கருப்புக் கொண்டைக் கடலை – 1 கப்,
உப்பு – ருசிக்கேற்ப,
மஞ்சள் தூள் – 1 சிட்டிகை,
கெட்டியாகக் கரைத்த புளிக் கரைசல் – 1 டேபிள் ஸ்பூன்,
சாம்பார்ப் பொடி – 1 டீஸ்பூன்,
எண்ணெய் – 1 டேபிள் ஸ்பூன்,

தாளிக்க :
கடுகு – ½ டீஸ்பூன்,
உ. பருப்பு – 1 டீஸ்பூன்,
கருவேப்பிலை – சிறிதளவு,
பெருங்காயம் – 1 சிட்டிகை

செய்முறை :

1. கொண்டைக் கடலையை கழுவி தண்ணீர் விட்டு ¼ டீஸ்பூன் சமையல் சோடா சேர்த்து, குறைந்தபட்சம் 10 மணி நேரங்கள் ஊறவைக்கவும்.
2. ஊறிய பிறகு தண்ணீரை வடித்து விட்டு நன்றாகக் கழுவி வேறு தண்ணீர் ஊற்றி பிரஷர் குக்கரில் 6 அல்லது 7 விசில் சத்தம் வரும் வரை அல்லது வெயிட் வைத்தபின் 10 லிருந்து 12 நிமிடங்கள் வரை வேகவைக்கவும்.
3. மூடியைத் திறந்த பிறகு தண்ணீரை முழுவதும் வடித்து விடவும்.
4. ஒரு வாணலியில் எண்ணெய் விட்டுச் சூடானதும் தாளிக்கும் பொருட்களைச் சேர்த்த பிறகு அந்த எண்ணெயிலேயே சாம்பார்ப் பொடி, மஞ்சள் தூள் சேர்க்கவும்.
5. புளிக்கரைசல், உப்பு சேர்த்து நன்கு கலந்து விட்டு வெந்த கடலையைச் சேர்க்கவும்.
6. நன்றாக சுண்டல் சூடானதும் அடுப்பிலிருந்து இறக்கவும்.

குறிப்பு : விருப்பப்பட்டால் ஒரு சிறு துண்டு வெல்லத்தைச் சேர்க்கலாம். பண்டிகை அல்லாத சமயங்களில் செய்யும் போது பொடியாக அரிந்த வெங்காயம் சேர்த்து வதக்கி இச் சுண்டலைச் செய்யலாம்.

இதே போல ராஜ்மா எனப்படும் சிகப்பு

பீன்ஸ், துவரை, வெள்ளைக் கொண்டைக் கடலை, சிறிய பிரௌன் நிற, பச்சை நிற கொண்டைக் கடலை வகைகளில் சுண்டல் செய்யலாம்.

5. நவதானிய சுண்டல்

தேவையான பொருட்கள் :

பச்சைப் பட்டாணி, வெள்ளைப் பட்டாணி, மொச்சை, துவரை, காராமணி, வேர்க் கடலை, பயறு, கோதுமை, சிறிய கொண்டைக் கடலை வகைக்கு - 1 டேபிள் ஸ்பூன்,
துருவிய தேங்காய் - 2 டேபிள் ஸ்பூன்,
உப்பு - ருசிக்கேற்ப,
மஞ்சள் தூள் - 1 சிட்டிகை.

வறுத்துப் பொடிக்கவும் -
சிவப்பு மிளகாய் - 8,
தனியா - 1½ டேபிள் ஸ்பூன்

தாளிக்க :

எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்,
கடுகு - ¼ டீஸ்பூன்,
உளுத்தம் பருப்பு - ½ டீஸ்பூன்,
கடலை பருப்பு - 1 டீஸ்பூன்,
கருவேப்பிலை - சிறிதளவு,
பெருங்காயத் தூள் - 2 சிட்டிகை,

செய்முறை :


1. எல்லா சுண்டல் வகைகளையும் ஒன்றாக 8 மணி நேரங்கள் ஊறவைக்கவும்.
2. அதோடு மஞ்சள் தூள் சேர்த்துக் குழையாமல் பதமாக வேகவைக்கவும்.
3. வெந்ததும் தண்ணீரை முழுவதும் வடிக்கவும்.
4. மிளகாய், தனியா இரண்டையும் வெறும் வாணலியில் நன்கு வறுத்துப் பொடிக் கவும்.
5. ஒரு வாணலியில் எண்ணெய் விட்டுச் சூடானதும் கடுகு, பருப்பு, கருவேப்பிலை, பெருங்காயம் சேர்த்த பிறகு வேகவைத்த சுண்டலைச் சேர்க்கவும்.
6. அதோடு வறுத்து அரைத்த பொடி சேர்த்து நன்றாக சூடாகும் வரை கிளறவும்.
7. கடைசியில் உப்பு, தேங்காய் சேர்த்துக் கலந்து இறக்கவும்.

'விருப்ப ஓய்வு' வாங்கியாச்சு!

இப்பொழுதெல்லாம் எந்த ஒரு காரியத்திலும் நிதானத்தைக் கடை பிடிக்க முடிகிறது. சின்ன விஷயங்களில்கூட ஓர் அழகு உணர்ச்சியைப் பார்க்க முடிகிறது என்றால், காரணம் தற்சமயம் நான் வாலண்டரி ரிடையர்மெண்ட் வாங்கிக் கொண்டு வாழ்க்கையின் ஒரு புதிய முகத்தைப் பார்க்கப் பழகி வருகிறேன். பணம் தேவைதான். ஆனால் பணத்துக்காக எத்தனை தியாகங்கள், எத்தனை சின்னச் சின்ன சந்தோஷங்களை இழக்கிறோம். சின்னச் சின்ன விஷயங்கள்கூட சுவாரசியமாகவும், அர்த்தம் உள்ளதாகவும் மனதை மிகவும் பாதிப்பதாகவும் இருக்கிறது என்பதற்கு அன்று நடந்த ஒரு நிகழ்ச்சி உதாரணம்.

எனக்கு தினம் காலை எட்டு எட்டரைக்குள் காக்காய்க்கு சாதம் வைப்பது வழக்கம். ஏதோ அம்மாவின் பழக்கத்தை அப்படியே பின்பற்றி வருகிறேனே தவிர, ஒரு நாளாவது நாம் வைக்கும் சாதத்தை காக்காய் சாப்பிடுகிறதா என்று பார்த்தது கிடையாது. அதற்கு நேரமும் கிடையாது.

சென்ற வாரத்தில் ஒரு நாள் காக்காய்க்கு சாதம் வைத்துவிட்டு உள்ளே வந்ததும் தற்செயலாக ஜன்னல் கதவை திறந்தேன். அப்பொழுது இரண்டு காக்காய்கள் டக்கென்று டைவ் அடித்து நான் வைத்த சாதம் பக்கம் அமர்ந்ததும் எனக்குச் சிறிது ஆர்வம் ஏற்பட நின்று கவனிக்கத் தொடங்கினேன். இரண்டு காக்கைகளும் ஒன்றை



— ஏதோ அம்மா

ஓரக்கண்ணால் பார்த்ததும் சிறிது பிகு பண்ணிக் கொண்டு ஒரு ஒய்யார நடை நடந்து சிறிது தள்ளி அமர்ந்து என்னை 'குறுகுறு' என்று பார்த்தது.

அதற்குள் அருகிலிருந்த தென்னை மரத்திலிருந்து பரபரவென்று ஒரு குஞ்சு அணில் தன் பஞ்சு வாலை மிருதுவாக அடித்துக் கொண்டு நான் வைத்த சாதத்தை ஆர்வத்துடன் பார்த்த வண்ணம் இறங்கியது. அந்த அணிலைப் பார்த்ததும் அந்த ஒய்யார நடைக் காக்காய், அணில் குஞ்சை சீண்டுவது போல தன் இறக்கையால் விசிறி விட்டு சாதத்தைத் தன் அழகிய மூக்கால் ஒரு கொத்து எடுத்துக் கொண்டு அகன்றது.

காக்கையின் இறக்கை வீச்சில் அணில் குஞ்சு பயந்த மாதிரி தெரிந்தாலும் தைரியமாக ஓடி வந்து ஒரு சிறிய கட்டி சாதத்தை தன் வாயிலும் கால்களிலும் கவ்விக் கொண்டு சிறிது தள்ளி அமர்ந்து சாப்பிடத் தொடங்கியது. கண் இரண்டும் அலைபாய வாலால் தரையில் ஒரே சீராகத் தட்டிய வண்ணம் அது சாப்பிடுவது பார்ப்பதற்கு ஆனந்தமாக இருந்தது.

ஆனால் மற்ற காக்கைக்கு இது பொறுக்கவில்லை போலும். அணில் இழுத்துச் செல்லும் சாதத்துக்கு ஆசைப்பட்டது போல், மீதி சாதத்தை அலட்சியப்படுத்தியபடி அணிலைத் தொடர்ந்து செல்ல, அணில் குஞ்சு அதற்கு போக்குக் காட்டியபடி வாயில் கவ்விய சாதத்துடன் 'மளமள'வென்று தென்னை மரத்தில் சுற்றிச் சுற்றி ஏறிச் சென்று சாப்பிட்டு விட்டு மறுபடி சாதத்துக்காக கீழே இறங்கியது.

காக்கைகளும் அதை விரட்டுவது போல பாசாங்கு செய்வதும் அது சாதத்தை நைச்சியமாக எடுத்துப் போகும் வரை வாளாவிருந்து விட்டு அதை ஓட ஓட விரட்டுவதில் ஒரு சந்தோஷத்தைக் காண்பது போலவும் தோன்றியது.

அணில் குஞ்சும், பயப்படுவது போல நடித்துத் தன் குட்டி வயிறு நிரம்பும் வரை சாப்பிட்டபின் தன் கட்டை வாலை பல தடவை அடித்த வண்ணம் தன் இருப்பிடத்துக்குச் சென்றுவிட்டது.

மறு நாளும் எனக்கு நேரம் கிடைக்க இதே விளையாட்டை பார்ப்பது எனக்கு ரசமாக இருந்தது. மாறுதலுக்காக காக்காய்க்கு பருப்பு சாதம், தோசை, இட்லி என்று மாற்றி மாற்றி வைக்கத் தொடங்கினேன். அவைகளும் என்னைத் தங்களுக்கு வேண்டியவளாக எண்ணுவதுபோல், என்னைப் பார்த்ததும் செல்லமாக அடிக்குரலில் கா... கா... என்று கத்தும். அணிலும் தன் பஞ்சு வாலை தரையில் தட்தட் என்று அடிக்கும்.

அன்று எனக்கு வெளியில் செல்லும் வேலை இருந்ததால் ஏழு மணிக்கே பருப்பு சாதத்தை வைத்தேன். நான் வைத்ததை தென்னை மரத்திலிருந்து பார்த்த அணில் குஞ்சு உடன் தாவி வந்துவிட்டது. ஆகா, இன்றாவது இது முழுவதையும் தொந்தரவு இல்லாமல் சாப்பிடட்டும் என்று நினைத்து அது சாப்பிடப் போவதை ஆர்வத்துடன் பார்த்தேன். ஆனால் ஓடி வந்த அணில் சடன் ப்ரேக் போட்டது போல் நின்று தன் தலையை அங்கும் இங்கும் திருப்பிப் பார்த்துவிட்டு தன் வாலை தட்டிக் கொண்டே அங்கும் இங்கும் ஓடியது. ஆனால் சாதத்தைத் தொடவில்லை. குழம்பிப் போன மாதிரி கீச் என்று கத்திய வண்ணம் பத்துப் பதினைந்து தடவை மரத்துக்கும் கீழுக்குமாக ஏறி இறங்கி சோர்ந்தது போல் ஒரு ஓரத்தில் அமைதியாக உட்கார்ந்துவிட்டது.

வழக்கமான நேரத்தில் அந்த ஜோடிக் காக்காய்கள் வரவும் அணில் குஞ்சு சுறுசுறுப்பாகி சாதத்தை எடுக்க காக்காய்கள் விரட்ட அப்படி இப்படியென்று சாப்பிட்டு முடித்து தத்தம் இடத்துக்கு சென்றுவிட்டன. ஓ! அந்த அணில் தன் சிநேகிதர்களுக்காகவா காத்திருந்தது.

இதை மாலையில் என் பையன்களிடம் கூற, என் பெரிய பையன், "சும்மா. இதெல்லாம் உன்



பிள்ளையார் கொழுக்கட்டை செய்ய மேல் மாவுக்கு இடித்து. சலித்து செய்வார்கள். பச்சரிசியை ஊறவைத்து நைசாக அரைத்து நீர்க்கக் கரைத்து. வாணலியில் துளி நல்லெண்ணெய் ஊற்றி அதில் கொஞ்சம் நீர் விட்டு நன்கு கொதித்ததும் கரைத்த மாவை விட்டுக் கிளற பந்து போல சுருண்டு வரும். கொழுக்கட்டை சொப்பு செய்ய சுலபமாக வரும்.

– லக்ஷ்மி ரங்கநாதன்.



clc65r6cBK2

கற்பனை, உலகமே சர்வைவலுக்காகத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. காக்கையும் அணி லும் தான் வாழ்வதைப் பற்றித்தான் சிந்திக் குமே தவிர தன் இரையை மற்றதுக்காக விட்டுக் கொடுக்காது" என்றான். ஆனால், அவை இரண்டுக்குமுள்ள பாசப்பிணைப்பை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

மறு நாள் ஞாயிற்றுக் கிழமை குழந்தை களையும் கணவரையும் அழைத்து இந்த விளை யாட்டைக் காட்டினேன். சாதத்தை எடுக்க வந்த அணில் குஞ்சை விரட்ட வந்த காக் காயை என் மகன் விரட்டி விட்டான். ஆனால் அந்த அணில் குஞ்சு தனக்கு நன்மை செய்ய வந்த அவனை கோபமாக பார்த்துவிட்டு, 'நீயும் வேணாம் உன் சாதமும் வேணாம்' என்பது போல போயே போய்விட்டது.

அன்று முழுதும் எனக்குச் சாப்பாடே இறங்கவில்லை. மறுநாள் காக்கைகளும் அணி லும் ரோஷம் பாராட்டாமல் விளையாடி விளையாடி சாப்பிட்ட பிறகுதான் எனக்கு நிம்மதி ஏற்பட்டது. அன்று வழக்கம்போல் சாதம் வைத்ததும் டைவ் அடித்த வண்ணம் இறங்கிய ஒய்யார நடைக் காக்காய் மீது சரியாக கவணிலிருந்து புறப்பட்ட கூர்மை யான கல் ஒன்று விழ, எங்கள் கண் எதிரி லேயே அது சுருண்டு விழுந்தது. என்ன ஏது என்று புரிய முன்னரே எங்கிருந்தோ ஓடி வந்த நரிக் குறவச் சிறுவன் படக்கென்று அதைத் தன் பையில் போட்டுக் கொண்டு ஓடிவிட் டான். திக் பிரமை அடைந்த காக்காயும் அணி லும் தங்கள் சோகத்தை சொல்ல முடியாமல் தத்தளித்துத் தவித்து அங்கும் இங்கும் ஓடிய வண்ணம் கத்திக் கொண்டிருந்தன.

மறு நாள் கனத்த இதயத்துடன் வழக்கமான நேரத்திற்கு சாதம் வைத்து, அந்த ஒற்றைக் காக்கையையும் அணிலையும் எதிர்பார்த்து சோகத்துடன் காத்திருந்தேன். மரத்திலிருந்து மிக நிதானமாக இறங்கிய அணில் கீ... கீ... என்று மிக ஹீனமான குரலில் கத்திவிட்டு அங் கும் இங்கும் ஓடியது. ஆனால் சாதத்தைத் தொடவில்லை. அந்த ஒற்றைக் காக்காயும் வர வில்லை. தன் தோழியைத் தேடி சென் றிருக்குமோ?

தினமும் சாதம் வைக்கிறேன். அணிலும் வருகிறது. சாப்பிடாமல் தன் தோழர்களுக்காக அஞ்சலி செலுத்துவதுபோல் சோக கீதமாக கீ... கீ.... என்று சிறிது நேரம் கத்தி விட்டுச் செல்கிறது.

என் மகன் சொன்ன 'சர்வைவல் ஆஃப் த ஃபிட்டஸ்ட்' எனும் வாழ்க்கைக் கோட்பாடு மனிதர்களுக்கு வேண்டுமானால் பொருத்தமாக இருக்கலாம். ஆனால் இந்த சின்னஞ்சிறு ஜீவன் களுக்குப் பாசமும், அன்பும்தான் முக்கியம் போலும்.

— சபரி கண்ணன்

இனிப்பு ஆவக்காய் ஊறுகாய்



என் மன்னி குஜராத்திலிருந்து கோடை விடு முறைக்காக வந்தவர். இனிப்பு ஆவக்காய் ஊறுகாய் கொண்டு வந்தார். அவர் சொன்னபடி போட்டேன். சுவை பிரமாதம்.

அரை கிலோ கொட்டையுடன் நறுக்கிய மாங்காய் என்றால் வெந்தயம், சிறிது கடுகு, வரமிளகாய் தனித்தனியாக வறுத்து அரைத்தது கால் கிலோ வுக்குக் கொஞ்சம் அதிகம். பொடித்த உருண்டை வெல்லம் கால் கிலோ என்ற அளவு.

நறுக்கிய மாங்காயில் சிறிது மஞ்சள் பொடி, தேவையான அளவு பொடி உப்பு சேர்த்து 5 மணி நேரம் வைத்தால் நீர் விட்டு இருக்கும். இதில் பாதிக்கு மேல் நீரை இறுத்து விட்டு, மாங்காயில் அரைத்த மிளகாய்ப் பொடி, பொடித்த வெல்லம், நன்கு காய்ச்சி ஆறவிட்ட நல்லெண்ணெய் 100 மி.லி. சேர்த்து நன்கு குலுக்கி வைத்து 2 நாட்கள் கழித்துச் சாப்பிட்டால் ருசி ஏ-ஒன். வெல்லம் சேர்ப்பதால் ஒரு வருடமானாலும் கெடாது.

– சாந்தி கார்த்திகேயன்.

62 நாட்களுக்கு அதிர்ஷ்டமோ அதிர்ஷ்டம்!



வெல்வதற்கோ 2750 பரிசுகள்!

இந்தியாவின் நெம்பர் 1 டேபிள் டாப் கிரைண்டர் அல்ட்ராவில் முதலீடு செய்ய இதைவிட நல்ல தருணம் இருந்ததில்லை. இரண்டு எழிலான மாடல்கள். அல்ட்ரா கிரைண்ட் + (2 லிட்டர்) மற்றும் அல்ட்ரா பிரைடு + (1.25 லிட்டர்) விரையுங்கள்! ஆகஸ்டு 19 முதல் அக்டோபர் 19, 2001க்குள் கடைக்கு செல்லுங்கள்! **அல்ட்ராவை வாங்குங்கள்! பரிசுகளை வெல்லுங்கள்!**

வெல்வதோ மிக எளிது! அதிக விவரங்களுக்கு உங்கள் டீலரை அணுகுங்கள் - ஒரு அல்ட்ராவை வாங்குங்கள் இன்றே!

அல்ட்ரா கார்ட்டனிலிருந்து மாஜிக் கோப்பையை எடுங்கள். குளிர்ந்த நீரை உள்ளே ஊற்றி, கோப்பையில் தெரியும் வித்தையான வடிவங்களை பாருங்கள். வடிவங்களுள், மாஜிக் நிபுணரின் தலை தொப்பியின் நிறம் உங்கள் பரிசுகளை முடிவு செய்யும்! தொப்பியின் நிறம்:

- **சிவப்பு - கொடுத்த விலையை திரும்பப் பெறுங்கள்**
- மஞ்சள் - ப்ரான் மல்ட்டிபர்ப்பஸ் ஜூஸர்
- பச்சை - பஜாஜ் எலெக்டிரிக் கெட்டில்
- ஊதா - ப்ரான் ஹேண்ட் ப்ளெண்டர்.
- நீலம் - ப்ரஸ்டீஜ் ப்ரஷர் குக்கர்
- பழுப்பு - கட்லெரி செட்

*தொப்பியின் நிறம் **கருப்பாக** இருந்தால் பரிசுகள் எதுவுமில்லை! அடுத்தமுறை பரிசுகளை வெல்ல எங்கள் வாழ்த்துக்கள்!*

இச்சலுகை, தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம், கர்நாடகா, கேரளாவில், **ஆகஸ்ட் 19 - அக்டோபர் 19, 2001 க்குள் அல்ட்ரா கிரைண்ட் + மற்றும் அல்ட்ரா பிரைடு + வாங்குபவர்களுக்கானது.** விவரங்களுக்கு உங்கள் அல்ட்ரா டீலரை அணுகுங்கள்.

இன்றே வாங்குங்கள் ஒரு அல்ட்ரா! கொடுத்த விலையை திரும்பப் பெறுங்கள்... அல்லது கவர்ச்சிகரமான பரிசுகளை பெறும் வாய்ப்பினை பெறுங்கள்.*



ULTRA GRIND+ ULTRA PRIDE+

THE BETTER BATTER GRINDERS.

எல்ஜி அல்ட்ரா இண்டஸ்டிரீஸ் லிமிடெட்
இந்தியா ஹவுஸ், திருச்சி சாலை
கோயமுத்தூர் - 641 018 போன் : +91-422-304141
பேக்ஸ் : +91-422-301377
e-mail: ultramktg@elgiultra.com website: www.elgiultra.com

• சென்னை. போன்: 044-8225735, 8225736 • மதுரை. போன்: 0452-605676 • சேலம். போன்: 0427-333588
• திருச்சி. போன்: 0431-760775.

*நிபந்தனைகளுக்குட்பட்டது. விவரங்களுக்கு விவரத்தாளை பாருங்கள்.

THE CONVENIENCE ULTRA. THE EXPERIENCE ULTRA.

Stimulus/Elgiultra/046/2001-T

என்றும் பதினாறுதான்!

டாக்டர். ஜெயம் கண்ணன்



விஞ்ஞானத்தின் வெகுவேக வளர்ச்சி எதில் கொண்டு போய் மனிதனை நிறுத்தப் போகிறது என்று பார்ப்போமானால் முக்கியமான ஒரு நிகழ்வு, வெகுதொலைவில் இல்லை. “சாகாவரம்” பெறும் நிலையைத்தான் குறிப்பிடுகிறேன். எதிர்பாராத விபத்துக்களும், ஒருவருக்கொருவர் அடிதடியில் இறங்குவதும் குறையாது. சண்டைகள் இன்னும் அதிகம் தொடரும். ஆயினும் மனிதனின் ஆயுள் நிலைநிறுத்தப்படும். அதிகம் சிகரெட் பிடித்தல், குடிப்பழக்கம், போதையேற்றிக் கொள்ளுதல் போன்றவையால் 'நான் சீக்கிரம் இறக்கப் போகிறேன்' என்று வலுக்கட்டாயமாக இறந்தால் ஒழிய வாழ்நாள் நீடித்தே இருக்கும்.

தற்போது அமெரிக்காவில் 5000 பேருக்கு மேல் 100 வயது ஆனவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். இந்த எண்ணிக்கை இன்னும் 10 ஆண்டில் இரட்டிப்பு ஆக ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. தற்போது சாதாரணமாக 70–80 வயது வாழ முடியும் என்கிற நிலை உயர வாய்ப்புகள் அதிகம். 1900ல் 51.1. வயது வரை மட்டுமே உயிர் வாழ முடிந்த நிலை மாறி தற்போது 82.7 வயது வாழ முடிகிறது. 1997ல் பிரான்ஸ் நாட்டில் லூயிஸ் கார்மட் என்ற பெண் இறந்த போது அவரது வயது 122 வருடம் 5 மாதம் 14 நாட்கள்! இவர் பிறந்த பிறகுதான் ஈஃபில் கோபுரம் கட்டப்பட்டதாம். இப்படி வெகுநாள் வரை உயிர் வாழ முடியும் என்றால் மனிதனின் வாழ்நாளுக்கு உச்ச வரம்பே இல்லையெனில் நாம் சாகாவரம் பெற முடியுமா?

மருத்துவத்தில் சிகிச்சை முறைகள், நாம் கடந்து வந்த காலங்களில் எப்படியிருந்தது?

2000 கி.மு. – வலிக்கு இந்த வேரைச் சாப்பிடலாமே என்றனர்.

1000 கி.மு. – வலிக்கு ஜபம் செய்; சரியாகிவிடும்.

1900 கி.பி. – வலிக்கு இந்த ஆஸ்பிரின் மாத்திரை சாப்பிடு. வலி நிவாரணம் கிடைக்கும்.

1985 கி.பி. – வலிக்கு இந்த ஆண்டிபயாடிக் சாப்பிடு. வலியைத் தூண்டும் தொற்றுகள் நீங்கும்.

2010 கி.பி. – ஆண்டிபயாடிக் – செயற்கையானது. சாப்பிட வேண்டாம். இந்த வேரைச் சாப்பிடு – வலி கட்டாயம் நீங்கும்.

ஆஸ்பிரின் (Acetyl Salicylic Acid) 1890ல் ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டது.

தாரிலிருந்து தயாரித்தது. இந்த அசிடைல் சலிசிலிக் ஆசிட் “SPIRE ULMARIA” என்ற செடியில் இருந்தும் கிடைக்கிறது. தற்போது இந்தச் செடியின் திகளவை

எடுத்து ஜெனிடிக் மீண்டிணைத்தல் என்னும் (Recombination) முறையில் மருந்து தயாரிக்கப்படுகிறது. ஆகவே கி.மு.2000த்தில் கொடுக்கப்பட்ட வேர் – மறுபடியும் 2000 கி.பி.-ல் துல்லியமாகக் கொடுக்கப்படுகிறது. விஞ்ஞானம் நமது வாழ்க்கையின் ஆணிவேரைச் சரியாகக் கண்டெடுத்து சீராக வைக்க உதவுகிறது என்பதனை இதன் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.

ஜீன்ஸ் உலகில் சஞ்சரித்து வருகிறோம் நாம். எல்லாமே ஜீன் மூலம் முடியும். இறப்பிற்கான ஜீனினை சரியாகக் கண்டறிந்து அதற்கு மாற்று கொண்டு வந்து விட்ட பிறகு எந்த திசுவுக்கும் அழிவு கிடையாது. பிறகென்ன பிறப்பது நிச்சயம், இறப்பது நிச்சயம் அல்ல.

நமது சித்தர்கள் ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகள் உயிர் வாழ்ந்தனர் என்று கூறும் போது அவர்கள் கூற்று உண்மையாக இருக்க முடியும் என்று சொல்ல வாய்ப்பு இருக்கிறது. திருமூலர் வாழ்ந்தது 5000 ஆண்டுகள், ஆழ்வார்கள் 4000 – 6000 ஆண்டுகள் வாழ்ந்தனர் என்றெல்லாம் சொல்லும் போது இது சாத்தியமா? என்ற கேள்வி எழுந்த காலம் மாறி சாத்தியமே என்னும் காலம் வந்து விட்டது. இன்னும் திருவண்ணாமலையில் 700 ஆண்டுகளாக ஒரு சித்தர் உயிரோடு இருக்கிறார் என்று சொல்கிறார்கள். இதுவும் சாத்தியமே.

முதுமையுறுதல் எதனால் ஏற்படுகிறது? என்பது இன்று வரையில் "இதனால்தான்" என்று சுட்டிக்காட்டப்படாத ஒன்று.

1. உடலுக்குத் தேவையான உணவு, வளர்சிதை மாற்றம் (Metabolism) தேவைக்கு ஏற்ப சரியாக இல்லாததால், திசுக்கள் இறந்து விடுகின்றன என்றனர். இது சரியான காரணமாக இருக்க முடியாது என்பதற்குச் சரியான உதாரணம் – ஆமைகள் வெகு காலம் உணவேயில்லாமல் உயிரோடு இருக்கின்றன.

2. அதிக உழைப்பு -உடலின் சக்தி குறைவு. இதனால்தான் இறப்பு சீக்கிரம் ஏற்படுகிறது. இதுவும் இல்லை என்பதற்குச் சரியான உதாரணம் – சில பறவைகள் தொடர்ந்து பறந்து கொண்டேதான் இருக்கின்றன. ஆனால் 200 வருடம் கூட உயிரோடு இருக்கின்றன. எனவே முதுமையுறுதல் நமது உடலிலேயே ஏற்படும் ஒரு முக்கிய மாறுதலால்தான் ஏற்படுகிறது என்பது தெரிகிறது.

1997ல் ஜப்பானில் 'KLOTHO' என்கிற ஜீன் சரியாக இல்லாவிட்டால் பரிசோதனைக் கூடத்தில் உள்ள எலிகள் இறந்து போகின்றன என்று கண்டுபிடித்தனர். திருமூலர் "காயப் பைக்குள்" (உடல்) நின்ற கள்வன் புறப்பட்டால் காயப்பை மண்ணாமயங்கியவாறே" என்று குறிப்பிடும் போது உடலில் உயிர் தங்க ஒரு முக்கிய "ஏதோ ஒன்று" இருக்க வேண்டும் என்று புரிகிறது. இந்த ஜீன் பற்றித்தான் அவருடைய பாஷையில் கூறியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

ஒவ்வொரு க்ரோமசோமின் முனைகளும் அடுத்த க்ரோமசோமுடன் ஒட்டி விடாமல் இருக்க வசதியாக "Telomeres" என்ற தொப்பி உதவுகிறது. இந்த "Telomeres" அளவு சிறுத்து விடும் போது, குறையும் போது இந்த க்ரோமசோம்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்ளும், சரியானபடி திசுக்கள் வேலை செய்ய முடிவதில்லை. கடைசியில் இறந்தே போகின்றன. இந்த "டெலோமியர்" ஜீன்ஸ் மட்டும்தான் காரணம் என்று இன்று வரை நிரூபிக்கப்படவில்லையென்றாலும், இதற்கு பங்கு உண்டு என்பது ஏற்கப்பட்டுள்ளது.

"தழைக்கின்ற செந்தளிர் தண் மலர்க்கொம்பில்
இழைக்கின்ற எல்லாம் இறக்கின்ற கண்டும்"

என்று திருமூலர் யாக்கை நிலையாமைப் பகுதியில் கூறியிருக்கிறாரே!

மார்பக புற்றுநோய் ஏற்பட்டு பெண்கள் இறப்பது BRCA I, BRCA II ஜீன்களில் ஏற்படும் மாறுதல்கள் என்பது ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனைப் போலவே AB இரத்த குரூப் ஜீன்களும், காலராவிற்கும் சம்பந்தம் உண்டு என்று கடந்த இதழில் பார்த்தோம். இதனைப் போலவே வைரஸ்கள் நச்சுப் பொருட்கள் (Toxins) ஜீன்களில் மாற்றங்களை ஏற்படுத்த முடிகிறது.

இயற்கையிலேயே வயது ஏற ஏற, ஜீன்கள் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டேதான் இருக்கின்றன. இந்த மாறுதல் அதிகம் ஆக, ஆக உறுப்புகளின் வேலைத்திறன் மாறுபடுகிறது. கண் பார்வை மங்குகிறது. எலும்புகள் தேய்கின்றன. தசைநார்கள் வலுவிழந்து விடுகின்றன. இந்த மாறுகின்ற ஜீன்களை சரியாக அடையாளம் கண்டு மாறுதலை நிறுத்தி விட்டால் பிறகென்ன என்றும் பதினாறுதான்!



தயிர் வடைக்கு மேலே தூவவும் அலங்கரிக்கவும் எதுவும் இல்லையென்றால் இரண்டு ஸ்பூன் சீரகத்தை வறுத்துப் பொடித்துத் தூவ மணமாகவும், ருசியாகவும் இருப்பதோடு, உடம்பிற்கும் நல்லது.

– சி. மாலதி.

கல்கி உணவு ஸ்பெஷல்

7.10.01 இதழ்

புரட்ட புரட்ட நாவில் நீர் சுரக்கும்...

- ‘கடுகு’ மேட்டரிலிருந்து கோயில் பிரசாதம் வரை, எதையாவது விட்டு வைத்தால் தானே!
  – கம்ப்ளீட் ஃபுட் ஸ்பெஷல்

அதிக பக்கங்கள்; புத்தம் புதிய செய்திகள்

- ‘புதுயுக யோகா’— வலிகளிலிருந்து விடுதலை!
  – டாக்டர் ர.எஸ். அசோக்குமார் பயிற்சி தருகிறார், வாரந்தோறும்.

- காஞ்சனா தாமோதரன் எழுதும் ‘இக்கரையில்’
  – புதிய தொடர்கதை



ஒரு பிடி பிடிக்க வேண்டிய இதழ்...! டோண்ட் மிஸ் இட்!

திருமணமலர்

மணமகள் தேவை

■ Vanniyakula Kshatriya B.A., PG Diploma good-looking Sportsman, clean habits, Uthradam-I 27/180/35000/- Administrative Officer star Hotel, Muscat. Reputed family seeks fair, beautiful graduate bride upto 25 decent family. Same caste. Ph: 044-377 0225 Box No. 17938

■ Iyer, Tanjore, Vadamal, Srivatsam, Rohini 30/169 Diploma Mechanical, Working as Sr. Engineer, India Cements, Dalavoi, well settled handsome Boy seeks graduate girl from same subsect. Contact : 4815996 04344-25794 Box No. 17939

■ பிரஹசரணம், ஆத்ரேய, ஆபஸ்தம்பம், 31/166/9800 எல்.ஐ.சி., சென்னை. பி.காம்., பட்டதாரிக்கு தகுந்த மணமகள் தேவை. பையனின் இடது காலில் மிகச் சிறிய போலியோ பாதிப்பு இருந்தாலும், பார்ப்பதற்கு லட்சணமாகவும், பிறரைப் போல் சாதாரணமாக செயல்படுபவர். ஃபோன் : (044)-486 2933 பெட்டி எண் : 17940

■ ஐயர், வடமாள், ஆத்ரேயம் மூலம் 27/155/6000க்கு மேல். சுத்த ஜாதகம், தனியார் துறையில் மேலாளர் வரனுக்கு, தகுந்த மணமகள் தேவை. தொடர்பு : 044/4781708, 2480431, 248 3251, 238 7517. பெட்டி எண் : 17942

■ ஐயர், வடமாள், கௌசிகம், உத்திரம் 39/170/15,000க்கு மேல். சுத்த ஜாதகம், தாரமிழந்த இரண்டு குழந்தையுள்ள தனியார் துறையில் துணை பொது மேலாளர் வரனுக்கு 35 வயதுக்குள் மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். தொடர்பு : 044/2480 431, 238 7517, 248 3251 பெட்டி எண் : 17943

■ Iyer, Vadama, Koundinya, Moolam-2, 41, 5.7", 12,000, Central Excise, Chennai seeks bride. Subsect no bar, Send horoscope with Bio-data to Box No. 17944

■ Affluent Iyer, Vadamal bachelor brothers aged 55 and 36 years doing Business seeks alliance from good looking Spinster girls below 43 and 29 years from decent family. Widowers divorcees excuse. Contact to Box No. 17945

■ திருநெல்வேலி கார்காத்தார், அனுஷம், 28/5.9" காருடை கோத்திரம், B.B.A. PGDAP, மின்சார வாரியத்தில் JAவாக வேலை பார்க்கும் மணமகனுக்கு, நன்கு படித்த, பண்புள்ள மணமகள் தேவை. கம்ப்யூட்டர் கற்றிருப்பின் நலம். (உடன்பிறந்தவர் தங்கை மட்டும்). பெட்டி எண் : 17946

■ Vadama Iyer, Kousikam, Uthiram, 31/165/10,000 B.Sc., PG.Dip. NITT very fair employed Textile Mills, Surat seek good looking graduate girl from good family. Box No. 17947

■ Gavara Avittam-3, 29, MA (MCA) Programmer seeks employed graduate Engineers. Send Horoscope Bio-data. Srinivasalu 8/32 First Main Kalyanasundara Nagar, Karumandapam, Trichy - 1.

■ தமிழ் ஐயர், அஷ்டசஹஸ்ரம், ஆத்ரேயம், விசாகம், உயரம் 153 செ.மீ., நல்ல நிறமுள்ள (23 வயது) படிப்பு +2, பிஜிடிசிஏ, ஹிந்தி பிரவீன் படித்த பெண்ணுக்கு, நல்ல உத்தியோகத்திலுள்ள மணமகன் தேவை. (மணமகள் தனியார் துறையில் பணியில் உள்ளார்) முகவரி: P. Gopalakrishnan, 9/3, (Old No. 5-D) S.K. Buildings, Rajaji Street, Old Suramangalam (P.O.) Salem - 636 005. Phone Salem : 341792 Bangalore : 6529498

■ தமிழ் யாதவா, உத்திரம்-1, 5 அடி, பிஏ., 35, கோதுமை நிறமான பெண்ணுக்கு அதே இனத்தில் மணமகன் தேவை. அணுகவும் : வே. ரங்கசாமி, 49, தந்தை பெரியார் நகர், அயனாவரம், சென்னை - 600 023. ஃபோன் : (044) 622 3208.

■ Iyer, Vadamal, Kasyaba, Magam 1976 MBBS (MD Bio-chemistry) 165 cm, fair, seeks Boy Mecical PG/ BE/MCA/India abroad. Govt/MNC. Contact : Viswanathan C9/37 Mohan Nagar, Salem - 536 030. Phone : 0427-383176.

■ Sai Ram. Alliance invited for Tamil Iyer, Brahacharanam, Koundinyam, Visakam 20/5.3" fair, good-looking, graduate girl with Computer Diploma seeks qualified well employed groom below 30. Subsect no bar. Contact :Venkatraman, 3-Sixth Street, Sundaram Nagar, Thanjavur - 613 004. Phone : 40752

■ குருக்கள், கௌதமம், பரணி, பிகாம், தட்டச்சு, தமிழ் ஆங்கிலம் மேல்நிலை, வயது 25, உயரம் 5.2", அரசுப் பணியில்/நிலையான தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் வரன் தேவை. 30 வயதிற்கு மேற்படாதவராக வேண்டும். உட்பிரிவு சம்மதம். எஸ். ராமமூர்த்தி, 15, முருகனருள் இல்லம், பிடி. சின்னப்பா நகர், புதுக்கோட்டை - 622 001.

■ Vadama, Tamil Iyer Girl, Srivatsa, Thiruvathirai (star) 28/150/42,000$ P.A. MBA employed, Professor, Caribbean Institute of Technology, Jamaica, West Indies. H1 B Visa holder, Trying for USA seeking alliance, employed in USA Engg/Professor. Subsects no bar. Contact : M. Parthasarathy, 38, College Main Road, Rajaji Nagar, Ariyalur - 621 713. Phone : 04329-22986 (Res). E-mail ID babu5000@yahoo.com.

■ Krishnarayapuram, Iyer, Vadamal, Vacholam, Moolam Third padam, 22/158 M.Com., domestically trained girl seeks professionally qualified well settled Boy Below 31. Contact : Ramakrishnan, 534 SPB Colony, Erode - 638 010. Phone : 04288 - 43477.

■ வடமா, வாதூலம், மகம், 24/5.4" எம்எஸ்ஸி, எம்ஃபில் (பிஸிக்ஸ்) பிஜிடிசிஏ தனியார் கல்லூரி பணி. இதே இன அரசு/தனியார் தகுந்த வரன் தேவை. வி. இராமச்சந்திரன், நெ. 4 கம்பன் நகர், கிழக்கு பாண்டி ரோடு, விழுப்புரம் - 605 602.

■ வடமாள், ஹரிதம், 25 வயது, திருவோணம், எம்சிஏ. பெங்களூரில், மத்திய அரசுப் பணியில் உள்ளவருக்கு சமமான, படிப்புள்ள மணமகள் தேவை. ஜி.வி. சுப்ரமணியம், நெ. 17, First St., N.G.G.O. காலனி, புதுக்கோட்டை - 622 001. ஃபோன் : 65564

மணமகன் மணமகள் தேவை

■ Suddha Jadhaka alliances India/Abroad for Madhwa Bharadwaja, Arudhra, smart, fair, Legally separated innocent girl 31/150 LIC 7000, B.Com., MBA and for brother Visaka 28/159 System Analyst Pune, Frequent posting overseas professionally qualified employed fair, resourceful girl. Contact horoscope to Box No. 30726

Edited, Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Consultant Editor : Mrs. MANJULA RAMESH
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097
Telephones — Editorial : 2345624; Circulation Manager ; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621
Annual Subscription : India Rs. 190/-; Overseas : Rs.900/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 95/-; Overseas : Rs. 450/- (Air Mail)





Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN / Chief PMG-143 / 2001*

மங்கையர் மலர்



நவராத்திரி இரட்டைச் சிறப்பிதழ் - II

அக்டோபர் 2001 இதழுடன் இணைப்பு


"எங்க ஃபிரிட்ஜுக்குள்ளே,
ஒரு மாடு இருக்கு!"
KOMATHA
கோமாதா
பாஸ்டுரைஸ்டு ஹோமோஜினைஸ்ட்
டோன்ட் பால்
HATSUN
கறந்த பாலின் சிறந்த சுவை

நவராத்திரி ஷாப்பிங் சென்டர்



நவராத்திரி என்றால், கொலு, சுண்டல், பாட்டு அதுவும் வழக்கமான பொம்மைகள். எல்லாவற்றிலும் மாற்றங்கள் வித்தியாசமான அணுகுமுறை இருக்கும்போது இந்த நவராத்திரி விழாவையும் மெருகூட்டி கலகலக்க வைத்தால் என்ன?

நீங்கள் ஃபிளாட்டில் வசிப்பவராக இருந்தாலும் சரி, தனி வீடுகளில் வசிப்பவராக இருந்தாலும் சரி, உங்கள் தோழிகள், வீட்டு மெம்பர்கள் அல்லது அக்கம் பக்கத்துப் பெண்மணிகள், உறவினர்கள் இவர்களில் யாரை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் இப்போது சிறு முதலீடு செய்ய உங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.


உங்களில் இடவசதி தாராளமாக உள்ள (பெரிய ஹால் அல்லது இரண்டு மூன்று அறைகள் உள்ள வீடு) வீட்டைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். இப்போது உங்கள் முதலீட்டின் ஒரு பகுதியில் மொத்த விலையில் விதவிதமான (தசாவதாரம், அஷ்டலக்ஷ்மி, கல்யாண செட் போன்றவை) கொலு பொம்மைகளை வாங்கி, ஒவ்வொன்றிலும் (உங்களுக்கும் லாபம் கிடைக்கும்படி) விலைப்பட்டியல் எழுதி தொங்கவிட்டு, அலமாரி, ஷெல்ஃபிலோ, அல்லது கட்டில் பெஞ்ச்களிலோ வரிசைப்படுத்தி அதை ஒரு செக்ஷனில் வரிசைப்படுத்தவும்.

அடுத்து, பாவாடைத் துண்டுகள், பிளவுஸ் துணிகள், புடவைகள். (நடுத்தர விலையில் இருப்பது நல்லது) முடிந்தால் சரிதார் போன்ற ரெடிமேட் வகைகள், கர்சீப், உள்பாவாடை இவைகளை மொத்தமாக வாங்கி விலை எழுதி கயிற்றில் ஹேங்கரில் வரிசையாகத் தொங்க விடுங்கள். அறையில் ஒரு பகுதியில் இந்த செக்ஷனுக்காக ஒதுக்குங்கள்.

பிறகு, விரத பூஜை புத்தகங்கள், ஸ்லோகம், ஸ்தல புராணங்கள், ஸ்வாமி படங்கள், கோலப் புத்தகங்கள், பக்திப் பாடல் கேஸட்டுகள், குங்குமச் சிமிழ் வகைகள், கண்ணாடி, சீப்பு, குங்குமம், மஞ்சள், கலர் கோலப் பொடி, இதோடு, வெங்கல, பித்தளை மணி, தட்டுகள், ஊதுபத்தி ஸ்டாண்ட், சின்னச்சின்ன ஸ்வாமி விக்ரகங்கள் போன்ற பூஜா அயிட்டங்கள் ஒரு பகுதியிலும்,

வளையல், மாலை, ரிப்பன், குஞ்சலம், கொண்டை வகைகள்,

கஜேந்திர மோக்ஷம்



முதலில் தெர்மகோல் ஷீட்டில் யானை தும்பிக் கையைத் தூக்கிக் கொண்டிருப்பது போல் வரைந்து கொள்ள வேண்டும்.

பிறகு யானையின் காலைப் பிடித்திருப்பது போல் முதலையையும் வரைந்து கொண்டு, வெட்டி ஒரு திக் கலர் அட்டையில் ஒட்ட வேண்டும். யானை தண்ணீரில் நிற்பது போல் தெர்மகோல் தூளை நீர் மாதிரி தூவினால் நன்றாக இருக்கும். ஒரு விஷயம் – கத்தியை சூடாக்கிக் கொண்டு தெர்மகோலை வெட்ட வேண்டும். பிறகு பெவிகாலால் யானையையும், முதலையையும் ஒட்ட வேண்டும். யானை 'ரங்கா...' என்று அழைப்பது போல் அமையணும். செய்து பாருங்களேன்.

– ஆர். பானு

தலைக்கு வைக்கும் பாண்டுகள், மருதாணி பவுடர், மெஹந்தி, மேக்கப் அயிட்டங்கள், ஒயர் கூடை, ஹேண்ட்பேக், பர்ஸ் என ஃபேன்ஸி அயிட்டங்கள். இவைகளை தனி பிரிவாகவும் வைத்து, உங்கள் வீட்டு ஆண், பெண்களை சேல்ஸ் பண்ண அமர்த்தி வைக்கலாம். வீட்டிலுள்ள வயதானவர்கள் கூட, பூஜா பகுதியில் அமர்ந்து, அவற்றை அழகாக விளக்கி, விற்கச் செய்து விடுவார்கள்.

குழந்தைகள், விதவிதமான கொலு பொம்மைகளையும் ஃபேன்ஸி அயிட்டங்களையும் பார்த்து, உற்சாகத்தோடு குதித்து, வேண்டியதை வாங்கிக் கொள்வார்கள். பஸ்ஸிலும், டிரெயினிலும் அவதிப்பட்டு, கூட்டத்தில் மிதிபட்டு, வாங்கும் கொலு பொம்மைகள் உடைந்து போய்விடும் என்ற பயமோ, பதட்டமோ இல்லாமல் 'பக்கத்து வீடுதானே, பக்கத்துத் தெருதானே பொம்மைகளை இங்கு வாங்கினால் உடையாமல் பத்திரமாக வீட்டிற்கு எடுத்துச் செல்லலாமே' என்று தயங்காமல் உங்கள் கொலு பொம்மைகளை வாங்கிச் செல்வார்கள்.

நவராத்திரி சமயமாதலால், பாவாடைத் துண்டு, ரவிக்கைத் துண்டு, பூஜா பொருட்கள் எல்லாமே தேவையானதும் உபயோகமானதாகவும் இருக்குமாதலால், அவைகளை விரும்பி வாங்கிச் செல்வார்கள். உங்கள் முதலீட்டில் வாங்கிய அத்தனை பொருட்களும் நஷ்டமில்லாமல் விற்றுப் போய்விடும். இது உங்கள் நட்பை தொடர் நட்பாக்கி, உங்களை தொழில் அதிபராக்கி விடவும் செய்யலாம்.

பக்திப் பாடல் கேஸட்டை ஒலிபரப்பி, வந்தவர்களை உற்சாகத்துடன் வரவேற்கலாம். இந்த வித்தியாசமான முயற்சியில் உங்கள் வீட்டின் கொலுவிற்காகக் கூட்டம் அலைமோதும். வந்தவர்கள், உங்கள் பழைய கொலு பொம்மைகளை ரசித்ததோடு மட்டுமில்லாமல் புதுப்புது பொம்மைகளையும் ரசித்து 'ஷாப்பிங்' செய்து மனம் மகிழ்வார்கள்.

'ஷாப்பிங் சென்டருடன்' கூடிய உங்கள் வீட்டுப் புதுமையான நவராத்திரி உங்களையும், வந்தவர்களையும் மகிழ்ச்சியூட்டி, மனநிறைவையும் தரும் என்பதில் சந்தேகமே இல்லை. முயன்று பாருங்களேன்.

— உமா நாராயணசுவாமி

அதிர்ஷ்டக் கல்யாணம்

மறுமலர்ச்சி திருமணம் செய்து கொண்டால் பணம், பதவி, புகழ் கிட்டும்

குடும்ப வாழ்வில் உண்டாகும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் திருமண நாளே மூலகாரணமாகும். நல்ல நாளில் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் தொழில் மேன்மை, செல்வச் செழிப்பு, உத்தியோக உயர்வு, ஆண் - பெண் குழந்தை பாக்கியம், வியாபார விருத்தி, கணவன் - மனைவியர்க்கிடையே நல்ல உறவுகள் பலப்பட்டு பணம், பதவி, புகழ் பெறுவார்கள். வாழ்வில் எல்லா வளங்களையும் பெற்று நீடித்து சுகமுடனும், வளமுடனும் வாழ்வார்கள்.

கெட்ட நாளில் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு ஒற்றுமை இல்லாமை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கெட்ட பெயர், வீண் பயம், கோர்ட் வழக்கு, தீயபழக்கம், தீய சக்திகளுக்கு அடிமையாகுதல், திடீர் விபத்து போன்ற கெட்ட சம்பவங்களே நடந்து கொண்டிருக்கும்.

இதிலிருந்து விடுபட (மறுமாங்கல்ய பூஜை) மறுமலர்ச்சி திருமணம் செய்து கொண்டால் வாழ்வில் எல்லா வளங்களையும் பெற்று சுகமுடன் வாழலாம்.

ஆண் - பெண் எந்தத் தேதியில் பிறந்தவராக இருந்தாலும், அவர்களின் திருமண நாளின் கூட்டு எண் 2, 4, 5, 7, 8 வரும் நாளில் கண்டிப்பாகத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது.

கூட்டு எண் என்பது திருமண நாளின் தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் கூட்டுத் தொகையே கூட்டு எண்ணாகும். உதாரணம்,

1. 02.12.2001 இந்நாளின் கூட்டு எண் 8 = 8 ஆகும்.
2. 04.08.2002 இந்நாளின் கூட்டு எண் 16 = 7 ஆகும்.
3. 07.05.1999 இந்நாளின் கூட்டு எண் 40 = 4 ஆகும்.
4. 08.11.1999 இந்நாளின் கூட்டு எண் 38 = 2 ஆகும்.
5. 03.08.2002 இந்நாளின் கூட்டு எண் 14 = 5 ஆகும்.

கூட்டு எண் 2ல் திருமணம் செய்து கொண்டால், குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் உண்டாகும். குடும்ப வாழ்வில் இருளும் - ஒளியுமாக கெட்ட சம்பவங்களே நடக்கும். வரவுக்கு மீறிய செலவும், தொழிலில் அடிக்கடி மாற்றங்களும் நீர் நோய் பாதிப்புகளும், நிம்மதியில்லாத வாழ்க்கையாக இருக்கும். இதிலிருந்து விடுபட, சுகமாய் வாழ (மறுமாங்கல்ய பூஜை) மறுமலர்ச்சி திருமணம் செய்து கொண்டால் எல்லா வளங்களையும் பெறலாம்.

கூட்டு எண் 4-ல் திருமணம் செய்து கொண்டால், குடும்பத்தில் கசப்புணர்ச்சிகளும், வீண் சண்டைகளும், முன்னேற்றத் தடையும், தொழில் வழியில் முடக்கங்களையும் ஏற்படுத்தும். கணவன் - மனைவி மாறுபட்ட குணங்களுடன் வாழ நேரிடும். உடல்நிலையில் மருத்துவ விரயங்களும், மனநிலையில் போராட்டங்களையும் உண்டுபண்ணும். இதிலிருந்து விடுபட (மறுமாங்கல்ய பூஜை) மறுமலர்ச்சி திருமணம் செய்து கொண்டால் எல்லா வளங்களையும் பெறலாம்.

கூட்டு எண் 4-ல் திருமணம் செய்து கொண்டால், குடும்பத்தில் கசப்புணர்ச்சிகளும், வீண் சண்டைகளும், முன்னேற்றத் தடையும், தொழில் வழியில் முடக்கங்களையும் ஏற்படுத்தும். கணவன் - மனைவி மாறுபட்ட குணங்களுடன் வாழ நேரிடும். உடல்நிலையில் மருத்துவ விரயங்களும், மனநிலையில் போராட்டங்களையும் உண்டுபண்ணும். இதிலிருந்து விடுபட (மறுமாங்கல்ய பூஜை) மறுமலர்ச்சி திருமணம் செய்து கொண்டால் எல்லா வளங்களையும் பெறலாம்.

கூட்டு எண் 5-ல் திருமணம் செய்து கொண்டால், கணவன் - மனைவியர்க்கிடையே தாம்பத்யம் வளப்படாது. நிம்மதியில்லா வாழ்க்கை, புத்திர சோகம் உண்டாகும். அடிக்கடி தொழில் முடங்கிவிடும். பணவிரயம், முன்னேற்றத் தடை, வீண் உழைப்பு, கடன் தொல்லை, தொழில் அழிவு போன்ற கெட்ட சம்பவங்களே நிகழும். இதிலிருந்து விடுபட (மறுமாங்கல்ய பூஜை) மறுமலர்ச்சி திருமணம் செய்து கொண்டால் எல்லா வளங்களையும் பெறலாம்.

கூட்டு எண் 7-ல் திருமணம் செய்து கொண்டால், குடும்பத்தில் வீண் விரயம், தொழில் கெடுதல், கெட்ட பெயர், உறவுகளின் மூலம் பாதிப்பு, பிறரால் ஏமாற்றப்படுதல், பொருள் இழப்பு, விஷபயம், நண்பர் எதிரியாகுதல், மனநோய் போன்ற தீயகாரியங்களே நடந்து கொண்டிருக்கும். இதிலிருந்து விடுபட (மறுமாங்கல்ய பூஜை) மறுமலர்ச்சி திருமணம் செய்து கொண்டால் எல்லா வளங்களையும் பெறலாம்.

கூட்டு எண் 8-ல் திருமணம் செய்து கொண்டால், தொழில் முடக்கம், திடீர் விபத்துக்கள், பொருள் இழப்பு, கடன் தொல்லை, சோகம், எதிர்ப்பு, துர்மரணம், புகழுக்கு பங்கம், தம்பதிகள் பிரிதல், குடும்பம் கெட்டு சீரழிதல் போன்ற கெட்ட சம்பவங்களே நடந்து கொண்டிருக்கும்.

இதிலிருந்து விடுபட (மறுமாங்கல்ய பூஜை) மறுமலர்ச்சி திருமணம் செய்து கொண்டால் எல்லா வளங்களையும் பெறலாம்.

மேலும், ஆண் - பெண் 2, 11, 20, 29 ஆகிய தேதிகளிலோ அல்லது கூட்டு எண் 2ல் பிறந்தவர்களோ, கூட்டு எண் 9 வரும் நாளில் திருமணம் செய்யக் கூடாது.

9, 18, 27 ஆகிய தேதிகளிலோ அல்லது கூட்டு எண் 9-ல் பிறந்தவர்களோ, கூட்டு எண் 2 வரும் நாளில் திருமணம் செய்யக் கூடாது.

3, 12, 21, 30 ஆகிய தேதிகளிலோ அல்லது கூட்டு எண் 3-ல் பிறந்தவர்களோ, கூட்டு எண் 6 வரும் நாளில் திருமணம் செய்யக் கூடாது.

6, 15, 24 ஆகிய தேதிகளிலோ அல்லது கூட்டு எண் 6ல் பிறந்தவர்களோ, கூட்டு எண் 3 வரும் நாளில் திருமணம் செய்யக் கூடாது.

மேலே குறிப்பிட்டபடி, கெட்ட நாளில் திருமணம் செய்து கொண்டு துன்பப்படும் தம்பதிகள் மறுபடியும் ஒரு அதிர்ஷ்ட நாளில் (மறுமாங்கல்ய) பூஜை எனும் மறுமலர்ச்சி திருமணம் செய்து கொண்டால் சுகமுடனும், வளமுடனும் வாழ்வாங்கு வாழலாம்.

முகூர்த்தமும் - முன்னேற்றமும்
'ஜோதிட மாமேதை' கே. ஆர். பிரபாகர்ராஜ்
நியூமராலஜி - நேமாலஜி - சைன் - தொழில் வசியம்



மறுமலர்ச்சி திருமணத்தை இந்து, முஸ்லிம், கிறிஸ்துவர், சீக்கியர், ஜைனர் போன்ற உலகிலுள்ள அனைத்து மதத்தினரும் அவரவர்கள் மதச்சம்பிரதாயப்படி செய்து வாழ்வில் வெற்றிகளைப் பெறலாம்.

மறுமலர்ச்சி திருமணத்தைத் தம்பதிகளின் எந்த வயதிலும் செய்து இன்புறலாம். இதற்கு வயது ஒரு தடையல்ல. இளம் தம்பதிகள் முதல் 85 வயது தாத்தா - பாட்டிகளும் கூட செய்து அவர்கள் மேலும் வாழக்கூடிய காலத்தில் சுகமுடன் வாழலாம்.

அதிர்ஷ்டத் திருமண நாளையோ, அதிர்ஷ்ட மறுமலர்ச்சி திருமண நாளையோ கணிக்கும் போது ஆண் - பெண் இருவரின் தேதி எண், கூட்டு எண், அதிர்ஷ்டப் பெயருக்குத் தக்கவாறு முகூர்த்த நாளையும், நேரத்தையும் கணிக்க வேண்டும்.

729 வகையான அதிர்ஷ்டத் திருமண நாட்களைப் பற்றி எமது ''அதிர்ஷ்டப் பெயர் எண் சாஸ்திரம்'' என்ற நூலில் விரிவாக, தெளிவாக எழுதியுள்ளேன். இதை வாங்கிப் படித்து, வாழ்வில் கடைபிடித்து முன்னேறுங்கள். தபால் மூலம் பெற ரூ. 300/- M.O. செய்யுங்கள். வெளிநாட்டினர் ரூ. 1,000/- அனுப்புங்கள்.



இன்று உலகளவில் ''மறுமலர்ச்சி திருமணம்'' செய்து கொண்ட பல்லா யிரக்கணக்கான தம்பதியினர் எல்லா வளங்களையும் பெற்று சுகமுடன் வாழ்கிறார்கள்.

அதிர்ஷ்ட நாளில் ''மறுமலர்ச்சி திருமணம்'' செய்து கொண்டால் கணவன் - மனைவியர்க்கிடையே அன்பு பலப்படும். தொழிலில் வெற்றி, உத்தியோகத்தில் உயர்வு, வியாபாரத்தில் இலாபம், உடல் நலம், மனநலம், நல்ல குழந்தை பாக்கியம், நீடித்த ஆயுள், வெற்றி மேல் வெற்றி, பணம், பதவி, புகழ்பெற்று வாழ்வாங்கு வாழலாம்.

அதிர்ஷ்ட விஞ்ஞான ஜோதிட நிபுணர்

கே.ஆர். பிரபாகர்ராஜ் எம்.ஏ.,

நல்லாந்தோட்டம், கணுவக்கரை (அஞ்சல்),
புஞ்சைப்புளியம்பட்டி (வழி) - 638 459.
கோவை மாவட்டம். போன்: (04254) 87258,
e-mail:ajetraj@md5.vsnl.net.in
website: www.jothidaulagham.com

வார விடுமுறை: புதன், வியாழன்

2, 4, 5, 7, 8 - ஆம் நாளில் திருமணம் செய்தால் கெட்டதே நடக்கும்.

பிரபலங்களின் கொலு

''கொலுவில் தெரிந்த ஒரு பாட்டாவது பாடுங்கள்'' என கொலுவிற்கு வரும் பெண்களிடம் கேட்பதும் அவர்கள் பாடுவதும் வழக்கமானதுதான். பல நூற்றுக்கணக்கான மேடைகளைக் கண்டு ஆயிரக்கணக்கான இசை ரசிகர்களைக் கொண்ட பிரபலமான பாடகிகள் சிலரிடம், ''நவராத்திரி கொலுவில் பாடுவது உண்டா? அந்த அனுபவம் பற்றிச் சொல்லுங்கள்'' எனக் கேட்டபோது –



• பம்பாய்

• நித்யஸ்ரீ

பம்பாய் சகோதரிகள் திருமதிகள் சி. சரோஜா – சி. லலிதா

''கேட்கக்கூடிய ரசிகர்கள் இருக்குமிடத்தில் பாடுவது என்பது மன நிறைவு தரக்கூடியது. பெரிய ஹாலில் – மேடையில் பெரும் ரசிகர்கள் கூட்டத்தில் பாடுவது ஒரு வகையான நிறைவு என்றால் இது போல நமக்கு மிகவும் வேண்டியவர்களிடையே, இதயபூர்வமான மகிழ்வுடன் இரசித்து விரும்பிக் கேட்போரினிடையே பாடுவது தனியொரு நிறைவு, மகிழ்ச்சி. பாடச் சொல்லிக் கேட்டு விட்டு பேசிக் கொண்டிருந்தால்தான் மனம் சங்கடப்படும். 'ஆடியன்ஸ்' அதிகமிருந்தால்தான் பாடுவது என்பது கிடையாது.''



திருமதி. சாருமதி ராமச்சந்திரன் :

''கொலு வைப்பது என்பது எனக்கு ரொம்பவும் பிடிக்கும். எங்கள் வீட்டில் கொலு வைக்கும் பழக்கம் உண்டு. மூன்று வயதிலேயே நான் பாட ஆரம்பித்தது கொலுக்களில்தான். எல்லோர் வீடுகளிலும் என்னை விரும்பி அழைத்துப் பாடச் சொல்வார்கள். அதைப் பாடி நிறைய பாடல்கள் பாடி பயிற்சி செய்து பாடுவேன்.

கொலுவில் பாடுவார்களா?



சகோதரிகள்

பெரிய கான்சர்ட்களிலிருந்து மாறுபட்டது இதுபோல பக்திப் பாடல்கள் பாடுவது. இன்றும் நேரமிருக்கும் போது நவராத்திரியில் வந்து அழைப்போர் வீட்டுக் கொலுக்களுக்குச் செல்வதும் – பாடுவதும் தொடர்கிறது – மனநிறைவும் தருகிறது."

திருமதி சுதா ரகுநாதன் :

"நவராத்திரி நாட்களில் பெரும்பாலும் வெளியூர் கச்சேரிகள்தான். சில சமயம் வெளிநாட்டுப் பயணம் கூட அமைந்து விடும். வீட்டில் கொலு வைக்கும் பழக்கம் உண்டு என்றாலும் வீட்டிலிருப்பதே அரிதாகி விட்டதால் பாடுவதென்பது...?! எங்களைப் போன்றவர்களின் நேரமின்மையைப் புரிந்து கொண்டு 'சுதா, உனக்கு நேரமிருந்தால் வந்து தாம்பூலம் வாங்கிக் கொள் போதும். நீ வருவதே ரொம்ப சந்தோஷம்' என்போரே அதிகம். ஊரிலிருந்து, நேரமுமிருந்தால் ரொம்பவும் நெருங்கியவர்கள் வீட்டுக் கொலுவில் பாடுவது உண்டு. பொதுவாகக் கொலுவில் பாடுவதென்பது நேரத்தையும் அழைப்பவர்களின் நெருக்கத்தையும் பொருத்து அமையும்."




• சுதா ரகுநாதன்

திருமதி. நித்யஸ்ரீ மஹாதேவன் :

"கொலுவுக்கு நமக்கு வேண்டியவர்களை அழைப்பதும், வேண்டியவர்களின் வீட்டுக்குச் செல்வதும் எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. சிறு வயதில் – பாட ஆரம்பித்த ஆரம்பக் காலங்களில் நன்கு பாடி நம் திறமையைக் காண்பிக்க வகை செய்தது நவராத்திரி நாட்கள்தானே? ஆயிரக்கணக்கான இரசிகர்கள் நிறைந்த ஹாலில் சன்மானத்துடன் பாடும் போது கிடைக்கும் அதே மனநிறைவும், மகிழ்ச்சியும் இதுபோன்று கொலுவில் ஒருசிலர் முன் பாடும் போது கிடைத்து விடும். ஆம் – இரண்டுமே மனமுவந்து இரசிக்கும் இசைப் பிரியர்களின் முன்னால் பாடுவதுதானே? ஊரில் இருந்து நேரமும் இருந்தால் கொலுவுக்குச் செல்வதுடன் பாடுவதும் உண்டு" என்கிறார் நித்யஸ்ரீ.

— வைதேகி தேசிகன்



ஓய்வூதியத் திட்டங்கள்
(ஜீவன் சுரக்ஷா, புதிய ஜீவன் தாரா, புதிய ஜீவன் அக்ஷய்)
உடல்நலம் பேணும் திட்டங்கள்
(ஜீவன் ஆஷா II, ஆஷா தீப் II)
வளர்ச்சிக்கான திட்டங்கள்
(பீமா நிவேஷ், பீமா ப்ளஸ், ஜீவன் ஸ்ரீ)
பணமீட்சித் திட்டங்கள்
(ப்ளான் 75-20, ப்ளான் 93-25, ஜீவன் ஸ்நேஹா, ஜீவன் சுரபி, ஜீவன் சஞ்சய்)
எண்டவ்மெண்ட் திட்டங்கள்
(எமது எப்போதும் பசுமையான ப்ளான் 14, ஜீவன் மித்ரா-டபுள் & ட்ரிபிள் கவர், ஜீவன் சாத்தி)
குறித்த கால திட்டங்கள்
(பீமா கிரண், ஜீவன் க்ரிஹா)
ஆயுள் முழுவதற்குமான திட்டங்கள்
(வரையறுக்கப்பட்ட, மாற்றக்கூடிய திட்டம்)
குழந்தைகளுக்கான திட்டங்கள்
(குழந்தைகளுக்கான பணமீட்சி திட்டங்கள், ஜீவன் கிஷோர், ஜீவன் சுகன்யா, பால் வித்யா, ஜீவன் பால்யா)
எல்ஐசி
பாலிசிகளுடன்
நானும்
வளர்வேன்
லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா
இந்தியாவை நாங்கள் நன்கு அறிவோம்
Insurance is the subject matter of the solicitation.
Visit us at www.licindia.com

திரியை கிரிஜாவிடம் தள்ளி விடலாம்!

நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு எல்லோரும் மேட்சிங் ப்ளவுஸ் எடுத்தது போக கடையில் மீதமிருப்பது கிளிப்பச்சை, மஞ்சள், ரோஸ் மற்றும் சிவப்புக் கலர் ப்ளவுஸ்தான். 'வைத்துக் கொடுப்பதற்குத்தானே எந்தக் கலரில் இருந்தால் என்ன' என்று நாமும் அள்ளிக் கொண்டு வருவோம்.

ஒரு தை மாத முதல் வெள்ளிக்கிழமை என் அம்மா தன் தம்பி மனைவிக்குப் பச்சைக் கலர் ரவிக்கை வைத்துக் கொடுத்தார். அதில் ஏற்கெனவே, தண்ணீர் துளி பட்டு மெலிதான அவுட்லைன் அமைந்திருந்தது. 'சொந்தந்தானே' என்று அம்மா அப்படியே கொடுத்து விட்டார். இரண்டாவது வெள்ளி அது மாமியிடமிருந்து மூன்றாவது மெயின் ரோடில் வசிப்பவருக்குப் போக, மூன்றாவது வெள்ளி அது சாய் நகருக்குப் போக, நான்காவது வெள்ளி அதை அம்மாவிற்கு வைத்துக் கொடுக்க, பிரித்துப் பார்த்தால் அதே தண்ணீர்க் கறை ப்ளவுஸ். அதற்கும் என் அம்மாவிற்கும் பூர்வ ஜென்ம பந்தம் போலிருக்கிறது.

நவராத்திரி பாடல் ஒன்றைப் பாடிவிட்டு, மஞ்சள், குங்குமம் எடுக்கப் போனால், அடிக்கும்



ரோஸ் கலர் ரவிக்கை. அதற்காக, அவர்களை அடிக்கவா முடியும்! ஒருசில விநாடிகள் கண் மூடிப் பார்த்தால் ரோஸாகத் தெரியும். கண்ணைத் திறந்தாலோ, '101 டால்மேஷன்ஸ்' படத்தில் வில்லிடெவில் கண்ணுக்குப் பார்ப்பதெல்லாமே வெள்ளையில் கறுப்புத் திட்டுக்களாக (நாயின் தோல் மாதிரி) தெரிவது போல, நமக்கும் பார்க்கும் பொருள் அனைத்தும் ரோஸாகத் தெரியும்.

சரி, தானம் கொடுத்த மாட்டின் பல்லைப் பிடித்துப் பார்ப்பானேன் என்று சொல்லிச் சொல்லி பச்சை, ரோஸ் என்று ஏகப்பட்ட ப்ளவுஸ். எனக்கு அதை வீணாக்க மனசு வராமல், என் கற்பனைக்கேற்றவாறு கர்சீஃப் செய்து வெளியில் எடுத்துக் கொண்டு போனால், "பச்சை

கலர் ஜிங்குச்சா, ரோஸ் கலர் ஜிங்குச்சா" என்று என் தோழிகள் பாடி, வெறுப்பேத்த "பாங்கரா டான்ஸ் ஆடிட்டிருந்தப்போ நடுவில் ஓடி வந்திட்டியா" என்ற கிண்டல் வேறு.

ரவிக்கைக்கு பதில் வேறு ஏதாவது பொருளாக வைத்துக் கொடுக்கலாம் என்றால் தக்க புண்ணியம் வராமல் போய் விடுமோ என்ற சங்கடம். அடுத்த தெருவிலுள்ள ஒரு மாமி, நவராத்திரி வெள்ளியன்று அழைக்க, தட்டில் உள்ள பச்சை கலர் ப்ளவுஸ் என்னைப் பார்த்துச் சிரித்தது. அதை எடுப்பதற்குள் மனம் கணக்கிட்டது. 'அப்பாடி, நவராத்திரியில் இன்னொரு வெள்ளிக்கிழமை இருக்கிறது. பேசாமல் கிளியை (பச்சைக் கலர் ரவிக்கையை, 'செல்லமாக' அப்படித்தான் அழைப்போம்) கிரிஜாவிடம் தள்ளிவிட வேண்டியதுதான்.'

அதிர்ஷ்டவசமாக, ஓரிரு தடவை நமக்கான மேட்சிங் ப்ளவுஸ் மாட்டும். 'சீக்கிரம் வைத்துக் கொடுத்தால் பாலிகாட்டன் புடவைக்கு ரவிக்கை தைத்து விடுவேன்' என்று தரும் கணக்காக புலம்ப ஆரம்பித்து விடுவோம். நாம் அலுங்கிக் குலுங்கி வீடு வந்து சேர்வதற்குள் இந்த வில்லன் வாழைப்பழம் ரவிக்கையின் மீது ஈஷி நம் பாலிகாட்டன் கனவைத் தகர்த்து விடும்.

ஒரு மாமி தன் வயதை கவனத்தில் கொள்ளாது புட்டா ப்ளவுஸை வாங்கிவிட, "ரோகிணி இந்த ப்ளவுஸ் சின்ன வயசுக்காரா போடற மாதிரி இருக்கு. உனக்கு நல்லாயிருக்கும். தெரியாம வாங்கிட்டேன், தைச்சுக்கோ" என்று வைத்துக் கொடுத்தார்.

வேலைப் பளுவில் ரோகிணி மறந்தே விட்டாள். மாமியை அழைத்து அதே புட்டா ப்ளவுஸை வைத்துக் கொடுக்க, "என்னடிது, நான் கொடுத்த ரவிக்கையை எனக்கே கொடுக்கற, ஏன் உனக்கு பிடிக்கலையா?"

"சாரி, மாமி சட்டுன்னு மறந்துட்டேன்" என்று அவசர அவசரமாக மாற்றியதில் கைக்குக் கிடைத்தது சிவப்புக் கலர் ப்ளவுஸ்தான்.

கொடுப்பதற்கென்றே இத்தகைய ப்ளவுஸ்கள் அடங்கிய பிளாஸ்டிக் பை பீரோவில் இருக்கும் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

சல்லடை ஓட்டையின் காரணமாக, ரவையை சரியாக சலிக்காமல் நாம் சைனீஸ் உணவாகச் சாப்பிட, ஒருவர் வைத்துக் கொடுத்த ரவிக்கை சல்லடைத் துணியாகப் பயன்பட்டது நாம் செய்த புண்ணியம்.

வாரே வாஹ்! நீலக்கலர் புடவைக்கு மேட்சாக நீல ரவிக்கை தன் பக்கத்து வீட்டு மாமி வைத்துக் கொடுத்ததாக என் அக்கா கூறினாள். தைத்து ரவிக்கை போட்ட அன்று மாலை நீலவர்ண கண்ணனாகக் (கண்ணகியாக?) காட்சி அளித்தாள்.

இந்த நவராத்திரியிலும் கிளியோ, சாரி... பச்சையோ, சிவப்போ அல்லது மேற்கண்ட வண்ணங்களோ உங்களைப் பார்த்துக் கண்ணடிக்கலாம்.

- என், ப்ரியா, சென்னை - 92.

வைரம் தனது விலையை லட்சம் ரூபாய்கள் என்று சொன்னதை யாராவது கேள்விப்பட்டதுண்டா? பண்புடையவர்கள் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்வதும், புகழ்ந்து கொள்வதும் இல்லை.

- யாரோ

தகவல் : எஸ். ரஞ்சனி.

எங்களுக்கும் பத்து மாத பந்தம் தான்..!

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன், மறைந்த மருத்துவ (மகப்பேறு) நிபுணர் டாக்டர். ஈ.வி. கல்யாணி அளித்த பேட்டி இது. அவருடைய அனுபவ அறிவும் ஆழ்ந்த மருத்துவ ஞானமும் இன்றும் இளம்பெண்களுக்கு, இந்தப் பேட்டியின் மூலம் மிகவும் பயன்படும்.



எஸ். லட்சுமி சுப்ரமணியம்

தமிழ்நாட்டில் முதன் முதலாக மருத்துவப் படிப்பு படித்துப் புகழுடன் பட்டம் பெற்று வந்த பெண்மணி டாக்டர். **ஈ. வி. கல்யாணி.** மகப்பேறு துறையில் அனுபவ ஞானம் கொண்ட, எல்லோருக்கும் முதிர்ந்த நிபுணராக தனது 83 வயது வரை பணிபுரிந்து வந்திருக்கிறார். குழந்தையாக இருந்தபோதே கணவரை இழந்த இவர், தந்தை கொடுத்த ஊக்கத்தால் படித்து மருத்துவ நிபுணராகப் பட்டங்களும் பாராட்டும் பெற்றவர்.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன், அவரைச் சந்தித்துப் பேட்டி காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஆயிரம் பிறை கண்டவர் என்று நாம் சிலரைப் போற்றிக் கொண்டாடுவதுண்டு. அதைப் போலப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளின் பிரசவத்துக்குத் துணையாக இருந்தவர் என்ற தனிப் பெருமை அவருக்கு உண்டு.

அந்தப் பேட்டியின் போது, தமது அனுபவத்திலிருந்து பல பயனுள்ள கருத்துக்களை டாக்டர் கல்யாணி எடுத்துக் கூறினார். தாய்மை அடைந்துள்ள பெண்களுக்கும், இளந் தாய்மார்களுக்கும் இந்தக்

• டாக்டர். ஈ.வி.கல்யாணி




கருத்துக்கள் இன்றும் மிகவும் பயனுள்ளவையாக இருக்கும்...

"மற்ற துறைகளில் செய்யும் மருத்துவப் பணியிலிருந்து, இந்த மகப்பேறு மருத்துவம் எப்படி மாறுபட்டிருக்கிறது என்று கருதுகிறீர்கள்?"

டாக்டர் கல்யாணி : இந்த மகப்பேறு மருத்துவத்துக்குத் தனியான மகத்துவம் உண்டு. மற்ற துறைகளில் இல்லாத 'ஸ்பெஷலா'ன அம்சங்கள் இதில் நிறைய உண்டு. என்னுடைய ஆசிரியராக இருந்த டாக்டர். ஏ.எல். முதலியார் சொல்வார் :

"இந்தத் துறையில் பயிற்சி பெறும் உங்களுக்கெல்லாம் ஒரு சிறு அட்வைஸ்! நீங்கள் 'பிராக்டிஸ்' பண்ணப் போவது மிகவும் நுட்பமான மருத்துவத்துறை. மற்ற டாக்டர்கள் வைத்தியம் அல்லது அறுவை சிகிச்சை முடிந்தவுடன் விலகிப் போய் விடுவார்கள். ஆனால் இந்தத் துறையில் மருத்துவம் செய்கிற டாக்டர்களை மக்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருப்பார்கள்.

நீங்கள் எங்கே போனாலும், அங்கே ஒரு வயதான கிழவி உட்கார்ந்து கொண்டு, "அதோ! அந்த டாக்டர்தான் எனக்குப் பிரசவம் பார்த்தது. என் மூன்றாவது பிள்ளை அந்த டாக்டர் வந்து ஆயுதம் போட்டு எடுத்த கேஸ்தான்!" என்று சொல்லிக் கொண்டிருப்பாள். அந்த மகனுக்கு நாற்பது வயது இருக்கும்! உங்களை மட்டும் பொது மக்கள் எவ்வளவு ஆண்டுகளானாலும் மறப்பதில்லை!" என்பார். அது முற்றிலும் சரி. இன்றும் நான் என்னுடைய அன்றைய 'பேஷண்டுகள்' பலரை – இன்றையப் பாட்டிமார்கள் பலரைச் சந்திக்கிறேன்.



வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் பெண்களே! வாரத்திற்கு ஒருமுறையேனும் காலணிகளை சுத்தம் செய்கிறீர்களா? இனி செய்யத் துவங்குங்கள். தோல் வியாதியே நெருங்காது.

— எஸ். சரஸ்வதி சுவாமிநாதன்.

இன்னொரு முக்கியமான வித்தியாசம் இது - மற்ற துறைகளில் சிகிச்சைக்காக வருபவர்களுக்கு நிதானமாகச் சோதனை செய்து முடிவு எடுக்கலாம்; அறுவை சிகிச்சை இல்லாமலே குணப்படுத்த முயலக்கூடும். அவசரமோ, நெருக்கடியோ இல்லாமல் வைத்தியம் பார்க்கலாம். ஆனால் இந்தத் துறையில் அப்படியில்லை! பிரசவம் நேரும் வேளை நம் கையில் இல்லை. அவசரம் எப்போது ஏற்படும் என்று சொல்ல முடியாது. டாக்டர் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். அறுவை சிகிச்சையைப் பற்றி உடனடியாக முடிவு எடுக்க வேண்டியிருக்கும். ஒவ்வொரு மணி நேரமும் முக்கியம் - ஒவ்வொரு நிமிடமும் கூட முக்கியம்தான்!

"அந்த நாளில் பிரசவ வைத்தியம் இருந்த நிலையைப் பற்றி நீங்கள் சொல்ல முடியுமே? அன்று பிரசவித்த தாய்மார்களின் சிரமங்கள் என்ன?"

டாக்டர் கல்யாணி : "அப்போதெல்லாம் பிரசவம் பார்ப்பது கிராமப்புறங்களில் உள்ள 'மருத்துவச்சி' என்ற தாதியர்வசமே ஒப்புவிக்கப் பட்டிருந்தது. சரியான மருந்துகளையோ, நோயைத் தடுக்கும் பாதுகாப்பு முறைகளையோ, உபயோகிக்க அவர்களில் பலருக்குத் தெரியாது. குழந்தையோ, தாயோ இறந்து போனால், "என்ன செய்வது? அதன் தலைவிதி அப்படி!" என்று சொல்லி விட்டுப் பேசாமல் இருந்து விடுவார்கள்.

அப்போது சில சமயம், முற்றிப் போன நிலையில், நகரங்களில் உள்ள டாக்டர்களை அணுகுவது வழக்கம். கட்டை வண்டியில் போட்டுக் கொண்டு, நெடுந்தூரம் பிரசவ வேதனையுடன் கொண்டு வரும் காட்சி, பார்க்கப் பரிதாபகரமானதாக இருக்கும். இத்தகைய கேஸ்களில் ஒருசில உயிர் பிழைக்கும். பல 'கேஸ்'களில் குழந்தையின் உயிரோ, தாயின் உயிரோ போய் விடும். சில சமயம் இரண்டு உயிர்களுமே பறிபோவதும் உண்டு!"

"பிரசவத்தின் போது ஏற்படக்கூடிய சிக்கல்கள் பற்றிய தங்கள் அனுபவம் என்ன? குறிப்பாகத் தாய்மார்களும், டாக்டர்களும் கவனிக்க வேண்டிய அவசியமான அம்சங்கள் என்ன?"

டாக்டர் கல்யாணி : பிரசவத்தில் சில சமயம் சிக்கல்கள் ஏற்படுவதுண்டு. ஒரு வகை வலிப்பு ஏற்படலாம்; இரத்தப் போக்கு அதிகமாகி இருக்கலாம்; சில சமயம் குழந்தை அமைந்திருக்கும் நிலையிலேயே ஏறுமாறாக அமையக்கூடும். தாயின் ஜனன உறுப்புகளில் தசைகள் இயற்கையாகச் சுருங்கிக் குழந்தையை இயற்கையாக வெளியேற்ற இயலாமற் போய்விடக்கூடும். அப்போது அதைச் செயற்படுத்த ஊக்கம் தர

தேங்காய்ப் பூரணம் வைத்த போளி செய்தேன். வெல்லம் ஜாஸ்தியாகி விட்டது. கையெல்லாம் பிசுபிசுவென்று ஒட்டிக் கொண்டு உருட்டவே வரவில்லை. கைவசம் பொட்டுக் கடலைப் பொடி இருந்தது. அதனை பூரணத்துடன் சேர்த்துக் கலந்து உருண்டை செய்து போளி செய்தேன். ரொம்ப ஜோராய் வந்தது. – வைதேகி ரமணி.



வேண்டியிருக்கும்.

பிரசவத்துக்கு முன் சோதனைக்கு வரும் போதே, குழந்தையின் நிலை, கருவின் அமைப்பு ஆகியவற்றைக் கண்டுகொள்ளலாம். சிலருக்கு நஞ்சு முன்புறமே அமைந்திருக்கும். கருவின் வளர்ச்சி ஏழு மாதங்களாக இருக்கும் போதே லேசான இரத்தப்போக்கு இருக்கும். இதை டாக்டர்கள் கண்டுகொண்டால் உரிய மருந்து களைக் கொடுப்பதுடன், பிரசவத்தின் போது முதலில் நஞ்சு வெளியேறுவதன் மூலம் ஏற் படும் அதிகப்படியான இரத்தப்போக்கு, சீக்கிர மாகக் குழந்தையை வெளியே எடுக்க வேண் டிய இக்கட்டான நிலை ஆகியவற்றை சமா ளித்து, துரிதமாக அறுவை சிகிச்சையை மேற் கொள்ள ஏற்பாடுகளைச் செய்யலாம்.

குழந்தை வெளியே வரும் போது ஒரு நிலை யில் தடங்கல் ஏற்பட்டு, நின்றுவிடக்கூடும். அப்படிக் குழந்தை இறங்கி வராத நிலையில், அவசரமாக முடிவு செய்து, அறுவை சிகிச்சையோ, ஆயுதம் போட்டு எடுப்பதையோ, மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட லாம். வலி மிக அதிகமாக இருந்தால் லேசான மயக்க மருந்து கொடுப்பதும் உண்டு. ஆனால் இதைக் கட்டுப்படுத்துவது நல்லது. இந்தக் கடைசி நிமிஷ வேதனைக்காகத்தான் தாய் நாற் பது வாரங்களாகக் காத்திருக்கிறாள். இந்த நிமி ஷத்தில் ஒரு 'த்ரில்' உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது! உங்கள் சாதனையை, உங்கள் குழந்தையின் அழுகைக் குரல் மூலம் கேட்க வேண்டிய தருணத்தில் நீங்கள் தூங்கி விடலாமோ?

குழந்தையை வெளியே எடுத்த பிறகு, உதிரப்போக்கு தொடர்ந்து, படிப்படியாக நின்று விடும். ஜனன உறுப்பும் சுருங்கி விடும். இப்படி நேராவிட்டால், தொடர்ந்து உதிரப் போக்கு இருந்தால் அதைக் கட்டுப்படுத்த வேண்டியிருக்கும். இழந்து விட்ட இரத்தத்தை ஈடுசெய்வதற்குப் புதிய இரத்தம் செலுத்த வேண்டிய அவசியமும் ஏற்படலாம்.


சில சமயம் பிரசவத்தில் ஏற்படும் தொடர்ந்த சிரமத்தில் ஜனன உறுப்பு பிளந்து விடலாம். இப்படி ஏற்படும் போது, அதிகமான இரத்தம் கொட்ட ஆரம்பித்து விடும். தாய்க்கு அதிர்ச்சியும், சோர்வும், மயக்கமும் ஏற்படும். உடல் சோர்ந்து வியர்வை பொங்கும். இந்த நிலையில் தாய்க்கு உடனே வைத்தியம் செய்து காப்பாற்றுவதுடன், குழந்தையையும் பத்திர மாக வெளியே எடுக்க வேண்டியிருக்கும்.

''சிசேரியன் செய்து குழந்தையை வெளியே எடுப்பது இன்று சகஜமாக ஆகிக் கொண்டு வருகிறது. இது எப்போது அவ சியம்? இதன் சௌகரியங்கள், சிக்கல்கள் என்னென்ன?''

டாக்டர் கல்யாணி : குழந்தை இயற்கையாக வெளியே வரும் நிலையில் சிரமம் இருக்கலாம். அப்போது அதையே தொடருவது ஆபத்தில் முடியும். அந்த நிலையில் சிசேரியன் செய்து எடுப்பதே உசிதம். 'சிசேரியன்' முறையில் குழந்தை நிச்சயமாக உயிர் பிழைத்து விடும். அதற்குச் சிரமம் ஏற்படுவதில்லை. பிரசவத்தின் போது தாயின் ஜனன உறுப்பில் ஏற்படும் சேதங்களும் தவிர்க்கப்படுகின்றன. இவையெல் லாம் நல்ல அம்சங்கள்தாம். ஆனால் அதற்கா கப் பிரசவம் என்றாலே 'சிசேரியன்' என்று வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. பின் இதற்கு அவசியம் ஏற்படும் நிலைதான் என்ன?

குழந்தையின் அளவு பெரியதாக இருக்க லாம். அது இயற்கையாக வெளியே வருவதற்கு சௌகரியப்படாதபடி தாயின் ஜனன உறுப்பு அமைந்திராமல் இருக்கக்கூடும். அப்போது வேறு வழி இல்லை. சிசேரியன் செய்ய வேண் டியதுதான். நஞ்சுக் குழந்தையின் அடிப்புறத் தில் இருக்கக்கூடும். பிரசவம் நேரும் போது, இரத்தப்போக்கு அளவு மீறி ஏற்படும் அபாயம் இருக்கும். அப்போது தாயையும் குழந்தை யையும் பாதுகாக்க சிசேரியன் முறைதான் நல்லது.

குழந்தை அமைந்திருக்கும் நிலை ஏறு மாறாக இருக்கும். சாதாரணமாகக் குழந்தை யின் தலைதான் பிரசவத்தின் போது வெளியே வரும். எப்போதாவது கால்கள் முதலிலோ, தோள் பகுதி முதலிலோ வருவதும் உண்டு. குழந்தை பெரியதாகவோ, குழந்தை வெளி யேறும் வழி இதற்கு ஏற்றதாகவோ இல்லா விட்டால், இந்தப் பிரசவத்தில் சிரமம் ஏற்படும். அப்போது 'சிசேரியன்'தான் உசிதம்.



தமிழகத்திலேயே மிகப் பிரம்மாண்டமான ஜவுளி மாளிகை



தி சென்னை சில்க்ஸ்

சென்னை மாநகருக்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது புத்தம்புதிய ஜவுளி ஷோரும் தி சென்னை சில்க்ஸ். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை அலை அலையாய் ஜவுளிகள் ஆயிரக்கணக்கில்! உங்கள் குடும்பத்தின் ஆடைத் தேவைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் நிறைவேற்றும் ஒப்பற்ற ஜவுளி சாம்ராஜ்யத்திற்கு இன்றே வருகை தாருங்கள்.

சிறப்பம்சங்கள்

தரம் மற்றும் டிசைனில் அழகூட்டும் பட்டுச்சேலை தயாரிப்பில் 40 வருட பாரம்பரியம்!

இந்திய ஆடை கலாச்சாரமே இங்குதான் சங்கமம்! காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை அனைத்து ஜவுளிகளும் ஒரே கூரையின் கீழ்!

இந்தியாவில் எங்கும் காணமுடியாத பிரத்யேக டிசைன் பட்டுப் புடவைகள், தி சென்னை சில்க்ஸில் மட்டுமே!

வாரவாரம் புதுப்புது அறிமுகம்! ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை புத்தம்புது டிசைன் பட்டுப்புடவை அறிமுகம்!

வாடிக்கையாளர்கள் விரும்பும் டிசைன்களில் பட்டுச் சேலைகள் தனிக் கட்டணம் ஏதுமின்றி நெய்து தருகிறோம்.

ஒரே வண்ணம், ஒரே டிசைனில் யூனிபார்ம் சாரிகள் மொத்தமாக, உடனுக்குடன் வாங்கும் வசதி

அனைத்து கிரெடிட் கார்டுகளும், ஃபாரின் கரன்சிகளும் ஏற்கப்படும்.

ஆடைகளில் எல்லோருக்கும் எல்லாமுமே.

தி சென்னை சில்க்ஸ்

23 (67), உஸ்மான் ரோடு, T. நகர்,
சென்னை - 600 017. ✆ 044 - 4310888 Tel : SILKS

• பட்டுச்சேலை உற்பத்தியாளர்கள்
• மொத்த விற்பனையாளர்கள் • ஏற்றுமதியாளர்கள்

பட்டு உற்பத்தி நிலையம்

G.K மேன் பில்டிங், 98/1, காந்தி ரோடு,
காஞ்சிபுரம் - 631 501. ✆ 04112 - 29777

E-Mail : thechennaisilks@eth.net Website : www.thechennaisilks.com

sasiads.com



டியூப் லைட்டின் பக்கத்தில் வெள்ளை ஜரிகை பேப்பர், கலர் ஜரிகை பேப்பர் ஒட்டி விட்டால், லைட்டைப் போட்டால் வண்ணக் கலரில் கொலு பொம்மைகள் காட்சியளிப்பதோடு அறையும் வண்ணக் கலராக பளிச்சிடும்.

– விசாலாட்சி.

இப்போதெல்லாம் பெண்கள் படித்து வேலை பார்த்து, நிதானமாகப் பொறுத்திருந்து குழந்தையைப் பெற்றுக் கொள்கிறார்கள். இப்படிச் சற்று வயதான பிறகு பிரசவம் நேரும்போது, 'சிசேரியன்' தேவைப்படலாம். கருப்பையிலிருந்து வரும் உறுப்பு வழிகளில் இயற்கையான மென்மையும், எளிமையான சுருக்க விரிவுகளும் ஏற்படாது. சிலருக்கு மணமாகி வெகுகாலம் குழந்தை பிறக்காமல் இருந்து, கர்ப்பம் தரிப்பார்கள். இப்படி அபூர்வமாகப் பிறக்கும் குழந்தையை (Precious child) சந்தர்ப்ப வசத்தினால் இழந்து விடக்கூடாது. எப்படியும் பத்திரமாக வெளியே கொண்டு வந்து விட வேண்டும் என்று நினைப்பார்கள். இந்த நிலைகளில் 'சிசேரியன்' செய்து கொள்வது அவசியமாகத் தேவைப்படும்."

"கருத்தரிப்பதிலும் குழந்தை பிறப்பதிலும், பெற்றோரின் இரத்த சம்பந்தம் ஒரு முக்கியமான காரணமாக இருக்கக்கூடுமா? அதனால் ஏற்படும் சிக்கல்கள், தவிர்க்க யோசனைகள், ஆகியவை பற்றிச் சொல்ல முடியுமா?"

டாக்டர் கல்யாணி : "ஆரோக்கியமான உடல் நிலையில் உள்ள தம்பதியருக்குப் பிறக்கும் குழந்தை சில சமயம் உயிருடன் இராது. இதற்கு அவர்களுடைய இரத்த அமைப்பில் உள்ள பொருத்தமின்மைதான் காரணம். ஆர்.எச். பாக்டர் அமைப்புதான் இதற்கு அடிப்படை. இது இரத்தத்தில் பெரும்பாலானோருக்கு சிவப்பு அணுக்களில் உள்ள பொருள். இப்படி இருப்பவர்களை ஆர்.எச். பாஸிடிவ் அம்சம் கொண்டவர்கள் என்று சொல்லலாம். ஒருசிலருக்கு இப்படி இராது. அவர்களை ஆர்.எச். நெகடிவ் அம்சம் கொண்டவர்கள் என்று கூறலாம். நூற்றுக்குச் சுமார் பதினைந்து பேருக்கு இப்படி இருக்கக்கூடும். இது வம்ச வழியில் தலைமுறையையொட்டி ஏற்படக்கூடியது.

கணவருக்கு ஆர்.எச். 'பாஸிடிவ்' அம்சம் இருக்கலாம். அது அவர்களிடமிருந்து குழந்தைக்கு வந்து விடக்கூடும். குழந்தையின் தாய்க்கு ஆர்.எச். நெகடிவ் அம்சம் கொண்ட இரத்த அமைப்பு இருக்கக்கூடும். அப்போது தாயின் உடலில் ஒரு மறுப்பு தோன்றிக் குழந்தையின் இரத்தத்தில் முறிவு ஏற்படுகிறது.

முதற் பிரசவத்தில் குழந்தை இந்த அபாயத்திலிருந்து தப்பித்துக் கொள்வது சாத்தியம். ஆனால் தொடர்ந்த பிரசவங்களில் இத்தகைய மறுப்பு (Anti-bodies) தாயின் இரத்தத்தில் பலமாக ஊன்றி விடுகிறது. அது கருவில் அடுத்தபடியாகத் தோன்றும் குழந்தையைப் பாதிக்கிறது. "முதற் குழந்தை சரியாகத்தானே பிறந்தது டாக்டர்? இந்த முறை இப்படி ஆகிவிட்டதே?" என்று வருந்தும் தாய்மார்களை எனக்குத் தெரியும். அவர்கள் முன்கூட்டியே இரத்தப் பரிசோதனை செய்து கொண்டிருக்க மாட்டார்கள்; உரிய சிகிச்சையை மேற்கொண்டிருக்க மாட்டார்கள்.

குழந்தை பலமான காமாலை நோயுடனோ, மிகுந்த இரத்தச் சோகையுடனோ பிறக்கக்கூடும். கருவில் பாதிப்பு அதிகமாக இருந்து விட்டால், குழந்தை உயிரில்லாமலே பிறக்கலாம்; அல்லது பிறந்து சில நிமிடங்களில் உயிர் பிரிந்து விடும். குழந்தையின் இரத்தத்தைச் சோதனை செய்து, உடனே அதற்குரிய இஞ்செக்ஷன் கொடுத்து உயிரைக் காப்பாற்ற முயலலாம். குழந்தைக்கு இரத்த மாற்றம் செய்தும் உயிர் பிழைக்க வைக்கலாம். குழந்தையின் உடலில் உள்ள மறுப்பு தோன்றிய இரத்தத்தை வெளியேற்றி விட்டுப் புதிய இரத்தத்தைச் சேர்க்கலாம். தொடர்ந்து குழந்தை தனக்குத் தேவையான இரத்தத்தைத் தானே உற்பத்தி செய்து கொண்டு விடுகிறது."

"தாய்மை அடைந்துள்ள பெண்களுக்கு, சிறந்த அனுபவசாலியான நீங்கள் கூறும் ஆலோசனைக் குறிப்புகள் என்ன?"

டாக்டர் கல்யாணி : "கருவுற்ற நிலையில் ஆரம்பக் காலத்தில் கடுமையான வேலைகளில் ஈடுபடுவதும், அதிகமாக ஓடியாடுவதும் கூடாது. பிறகு தொடர்ந்த மாதங்களில் அதிகமாகச் சோர்வு ஏற்படாதவாறு இயன்ற வேலைகளைச் செய்யலாம். தினமும் காலாற நடப்பது நல்ல பயிற்சி.

அவர்கள் சௌகரியப்படி உடை அணியலாம். இரவு நேரங்களில் தளர்வான லேசான உடைகளை அணிவது நல்லது. எந்த நேரத்திலும் உடம்பை இறுக்கிப் பிடிக்கும் உடைகளை அணிய வேண்டாம்.

குளிப்பது நல்லது. உடம்பு முழுவதும், குறிப்பாகப் பிறவி உறுப்புக்களில் நிறையத் தண்ணீர்

விட்டுத் தேய்த்துக் குளிக்கலாம். ஆனால் தொட்டியில் உட்கார்ந்து குளிப்பது அவ்வளவு உசிதம் அல்ல. 'ஷவர்' அல்லது குழாயில் குளிப்பது நல்லது.

கணவருடன் தாம்பத்திய உறவு கொள்வதை முதல் மூன்று மாதங்களுக்கு நிறுத்தி வைப்பது நல்லது. தொடர்ந்த ஐந்து மாதங்களுக்கு வழக்கம் போல உறவுகொள்ளலாம். ஆனால் அழுத்தமோ, பிரயாசையோ ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கடைசி ஆறு வாரங்களுக்கு முற்றிலும் விலகி இருப்பது உசிதம்.

தாய்மைப் பருவத்தில் ஆரம்பக் காலங்களில் உணர்ச்சிவசப்படுவது சகஜம். கணவர் ஏதாவது சொன்னால் உடனே அழுகை வந்து விடும். சிறு தடைகள் கூட அழுகையை உண்டாக்கும். குழந்தைகள் தொந்தரவு செய்தால் ஆத்திரம் வரும். ஹார்மோன்கள் மாறுபடுவதால் இந்த மனநிலை ஏற்படுகிறது. படிப் படியாக எல்லாம் சரியாகி விடும்.

ஆரம்ப நிலையில் உடல்நிறை சற்றுக் குறையும். மசக்கை, சாப்பிட முடியாத அளவு உணர்ச்சிகள் ஆகியவற்றால் இந்த நிலை ஏற்படுகிறது. பிறகு உடல்நிறை இருபது பவுண்டு வரையில் கூடும். உடல் பருமனாக இருப்பவர்கள் உடல்நிறையைக் கட்டுப்பாடாக வைத்துக் கொள்வது நல்லது. டாக்டரின் ஆலோசனையின்படி. அளவான, சத்தான உணவைச் சாப்பிட வேண்டும்.

நிறையத் தண்ணீர் குடிக்கலாம். குறைந்த பட்சம் எட்டு தம்ளர் தண்ணீராவது குடிக்கலாம். அதிகமாகச் சர்க்கரை சேர்த்த பானங்களைக் குறைத்துக் கொள்ளுங்கள். நிறையத் தண்ணீர் அருந்துவது சிறுநீரகங்களை நல்ல நிலையில் சுத்தமாக்கி வைக்கும்.

ஆரம்ப நிலையில் முதல் மூன்று மாதங்களுக்குச் சிலருக்கு வாந்தி எடுக்கும் உணர்ச்சி ஏற்படலாம். கூடியவரை அதைப் பொருட்படுத்தாதீர்கள். வற்றல், புளிப்பான பொருட்கள், பால் சேர்க்காத பானங்கள் இவை நாக்கிற்கு ருசியாக இருக்கக்கூடும். மூன்று வேளை நிறையச் சாப்பிட முயலுவதை விட, அவ்வப்போது கொஞ்சமாக ஆறேழு தடவைகள் சாப்பிடலாம். சாப்பிட்ட பிறகு கொஞ்சம் ஓய்வு எடுங்கள். உங்களுக்கு ஒத்துவராத மணம் அல்லது வாசம் உள்ள இடங்களுக்குப் போகாதீர்கள்.

முதுகுவலி, அரிப்பு, அஜீரணம், மூச்சு வாங்குதல், கால் வீக்கம் ஆகியவை சில சமயங்களில் ஏற்படலாம். பலருக்கு இவற்றால் கவலை ஏற்படவும் கூடும். குறிப்பிட்ட குறைக்கு டாக்டரைப் பார்த்து ஆலோசனை பெறுவது நல்லது. சிலருக்கு இரத்த அழுத்தம் அதிகமாக இருக்கும். சிறுநீரில் அல்பமின் இருக்கலாம். இரத்தச்சோகை இருக்கலாம். இவற்றுக்கெல்லாம் சரியான கவனிப்பும் மருத்துவ ஆலோசனையும் தேவை.

பிரசவத்துக்குப் பிறகும் மூன்று மாதங்கள் வரை டாக்டரை அவ்வப்போது பார்த்து ஆலோசனை பெறுவது நல்லது.

டாக்டர்கள் பொதுவாக நமது வாழ்க்கையில், அவசியம் ஏற்பட்டால் சில நாட்கள் மற்றும் அறுவை சிகிச்சையானால் ஒரு மாதம் பங்குபெறலாம். ஆனால் என்னைப் போன்ற டாக்டர்கள் கர்ப்பம் தொடங்கிய சில மாதங்களிலிருந்து, பிரசவம் முடிந்து சில மாதங்கள் வரை - சுமார் பத்து மாதங்கள் வரை, தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆகவே எங்களுக்கும் இது பத்து மாத பந்தம்தான்!

அதனால் நாங்கள் குடும்பத்தில் ஒருவராக ஒன்றி விடுகிறோம். எங்களுடைய உதவியால் பிறந்த குழந்தைகள், தாய்மார்களாக மீண்டும் வந்து எங்களைச் சந்திக்கிறார்களே, அப்போது ஏற்படும் மகிழ்ச்சி - ஓ! அது மிக அபூர்வமானது!"

சின்னச் சின்ன கத்தரிக்காய்கள் இருந்தால்தான் முழுதாக 'எண்ணெய் கத்தரிக்காய்' செய்ய முடியுமென்பதில்லை, பெரிய கத்தரிக்காய்களிலும் செய்யலாம். கத்தரிக்காய்களை, சுருள் நார்த்தங்காய் ஊறுகாய்க்கு நறுக்குவது போல் அதாவது இதே போல் நறுக்கி, ஒவ்வொரு இடைவெளியிலும், அரைத்த அல்லது பொடி செய்த மசாலாக்களை அடைத்து அமுக்கி மூடி வைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெயைக் கொஞ்சம் தாராளமாக விட்டு, கத்தரிக்காய்களை ஒவ்வொன்றாகப் போட்டு, கரண்டியால் மெதுவாக ஒவ்வொன்றையும் திருப்பி, கத்தரிக்காய் வெந்து, பொன்னிறமானதும் இறக்கி விடவும். இது புதுமையாக இருக்கும்.

– எஸ். சரஸ்வதி சுவாமிநாதன்.



நவராத்திரியும் - பொம்மை கொலுவும் அம்பாள் பூஜைகளும் கோலாகலமாக வீடுகளில் கொண்டாடப்படுவதுடன் கோவில்களில் அம்பாள் இந்த ஒன்பது நாட்களும் துர்கா, லக்ஷ்மி, சரஸ்வதியாக கொலுவில் வீற்றிருந்து அருள்பாலிப்பது நாம் அறிந்ததுதான். நவராத்திரியைத் தொடர்ந்து புரட்டாசிப் பௌர்ணமி நாளன்று அம்பாளை ஸாகம்பரியாக வழிபடுவது பற்றி நமக்குச் சொல்கிறார் மயிலை கற்பகாம்பாள் திருக்கோவிலின் பிரதான அர்ச்சகரான திரு. விஸ்வநாத சிவாச்சாரியார் -



ஸாகம்பரி பூஜை

“சிவத்தலங்களில் கோலாகலமாகக் கொண்டாடப்படுவது இந்த ஸாகம்பரி பூஜை. சிவபெருமான் - ஸாகம்பரி. மஹாவிஷ்ணு - தான்யலட்சுமி. வைணவத்தில் தான்யங்களைக் கையிலேந்தி தான்ய லக்ஷ்மியாகக் காட்சி தருகிறாள் அவள். அங்கே இவள் ஸாகம்பரி. பத்ம புராணத்தில் ஸாகம்பரியை சூலம், பாஸம், பிரம்ம கபாலம், சாப(வில்), குளஸம் (இந்திரன் கையிலுள்ள வஜ்ராயுதம்) பாணான் (அம்பு), சிரிணம் (எய்த நிலை), கேடகம் என்னும் ஆயுதம், சங்கு, சக்ரம், கதாயுதம், அஹி (குறடு போன்றதொரு ஆயுதம்), கட்கம் (குத்துவாள்), அபயம் (காத்தல்), கட்வாங்கம் (முள்நீக்கும் குறடு), தண்டம் (தடி) என்பவைகளைத் தன் பதினாறு திருக்கரங்களில் தரித்தவள். இந்த மூன்று உலகங்களுக்கும் உணவுப் பஞ்சமோ, தண்ணீர்ப் (மழை) பஞ்சமோ இல்லாது காப்பவள். சிவந்த நிறம் கொண்டு காட்சி தரும் மஹேஸ்வரனின் பத்தினியான அவள் இந்த பூவுலகின் தாயானவள் என்கிறது ஸ்ரீ கத்வ நிதி என்னும்



• விஸ்வநாத சிவாச்சாரியார்

நூல்.

புரட்டாசிப் பௌர்ணமியன்று சிவாலயங்களில் காய்கறிகளைத் தோரணமாகக் கட்டுவதுடன் பால், தயிர், வெண்ணெய் போன்றவைகளையும் மெல்லிய பிளாஸ்டிக் பைகளிலிட்டுக் கட்டி தோரணங்களிடையே தொங்க விடுவர். முறுக்கு போன்ற பட்சணங்களையும், பலவித பழங்களும் அந்தத் தோரணத்தில் இடம்பெறும். பூசணி, புடலங்காய், கீரைகள், நெற்கதிர்கள், கரும்பு போன்றவைகளுடன் பலவித பச்சைக் காய்கறிகளும் தோரணங்களில் காட்சி தரும்.

இந்தத் தோரணங்களில் இடம்பெறுபவைகளை விவசாயிகளும், வியாபாரிகளும் தாமாகக் கொண்டு வந்து தருவது உண்டு. விளைச்சலும், வியாபாரமும் பெருகும் என்பது மறுக்க முடியாத நம்பிக்கை. ஸாகம்பரியாகக் காட்சி தரும் அவளுக்குக் காட்டில் அசுரர்கள் இதுபோல காய்கறிகள், கனிகள் கொண்டு அலங்காரமும், அர்ச்சனையும் செய்து அவைகளையே நைவேத்தியம் வைத்ததாகவும் சொல்வது உண்டு. இந்தத் தோரண அலங்காரங்கள் மூன்று நாட்கள் வரை அப்படியே இருக்கும். பின்பு இதைக் கொண்டு சமைத்த கதம்ப சாதத்தை அம்பாளுக்கு நைவேத்தியம் வைத்து கோவிலில் எல்லோருக்கும் விநியோகம் செய்வார்கள்.

"இன்னொரு வகையில் சொல்லப் போனால் புத்தகத்தில் மட்டுமே பார்த்துப் படித்துத் தெரிந்து கொண்ட பலவித காய்கறிகளைப் பார்த்துப் புரிந்து கொள்ள இந்த விழா ஒரு 'பிராக்டிகல் வகுப்பு' போல என்றும் சொல்லலாமே" - என்கிறார் விஸ்வநாத சிவாச்சாரியார். ஸாகம்பரியாக அம்பாளை தரிசிப்பதுடன் குழந்தைகளையும் அழைத்துச் சென்று காய்கறிகள் பலவற்றையும் அவர்கள் பார்த்துப் புரிந்து கொள்ளச் செய்யலாமே!

— வைதேகிதேசிகன்

கொலுவில் சிலரது குடும்ப வழக்கத்தின்படி (வரலெக்ஷ்மி நோன்பு விரதத்திற்குச் செய்வது போல்) தேங்காயில் மஞ்சள் தடவி கண், மூக்கு, வாய் அமைத்து கும்பத்தில் வைப்பார்கள். அவ்வாறு செய்யும் போது கும்பத்தைக் (கலசம்) சுற்றி சரிகையினால் அமைத்த பாவாடை (சிறிய பாவாடை செய்ய வேண்டும்) சுற்றி (போட்டு) கழுத்தில் நகைகளையும், காதில் ஜிமிக்கி, மூக்கில் புல்லாக்கு, கன்னத்தில் வெள்ளை வெள்ளி ஜிகினா தூவி அலங்கரித்து வைத்துப் பாருங்கள். அம்மனின் முகம் ஆனந்தமாக பளபளவென்று புது அமைப்புடன் பொலிவுடன் விளங்கும். தேங்காயில் மஞ்சள் ஈரமாக இருக்கும்போதே ஜிகினா தூவி விட வேண்டும்.



- வி. ராஜம் ராமன்.

ஸ்ரீ குரு ராகவேந்தராய நமஹ

ESTD : 1959 **Phone : 8444538 8442850**

புனித யாத்திரை **43 வருட அனுபவமுள்ள ஸ்தாபனம்**

15.10.2001 : 8 நாட்கள் கொண்ட ஸ்பெஷல் காசி யாத்திரை. காசி, கயா, அலகாபாத். கட்டணம் ரூ.**3,900/-**

25.10.2001 : 4 நாட்கள் கொண்ட மந்திராலய யாத்திரை - நெல்லூர், ஸ்ரீசைலம், மந்திராலயம், அகோபிலம், மகாநந்தி கட்டணம் ரூ.**1,400/-**

தீபாவளி கங்கா ஸ்நான ஸ்பெஷல்

05.11.2001 : 12 நாட்கள் கொண்ட தீபாவளி கங்கா ஸ்நான ஸ்பெஷல் பூரி, புவனேஸ்வர், கோனார்க், காசி கயா, அலகாபாத், அயோத்தியா முதலியன. தங்க அன்னபூரணி தரிசனம், லட்டு தேர், குத்து விளக்கு பூஜை விசேஷமாக செய்யப்படும். கட்டணம் ரூ.**5,200/-**

குறிப்பு : 1.10.2001 ஸ்பெஷல் 8 நாட்கள் காசி யாத்திரையில் பலருக்கு இடம் இல்லாததால் மீண்டும் 15.10.2001ல் புறப்படுகிறது. சென்ற ஆண்டு தீபாவளி கங்காஸ்நான யாததிரையில் பலருக்கு இடம் இல்லாததால் இவ்வாண்டு 3 மாதங்களுக்கு முன்கூட்டியே அறிவிப்பு கொடுத்துள்ளோம். கலந்து கொள்ளும் அன்பர்கள் உடன் தொடர்பு கொண்டு தேவையான டிக்கட்டுகளை முன் பதிவு செய்து கொள்ளவும். எங்களது கட்டணத்தில் காலை காபி டிபன் 2 வேளை சாப்பாடு, ஊர் சுற்றிப் பார்க்கும் செலவுகள் பஸ் ரயில் கட்டணம் உட்பட்டது. முன் பதிவு செய்யும் அன்பர்களுக்கு பஸ்ஸில் முன்னுரிமை அளிக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு :

ஸ்ரீ விஜயா டிராவல் சர்வீஸ்

30, ஆரிமுத்து ஆசாரி தெரு. (விவேகானந்தர் இல்லம் பஸ் நிலையம் அருகில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. ✆ : 8444538, 8442850 ஸ்தாபகர் : வி. சுப்பாராவ் உரிமையாளர் : எஸ்.பத்ரி

குறிப்பு : எல்லா வண்டிகளுக்கும் காலை டிபன், காபி, 2 வேளை உணவு, தங்குமிடவசதி உட்பட்டது. சரியான கவனிப்பு உண்டு.



மகிழ்வித்து மகிழுங்கள்

நவராத்திரி, தீபாவளி நல்வாழ்த்துக்கள்



பிறந்த நாட்களில், திருமண நாட்களில், பணிவாய்ப்பு கிடைத்த நாட்களில், பெரியோர்களை நினைக்கும் நாட்களில், ஊதியம் பெறும் நாட்களில், எப்போது வேண்டுமானாலும்...



நிறுவனர்
அமரர். சர்தார்.
வேதரத்னம்
தயாள்தலை

- கல்விக்கண் திறந்து வைக்க விரும்புகிறேன்.
- பெண் குழந்தைகளுக்கு உதவ விரும்புகிறேன்.
- படிக்கும் பெண் குழந்தைகளுக்கு உணவளிக்க விரும்புகிறேன்.
- சாதிவெறியில்லாத சமுதாயத்திற்கு உதவ வேண்டுகிறேன்.
- கிராமப்புற சிறுமியருக்கு கஷ்டம் அதிகம் அவர்களுக்கு உதவ விரும்புகிறேன்.
- எட்டும்படிப்புடன் கைத்தொழில் கற்றுத்தர உதவ விரும்புகிறேன்.
- நோய்வாய்ப்பட்ட சிறுமியருக்கு மருந்தளிக்க விரும்புகிறேன்.
- சிறுமியருக்கு நல்வாழ்க்கை அமைய உதவ விரும்புகிறேன்.
- முகம் தெரியாத, யாரும் இல்லாத சிறுமியருக்கு உதவ விரும்புகிறேன்...
- உடை தானமளிக்க, புத்தகம் தானமளிக்க விரும்புகிறேன்.
- நீண்டகாலமாக அன்னதானம் செய்துவரும் நிலையத்திற்கு உதவ விரும்புகிறேன்...
- பசுக்களைப் பராமரிக்க விரும்புகிறேன்.
- சிறுமியர், சுவாசினிகள் எனப்படுவதால் அவர்களுக்கு நவராத்திரி சமயத்தில் உதவ விரும்புகிறேன்.

என்று நினைக்கும் உங்களுக்கு அன்னதானம், ஔஷததானம், அபயதானம், சாஸ்திரதானம், போன்ற பல வாய்ப்பினை அளித்து, மகிழ்வித்து மகிழ வேதாரண்யம் கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் இந்த வேண்டுகோளை வைக்கிறது.

கல்வி பயிலும் ஏழை எளிய ஏதிலிச் சிறுமியருக்கு உதவுங்கள். கிராமப்புற சிறுமியருக்கு இலவச உணவு, உடை, இருப்பிடம், கல்வி, பதினொறு தொழிற்பயிற்சிகள் ஆகியன தந்து 55 ஆண்டுகளாக ஆதரிக்கும் தேசிய விருது பெற்ற குருகுலம் மகளிர் தொண்டு நிறுவனத்திற்கு ஆதரவு தாருங்கள். நன்கொடைகளைப் பொருளாகவோ தொகையாகவோ அனுப்பி உதவுங்கள்.

முகவரி : **கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம்**
தேசிய விருது பெற்ற மகளிர் தொண்டு நிறுவனம், த.பெ.எண். 2. வேதாரண்யம் – 614 810.
நாகப்பட்டினம் மாவட்டம். தமிழ்நாடு. போன் : (04369) 50227, 50027, 50011
தந்தி: *GURUKULAM, VEDARANIAM - 614 810*

கொடுத்தால் வரும். தர்மம் தலைகாக்கும்.

ஏன், நாங்களும்தான் கொண்டாடுகிறோம்! ...



நவராத்திரி என்றாலே பெண்களுக்கெல்லாம் கொண்டாட்டம்தான். விதவிதமாகக் கொலு, நண்பிகளுடன் அரட்டை, தாம்பூலம், பெண் குழந்தைகளுக்கு அலங்காரம் இப்படி... சுவையான இனிப்புகளும் சுண்டலும் இதோடு கூட போனஸ். இதே பண்டிகை ஆண்களை எவ்வாறு கவர்கிறது? இதில் ஈடுபாடு உண்டா? உங்களை எப்படி இப் பண்டிகையுடன் இணைத்துக் கொள்கிறீர்கள் எனச் சில ஆண்களைக் கேட்ட போது வியப்பாக இருந்தது அவர்களின் பதில்!



• ராம்கோபால்

திரு. சங்கரசுப்பிரமணியம் :

"என்னுடைய சிறு வயதில் என்னுடைய பாட்டியுடனும், தாத்தாவுடனும் ஊரில் வளர்ந்தேன். அப்போது வீட்டில் கொலு வைக்க உதவும் கை என்னுடையதுதான். அதன் பிறகு பள்ளிப் படிப்பு முடித்து கல்லூரிக்காக சென்னை வந்து பெற்றோருடன் இருந்த போது சகோதரியின் அதீத ஈடுபாட்டினால், தொடர்ந்து உதவ நேர்ந்தது. உடலுழைப்பால் மட்டுமே உதவிக் கொண்டிருந்த எனக்கு வேலைக்குச் செல்ல ஆரம்பித்ததும் பொம்மைகளையும் வாங்கித் தந்து, அதை வைத்து அலங்கரிப்பதிலும் உதவ முடிந்தது. இவ்வாறு பொம்மை வாங்கும் ஆர்வம் சிறிது சிறிதாக வளர்ந்து எந்த ஊருக்குச் சென்றாலும் அந்த ஊரின் கலைநயத்திற்கு ஏற்ப செய்யப்பட்டுள்ள பொம்மைகளை வாங்குவது தவிர வேறு எதனையும் பார்ப்பதில்லை என்ற அளவிற்கு அதிகரித்து விட்டது.

• நாகராஜன்



எங்கள் குடும்பம் ஒரு கூட்டுக் குடும்பம். பெற்றோருடன் என்னுடைய குடும்பமும், சகோதரியின் குடும்பமும் சேர்ந்து வாழ்கிறோம். எங்கள் வீட்டின் மாடிப்பகுதி முழுவதையும் நவராத்திரிக்கு நான்கு வாரம் முன்பே சுத்தம் செய்து, கொலுவிற்குத் தேவையான பொருட்களைச் சேகரிக்கத் தொடங்குவோம். எங்களது வீட்டுப் பகுதியில் கொலு வைக்கும் போட்டி நடைபெறுவதால் அதில் பங்கேற்க வருடா வருடம் ஒரு குறிப்பிட்ட தீம் எடுத்துக் கொள்வோம். அதோடு வருடம் முழுவதும் நடந்த செயல்களைச் சித்தரிக்க பொம்மைகளை நிகழ்ச்சிக்கு ஏற்ப மாற்றி விடுவோம்.

விடுமுறைக்காக புதுதில்லி, காசி, துவாரகா, கல்கத்தா, சிக்கிம் போன்ற இடங்களுக்குச் சென்ற போது பல பொம்மைகள் வாங்கிச் சேகரித்துள்ளோம். எனது சகோதரியின் கணவர் தான் சிறுவயதில் வாழ்ந்த வீட்டைக் கூட, அதே வீட்டின் கதவுகளில் கிடைத்த மரத்தினைக் கொண்டு மாடலாக செய்துள்ளார். வீட்டில் உள்ள ஒவ்வொருவரும், மற்றும் வெளிநாட்டிலுள்ள சகோதரியின் பிள்ளைகளும் ஒரு மாதத்திற்கு வேறு எந்த சிந்தனையும் இல்லாமல் அளவில்லாத ஈடுபாட்டுடன் கொண்டாடும் பண்டிகை நவராத்திரி.



• பிரவீன்



சகோதரியின் இந்த அன்புத் தொல்லையினால் சிரமப்பட்டு உழைத்தாலும், கொலுவிற்கு வருபவர்கள் புகழ்ந்து பாராட்டும் போது அளவில்லாத ஊக்கம் கிடைத்து விடுகிறது. பட்ட சிரமம் பஞ்சாகப் பறந்து விடுகிறது!



• சங்கரசுப்பிரமணியம்

திரு. ராம்கோபால் :

''நவராத்திரி என்ற பண்டிகை இந்துக்களின் முக்கியப் பண்டிகைகளில் ஒன்று. பண்டிகைகள் பல கொண்டாடப்பட்டாலும், சில சாஸ்திர சம்பிரதாயங்களுக்கு அதிக முக்கியத்துவமும், சில கொண்டாட்டங்களுக்கும் கேளிக்கைகளுக்கும் அதிக சிரத்தையும் தருபவையாக இருக்கின்றன. நவராத்திரி பண்டிகை மட்டும் இவை அனைத்தையும் இணைத்தபடி மக்களால் கொண்டாடப்படுகிறது. ஒன்பது நாட்களும் வீட்டிலும், கோவில்களிலும், ஏன் ஊரெங்கிலும் பார்த்தால் ஒரு பண்டிகையின் உற்சாகம் அனைவரிடமும்' பரவியிருக்கிறது.

பொம்மை வடிவில் கொலுவினை வைப்பதால் வீட்டிலுள்ள சிறு குழந்தைகளுக்குக் கூட கடவுளிடம் அன்னியோன்னியம் பிறக்கிறது. கடவுள் என்றாலே, 'சாமி கண்ணைக் குத்தும்' என்று பயப்படும் குழந்தை கூட பொம்மை வடிவில் கொலு வைத்து வணங்கும்போது பயம் நீங்கி பாசத்துடன் பழகுகிறது. ஒன்பது நாட்களுக்கு வீட்டு வேலையையும் செய்து, மற்றவர்களை அழைத்துத் தாம்பூலம் அளித்து, தானும் மற்றவர்கள் வீட்டிற்குச் சென்று தாம்பூலம் பெறுவது, ஆலயங்களில் பூஜை

களில் கலந்து கொள்வது, ஸ்லோகங்கள் சொல்வது, குழந்தைகளை உற்சாகப்படுத்துவது என பெரும்பங்கு இப் பண்டிகையில் பெண்களுக்குத்தான்.

இப் பண்டிகையில் ஆண்கள் அதிகம் ஈடுபட முடியாவிட்டாலும் பெண்களுடன் இணைந்து கைகொடுத்து வேலையில் உதவலாம். இந்த ஒன்பது நாட்கள் அவர்களிடமிருந்து எந்த உதவியையும் எதிர்பாராமல், மாறாக முடிந்த அளவு நாம் ஒத்துழைக்கலாம்.

பொருள் ஈட்டும் பணியில் அதிகம் ஈடுபட்டு இருப்பதே ஆண்களின் சுபாவம். அதனால் அவர்கள் பணியிலிருந்து இப்படிப் பட்ட நீண்ட பண்டிகையில் பெரிதளவு ஈடுபடுத்திக் கொள்வது என்பது சிரமமான ஒன்று. இருப்பினும் கடைசி நாளான தசமியன்று குடும்பத்தில் அனைவரும் இணைந்து அனைத்து தெய்வங்களுக்கும் நன்றி கூறி குருவைக் கட்டாயம் வணங்க வேண்டும்."

திரு. பிரவீன் :

"கேரள மாநிலத்தைச் சேர்ந்த நான் சிறு வயது முதலே தமிழ்க் குடும்பம் ஒன்றில்தான் வளர்ந்தேன். சிறு வயது முதல் அவர்கள் வீட்டில் வைக்கும் கொலுவில் என்னுடைய விளையாட்டுப் பொம்மைகளும் இடம் பெறும். ஒவ்வொரு வருடமும் திட்டமிட்டு மிக விமரிசையாக அவர்கள் கொண்டாடுவதைப் பார்த்துக் கொண்டே வந்ததில், ஒரு குறிப்பிட்ட 'தீம்' என்று எடுத்துக் கொண்டால் அதை ஒரு ஒழுங்குமுறையாகக் கண்காட்சியில் வைப்பது எப்படி என்ற விவரம் புரிய ஆரம்பித்தது. இதனால் என் பள்ளி நாட்களில் நடந்த விஞ்ஞான பொருட் காட்சிகளில் என்னால் பிரமிக்கத்தக்க மாடல்களையும் செய்து, பார்ப்பவர்களை மனதைக் கவர்ந்து புரியக்கூடிய அளவில் கண்காட்சியை நடத்திச் செல்லவும் முடிந்தது. இதனால் பள்ளியில் எனக்கு நல்ல பெயர் கிட்டியது.



கோயிலிலோ, வீட்டு வாசலிலோ சூடம் ஏற்றும் பொழுது காற்றினால் அணைந்து, அணைந்து போகிறதா? உடனே சூடத்தை கையினால் பொடியாக நொறுக்கிக் கொண்டு அதன்பின் வைத்து தீயை உரசி வையுங்கள். அழகாக எரியும்.

— அஞ்சலி மாரியப்பன்.

வளர்ந்து படித்து வேலைக்குச் சென்ற பிறகும் கூட, அக் குடும்பத்தினருடன் இன்றும் கொலு வைப்பதில் ஈடுபடுவதால், வாங்கும் பொருட்கள் ஒவ்வொன்றையும் கொலுவில் வைக்கக்கூடிய அளவிற்கு கலைக்கண்ணுடன் பார்த்து வாங்க முடிகிறது.

நான் பணிபுரியும் அலுவலகத்தில் முதல் வருடம் கொலு வைப்பதற்கு உதவ வேண்டும் என்று காரணம் கூறி விடுமுறை கேட்ட போது என்னை மிகவும் வினோதமாகப் பார்த்தார்கள். அந்த வருடம் கொலு சமயத்தில் அலுவலக நண்பர்களைக் கட்டாயப் படுத்தி அழைத்துக் கொலுவைப் பார்க்க அழைத்து வந்தேன். மிகப் பெரிய அளவில், வருடம் முழுவதும் நடந்த நிகழ்ச்சிகளை தத்ரூபமாக பொம்மைகளைக் கொண்டு காட்டியிருப்பதைக் கண்டு வியந்த அவர்கள் பின்னர், வருடா வருடமும்,

"இந்த வருடம் கொலுவில் என்னென்ன வைக்கப் போகிறீர்கள்? ஒலிம்பிக்ஸ் நிகழ்ச்சியா? போக்ரான் அணுகுண்டா? முஷாரஃப் பேச்சு வார்த்தையா?"

என்று கேள்வி மேல் கேள்வி கேட்பார்கள். கொலு வைத்தாயிற்றா? எப்போது பார்க்கலாம் என்று ஆவலுடன் கேட்பார்கள். எனது கலையுணர்வையும், எதையும் கவனித்துப் பார்த்துச் செயல்படும் திறனையும், பலருடன் இணைந்து ஒற்றுமையாக செயல்படும் சுபாவத்தையும் வளர்த்தது நவராத்திரி பண்டிகைதான்."

திரு. நாகராஜன் :

"நவராத்திரி பண்டிகையை பெண்மணிகளின் பண்டிகை என்று பொதுவாகக் கூறுவார்கள். ஆனால் அது தவறு என்பதே என் கருத்து. ஏன் என்கிறீர்களா? எங்கள் வீட்டில் கொலுவில் என்னுடைய பங்கு ஐந்து ஆறு விதங்களில் இருக்கும்.

முதலாவதாக கொலுவினைக் கொண்டாட தேவையான அளவிற்குப் பணத்தை ஒதுக்குவது. என் மனைவி சாஸ்திர சம்பிரதாயங்களை அதிகம் கடைப்பிடிப்பவள். அத

னால் தினமும் விதவிதமாக பிரசாதம் செய்வதும், வருவோர் அனைவருக்கும் தாம்பூலம், ரவிக்கைத் துணி வைத்துத் தருவதும் அவளுக்குப் பிடித்தமான விஷயம். இதை ஆமோதித்த அவளுடன் என் அம்மாவும் சேர்ந்து கூட்டணி. இவற்றிற்கு நான் ஈடுகொடுக்க வேண்டும்.

இரண்டாவதாக நான் ஒரு இன்ஜினியர். அதனால் கொலுவினைச் சுற்றிச் செய்யப்படும் மின்விளக்கு அலங்காரம், அலங்காரப் பார்க்கில் ஆங்காங்கே ஃபவுண்ட்டன் அமைத்துத் தருவது. (சென்னையில் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் இப்போது கஷ்டப்படுவதால் இந்த வருடம் இந்த வேலை கிடையாது). கீழே ஒரு நகரத்தையே திட்டமிட்டு உருவாக்கித் தருவது போன்றவை என் வேலை. இன்ஜினியர் என்றால் இவை எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்பது என் குடும்பத்தாரின் அபிப்பிராயம்.

கொலு பொம்மைகளை வைக்க வேண்டிய படியைக் கட்டுவது ஒரு பெரிய காரியம். அதைக் கட்ட வேண்டிய கார்ப்பெண்ட்டரை தேடிப் பிடித்துப் படியை அவனுடன் சேர்ந்து பிடித்துக் கட்ட வேண்டும். கொலு என்று ஆரம்பித்தாலும் அதற்கு முன் வரும் ஞாயிற்றுக்கிழமையே படியைக் கட்டி விட வேண்டும். இல்லையென்றால், ஆபிசில் லீவு எடுத்தால் கார்பென்ட்டரை மேலதிகாரி வீட்டிற்கு முதலில் அனுப்ப வேண்டி வரும்! இதனால் கொலு வைக்கும் அறையில் உள்ள சாமான்களையெல்லாம் அதற்கும் முதல் நாளே வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும்.

படி கட்டியாயிற்று. கொலு படி மீது போட என்னுடைய நல்ல வேஷ்டிகளைத் தியாகம் செய்ய வேண்டும். மேலிருந்து பொம்மையை இறக்கி பிரித்துப் பார்த்தால், எவ்வளவுதான் கவனமாக வைத்திருந்தாலும் சிலவற்றிற்குக் கை உடைந்திருக்கும். சில பொம்மைகளுடன் சேர்ந்து வரும் வாள், வேல், சங்கு சக்கரம், சூலம் போன்றவை விழுந்திருக்கும். இவற்றைக் கவனமாக ஒட்ட வேண்டும். ஒரு வருடம் ஆபிசில் ஏதோ வேலை காரணமாக வீட்டு வேலையாளிடம் பொம்மைகளை ஒட்டி சரிசெய்யச் சொல்லித் தேவையான பெவிகால் வாங்கித் தந்தேன். அடுத்த நாள் கொலு வைக்கும் போது தூக்கி வாரிப் போட்டது.

கண்ணன் கையில் வாழைப்பழம், குரங்கு கையில் குழல். சன்யாசி கையில் துப்பாக்கி; சிப்பாய்க் கையில் ஜபமாலை. ராஜாவின் கையில் ஊன்றுகோல்; பிச்சைக்காரன் கையில் வாள். கங்காரு வயிற்றில் மூஞ்சூறு; பிள்ளையாரிடம் குட்டி கங்காரு.

அதன் பிறகு வருடாவருடம் உடைந்த பொம்மைகளை சரிசெய்து புதிதாக வர்ணம் பூசுவதும் என் வேலைதான்.

ஒன்பது நாளும் வீட்டிற்குப் பெண்மணிகளும் குழந்தைகளும் வருவார்கள். அவர்கள் சங்கோஜப்படாமலிருக்க இரவு ஆபீசை மூடிவிட்டு லேட்டாகத்தான் திரும்புவேன். அது நடுக்கும் குன்னூர் குளிராக இருந்தால் கூட! கொலு முடிந்து பொம்மைகளை எடுத்ததும் அதை வீட்டில் உள்ள அனைவரும் சேர்ந்து கட்டி பெட்டியில் வைப்போம். மேலே தூக்கி பரணில் வைக்கக்கூடியது வீட்டின் ஒரே ஆண்மகனான நான்தான்.

இப்போது சொல்லுங்கள். நவராத்திரி பெண்மணிகளின் பண்டிகையா? கிடையாது. குடும்பத்தில் உள்ள அனைவரும் கைகொடுத்து இணைந்து கொண்டாட வேண்டிய பண்டிகை.

தொகுப்பு : **ராஜ்யஸ்ரீ சந்திரசேகர்**

வீட்டில் உள்ள சேப்பங்கிழங்கில் சில சமயங்களில் முளை வந்திருக்கும். அதுபோன்ற கிழங்கை தூரப் போடாமல் உங்கள் வீட்டுத் தொட்டியில் புதைத்து வையுங்கள். அழகான டிசைன் வடிவ வழுவழுப்பான இலையுடன் சேப்பங்கிழங்கு செடி வளரத் தொடங்கி, உங்கள் வீட்டுத் தோட்டத்தை (அ) பால்கனியை மிகவும் அழகாக அலங்கரிக்கும். காம்பும் கிளையும் இலையும் பார்க்க மிக மிக அழகுடன் குரோட்டன்ஸ் போன்று தோற்றத்துடன் காட்சி அளிக்கும்.

– பாலசரஸ்வதி இராஜேந்திரன்.



அழகு

அழகு செய்ய...



பதில்கள் :
ஹேமா லக்ஷ்மண்
(அழகு மற்றும் உணவுக் கலை நிபுணர்)

முகப்பருவினால் உண்டாகும் கரும்புள்ளிகளை எப்படிப் போக்குவது? உணவு முறை, கரும்புள்ளி வராமல் தடுப்பது எப்படி?

ராணிமேரி, மேட்டுப்பாளையம்.

அஜீரணத்தினால் அவதிப்படுபவர்களுக்கு முகப்பரு வந்து அதனால் கரும்புள்ளிகள் தோன்றக்கூடும். எலுமிச்சம் பழத்தைச் சாறு பிழிந்து சர்க்கரை சேர்க்காமல் நீருடன் பருகி வந்தால் ஆச்சர்யப்படும்படியான மாறுதல் ஏற்படும். எலுமிச்சம் சாற்றுடன், வெள்ளரிச் சாறும் கலந்து கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தடவினால் கரும்புள்ளிகள் நாளடைவில் மறையும்.

கரும்புள்ளிகள் வராமல் தடுக்க தினசரி அதிகாலையில் எழுந்ததும் ஓர் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து சுத்த நீருடன் கலந்து பருகி வர வேண்டும். ருசிக்காகச் சர்க்கரை சேர்க்க வேண்டாம். மதிய உணவில் கூட மோரில் எலுமிச்சம் பழம் பிழிந்து சாப்பிடலாம். வைட்டமின் 'சி' சத்து கரும்புள்ளி வராமல் தடுக்கும். பச்சைக் காய்கறிகளின் சாலட் நிறைய சாப்பிடவும்.



தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பது நல்லதா? ஏன், எந்த நாள் தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பது நல்லது?

விரிவான பதில் தேவை.

பவானி, கோயம்புத்தூர்.

மக்களுக்கு ஞாபகசக்தி வளர உடற்பலம், மனோபலம், மூளையின் பலம் நன்றாக இருக்க வேண்டியிருக்கிறது. இதற்கு தைல ஸ்நானம் மிகவும் அவசியமாகிறது, நம் முன்னோர்கள் வகுத்த முறைதான். இந்த அவசர யுகத்தில் எந்த நாள் நமக்கு உகந்த தாக இருக்கிறதோ, அன்று தலைக்கு ஸ்நானம் செய்து ஈரம் போக தலையைத் துடைத்துக் கொள்ளவும்.

நம் முன்னோர்கள் சொன்னது – கல்வியும், ஞாபக சக்தியும் மூளை பலமும் பெற விரும்புவோர் சனிக்கிழமையிலும், புதன் கிழமையிலும் எண்ணெய் தேய்த்துக் கொண்டு ஸ்நானம் செய்ய வேண்டும். சனியும், புதனும் புத்திக்குத் தொடர்புடைய கிரகங்களாகையால் அந்த இரண்டு நாளும் ஸ்நானத்திற்குச் சிறந்ததாகக் கொள்ளப்பட்டது.

கடந்த ஆறு மாத காலமாக உடற் பயிற்சி நிலையத்தில் உடற்பயிற்சி செய்து வருகிறேன். ஆனாலும் உடம்பு சிறிதும் இளைக்கவேயில்லை. தயவுசெய்து உடனே உடல் எடை குறைய டயட் சார்ட் தரவும்.

மங்கையர் மலர் வாசகி, நாக்பூர்.

உடற்பயிற்சி நிலையத்திற்கு ஆறு மாத மாகப் போய் வருகிறேன் என்று எண்ணு வதே தவறு. உடற்பயிற்சி நிலையத்தில் அவர்கள் சொல்லுவது போல் செய்து வந்தால் வாரம், வாரம் உடல் எடை குறைய நிறைய வாய்ப்பு இருக்கிறது. பயிற்சி செய்த பின் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய முறைகள் நிறைய இருக்கிறது. உடலை இயற்கையாகவே வலுவுள்ளதாக வைத்துக் கொண்டால் எந்த நோயும் அணுகாது. அதற்கு உடற்பயிற்சி அவசியம்.

முதலில் நாம் நன்கு இளைப்போம். இளைத்து விடுவோம் என்ற மனோ பாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். பிறகு பலனைத் தேட ஆரம்பிக்கவும். காலையில் 'வாக்' அவசியம் போகவும். உடற் பயிற்சிக் கூடங்களில் 'ஸ்டீம்பாத்' செய்து கொள்ளவும். 'ஸ்டீம்பாத்' செய்து கொண்டால் எந்தவிதமான பக்கவிளைவுகளும் ஏற்படாது.

சில உணவுப் பதார்த்தங்களைத் தவிர்ப்பதன் மூலம் உடலின் எடையைக் குறைக்கலாம். நீர் மோர், இலையுடன் கூடிய பச்சைக் காய்கறிகள், காய்கறி சூப், காய்கறி சாலட்டுகள், பழங்கள் உடல் எடை குறைய உதவியைச் செய்யும்.

காலை உணவு – 8.30 – 9.00 மணிக்குள். எண்ணெய் இல்லாமல் ஒரு தோசை, இரண்டு சப்பாத்தி. இல்லையென்றால் கட் பண்ணிய பழங்கள் நிறைய சாப்பிடவும்.

நான் மிகவும் ஒல்லியாக இருக்கிறேன். பெங்களூரில் இருக்கும் நான் பிரபல கம்பெனியின் உயர் அதிகாரியாக இருக்கிறேன். வீட்டை மிக மிக சுத்தமாக வைப்பேன். மாதம் ஒருமுறை தலை முதல் கால் வரை எல்லா அழகு சிகிச்சையும் அழகு நிலையத்தில் செய்து கொள்கிறேன். குண்டாக ஆவதற்கு வழி சொல்லுங்கள்.

ராணி சம்பத், பெங்களூர்.

உங்கள் கடிதத்திலிருந்து தெரிந்து கொண்டது வேளைக்குத் தவறாமல் சாப்பிட மறந்து விடுவதுதான். பிறகு வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியதுதான். அதுவே ஒரு மேனியாவாக இருக்கக் கூடாது. பத்து தரம் பாத்திரம் அலம்பி சமைப்பதற்குள் உங்களுக்கு நேரமாகி விடுகிறது. தயவு


இந்தத் தடவை கொலுவில் ப்யூஸ் ஆன சின்னச் சின்ன பல்புகளை சேகரித்துக் கொண்டு, அதற்கு முகம் வரைய வேண்டும். சிலவற்றுக்கு ஆண் முகம் சிலவற்றுக்குப் பெண் முகம் வரைந்து கொண்டு பாட்டில் களுக்குப் புடவை, வேஷ்டி, லுங்கி போன்ற உடைகளைக் கட்டி, இந்த முகங்களை பாட்டில்களின் மேல் பொருத்தி நகை போட அழகு ஜொலிக்கும்.

– சொர்ணா.



கடையில் மலிவாக விற்கும் சிறிய பிளாஸ்டிக்கில் ஆன பறவை பொம்மையை வாங்கி அதில் அந்தப் பறவையின் நிறத்திற்கேற்ப அந்தந்த கலர் சமிக்கிகளைக் குண்டூசியால் மாட்டி நெருக்கமாகக் குத்தவும். மூக்குப் பாகத்திற்கு வேறொரு கலரில் சமிக்கியால் குத்தவும். இதை உங்கள் வீட்டு கொலுப் படியில் தொங்க விட்டால் அழகாக ஜொலிக்கவும் செய்யும்.

— விசாலாட்சி.



செய்து முக்கியமாக வீடு சுத்தமாக இருக்க வேண்டுமென்பதை ஒரு எல்லைக்குள் வைத்துக் கொள்ளுங்கள்.

உடலின் ஆக்கத்துக்கு புரதம், மரப் பொருள், கொழுப்புச் சத்துப் பொருள், வைட்டமின்கள் எனப்படும் உயிர்ச்சத்துகள், பாஸ்பரஸ், கால்ஷியம் எனப்படும் உப்புகள் ஆகிய இவையெல்லாம் தேவையான அளவு கலந்த உணவே மிக மிக முக்கியமானதாகும். அதிகமாக கொழுப்பு அல்லது சர்க்கரை சத்துள்ள உணவு வகைகளை உட்கொள்ளலாம். பாதாம் பருப்பு 10, பால் 1 தம்ளர் சாப்பிடவும். உடல் சிறிது பெருத்து மேனி எழிலும் பெருகும்.

பல தடவை உங்களிடம் பல பேர் கேட்ட கேள்விதான். ஆனாலும் பதில் அளிக்கவும். முடி மிகவும் கொட்டுகிறது. தலைக்கு அடிக்கடி குளிப்பேன் சரியா?

கோமளா வரதன், திண்டுக்கல்.

உங்கள் கடிதத்திலிருந்து தெரிந்து கொண்டது – குளித்த பிறகு எண்ணெயைத் தடவுவீர்கள். அப்படிச் செய்யக் கூடாது. குளித்தவுடனேயே எண்ணெய் தடவுவதால் தலையில் உள்ள ஈரமும் காய்வதில்லை. எண்ணெய்ப் பசையாலும் ஈரத்தாலும் வெளிக் காற்றும் அழுக்குகளும் சுலபமாய்த் தலையில் ஒட்டிக் கொள்ளும். ஆதலால்தான் தலை முடி கொட்டுகிறது. இரத்த சோகையினாலும் முடி கொட்டும். டாக்டரிடம் ஆலோசனை கேட்டு மருந்துகள் சாப்பிடவும்.

மூலிகை எண்ணெய், ஹென்னா போட்டு தலைக்குக் குளித்தாலும் முடி கொட்டுவது நிற்கும். வெந்த உணவுகளைக் குறைத்து, பழங்களை நிறையச் சாப்பிடவும். வெண்ணெய் எடுக்கப்பட்ட மோரைத் தாராளமாகப் பயன்படுத்தினால் நல்ல பலன் இருக்கும்.

நான் மிகவும் கருப்பாக இருக்கிறேன். சிவப்பாக மாற என்ன செய்ய வேண்டும்? கெமிக்கல் பீலிங் செய்து கொள்ளலாமா? மூலிகை எண்ணெய் ஹென்னா உங்களிடமிருந்து வாங்க முடியுமா?


லதா ராம்குமார், அபுதாபி. யு.ஏ.ஈ.

ஆரோக்கியத்துக்கும் உடலின் சிவப்பு நிறத்துக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. நல்ல ஆரோக்கியத்துடன் விளங்கும் ஒரு கறுப்பு நிறப் பெண் ஓரளவுக்கு மாநிறமாகவும் மிகவும் கவர்ச்சிகரமாகவும் காட்சியளிப்பாள். ஆனால் இயற்கையாகவே சிவப்பு நிறமாகக் காட்சியளிக்கும் ஒரு பெண் தன் உடல் நலனில் அக்கறை காண்பிக்காமல் ஆரோக்கியத்தை கெடுத்துக் கொண்டிருந்தால் அவளுடைய சிவப்பு நிறம் மங்கி பார்க்க நன்றாக இருக்காது. சிவப்பு அழகியாகத் திகழ வேண்டும் என்று ஒவ்வொரு பெண்ணும் அதிகம் உடலை போட்டு வறுத்தக் கூடாது. லோஷன், கிரீம், மாய்ச்சரைஸர் போன்றவற்றை உங்கள் சருமத்திற்கு ஏற்றவாறு உபயோகப்படுத்த வேண்டும். (எந்த வகையான சருமம் என்று கண்டறிந்து) நாளொன்றுக்கு ஒருமுறை "மாய்ச்சரைஸர்" தடவினால் போதும். ஸ்கின் பீலிங் செய்வதானால் தோல் சிறப்பு மருத்துவரை அணுகி செய்து கொள்ளவும். உடனே சிவப்பாக மாற முடியாது.

பழம், காய்கறிகள், நிறைய மோர் சாப்பிடவும். உயர்தர மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கும் ஹென்னா, மூலிகை எண்ணெய் சென்னை வரும் போது பெற்றுக் கொள்ளவும்.

1

கல்யாண பல்லக்கு



இரண்டாவது முறை கல்யாணத்தை ஒத்திப் போட அவங்க சம்மதிக்கணுமே'' அம்மா கவலையோடு கேட்டாள்.

''இது ஒரு சந்தோஷமான விஷயம் தானேம்மா. நீ எதுக்குக் கவலைப்படறே? இப்படி ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைக்கறதுக்கு நியாயமா அவங்க பெருமைப்படணும். உனக்கு பயமார்ந்தா சொல்லு, நானே பிரபுவோட பேசறேன்'' ஹரிணி அம்மாவைச் சமாதானப் படுத்தியபடி டெலிபோனை எடுக்க, அம்மா சட்டென்று ரிசீவரைப் பிடுங்கி வைத்தாள்.

''அவசரப்படாதே. நீ இப்படியெல்லாம் நினைச்சப்போ அவனோட பேசறது அவங்க வீட்டுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ? அவங்கள்ளாம் பார்க்கத்தான் மாடர்னா இருக்காங்களே தவிர, இன்னும் சில விஷயத்துல சம்பிர தாயம் பார்க்கறவங்களாதான் இருக்காங்க. எது வாயிருந்தாலும் உன்னைக் குறைசொல்ல மாட்டாங்க. என்னைத்தான் சொல்லுவாங்க.''

''அப்போ நீயே போய் பேசிட்டு வா. ஒரு வருஷ காண்ட்ராக்ட்லதான் யு.எஸ். போறேன்னு சொல்லு. ஒரு வருஷம் நிமிஷமா ஓடிடும். இங்க பத்து வருஷம் பாடுபட்டாலும் அவ்ளோ பணம் சம்பாதிக்க முடியாதுன்னு அவங்களுக்கே தெரியும். சம்பாதிக்கற பணத் துல பாதி கல்யாணச் செலவுக்கு, மீதியை உம் பேர்ல போட்டுட்டா கடைசி வரை அந்த வட்டி உனக்குப் போதும். நானும் கல்யாண மாகி போய்ட்டா உனக்கு யாரும்மா இருக் காங்க? பணம் இருந்தா பாதி தைரியம்தானே.''

''எல்லாம் சரிதாண்டி.. ஆனா அவங்க ஒத்துக்கணுமே.''


குறுநாவல்
வித்யா சுப்ரமணியம்

"ஒத்துக்காம என்னம்மா? பிரபுவுக்குப் போன வருஷம் ஆக்ஸிடெண்ட் ஆனப்போ ஆறு மாசம் கழிச்சு கல்யாணம் வெச்சுக்க லாம்னு அவங்க சொல்லி நாம ஒத்துக்கலையா? கல்யாணம் நடந்துட்டா எம் பொண்ணே பிரபு வைக் கண்ணுக்குள்ள வெச்சு பாத்துப்பா. சிம்ப் பிளா கல்யாணத்தை முடிச்சுடலாம்னு நீ சொன்னதுக்குக் கூட அவங்க ஒத்துக்கலையே. இருந்திருந்து ஒரு பிள்ளை. அவன் கல்யாணம் நல்லா நடக்கணும்னு ஆசைப்பட்டாங்க. நாம புரிஞ்சுக்கிட்டு சரின்னு சொன்னோமா இல் லையா? அதுவாவது கஷ்டம். இது சந்தோஷம். நா ஒரு வருஷம் யு.எஸ்.ல ஒரு பெரிய ஹாஸ் பிடல்ல நர்ஸா வேலை செய்தேன்னா அது அவங்களுக்கும் பெருமைதானே? அதெல்லாம் கண்டிப்பா ஒத்துப்பாங்க. இன்னிக்குச் சாயங் காலம் நீ போய்ப் பேசிட்டு நல்ல செய்தியோட வர. சரியா?" ஹரிணி டியூட்டிக்குக் கிளம்பி னாள்.

ஹரிணியின் பிடிவாத குணம் விசாலிக்குத் தெரியும். இரண்டு முறை கல்யாணம் தள்ளிப் போவதென்பது நல்லதற்கா கெட்டதற்கா என்பது புரியவில்லை. புருஷனை விட்டு விட் டுத் தனியாய் வாழ்பவளின் பெண்ணுக்குக் கல் யாணம் நிச்சயமாவதே பெரிய விஷயம். எத னால் புருஷனைப் பிரிந்து வாழ்கிறீர்கள், என்று பிள்ளை வீட்டினரிடமிருந்து ஆயிரம் கேள்வி கள். ஆயிரம் விசாரிப்புகள். நிறைய தயக்கங் கள். இதையெல்லாம் மீறி பிரபுவுக்கு அவளைப் பிடித்திருந்தது. அவள் அழகு, நிறம், உயரம், உத்தியோகம் எல்லாமே அவனை வசீகரித்தன. அவனோடு அவள் தனிமையில் பேசிய அதே நேரம், அவள் தாயிடம் அவன் குடும்பம் பேசியது.

"புருஷன் இப்ப எங்க இருக்கார்?"



புத்தகத்தில் வரும் சுவாமிப் படங் களைக் கட் பண்ணி "ஜம்கி" ஒட்டி தெர்மாகோலில் ஒட்டி வைத்தால் கொலு வில் நடுநடுவே நிறுத்தலாம். பார்க்க அழகாக இருக்கும்.

— எம். கனிமொழி.

"வெளிநாட்டுல எங்கேயோ இருக்கறதா கேள்வி."

"எதனால இந்தப் பிரிவு? என்ன ப்ரச்னை உங்களுக்குள்ள?"

"நேர்மையற்ற அவர் குணம்தான் பிரச்சனை."

"புரியும்படியாகச் சொல்லுங்கள்."

"அரசாங்க அதிகாரி அவர். லஞ்சம் ஊழல் என்றால் வெல்லம். அமைச்சர் ஒருவருக்கு நெருக்கமாகி லட்சக்கணக்கில் சம்பாதித்தார். பல பேரை பலவிதமாக ஏமாற்றினார். ஏமாந்த பல பேர் வீட்டு வாசலில் நின்று கண்ணீர் விட்டு அழுது புலம்பி, சபித்துச் செல்வது வாடிக்கையாயிற்று. அந்தச் சாபங்கள் எல்லாம் என்னைப் பாதித்தாலும் பரவாயில்லை. என் குழந்தையைப் பாதிக்கக் கூடாது என்பதால் அவரை விட்டுப் பிரிந்து விட்டேன்."

"டைவர்ஸ் வாங்கியா, வாங்காமலா...?"

"டைவர்ஸ் என்று முறைப்படி பிரிய வில்லை. வழக்கு விவகாரம் என்று போக எனக்கு அப்போது தெரியவில்லை. உதவுவதற் கும் ஆளில்லை. அது ஒரு பெரிய பிரச்சனை யாக எனக்குத் தோன்றாததால் அதற்கு முயற் சிக்கவும் இல்லை. அதன் பிறகு நான் அவரைச் சந்திக்கவும் இல்லை. பலவிதங்களில் பாடு பட்டு, சம்பாதித்து என் பெண்ணை வளர்த் தேன். அவள் உடலில் ஓடும் ரத்தம் மிக நேர்மையான காசில் ஊறிய ரத்தம். அவள் படிப்பு, திறமை, எல்லாம் நான் உண்மையாய் உழைத்த காசில் கிடைத்தவை."

"இன்று வரை உங்க புருஷன் உங்களைத் தேடவில்லையா?"

"இல்லை."

"என்றாவது வருவார் என்று..."

"மீண்டும் சேர்ந்து வாழும் உத்தேசம் எனக் கில்லை. என் பெண்ணும் அதை விரும்ப மாட் டாள்."

"திருமணத்திற்குப் பிறகு ஒருவேளை அவர் வந்து ஹரிணியிடம் சொந்தம் கொண்டாடி னால்?"

"தாராளமாக நீங்கள் அவரை திருப்பி யனுப்பலாம். நேர்மையற்ற ஒரு ஆளை நீங்கள் உள்ளே ஏற்ற மாட்டீர்கள் என்று நம்புகிறேன்."

முடிவை போனில் சொல்வதாகச் சொல்லி விட்டு அவர்கள் கிளம்பினார்கள். இரண்டு நாட்கள் காரசாரமாய் விவாதம் நடந்தது.

"அரசாங்கம்னா நூத்துக்கு ஏழு பேர் லஞ்சம் ஊழல்னு இருக்கத்தான் இருப்பாங்க. இது ஒரு பெரிய விஷயம்னு ஒரு பொண் குழந் தையோட புருஷனை விட்டுட்டு வந்து வாழ றது எனக்கென்னமோ சரியாப் படலை" பிரபு வின் அத்தை ஆரம்பித்தாள்.

"அதானே...!" வழி மொழிந்தார் அவளது புருஷன்.

"மனுஷங்கன்னா நல்லதும் கெட்டதும் இருக்கத்தான் இருக்கும். அதுக்காக புருஷனை விட்டுட்டு வந்துடறதா? பிரச்னைகளை சந்திக்க தைரியமில்லாதவங்கதான் ஓடி வருவாங்க! லஞ்சம் வாங்கற புருஷனை பெண்கள் விட்டுடணும்னா இன்னிக்கு உலகத்துல முக்காவாசி பேர் தனியாத்தான் இருக்கணும்" இது அம்மா.

"இப்பல்லாம் லஞ்சம் வாங்காட்டாதான் தப்புன்னு ஆய்டுச்சு. எல்லா லெவல்லயும் எல்லா இடத்துலயும் எல்லாத்துக்கும் கை நீட்டிக்கிட்டுத்தான் இருக்காங்க" இது அக்கா.

"ஆஸ்பத்திரிலேர்ந்து சுடுகாடு வரை யார் சுத்தம்?"

"எனக்கென்னமோ இதுல வேற விவகாரம் ஏதானும் இருக்கும்னு தோணறது."

"உம்பிள்ளை அவளைப் பிடிச்சிருக்கு புரொஸீட் பண்ணுங்கன்னுட்டானே."

"அவனுக்கென்ன தெரியும்? அவன் குழந்தை. நாமதான் பக்குவமா இதுல சிக்கல் இருக்குடான்னு சொல்லி புரியவைக்கணும்."

"யார் வேண்டாம்னா? தாராளமா சொல்லிப் புரிய வை. உம்பிள்ளை புரிஞ்சுக்கிட்டா சரி."

அன்றிரவு அம்மா பிள்ளையோடு பேசினாள். "அந்தப் பெண் வேண்டாம்டா பிரபு. இன்னும் நல்ல எடமா பார்க்கலாம் என்ன?"

"ஏன் இவளுக்கென்ன?"

"பெண்ணுக்கு, ஒரு பிரச்னையுமில்ல. பிரச்னை அம்மாக்காரி புருஷனை விட்டுட்டு இருக்கறதுதான்."

"எந்தக் காலத்துல இருக்க நீ?"

"எத்தனை காலம் ஆனாலும் சில விஷயங்கள் மனசுக்கு உறுத்தலாதானே இருக்கு. சின்னச் சின்னத் தப்புக்கெல்லாம் புருஷனை விட்டுட்டு ஒதுங்கறதுதான் முடிவுன்னு நினைக்கறது சரின்னு எனக்குத் தோணலை. இன்னிக்கு அம்மாக்காரி பண்ணின அதே தப்பை நாளைக்குப் பெண்ணும் செய்ய மாட்டான்னு என்னடா உத்திரவாதம்?"

"ப்ளீஸ்ம்மா. இதை மேலும் மேலும் பிரச்னையாக்கறதுதான் எனக்குக் கஷ்டமாயிருக்கு. ஹரிணியோட நான் பேசிப் பார்த்த வரை அவ ரொம்ப நல்ல மாதிரியாத்தான் இருக்கா. முதலாவதா நா ஒண்ணும் தப்பு பண்ற ஜாதியில்ல அவ விட்டுட்டுப் போறதுக்கு. சும்மா குழப்பிகிட்டிருக்காம நிச்சயதார்த்தத்துக்கு ஏற்பாடு செய்யப் பாருங்க."

பிரபு தன் முடிவில் உறுதியாக இருக்க, அவர்களால் அவனை மீறி ஒன்றும் செய்ய முடியவில்லை. அரை மனதோடு நிச்சய



தேவையான அளவில் காய்ந்த முட் செடியின் கிளையை ஒடித்து வந்து ஒவ் வொரு முள்ளிலும் ஒரு பொம்மையை வைத்து, பார்க்கில் (கொலுப்படியின் அருகே இருக்கும் பார்க்கில்) வைத்து விட் டால் அழகாக இருக்கும்.

– சி. கவுதமி.

தார்த்தத்தை நடத்தினார்கள். திருமணத்திற்கு நாளும் குறித்தார்கள்.

விசாலி நிம்மதியடைந்தாள். பெண்ணுக்கு நல்ல இடத்தில் கல்யாணமாக வேண்டுமே என்று அவள் வேண்டாத தெய்வமில்லை. நல்ல இடம் கிடைத்ததற்காக தெய்வத்திற்கு நன்றி கூறினாள். கல்யாண ஏற்பாடுகளை ஆரம்பித்தாள். நிச்சயதார்த்தம் முடிந்த பதினைந்தாம் நாள் பிரபுவுக்கு ஆக்ஸிடெண்ட் ஆயிற்று. அவன் ஸ்கூட்டர் மீது ஒரு டெம்போ மோதி விட்டுச் சென்றது. சாலையில் ரத்தம் சிந்தியபடி நினைவற்றுக் கிடந்தான் அவன்.

2

உயிருக்கு ஆபத்தில்லை. கால் உடைந்திருந்தது. முழங்கையில் சதை கிழிந்திருந்தது. எழுந்து நடக்கக் குறைந்தது மூன்று மாதமாவது ஆகும் என்றார்கள். கல்யாணம் கேள்விக்குறியாயிற்று.

"எம் பொண்ணே நர்ஸ்தானே? இப்போதைக்கு சிம்பிளா கல்யாணத்தை நடத்தினா போதும். இவளே அவனை பக்கத்துல இருந்து கவனிச்சுப்பா. உடம்பு நல்லானதும் கிராண்டா ரிசப்ஷன் வேணா வெச்சுப்போம்" விசாலி சொல்ல பிரபுவின் அம்மா அவசரமாக மறுத்தாள்.

"அதெப்படி...? எனக்கிருக்கறது ஒரே ஒரு பிள்ளை. அவசரக் கல்யாணம் எல்லாம் பண்ண முடியாது. அவன் உடம்பு குணமானப்புறம் கல்யாணத்தை வெச்சுப்போம்."

ஆறு மாதத்திற்குக் கல்யாணம் ஒத்தி வைக்கப்பட்டது. ஒரு நர்ஸ் என்ற முறையிலும் அவனுக்கு நிச்சயிக்கப்பட்டவள் என்ற உரிமையிலும் இரண்டு முறை அவர்கள் வீட்டிற்கே

உலகத்தரத்திற்

அனைத்து வசதிகளுட

வாழ வி

கிளாசி

சென்னையின் மிக





இடம்

சென்னை அடையார் புதிய 4 வழி 'IT HIGHWAY' (பழைய மகாபலிபுரம் சாலை) சோழிங்கநல்லூர் என்னும் புறநகர் பகுதியில் பசுமையான இயற்கை சூழலில் அமைந்து வளர்ந்து வரும் மாபெரும் குடியிருப்பு.

வசதிகள்

அகலமான சாலைகள், தண்ணீர், மின்சாரம், தொலைபேசி, கேபிள் டிவி, சாலை விளக்குகள், நிழல் தரும் மரங்கள், சுற்றிலும் மதிர்சுவர் - 24 மணி நேர பாதுகாப்பு மற்றும் வழிபாட்டு மையமும் உள்ளன.

சுற்றுச் சூழல்

பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், வங்கிகள், வணிகத் தளங்கள், தொழில் நுட்ப நிறுவனங்கள் சென்னைக்கு அருகில் அதி விரைவாக வளர்ந்து வரும் புறநகர் பகுதி.

பொழுதுபோக்கு மையம்

சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் 50,000 சதுர அடியில் கட்டப்பட்டு இயங்கி வரும் கிளாசிக் கிளப்பில் அங்கத்தினராகலாம். நீச்சல் குளம், அழகு மையம், உடற் பயிற்சி மையம், விளையாட்டு அரங்கம், தியேட்டர், உணவகம், பெர்மிட் ரூம், விருந்தினர் அறைகள் மற்றும் பல வசதிகள் உள்ளன.

Clasic Club is the most preferred place today in Chennai. For all your training programmes, conferences, parties, marriages and other family functions.



இணையான
அமைதியான சூழலில்,
ப்பமா?

ரிட்ரீட்

சிறந்த குடியிருப்பு!





முதலீட்டின் சிறப்பம்சம்

கடந்த நான்கு வருடங்களில் சென்னை சோழிங்கநல்லூர் மட்டுமே மிக பிரம்மாண்டமாக வளர்ந்து வருகிறது. இதன் வளர்ச்சியும் மற்றும் எங்களது உலகத்தரம் வாய்ந்த குடியிருப்பும் உங்கள் முதலீட்டையும் வாழ்க்கை தரத்தையும் நிச்சயம் வளர்க்கும்.

எதிர்காலம்

சிப்காட்டில் 1000 ஏக்கர் தகவல் தொழில்நுட்ப மையம் மற்றும் TCS, Polaris, Wipro, Infosys மற்றும் பல நிறுவனங்கள் இங்கு வருவது உங்கள் முதலீட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு உத்தரவாதம்.



Clasic Kudumbam "Retirement Community" work under progress. Residents desirous of immediate enrolment are being provided alternate accomodation.

Visit us at www.kudumbum.com

இந்த விவரங்களை நேரில் காண இன்றே தொடர்பு கொள்ளவும்.

Clasic Farms (Chennai) Ltd.

New No.7, Second Trust Link Street, Mandaveli,
Chennai 600 028, India. Tel: 4616456, 4614999, 4614997
Cell: 9841097963 / 97964, Tele-fax: 4616694
website: www.clasic.com & clasic.co.in
Email: clasic@vsnl.com

ANUGRAH / 2910

கசகசாவை மிக்ஸியில் அரைக்க ரொம்பவே மெனக்கெடுவார்கள். வேண்டாமே! சாதாரணமாக கசகசா சேர்க்கும் அயிட்டங்களுக்கு பொட்டுக்கடலையும் சேர்க்கிறோம். கசகசா விலை அதிகம் என்பதால் பொட்டுக்கடலை சற்றுக் கூடுதலாக சேர்த்தாலும் மாற்றம் தெரியாது. ஆகவே, உலர்ந்த மிக்ஸியில் கசகசாவையும் பொட்டுக்கடலையும் சேர்த்து அரையுங்கள். நிமிஷமாக அரைபடும். தண்ணீர் சேர்க்க வேண்டாம். குங்குமம் போல பவுடரானதும் தண்ணீர் சேர்த்து அரையுங்கள். அம்மியில் அரைத்தது போலவே இருக்கும். (சின்ன ஜார் உபயோகியுங்கள்.)

– எஸ். பட்டம்மா



சென்று அவனைப் பார்த்தாள் ஹரிணி. அப்படி அவள் வந்தது அவர்களுக்கு ரசிக்கவில்லை. இருப்பினும் பிரபுவுக்கு பயந்து கொண்டு அதைச் சகித்துக் கொண்டார்கள். இருந்தாலும் அவளை தனியே அவனோடு விட்டு விடாமல் அவள் வந்ததும் அத்தையும் அவன் தாயாரும் அவன் அறையில் கூடவே இருந்ததால் அவளால் அவனோடு அதிகம் பேச முடியவில்லை.

இரண்டாள் நாள் அத்தை மெதுவாக சொல்லி விட்டாள்.

"கல்யாணத்துக்கு முன்னாடி நீ இப்படி அடிக்கடி வருவதை நாலு பேர் நாலுவிதமா பேசக்கூடும். ஃபோன்ல வேணா விசாரிச்சுக் கோயேன்..."

ஹரிணி அதை சகஜமாகவே எடுத்துக் கொண்டாள். பெரியவர்கள் வார்த்தை என்று அதற்கு மதிப்பு கொடுத்து, பிறகு அங்கு செல்லவில்லை. ஐந்து மாதத்தில் அவன் உடல்நிலை தேற மீண்டும் முகூர்த்த நாள் குறிக்கப்பட்டது.

இதற்கு நடுவில் அத்தை ஒரு புது பிரச்னையை ஏற்படுத்தினாள்.

"எனக்கென்னமோ இந்தப் பொண்ணு வேணுமான்னு தோணறது. நிச்சயமான தோஷத்துக்கே இவனை ஆறு மாசம் படுக்கப் போட்டுடுத்து. அவ கழுத்துல தாலியக் கட்டினாக்க குழந்தைக்கு என்ன பாடுபடுத்துமோன்னு பயம்மாயிருக்கு."

நாத்தனார் சொல்ல அவன் அம்மாவின் முகம் வெளுத்துப் போயிற்று.

"இப்ப என்ன பண்றது?" என்றாள் கலங்கிப் போனவளாய்.

"இனிமே என்ன பண்ண? நாம சொன்னா உம்பிள்ளை கேட்டுடவா போறான்? ஒண்ணு தனக்கா தெரியணும். இல்ல, சொன்னாலாவது புரிஞ்சுக்கணும். இது ரெண்டுமில்லாட்டா கஷ்டந்தான்."

அத்தை எழுந்து செல்ல, பிரபுவின் அம்மா மிரண்டு போனாள். என்ன செய்யலாம் என்று யோசித்தவளுக்கு ஒரு வழியும் புலப்படவில்லை.

நீண்ட யோசனைக்குப் பிறகு விசாலி சம்பந்தியின் வீட்டுக்கு டெலிபோன் செய்தாள்.

"நா உங்களைப் பார்த்து ஒரு விஷயம் பேசணுமே. எப்போ வரட்டும்?"

"என்ன விஷயம்?"

"நல்ல விஷயம்தான். நேர்ல வந்து சொல்றேன்.

"வாங்க" போனை வைத்தாள்.

"அவம்மாதான். ஏதோ நல்ல விஷயமாம். நேர்ல வந்து சொல்றாங்களாம். என்னவாயிருக்கும்?" நாத்தனாரின் அருகில் வந்து அமர்ந்தாள்.

"அவ சொல்ற விஷயம் நமக்கும் நல்ல விஷயமா இருந்தால்ல சந்தோஷப்படலாம்."

ஒரு மணி நேரத்தில் வந்தாள் விசாலி.

ஒரு தம்ளர் காப்பியைக் கொடுத்து விட்டு எதிரில் உட்கார்ந்தாள் சம்பந்தியம்மாள்.

"ஹரிணிக்கு ஒரு வருஷ காண்டராக்ட்ல அமெரிக்கா போக ஒரு நல்ல வாய்ப்பு கிடைச்சிருக்கு."

"சந்தோஷம். ஆனா கல்யாணத்துக்கப்புறம் பிரபு அவளை அனுப்பணுமே..."

"அது விஷயமாத்தான் வந்தேன். அவ இன்னும் பதினஞ்சு நாள்ல கிளம்பணும். பாஸ்போர்ட் விசா எல்லாம் ரெடியாயிருக்கு."

"கல்யாணத்துக்கு முன்னாடியேவா... என்ன சொல்றீங்க நீங்க...?"

"கஷ்டமாத்தான் இருக்கு. இருந்தாலும் வேற வழியில்ல. ஏற்கெனவே ஆறு மாசம் தள்ளிப் போட்ட கல்யாணத்தை இந்த முறை எங்களுக்காக இன்னும் ஒரு வருஷம் தள்ளிப் போட்டா உதவியாயிருக்கும். யு.எஸ். போகணுங்கறது அவளோட ரொம்ப நாள் கனவு."

"ஒரு வருஷமா?" சம்பந்தியம்மா ஏதோ சொல்ல வாயெடுக்க, அத்தை சட்டென்று அவள் கையை அழுத்தி அடக்கினாள்.

"ஒரு நிமிஷம் உள்ள வா" அவனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

"சரின்னு ஒத்துக்கோ."

"என்னக்கா சொல்றீங்க?"

"இந்த ஒரு வருஷத்துல கதையே மாறிப் போகாதா?" அத்தை சிரிக்க, அதன் அர்த்தம் புரிந்ததும் சம்பந்தியம்மாளும் திகைப்போடு சிரித்தாள்.

"யோசிச்சுப் பார்த்தோம். அவனுக்குக் கிடைக்கற நல்ல வாய்ப்பைத் தடுப்பானேன்? நா பிரபுட்ட சொல்றேன். அவனும் சந்தோஷப்படுவான். தாராளமா போய்ட்டு வரட்டும்."

"மாப்ள வீட்ல இல்லையா?"

"லேட்டாகுமே அவன் வர."

"அப்போ போன்ல எதுக்கும் ஒரு வார்த்தை மரியாதைக்கு நானும் சொல்லிடறேன்."

அவள் சந்தோஷமாக அங்கிருந்து புறப்பட்டாள். இவ்வளவு பெருந்தன்மையாக அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று அவள் நினைக்கவேயில்லை.

அன்றிரவு பிரபுவே போன் பண்ணினான். "வாழ்த்துக்கள் ஹரிணி" என்றான் சந்தோஷமாக.

"தேங்க்ஸ் நீங்க இதுக்கு ஒத்துகிட்டதுக்கும் தேங்க்ஸ்."

"ஒருவேளை நா வேண்டாம்னு சொல்லியிருந்தா என்ன பண்ணியிருப்பே?"

"சொல்ல மாட்டீங்கன்னு தெரியும்."

"சொல்லியிருந்தா?"

"வருத்தப்பட்டிருப்பேன்."

"வருத்தப்படறது இருக்கட்டும். போவேன்னு பிடிவாதம் பிடிச்சுப் போயிருப்பியா?"

"மாட்டேன். நமக்கு எது கிடைக்கணும்னு இருக்கோ அது நிச்சயம் கிடைக்கும்ங்கற நம்பிக்கை எனக்கு உண்டு. ஒருவேளை போக வேண்டாம்னு சொல்லியிருந்தா எனக்கந்த யோகமில்லன்னு நினைச்சிருப்பேன்."

"நீ போய்ட்டு வரதுல எனக்குப் பெருமைதான். ஒரு வருஷமென்ன மூணு வருஷமானாலும் உனக்காகக் காத்துக்கிட்டிருப்பேன். பத்திரமா போய்ட்டு வா. முடிஞ்சப்போ ஃபோன் பண்ணு. இப்பத்தான் இன்பர்மேஷன் டெக்னாலஜி ரொம்ப அட்வான்ஸ்டா போயாச்சே. வாய்ஸ் மெயில்லயே பேசலாம்."

"அதுக்கு முந்தி நேர்ல ஒருமுறை பேசினா ஏதாவது பிரச்னை வருமா?"

"எங்கே?"

"ஏதாவது பீச் ரெஸ்டாரண்ட்டுக்குப் போகலாமே."

"ஓ.கே. அப்போ நாளைக்கு ஈவினிங் பெஸண்ட் நகர்ல மீட் பண்ணலாம்."

எந்த வேலை
உனக்குப் பழக்கமானதோ
அந்த வேலையில் புதுமைகளைச்
செய்ய மறவாதே!
– கவிஞர் கண்ணதாசன்
தகவல் :
கே. ராஜேஸ்வரி

அவன் ரிஸீவரை வைத்தான்.

3

மறுநாள் அவர்கள் சந்தித்தார்கள். மனம் விட்டு நிறைய விஷயங்கள் பேசினார்கள்.

"நா யு எஸ் போறது எனக்காகக் கூட இல்ல. அம்மாக்காகத்தான் முக்கியமா."

"அம்மாக்கா...?"

"யெஸ். அப்பாவை விட்டுப் பிரிஞ்ச இத்தனை வருஷத்துல அவங்க என்னை வளர்க்க எத்தனையோ கஷ்டப்பட்டாங்க. பெரிசா வருமானம்னு சொல்ல முடியாது. வரவுக்கும் செலவுக்கும் சரியாயிருக்கும். கஷ்டத்துக்கு நடுலதான் என்னை நர்ஸிங் படிக்க வெச்சாங்க. நா வேலைக்குப் போக ஆரம்பிச்சப்புறம்தான் அவங்க கொஞ்சம் ரிலாக்ஸ்டா உக்காந்தாங்க. குருவி சேர்க்கறா மாதிரி அவங்க சேர்த்து வெச்சிருக்கற காசும் என் கல்யாணச் செலவோட காலியாயிடும்.

கல்யாணத்துக்கப்புறம் அவங்களுக்கு நான் பணம் கொடுக்க நீங்க மறுக்கப் போறதில்ல. ஆனா அம்மா அதை வாங்கிக்க விரும்புவாங்களான்னு தெரியாது. அம்மாவை இந்த நிலையில விட்டுட்டு கல்யாணம் பண்ணிக்கத்தான் வேணுமான்னு கூட நா கவலைப்பட்டிருக்கேன். என் கவலைக்கு மருந்துதான் இந்த யு.எஸ். வாய்ப்புன்னு நினைக்கறேன். நல்ல சம்பளம் கிடைக்கும். இதை அப்படியே அம்மா பேர்ல போட்டு வெச்சுட்டா அவங்க தன் கடைசி காலம் வரைக்கும் பணத்துக்காக யார் கிட்டேயும் போய் நிக்க வேண்டியிருக்காது.

அம்மாக்கு ஒரு பாதுகாப்பும் செய்யாம கல்யாணம் பண்ணிக்கறோமேங்கற உறுத்தல் போய்ந்து எனக்கும் விடுதலை கிடைக்கும்."

"புரியுது ஹரிணி. தன் அம்மா அப்பாவைப் பாத்துக்கற கடமை ஆணுக்கு மட்டுமில்லே, பெண்களுக்கும் உண்டு. அதுவும் ஒரே பெண்ணை பெத்து அவளுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்த பிறகு தனிமைல தவிக்கறவங்களுக்கு அட்லீஸ்ட் பணப் பிரச்னையாவது இல்லாம இருக்கணும். பொண்ணு வீடு சௌகர்யப்படலன்னா பணத்தைக் கட்டிட்டு நிம்மதியா ஒரு ஹோம்லயாவது இருக்கலாம் பார்."

"அம்மா வந்தா உங்க வீடு வராதென்னா சொல்லப் போறதா? இருந்தாலும் காலம் காலமா ஊறிப்போன சில விஷயங்கள்லேர்ந்து அவங்களை மாத்த முடியாது. பொண்ணைக் குடுத்த இடத்துக்கு வர மாட்டாங்க."

"சரி, ஒரே வருஷ காண்ட்ராக்ட்னு போற. ஒருவேளை அது எக்ஸ்டென்ட் ஆகி அங்கேயே இருக்கற சந்தர்ப்பம் கிடைச்சா? அடியேனை மறந்துடுவியா?"

"அப்படி ஒரு சான்ஸ் வந்தா, நீங்களும் அங்க ஒரு வேலை பாருங்க. ரெண்டு பேரும் அங்கேயே செட்டிலாய்டலாம். ஆனா அதுக்கு உங்க வீட்ல ஒத்துக்கணுமே. ஒரே பிள்ளைன்னு உங்களை பக்கத்து ஸ்டேட்டுக்கே உங்கம்மா அனுப்புறது சந்தேகம்தான். அப்புறம் எங்கே யுனைட்டட் ஸ்டேட்ஸ்க்கு அனுப்பப் போறாங்க?" ஹரிணி சிரித்தாள்.

அவள் அப்படிச் சொன்னதும் அவன் முகம் மாறியது. ஒரு வினாடிதான் தன் முகமாற்றத்தை மறைத்துக் கொண்டு சிரிக்க முயன்றான்.

இருள் நன்கு கவிந்திருந்தது. அவர்கள் கிளம்பினார்கள். அவன் பார்க்கிங் ஏரியாவில் நிறுத்தியிருந்த தன் டூ வீலரை தள்ளிக் கொண்டு வந்தான் ரெஸ்டாரண்ட்டுக்கு வெளியில் மர நிழலில் இருள் கவிந்திருந்தது.

"போலாமா?" அவன் வண்டியை ஸ்டார்ட் செய்தவன், என்ன தோன்றியதோ அவளை அருகில் அழைத்தான்.

"என்ன?"

"ஒரு வருஷம் நினைச்சுப் பாக்கறா மாதிரி ஏதாவது கிடைக்குமா?"

அவள் விழித்தாள்.

அவன் சட்டென்று அவளை





அருகில் இழுத்து அவன் காதருகில் கன்னத்தில் முத்தமிட, அவள் கூச்சமும் திகைப்புமாகத் துள்ளி விலகினாள்.

"என்ன விளையாட்டு இது?"

"சரி அப்போ சீரியஸா ஒண்ணு தரட்டா...?"

"உதைப்பேன். முதல்ல வண்டியைக் கிளப்புங்க."

அவள் பின்னால் ஏறியமர்ந்தாள். சற்று தூரம் சென்றதும் அவன் அவள் கையைத் தேடிப் பிடித்து தன் இடுப்பில் படர விட்டான். அவள் மறுக்கவில்லை. அவள் முகம் மெல்ல அவன் முதுகில் பதிந்து மென்மையாக முத்தமிட்டது.

"என்ன விளையாட்டு இது...?" அவன் பெண் குரலில் சொல்ல, அவள் அவன் முதுகில் குத்தினாள்.

"பிரபு எங்க கிளம்பிக்கிட்டிருக்கான்?" அத்தை அடுக்களைக்கு வந்து கேட்டாள்.

"இன்னிக்கு அவ அமெரிக்கா கிளம்பறாளே. வழியனுப்பப் போவானா இருக்கும்."

"இவன் போறேன்னா நீயும் சரின்ன யாக்கும்."

"சின்னக் குழந்தையா போகக் கூடாதுன்னு கட்டிப் போட?"

"எத்தனை வயசானாத்தான் என்ன? ஏமாத்தற விதத்துல ஏமாத்தி போறதைத் தடுக்கணும்."

"எப்படி?"

"நெஞ்சைப் பிடிச்சுக்கிட்டு உட்காரு. மூச்சு முட்டறதுன்னு சொல்லு. ஏரோப்ளேன் கிளம்பிப் போற வரை உன்னை விட்டு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் நகராம பாத்துக்க. வேறென்ன சொல்ல?" அத்தை பற்ற வைத்து விட்டு நகர்ந்தாள்.

பத்து நிமிடத்திற்குப் பிறகு பிரபு பதறியடித்துக் கொண்டு கீழே ஓடி வந்தான். அடுக்களை வாசலில் சுருண்டு உட்கார்ந்திருந்த அம்மாவை வாரி எடுத்து வந்து கட்டிலில் படுக்கவைத்தான். "என்னம்மா பண்ணுது?" கலங்கிப் போய்க் கேட்டான். நெஞ்சு வலி என்று அவள் சொன்னதும் டாக்டருக்கு ஓடிப் போய் ஃபோன் பண்ணினான்.

4

ஒரு மாதம் கழித்து ஒரு வெள்ளிக்கிழமை மாலை பிரபு சற்று சீக்கிரமாக வீடு திரும்பினான். வாசல் வராண்டா முழுக்க ஏழெட்டு ஜோடி செருப்புகள். என்ன விசேஷம் இன்று என்ற யோசனையோடு உள்ளே சென்றான்.

"இவந்தான் என் பிள்ளை. அதிசயமா இன்னிக்கு சீக்கிரம் வந்திருக்கான். இதுவே நல்ல சகுனம் தான்" அம்மா சந்தோஷமாகச் சொல்ல, பிரபு வந்திருந்தவர்களை யாரென்பது போல் பார்த்தான். அவர்கள் அவனை சந்தோஷமாகப் பார்த்தார்கள். ஒருவரையொருவர் பார்த்துத் திருப்தியோடு புன்னகைத்துக் கொண்டார்கள்.

"வாடா பிரபு இப்படி உட்கார். இவர் மிஸ்டர் சுந்தர்ராமன். லண்டன்ல சொந்தமா ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் வெச்சிருக்கார். பல்வேறு பிஸினஸ் பண்றார். இது அவரோட பெண். லண்டன்ல விஞ்ஞானியாயிருக்கா. இது அவரோட மாப்பிள்ளை. இவரும் லண்டன்ல விஞ்ஞானிதான். இது அவரோட இன்னொரு பொண்ணு டாக்டராயிருக்கா லண்டன்ல."

பிரபு அவர்களோடு கைகுலுக்கி விட்டு மரியாதைக்கு சற்று நேரம் அமர்ந்து பேசி விட்டு மாடிக்கு வந்தான். சற்று நேரத்தில் அம்மா அங்கு வந்தாள்.

"யாரு அவங்க?" டர்க்கி டவலால் முகம் துடைத்தபடி கேட்டான்.

"அந்த டாக்டர் பொண்ணை உனக்குக் கல்யாணம் பண்ணிக் குடுக்கணும்னு ரொம்ப ஆசைப்படறாங்க. அது விஷயமா பேசத்தான் வந்திருக்காங்க."

"ஏற்கெனவே எனக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுத்துன்னு சொல்லியனுப்பிட வேண்டியதுதானே?"

"ஆமா. நிச்சயமாச்சு. கூடவே கல்யாணம் ரெண்டு தரம் தள்ளியும் போய்டுத்தே. எனக்கென்னமோ இனி அந்த ஹரிணியோட உனக்குக் கல்யாணம் நடக்கும்னு தோணலைடா பிரபு. அந்தப் பொண்ணு ராசியில்லாதவளோன்னு ஒரு சந்தேகம். அவளை நிச்சயம் பண்ணின உடனேயே உனக்கு ஆக்ஸிடெண்ட் ஆச்சு. அப்பக் கூட நா பொறுமையாத்தான் இருந்தேன். அது கடவுள் நமக்குக் கொடுக்கற எச்சரிக்கைன்னு தோணல.

ஆறு மாசம் கழிச்சு மறுபடியும் கல்யாண தேதி குறிச்சோம். என்னாச்சு? இந்த முறை அவளாவே ஒரு வருஷம் தள்ளிப் போடுங்கறா. பொண்ணுக்குக் கல்யாணம் பண்றது முக்கியமா, இல்ல அவள அமெரிக்காவுக்கு சம்பாதிக்க அனுப்பறது முக்கியமா? அவம்மா கொஞ்சமாவது யோசிக்க வேணாடாம்? அமெரிக்காவும் பணமும்தானே அவங்களுக்கு முக்கியமா தோணறது. உன்னைப் பத்தி கவலைப்படறாங்களா...? இந்த மாதிரி சம்பந்தம் நமக்கு வேணுமா சொல்லு?"

பிரபு அதிர்ச்சியோடு அம்மாவைப் பார்த்தான். இப்படியெல்லாம் வீட்டில் தனக்குத் தெரியாமல் ஏதேதோ பேச்சுக்கள் நடக்கிறதா என்ற அதிர்ச்சி.

"ஒரு பெண்ணை ஏற்கெனவே நிச்சயம் பண்ணினப்புறம் இப்படி யெல்லாம் நீ பேசறது ரொம்பத் தப்பும்மா."


"நாலும் யோசிச்சுதாண்டா இந்தப் பொண்ணு வேண்டாம்னு சொல்றேன்."

"அஞ்சாவதாகவும் ஒண்ணு யோசி. உம் பொண்ணுக்கு ஒரு இடத்துல நிச்சயமானப்புறம் அவங்க இதே மாதிரி வேற இடம் பார்த்தா சும்மாயிருப்பியா நீ?"

"எம் பொண்ணு இப்படியெல்லாம் காசு முக்கியம்னு கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுட்டு அமெரிக்கா போக மாட்டா. நானும் அனுப்பி வைக்க மாட்டேன். புருஷனோட வாழறவங்களுக்குத்தானே வாழ்க்கையோட அருமை தெரியும். தெரிஞ்சிருந்தா பொண்ணு கல்யாணத்தை தானே ஒத்திப் போட்டு அவளை அமெரிக்காவுக்கு அனுப்புவாளா ஒருத்தி?"

"மத்தவங்களோட வாழ்க்கையைப் பத்தி விமர்சிக்க நமக்கு எந்த உரிமையும் கிடையாதும்மா."

"சம்பந்தம்னு பேசும் போது நாலு விஷயமும் தெரிஞ்சுக்கத்தானே வேணும்?"



சிறு சிறு குழந்தைகளைப் பாடச் சொல்லி டேப் எடுத்து வைத்துக் கொண்டால் அடுத்த ஆண்டு நவராத்திரி சமயத்தில் போட்டுக் காட்டலாம். மற்ற குழந்தைகள் பழைய குழந்தையின் பாடலை ரசிக்கும் பொழுது கிடைக்கும் ஆனந்தத்திற்கு எல்லை ஏது?

- வி. ராஜம் ராமன்.

"சரி. தெரிஞ்சுகிட்டாச்சு இல்ல. அதோட விடு. புருஷனோட வாழறதுக்குப், பிரச்னை தலைக்கு மேலே போனா, அவனைப் பிரியற துக்கும் ஒரு பெண்ணுக்கு உரிமை இருக்கு. தலைவலியும், வயித்துவலியும் நமக்கு வராத வரை நாம வாயத் திறக்கக் கூடாது."

"அதையெல்லாம் விடு. இந்தப் பெண் ணைப் பாத்தியா? இந்த அழகுக்கும் அந்தஸ் துக்கும், இவங்க குடும்ப கௌரவத்துக்கும் முன் னால் கால் தூசி பெறுவாளா அந்த ஹரிணியும் அவம்மாவும்?"

பிரபு அம்மாவை உற்றுப் பார்த்தான். "மன சுங்கறது கோயில் மாதிரிம்மா. அங்க நுழைய அழகும் அந்தஸ்தும் கௌரவமும் தேவை யில்லே. அன்பு இருந்தாப் போதும். இந்த டாக் டர் பெண்ணை நா குறை சொல்லலை. ஆனா இவளை என் பொண்டாட்டியா நினைக்க என் னால முடியாது. என் பொண்டாட்டி அமெரிக் காவுல இருக்கா. இந்த விஷயத்தை அவங்க கிட்ட சொல்லியனுப்பிடு. இல்ல உன்னால முடியலைன்னா சொல்லு, நானே சொல் லிடறேன் போய்" பிரபு கதவு திறக்க முயல, அம்மா சட்டென்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சரிந்தாள்.

இம்முறை நிஜமாகவே நெஞ்சுவலி. பிள்ளை தன் வழிக்கு வருவானோ மாட் டானோ என்ற டென்ஷனில் இரத்த அழுத்தம் ஏறியிருந்தது. அவனோ காரசாரமாய் விவாதம் செய்ததிலும், அவனது உறுதியிலும் அது நெஞ்சு வலியாய் மாறியிருந்தது. குடும்பமே பதறிக் கொண்டு ஆஸ்பத்திரியில் சேர்த்தது. ஐசியூவுக்கு வெளியில் கலங்கிச் சிவந்த கண் களோடு துக்கமாய் அமர்ந்திருந்தது.

"இதோ பார் பிரபு. உன் பிடிவாதத்தால அம்மாவை நீயே கொன்னுடாதே. நிச்சயமான எத்தனையோ கல்யாணங்கள் ஏதோ காரணத் தினால நின்னு போயிருக்கு. தெய்வம் யாருக்கு யாரை முடிச்சு போட்டிருக்கோ. அந்தக் கல் யாணம்தான் நடக்கும். மத்ததெல்லாம் நின்னு தான் போகும். சரியான ஜோடிகள் ஒண்ணு சேரும்போதுதான் மறுபடியும் நடக்கும். கட வுள் உனக்கும் அந்த ஹரிணிக்கும் முடிச்சு போடலை. அது நாம நிச்சயம் பண்ணின கல் யாணம். அதான் தெய்வம் அதை ரெண்டு முறை தடுத்திடுச்சு.

இன்னமும் தெய்வ சங்கல்பத்தை புரிஞ்சுக் காம நீ பாட்டுக்கு பிடிவாதம் பிடிச்சா உங் கம்மா செத்தே போய்டுவாடா கண்ணா. அவ ளுக்கிருக்கறது நீ ஒரே ஒரு பிள்ளை. உன் கல் யாணத்தைப் பாக்கணும்னு அவ எவ்ளோ கனவு கண்டுகிட்டிருக்கான்னு உனக்குத் தெரி யாது. அவ மனசைக் குளிரப் பண்ணுடா பிரபு. பெரியவங்க உன் நன்மைக்குத்தான் சொல் றான்னு புரிஞ்சுக்க" அத்தை அவனருகில் அமர்ந்து பேச, பிரபு கற்சிலை போல் எவ்வித உணர்வும் இன்றி அமர்ந்திருந்தான்.

நர்ஸ் ஒருத்தி அருகில் வந்தாள். "உங்கம் மாக்கு நினைவு வந்திருக்கு. உங்களைப் பாக்க ணும்னு ஆசைப்படறாங்க."

பிரபு எழுந்தான்.

"பிரபுக்கண்ணா, அவ பிழைக்கறது உங் கிட்டதான் இருக்கு. அவங்க இஷ்டப்படி கல் யாணம் பண்ணிக்கறதா ஒரு வார்த்தை சொல்லு! இந்த க்ஷணம் அவ எழுந்தே உட் கார்ந்துடுவா. பாவம்டா உங்கம்மா. அவ உசிரே உங்கிட்டத்தான்."

சென்டிமென்ட் என்னும் கூர்மையான ஆயுதத்தால் அவனைப் புரட்டிப் போட முயன்றாள் அத்தை. கதைகளிலும் சினிமாக் களிலும்தான் இது போல் கட்டம் வரும். அவன் பார்த்திருக்கிறான். தன் வாழ்க்கை யிலுமா...? பிரபு யோசனையோடு உள்ளே சென்றான்.

ஆக்ஸிஜன் மாஸ்க்கை நீக்கி விட்டு ஈனஸ் வரத்தில் அம்மா ஏதோ சொன்னது முதலில் அவனுக்குப் புரியவில்லை. "என்னம்மா?" குனிந்து அவன் வாயருகில் காது வைத்து உற்றுக் கேட்டான்.

"கல்யாணம்..."

"அதுக்கென்ன இப்பொ? முதல்ல உன் உடம்பு சரியாகட்டும்."

"டாக்டர் பெண்தான் எனக்கு மருமகளா வரணும்."

"இப்ப இதைப் பத்தி பேச வேண் டாமேம்மா."



எந்தவிதச் சுண்டல் செய்தாலும், மிளகாய் வற்றல், கொத்துமல்லி விதை, சீரகம், தேங்காய், ப. மிளகாய், கருவேப் பிலை எல்லாம் அரைத்துப் போட்டுச் செய்தால் சுண்டல் வாசனை வீடே தூக்கும்.

– சி. கவுதமி.



குழந்தைகளை பார்க், பீச் என்றுதான் அழைத்துப் போவோம். லைப்ரரிக்கு? குழந்தைகள் எப்போது பள்ளியில் அடியெடுத்து வைக்கிறார்களோ அப்போதே படிக்கவும், நூலகத்திற்குச் செல்லவும் கற்றுத் தர வேண்டும்.

— எஸ். சரஸ்வதி சுவாமிநாதன்.

"சரின்னு சத்தியம் பண்ணு."

"பிளாக்மெயில் பண்ணாதம்மா ப்ளீஸ்..." பிரபுவின் கண்கலங்கியது.

"எம்மேல இவ்ளோதான் பாசமா உனக்கு?"

"உனக்காக நா கல்யாணமே பண்ணிக்காம வேணா இருக்கேம்மா. இப்படியெல்லாம் பேசி என்னைக் கஷ்டப்படுத்தாதயேன்."

இந்த நிலையிலும் பிள்ளை பிடிவாதமாக இருந்தது அவளை வாயடைக்கச் செய்தது. வேறு எதுவும் அவனிடம் பேச விரும்பாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவன் எழுந்து வெளியில் வந்தான்.

"என்னடா சொன்னா?" அத்தை கிட்டே வந்தாள்.

"ஒன்னுமில்ல..."

"கல்யாணத்தைப் பத்தி பேசினாளா?"

"..................."

"நீ என்ன சொன்னே?"

"என்னால முடியாதுன்னேன். போதுமா..?"

"அடப்பாவி, இந்த நிலைமைல அவகிட்ட எப்படிப் பேசறதுன்னு விவஸ்தை வேண்டாமா உனக்கு?"

"உங்களுக்கெல்லாம் விவஸ்தை இருக்கா? எந்த நேரத்துல என்ன பேசறதுன்னு! ஐசியூல படுத்துக்கிட்டு பிளாக்மெயில் பண்ணினா நா சரின்னு தலையாட்டிடுவேனா?"

"அவ செத்தா பரவால்லயா உனக்கு? பெத்த தாயாரை விட அந்த ஹரிணி உசத்தியாப் போயிட்டாளா? வேணாண்டா பிரபு, தீராத பழிக்கு ஆளாய்டாதே சொல்லிட்டேன்."

"ஒரு பெண்ணை ஏமாத்தி, வர பழி பாவத்தை விட இந்தப் பழி இருந்துட்டுப் போகட்டும். அம்மாக்கு ஒன்னும் ஆகாது. எம் பக்கம் நியாயமிருந்தா, கடவுள் அவளை எழுப்பி உட்கார வைப்பான்."

அதற்கு மேல் அங்கே நிற்கப் பிடிக்காமல் பிரபு வேகமாய் நடந்து மறைய அத்தை விக்கித்துப் போனாள். ஜெயிப்பதற்கு அடுத்து என்ன வழி என்று அவளும் பிடிவாதமாக யோசிக்க ஆரம்பித்தாள்.

5

காலிங்பெல் ஓசை கேட்டதும், அடுப்பை சின்னது பண்ணி விட்டு வந்து கதவைத் திறந்தாள் விசாலி. வெளியில் நின்றிருந்த உருவத்தைக் கண்டதும் முகம் மலர உள்ளே அழைத்தாள்.

"வாங்க வாங்க. வீட்ல எல்லாரும் சௌக்கியம்தானே? நானே அங்க வந்து எல்லாரையும் பார்க்கணும்னு இருந்தேன்."

அத்தை அதிகம் சிரிக்காமல் ஒப்புக்கு சிரித்து விட்டு சோபாவில் அமர்ந்தாள்.

அவள் எதற்கு வந்திருக்கிறாள் என்பது புரியாமல், ப்ரிட்ஜிலிருந்து தண்ணீர் எடுத்து குடிக்கக் கொடுத்தாள்.

"உன்னால ஒரு உபகாரம் ஆகணும்' தண்ணீரை வாங்கி டீபாய் மீது வைத்து விட்டு வாயைத் திறந்தாள் அத்தை.

"சொல்லுங்க என்ன வேணும்?"

"பிரபுவுக்கும் ஹரிணிக்கும் நாமதானே கல்யாணம் நிச்சயம் பண்ணினோம்?"

"இதுவென்ன சந்தேகம். நீங்க பெண் பார்க்க வந்து, ஒருத்தரையொருத்தர் பார்த்துப் பேசி, பிடிச்சப்புறம்தானே நிச்சயம் பண்ணினோம்."

"கரெக்ட். எங்க பிள்ளைக்கு உங்க பெண்ணைப் பிடிச்சிருக்குதுங்கற ஒரே காரணத்துனால, வேற வழியில்லாம அவம்மா அப்பாவும் இந்தக் கல்யாணத்துக்கு சம்மதிச்சாங்க."

"அப்படின்னா?"

"அப்படின்னா, ஆரம்பத்துலேர்ந்தே அவம்மா அப்பாக்கு இந்தச் சம்பந்தத்துல இஷ்டமில்லே."

"ஹரிணிகிட்டே என்ன குறை..?" விசாலி அதிர்ச்சியோடு கேட்டாள்.

"ஹரிணிகிட்டே எந்தக் குறையுமில்ல. அவம்மாகிட்டேதான். புருஷன் இருந்தும் அவனை ஒதுக்கிட்டு வாழற பெண்ணோட சம்பந்தம் வெச்சுக்க யாருக்குத்தான் தோணும்?"

"நா ஒதுங்கி வந்ததுக்குதான் காரணம் சொன்னேனே."

"அது எங்களுக்கு திருப்தியைத் தரலை. யோசிக்க யோசிக்க அவசரப்பட்டுட்டோமோன்னு ஒரு குழப்பம் பிரபுவோட

அம்மாக்கு ஏற்பட்டு அவனைக் குடைய ஆரம்பிச்சது. இருந்தாலும் பிள்ளைக்காக அட்ஜஸ்ட் பண்ணிக்கணும்னு நினைச்சுதான் நிச்சயம் பண்ணினா. ஆனா அபசகுனம் மாதிரி அவனுக்கு ஆக்ஸிடெண்ட் ஆச்சு. அப்பவே அவம்மாக்கு திக்குனு இருந்துது.

ராசி ராசின்னு சொல்லுவாங்களே. அதை நம்பத்தானே வேண்டியிருக்கு? உங்க பொண்ணு ராசியில்லேயோன்னு ஒரு பயம். இன்னிக்குக் காலை உடைச்ச அவ ராசி நாளைக்கு அவன் உயிருக்கே உலை வெச்சுடுமோன்னு பயந்து நடுங்கறா. அவளுக்கிருக்கறது கொழுந்து மாதிரி ஒரே ஒரு பிள்ளை. அவன் வாழ்க்கையோட விளையாட அவளுக்கு எப்படி மனசு வரும்? இதைச் சொன்னா அந்தப் பிள்ளை புரிஞ்சுக்க மாட்டேங்கறான். நிச்சயம் பண்ணின கல்யாணத்தை நிறுத்தி அனாவசியமா ஒரு பெண் பாவத்தை கட்டிக்கணுமான்னு கேக்கறான்.

நிச்சயமான எத்தனையோ கல்யாணங்கள் ஏதேதோ காரணத்துக்காக நின்னு போறதில்லையா? இதுல என்ன பெண் பாவம்னு சொன்னா அவன் கேட்டாத்தானே? வீட்ல தினம் இதனால சண்டை. அதோட பலன், இப்போ அம்மாக்காரி ஆஸ்பத்திரில உயிருக்குப் போராடிக்கிட்டிருக்கா."

"என்ன... என்ன சொல்றீங்க?" விசாலி அதிர்ந்தாள்.

"பொய் சொல்லலைடிம்மா. வேணும்னா போய்ப் பார்த்துக்க. அவ பிழைச்சு எழுந்து வரணுமேன்னு நா வேண்டிக்காத தெய்வமில்லை. உன் பொண்ணை நிச்சயம் பண்ணினதுலேர்ந்து அங்க மாத்தி மாத்தி ஏதானும் பிரச்னை. இப்படியாவது இந்தக் கல்யாணம் நடக்கணுமா சொல்லு. நா இப்ப இங்க வந்தது. இதையெல்லாம் எங்க பிள்ளை புரிஞ்சுக்க மாட்டேங்கறான். அவங்கிட்ட கெஞ்சறதுக்கு. உங்கிட்ட கெஞ்சறது மேல்னுதான் இங்கயே வந்துட்டேன். உம் பொண்ணுக்கு நீ வேற இடம் பாத்துக்கறதுதான் உங்களுக்கும் நல்லது அவங்களுக்கும் நல்லது."

பிரபுவின் அத்தை நிறுத்த, விசாலி கட்டை மாதிரி அமர்ந்திருந்தாள். அத்தை கிளம்பினாள்.

சற்று நேரத்தில் டெலிபோன் அடித்தது. ஹரிணியோ என்று நினைத்தபடி வந்து ரிஸீவரை எடுத்தாள் விசாலி. அவளிடம் இதை எல்லாம் சொன்னால் தாங்குவாளா? கவலையோடு, "ஹலோ" என்றாள். எதிர்முனையில் பிரபுவின் குரல் கேட்டது.

"அத்தை என்ன சொன்னாங்க ஆன்ட்டி?"

நேரடியாக அவன் விஷயத்தைக் கேட்க வியந்து போனாள் ஒரு நிமிடம். பிறகு

தயங்கியபடி நடந்ததைக் கூறினாள்.

''நினைச்சேன்...! ஆனா ஒன்னை மறந்துட்டாங்க அத்தை.''

"என்ன சொல்றீங்க..?"

"உங்க வீட்டுக்கு அவங்க வந்து பேசினா மாதிரி, அந்த டாக்டர் பெண் வீட்டுக்கு நா போய் பேச மாட்டேனா என்ன?"

"என்ன நடக்கறது உங்க வீட்ல. எனக்கு ஒண்ணும் புரியலையே."

"நீங்க கவலைப்பட வேண்டாம். எனக்குக் கல்யாணம்னு ஒண்ணு நடந்தா அது ஹரிணியோடதான். அவங்களுக்கு பயந்துகிட்டு நீங்களே ஒதுங்க நினைச்சாலும், நா ஹரிணியை கல்யாணம் பண்ணிக்கறது நிச்சயம். யார் எதிர்த்தாலும் அது நடக்கும். அதனால அத்தைக்கு பயப்பட வேண்டாம். நியாயத்தின் பக்கம் நில்லுங்க. அவங்கதான் என்னை உங்க வீட்டுக்குப் பெண் பார்க்க கூட்டிக்கிட்டு வந்தாங்க. எனக்குப் பிடிச்சப்புறம் அல்ப காரணங்களைக் காட்டி இதை நிறுத்தறது துளியும் நியாயமில்லே. அவங்களை நான் பார்த்துக்கறேன்."

பிரபு போனை வைத்தான். அத்தை ஆட்டோ ஒன்றில் இறங்கி உள்ளே வருவது தெரிந்தது.

''ஆஸ்பத்திரிக்கு போகலையா நீ?'' அவளைப் பார்த்துக் கேட்டான்.

"நீ எங்க போய்ட்டு வர அத்தை?"

"கோவிலுக்குத்தான். அபிஷேகத்துக்குப் பால் குடுத்துட்டு வரேன். உங்கம்மா நல்லபடி எழுந்திருக்கணும். அது சரி உன்னை எங்க கார்த்தாலேர்ந்து ஆளைக் காணும். ஆஸ்பத்திரிலயும் இல்ல. இங்கேயும் இல்ல. ஆபீஸுக்கு போனா மாதிரியும் தெரியலை. நீ எங்கடா போயிருந்தே..?"

"லண்டன் டாக்டர் வீட்டுக்கு."

அத்தை அரண்டு போய் அவனைப் பார்த்தாள்.

"அங்க எதுக்குடா போன?"

''சும்மா பேசிட்டு வரலாம்னுதான். நீ ஹரிணி வீட்டுக்குப் போய்ட்டு வரியே அது மாதிரி" பிரபு அத்தையை உற்றுப் பார்த்தபடி சொல்ல, அத்தையின் முகம் இருண்டது. தேள் கொட்டினாற்போல் அவனை மிரள மிரளப் பார்த்தாள். அரைமணியிலேயே தன் குட்டு வெளிப்பட்டு விடும் என அவள் எதிர்பார்க்கவில்லை.

''அம்மாக்காகத்தான் நா அங்க போனேண்டா பிரபு.''

"தேங்க்ஸ் அத்தை. நீ அங்க போகலன்னா அந்த டாக்டர் வீட்டுக்குப் போகணும்னு எனக்கும் தோணியிருக்காது. எனக்கு நீதான் வழிகாட்டின்னு சொல்லலாம். சாட்சிக்காரன் கால்ல விழறதை விட சண்டைக்காரன் கால்ல விழறது பெட்டர்னுதான் நானும் அந்தப் பொண்ணுகிட்டயே நேரடியா பேசினேன். எல்லா விஷயத்தையும் ஒளிக்காம கூறினேன். இவ்ளோ மோசமானவங்களா உங்க மனுஷங்கன்னு காறித் துப்பாத குறையா முகம் சுளிச்சாங்க. இனிமே இன்னொரு பெண்ணை நீங்க யாரும் எனக்குப் பார்க்க மாட்டீங்கன்னு நம்பறேன்."

அத்தை விக்கித்து நின்றாள்.

"இன்னொரு விஷயம்" பிரபு சற்று அருகில் வந்தான். "எங்கம்மாக்கு என்னால உடம்புக்கு வந்ததுன்னு சொல்லாதீங்க. தெளிவா இருந்தவளைப் பேசிப் பேசி குட்டையைக் குழப்பினதே நீங்கதான். எங்க வீட்டு ராமாயணத்துல நீங்க மந்தரை வேஷம் போட்டது போதும். பிறத்தியாரைப் பத்திப் பேசறதுக்கு முந்தி தன் முதுகைப் பார்த்துக்கிட்டுப் போகணும். வேஷத்தை மாத்திக்கிட்டு, இனியானும் நல்லபடி இருக்கப் பாருங்க. குட்டையைக் குழப்பி குழப்பித்தான் ரெண்டு பிள்ளை ரெண்டு மாட்டுப் பெண் எல்லாரும் இருந்தும் எல்லாரும் உங்களை வெறுத்து ஒதுக்கி வெச்சிருக்காங்க. அப்பவும் உங்க மனசு மாறலை. இப்ப எங்க வீட்டுக் குட்டையைக் குழப்பிக்கிட்டிருக்கீங்க. இனியும் நீங்க மாறலைன்னா ரொம்ப கஷ்டப்படுவீங்க. சொல்லிட்டேன்."

பிரபு எச்சரித்து விட்டுச் செல்ல, அந்த வார்த்தைகளின் அனல் தாங்காமல் துவண்டு போய் அமர்ந்தாள் அத்தை. உண்மை எப்போதும் வலிக்கத்தான் செய்யும். ஆனால் நல்ல



நவராத்திரி கொலு பொம்மைகள் குறைவாக இருந்தால் வீட்டிலுள்ள புதுவகை சுவாமி படங்கள் அல்லது பூங்கொத்துக்களை கோனில் வைத்து அழகு செய்தால் பிரமாதமாக இருக்கும். கலர் பெயிண்ட் கொடுத்து ஓவியத்தை அழகாக அட்டையில் ஒட்டி ஆங்காங்கே நிற்க வைத்தால் புதுமையாக இருக்கும்.

- சி. விஜயலக்ஷ்மி.

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் ®

அறிமுகப்படுத்தும்

கல்யாண சீர்பலகாரங்கள்



எல்லா சீர்பலகாரங்களையும் வகைக்கு ஒன்றாக வைத்து அதற்காகவே வடிவமைக்கப்பட்ட அழகிய சீர்பலகார பெட்டிகளில் வழங்குகிறோம்.

பரிசளிக்க, சீர்வரிசைக்கு புதுமையானவை.

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் ®

பாண்டி பஜார், சென்னை, போன் : 4312345
காந்தி நகர் முதல் மெயின் ரோடு, அடையார், சென்னை, போன் : 4413805
அண்ணா நகர், சென்னை, போன் : 6192345

DIMENSIONS

நவராத்திரிக்குக் கல்லூரி மாணவிகள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களுக்கு வெற்றிலை, பாக்கு வைத்துக் கொடுக்கும் போது, கூடவே ஒரு கவரில் வண்ணக் கலரில் துப்பட்டாவைப் போட்டு ஆளுக்கொன்று கொடுத்தேன். அதில் அழகிய பெயிண்டிங் வேலை செய்து கொடுத்ததைக் கண்டு, அவர்கள் அகமகிழ்ந்து போனார்கள். முடிந்தவர்கள் இவ்வாறு கொடுக்கலாம்.

– சி. விஜயலக்ஷ்மி.



மருந்து அது. அடுத்த நாள் அத்தை தன் பிள்ளையின் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றாள்.

6

பத்து நாள் கழித்து அம்மா டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்தாள்.

"அக்கா எங்கே?" வந்ததும் நாத்தனாரைப் பற்றிக் கேட்டாள்.

"பிள்ளை வீட்டுக்குப் போய்ட்டாங்க."

"திடீர்னு என்ன? யாரானும் ஏதானும் சொன்னீங்களா அவங்களை?"

"நம்ப வீட்டுப் பாலிடிக்ஸ்ல அனாவசியமா மூக்கை நுழைக்க வேண்டாம்னேன். புறப்பட்டுப் போய்ட்டாங்க. போகட்டும் விடு. இனியாவது வீடு அமைதியா இருக்கட்டுமே."

"பெரியவான்னு ஒரு மரியாதை வேண்டாமா உனக்கு?"

"மரியாதை கொடுக்கும்படி பெரியவங்க நடந்துக்கணும்."

"இப்படி எல்லாரையும் ஒதுக்கித் தள்ற அளவுக்கு என்னடா ஆச்சு உனக்கு. அப்படி என்னத்தைக் கண்ட அந்தப் பொண்ணு கிட்ட?"

"ஆரம்பிச்சாச்சா? போய் ரெஸ்ட் எடும்மா. வந்து ரெண்டு நிமிஷம் கூட ஆகலை."

"ஒரேயடியா போய்ட்டா தேவலைன்னு தோணுது."

"இந்த மிரட்டல் கேட்டு அலுத்துப் போச்சு. இதோ பாரும்மா. நிச்சயதார்த்தம்ங்கறது பரஸ்பரம் வாக்கு கொடுக்கறா மாதிரி. அவதான் எனக்குன்னு உரைதிய வாக்குக் கொடுத்துட்டு இப்பொ வாக்கு மாறி நடக்கச் சொல்றது என்ன நியாயம்? புருஷன் லஞ்சம் வாங்கி படாடோப வாழ்க்கை நடத்தறான்னு தெரிஞ்சதும், மத்தவங்க என்ன சொல்லுவாங்கன்னு கொஞ்சமும் கவலைப்படாம தன் மனசுக்குத் தோணினதை துணிச்சலா செயல்படுத்தி அவரை விட்டுட்டு குழந்தையோட தனியா வாழ்ந்து தன் உழைப்புல பெல்ஃபனை நேர்மையா வளர்த்திருக்கா அவம்மா. நேர்மைக்கு அவ்ளோ முக்கியத்துவம் குடுத்தவங்க முன்னாடி நாம கொஞ்சமானும் நேர்மையா நடந்துக்க வேண்டாமா? நாமளும் மனுஷங்கதானே? நீ மறுபடியும் மறுபடியும் என்னைக் கஷ்டப்படுத்தினா என் நேர்மையைக் காப்பாத்திக்க நா வேற வழி எடுக்க வேண்டி வரும். சொல்லிட்டேன்."

"என்ன செய்வ?"

"உங்க ஆசீர்வாதம் இல்லாமலேயே என் கல்யாணம் நடக்கும்."

"அந்த அளவுக்குப் போயாச்சா?"

"வேற வழியில்ல."

அம்மா அவனை வெறித்துப் பார்த்தாள். அன்று முழுக்க யோசித்தாள். பிள்ளையின் மன உறுதி புரிந்த பிறகு யோசிக்கத்தான் வேண்டியிருந்தது. இனி அவன் மனதை மாற்றுவது கடினம். அந்த டாக்டர் பெண்ணும் விஷயம் தெரிந்து லண்டன் போயாயிற்று என்றதும் இறங்கி வருவதைத் தவிர வேறு வழியில்லை. இருந்தாலும் அவ்வளவு எளிதாகத் தன் தோல்வியை ஒப்புக் கொள்ளவும் அவள் மனம் தயாராகவில்லை.

அவன் விருப்பப்படி அவளோட கல்யாணம் நடக்கட்டும். அதே நேரம் வேறு ஏதாவது வழியில் அவர்களைக் கொஞ்சமாவது கஷ்டப்படுத்தாமல், கண்ணீர் சிந்த வைக்காமல் இந்த வீட்டுப் படியேறக்கூடாது. என்ன செய்யலாம்? அம்மா யோசித்தாள்.

மௌனம் வீட்டை நிறைத்திருந்தது. கல்யாணம் என்ற வார்த்தையை யாருடைய உதடுகளும் உச்சரிக்கவில்லை. ஹரிணியின் காண்ட்ராக்ட் முடிய இன்னும் ஒரே ஒரு மாதம் தான் இருந்தது. அவள் வந்த பிறகு மீண்டும் பிரச்னை ஆரம்பித்து விடக்கூடாதே என்ற கவலையில் பிரபு ஒரு காரியம் செய்தான். கல்யாணப் பத்திரிகை அச்சடிக்கக் கொடுத்தான். அடித்த பத்திரிகையை அம்மா அப்பாவின்

முன்பு வைத்தான்.

அம்மாவின் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாய்த் தெரிந்தது. இந்த அளவுக்குப் பிள்ளை தங்களை அலட்சியப்படுத்தி, கல்யாண தேதியைத் தானே குறித்து, பத்திரிகை அடிப்பான் என எதிர்பார்க்கவில்லை. அவள், தன்னை அவன் மீற மீற அவளுக்குள் இனம்புரியாத கடுமை கூடியது. தாலி கூட கட்டாத ஒரு பெண்ணுக்காக தாயான தன்னையே பிள்ளை உதாசீனப்படுத்தத் துணிந்த பிறகு தான் மட்டும் ஏன் அவனுக்கு மரியாதை கொடுக்க வேண்டும்? அவள் நிமிர்ந்து அவனை அழுத்தமாய்ப் பார்த்தாள்.

"உன் கல்யாணத்துக்கு எங்களை நீ கூப்பிடற இல்ல?"

அவன் பதில் சொல்லவில்லை. பேசினால் பிரச்னை பெரிதாகும் என்பதால் நாவைக் கட்டுப்படுத்தினான்.

"கல்யாணத்துக்கு நாங்க வந்து தாராளமா ஆசீர்வாதம் பண்றோம். இனிமே உன்னைத் தடுக்கவா முடியும்? உன் இஷ்டம் போல் செய்."

அவன் முகம் மலர்ந்தது.

"ஆனா ரெண்டு கண்டிஷன்."

"என்ன?"

"முதல் கண்டிஷன் கல்யாணத்தன்னிக்கு அவப்பா இங்க இருக்கணும். அவர்தான் பெண்ணை தாரை வார்த்துக் கொடுக்கணும். ரெண்டாவது கண்டிஷன் இதைவிடக் கஷ்டமானது. ஒரு வருஷம் அன்னிய தேசத்துலேர்ந்து வரவ ஒழுங்கா வராளான்னு யாருக்குத் தெரியும்? அங்க அவ யாரோடயும் பழகலை. எந்தத் தப்பும் பண்ணலைன்றதுக்கு ஒரு டாக்டர் சர்டிபிகேட் வாங்கித் தரச் சொல்லு."

அவன் அதிர்ச்சியோடு அம்மாவைப் பார்த்தான்.

"இதுக்கெல்லாம் ஒத்துக்கலைன்னா?"

"உன் கல்யாணத்தன்னிக்கு என் கருமாதி நடக்கும்."

"இந்த மிரட்டலுக்கு நா பயப்படறதா இல்லை. உங்களை பெத்தவங்கன்னு சொல்லிக்கவே எனக்கு அசிங்கமாயிருக்கும்மா. ஏன் இவ்ளோ கீழ்த்தரமா போகிறது உன் புத்தி?"

அவன் கேட்டுக் கொண்டிருக்கும்போதே நடந்தது எதுவும் தெரியாத ஹரிணி எதிர்பாராமல் உள்ளே வர, பிரபு ஒரு வினாடி திகைத்தான்.

"சர்ப்ரைஸா இருக்கட்டும்னுதான் நா பத்து நாள் முன்னாடியே வரதா இருந்த விஷயத்தைச் சொல்லலை. எப்படியிருக்கீங்க ஆன்ட்டி?"

"உன் கல்யாணத்தைப் பத்தித்தான பேசிக்கிட்டிருந்தேன். நா ரெண்டு கண்டிஷன் போடறேன். இவன் உங்ககிட்ட கேக்கணும்ங்கறான்."

"என்ன கண்டிஷன் ஆன்ட்டி?"

"முதல் கண்டிஷன் நீ ஒரு டாக்டர் சர்ட்டிபிகேட் வாங்கித் தரணும்."

"எதுக்கு..." அவள் புரியாமல் கேட்டாள்.

"ஒரு வருஷம் தனியா இருந்துட்டு வந்திருக்க? அங்க ஒழுங்காத்தான் இருந்தியா இல்லையான்னு தெரிய வேண்டாமா? அதுக்குத்தான்."

ஹரிணி உடலெல்லாம் எரிய துடித்துப் போய் பிரபுவைப் பார்த்தாள். அவன் ஆத்திரமும் அருவருப்புமாய் அம்மாவைப் பார்த்தான்.

"ரெண்டாவது கண்டிஷன். உங்கப்பா வரணும் கல்யாணத்துக்கு. அவர் மடில உன்னை உக்கார வெச்சுதான் இவன் தாலி கட்டி பெண்டாட்டியாக்கிக்கணும்."

ஹரிணி இன்னும் பலமாய் அதிர்ந்தாள். என்னாயிற்று இவர்களுக்கெல்லாம் என்று புரியாமல் குழம்பினாள்.

"இப்படியெல்லாம் திடீர்னு கண்டிஷன் போடக் காரணம்?"

"காரணம் எங்க கௌரவம்தான். கல்யாணத்தன்னிக்கு நாலு பேர் நாலு விதமா பேசப் படாது பார்!"

"எப்படி எல்லார் வாயையும் அடைப்பீங்க? டாக்டர் சர்ட்டிபிகேட்டை ஜெராக்ஸ் எடுத்து எல்லாருக்கும் கொடுப்பீங்களா? இல்ல மண்டபத்து வாசல்ல போஸ்டர் அடிச்சு ஒட்டுவீங்களா?"


"முடியுமா முடியாதா? அனாவசியமா பேச வேண்டாம்."

"என்ன பிரபு இதெல்லாம்?"

"அவங்கிட்ட என்ன பேச்சு? எங்கிட்ட பேசு."

நவராத்திரி கொலுவிற்கு கலர் பலூன்களை கட்டித் தொங்க விடும் போது சிறிய படமாக ஸ்கெட்ச் பேனாவில் வரைந்து விட்டு, பலூனை ஊதி கட்டித் தொங்க விட்டால், குழந்தைகள் ஆவலோடு பலூனை ரசித்துப் பார்ப்பதோடு பிரமாதமாக இருக்கும். (கார்ட்டூன் படம் வரையலாம்).

– சி. விஜயலக்ஷ்மி.



"முடியாது."

"எது முடியாது? முதல் கண்டிஷனா ரெண்டாவதா?"

"ரெண்டும்தான்."

"ஏன் முடியாதுன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"தாராளமா தெரிஞ்சுக்கலாமே. முதல் கண்டிஷன் முடியாதுன்னதுக்குக் காரணம் என்னை நம்ப வேண்டியது நீங்க இல்ல. உங்க பிள்ளை. அவர் என்னை நம்பற பட்சம் உங்க கண்டிஷனுக்கு அவசியமில்ல."

"அவனே கேட்டா என்ன செய்வே?"

"அப்பவும் முடியாதுன்னுதான் சொல்லு வேன். தனியா்ந்தது நா மட்டுமில்லையே. அவ ரும்தானே. ஒரு வருஷம் இங்க தனியார்ந் திருக்கார். அவ்ர் எந்தத் தப்பும் பண்ண லைன்னு அவரால நிரூபிக்க முடியுமான்னு கேட்பேன்."

"பார்த்தாயாடா...? எப்படி பேசறா பார்."

அவன் எதிரில் அம்மாவை மட்டம் தட்டிப் பேச வேண்டாம் என்ற எண்ணத்தோடு மௌனமாக நின்றான் பிரபு.

"உங்களோட இன்னொரு கண்டிஷனுக்கும் என்னால ஒத்துக்க முடியாது. காரணம் ரொம்ப சிம்ப்பிள். ஒரு கிரிமினல் என் கல்யாணத்துக்கு வரக்கூடாது. அவர் மடில உக்காந்தாதான் என் கழுத்துல தாலி ஏறும்னா, எனக்கு அது வேண் டாம். எனக்கு அம்மா அப்பா எல்லாம் எங் கம்மாதான். அதர்மமா வர காசுல வாழக் கூடா துன்னுதான் அவங்க எங்கப்பாவை உதறிட்டு தனியா வாழ்க்கைல எதிர்நீச்சல் போட்டாங்க. அவங்க முன்னாடி வரக் கூட எங்கப்பாக்கு அருகதையும் இல்ல, அவர் வரவும் கூடாது."

"இதான் உன் முடிவா?"

"முடிவில்லை. இது என் பதில். முடிவு நீங்கதான் எடுக்கணும்."

"இந்தக் கல்யாணம் நாங்க வந்து நடக்க ணும்னு ஆசைப்படறயா? நாங்க இல்லாம நடக் கணும்னு ஆசைப்படறயா?"

"பெத்தவங்க இல்லாம கல்யாணம் பண் ணிக்க யாரும் விரும்ப மாட்டாங்க. உங்க ஆசி யோடதான் எங்க கல்யாணம் நடக்கும்."

"சந்தோஷம். நிச்சயமா என் ஆசி உனக்கு கிடைக்கப் போறதில்ல. கிளம்பு."

ஹரிணி அதிர்ச்சியோடு பிரபுவைப் பார்த் தாள். அம்மா என்றால் அன்பு என்பார்கள். இவள் மட்டும் எப்படி அதைத் தொலைந்தாள்? பிரபு வேதனைப்பட்டான்.

அவன் அம்மாவின் அருகில் வந்தான்.

"தப்பு பண்ற புருஷனை விட்டுப் பிரியற தைரியம் அவங்கம்மாக்கு இருந்தது. அதே மாதிரி நீ செய்யறது தப்புன்னு சொல்லிட்டு உன்னை ஒதுக்கிட்டுப் போய் என் வாழ்க் கையை நான் அவளோட ஆரம்பிக்கலாம். என் னாலயும் முடியும். ஆனா நம்ம சொந்தம் தொப்புள் கொடி சொந்தமாச்சே. அதனால கொஞ்சம் கூட பொறுமையாயிருக்கலாம்னு நினைக்கறேன்.

மூணாவது முறையா என் கல்யாணத்தை ஒத்திப் போடறேம்மா. இந்த முறை கால வரையில்லாம தள்ளிப் போடறேன். உன் மனசு எப்போ மாறுகிறதோ அதுக்கப்புறம் நாங்க கல் யாணம் பண்ணிக்கறோம். ஒருவேளை எங்க அறுபதாங் கல்யாணத்துக்குத்தான் நீ சம்மதம் குடுப்பன்னா அதுக்கும் ரெடி. நீ சீக்கிரமே ஒரு முடிவுக்கு வந்துடுவங்கற நம்பிக்கைல இப்ப நா இதைக் கிழிக்கப் போடறேன்."

அவன் கல்யாணப் பத்திரிகையை கிழிப் பதற்காகக் கையில் எடுக்க, அம்மாவின் கரம் அவனைத் தடுத்து அதை வாங்கி பூஜையறை யில் வைத்தது. பிரபுவும், ஹரிணியும் கண் கலங்க ஒருவரையொருவர் பார்த்துக் கொண் டார்கள். ●



ரவா லாடு எல்லோருக்கும் செய்யத் தெரிந்த ஒன்றுதான். ஆனாலும் – கீழ்க்கண்ட சின்னச் சின்ன மாற்றங்களுடன் செய்து பாருங்களேன். சூப்பர் லாடு ரெடி!

சர்க்கரைக்குப் பதில் கல்கண்டை பொடி செய்து போடுங்கள். ரொம்ப ஸ்பெஷல் டேஸ்ட். பொடித்த கல்கண்டு, ரவையுடன் சிறிது இனிப்பு கலவாத கோவாவையும் சேர்த்துத் தேய்த்துக் கலக்கவும். சிறிதளவு க்ளூகோஸ் சேர்க்கவும். (ஐஸ் மாதிரி ஒரு ஜில்லிப்பு கிடைக்கும்.)

முந்திரி வகையறாக்களுடன் ஒரு சில டூட்டி ஃப்ரூட்டியும் சேருங்கள். அத்துடன் கடையில் விற்கும் கலர் கொப்பரைத் துருவலையும் கொஞ்சமாகச் சேருங்கள்.

கடைசியாக சுத்தமான நெய் காய்ச்சி விட்டுப் பிடியுங்கள். (இதில் மட்டும் காம்ப்ரமைஸ் செய்து கொள்ளாதீர்கள். நெய் மட்டும்தான்) இப்போது, வாயில் கரையும் 'மைசூர் பா' மாதிரி 'ரவாலா' ரெடி!

– எஸ். பட்டம்மா



நவீன காலத்திற்கு நவராத்திரி அவசியம்

நவராத்திரி பண்டிகை என்றாலே நமக்குக் கொலுதான் முதலில் ஞாபகத்திற்கு வருகிறது. தீமையை ஒழித்து நன்மையே வெற்றி பெறும் என்கிற தாத்பரியமும் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே.

ஆனால் இவற்றையெல்லாம் மீறி நவராத்திரி பண்டிகையின் தாத்பரியத்தில் வேறு நுண்ணிய சூட்சமங்களும் அடங்கியிருக்கின்றன.

கிட்டத்தட்ட இரண்டாயிரம் இளம்பெண்களுடன் தினமும் பொழுதைக் கழிக்கும், ஒன்பது வயது மகளின் தாயான டாக்டர் நிர்மலா பிரசாத், எம்.ஓ.பி. வைஷ்ணவா பெண்கள் கல்லூரியின் தலைவி. இவர், நவராத்திரியைப் பற்றி நாம் புதிய கண்ணோட்டத்தில் சிந்திக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் அதை நாம் இளைய தலைமுறையினரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டியதன் மகத்துவத்தையும் விளக்குகிறார்.

• நிர்மலா பிரசாத்



டாக்டர் நிர்மலா பிரசாத் : *(எம்.ஓ.பி. வைஷ்ணவா பெண்கள் கல்லூரி முதல்வர்) :*

"நவராத்திரி பண்டிகையை நான்கு வேறுவிதமான கண்ணோட்டத்தில் நான் பார்க்கிறேன். முதல் விஷயமான உடல் நலத்தை எடுத்துக் கொள்வோம். அட! நவராத்திரிக்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர்களா? இப்பொழுதெல்லாம் நாம் ஃபாஸ்ட்புட், ஜங்க்ஃபுட் என்று ஒருபுறம் அலைந்து விட்டு மறுபுறம் டயட்டிங் என்று பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

கூர்ந்து கவனித்தால் நம் முன்னோர்கள் ஒவ்வொரு பண்டிகைக்காக பிரத்தியேகமான சமையலும் பட்சண வகைகளும் நம் நாட்டின் சீதோஷ்ண நிலை, அறுவடை காலம், உடல்நலம் போன்ற பல விஷயங்களைப் பற்றித் தீர்க்கமாக சிந்தித்துச் செய்து வந்தார்கள்.

செப்டெம்பர் மற்றும் அக்டோபர் மாத காலத்தில் வரும் நவராத்திரி பண்டிகையின் ஒவ்வொரு நாளும் புரதச் சத்து அதிகமுள்ள ஒன்பதுவிதமான சுண்டல் வகைகளைச் செய்து வந்தார்கள். இந்தக் கால கட்டத்தில் உடலிலிருந்து வெளிப்படும் உஷ்ணத்தை சரிகட்டுவதற்காகத் தான் தானியங்களையும், பருப்பு வகைகளையும் சமையலில் அதிகம் சேர்த்தார்கள்.

இந்தக் காலத்தில் புரதச் சத்தை உட்கொள்வதே குறைந்து விட்டது. நவராத்திரியின் போது சுண்டல் செய்வதும் குறைந்து விட்டது. முன்பெல்லாம், ஏழை, பணக்காரர்கள் வித்தியாசம் இல்லாமல் ஒன்பது நாட்களிலும் சுண்டல் செய்வார்கள். நம் முன்னோர்கள் வகுத்த இயற்கைக்குத் தகுந்த 'டயட் சார்ட்டை' நாம் கடைபிடித்தால் டயட்டிங்கே தேவையில்லை!

அடுத்தது கலாச்சாரத்தை எடுத்துக் கொள்வோம். அந்தந்த காலத்திற்குத் தகுந்தாற்போல் பண்டிகைகளை நம் பெரியவர்கள் அமைத்தார்கள். அவற்றுடன் நம் கலாச்சாரம், பழக்க வழக்கம், ஆன்மீகம் போன்றவற்றையும் பின்னிப் பிணைத்தார்கள். மேலும் பண்டிகைகளின் மூலம் ஒருவரது பொருளாதார அந்தஸ்தைப் பாராட்டாமல் பல்வேறு மனோரீதியான வளர்ச்சிக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

இப்பொழுதெல்லாம் அழகுணர்ச்சி வீட்டையும் சுற்றுப்புறத்தையும் அழகுபடுத்தும் கலை - இண்டீரியர் டெகரேஷன் - மேல் மட்டத்தில் இருக்கும் சிலருக்கே சொந்தம் என்பதைப் போலாகி விட்டது. ஆனால் நவராத்திரி போன்ற பண்டிகைகளின் மூலம் இந்தக் கலைகள் சாதாரணக் குடும்பங்களின் பெண்களுக்கும் சாத்தியம் என்பதை வலியுறுத்தினார்கள் நம் முன்னோர்கள்.

நவராத்திரியின் போது அழகுணர்ச்சியோடு பொம்மைகளை அடுக்குவதும், கொலுவை வித விதமாக அமைப்பதும், பூஜையில் அம்பாளை ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவிதமாக அலங்கரிப்பதும், சிறு பெண்கள் விதவிதமாக அலங்காரம் செய்து வீடுகளுக்குப் போய் வருவதும் - இப்படி ஈஸ்தெட்டிக் சென்ஸை வளர்க்க ஏராளமான வாய்ப்புகள்!

பெண்களிடம் குடிகொண்டிருக்கும் கலைத் திறனை வெளிக்கொண்டு வருவதும் நவராத்திரி பண்டிகையின் நோக்கம். ஒவ்வொரு வீட்டிலும் எங்கள் கொலுதான் சிறந்ததாக விளங்க வேண்டும் என்ற ஆவல் வீட்டுப் பெண்களிடையேயும் குழந்தைகளிடமும் கற்பனா சக்தியைத் தூண்டும்.

கலாச்சாரத்தின் கூடவே ஆன்மீகத்தையும் இணைத்து நவராத்திரியின் போது துர்கையை பூஜிக்கிறோம். தைரியத்தின் அம்சமான துர்கையை பூஜிப்பதன் மூலம் பெண்களிடையே தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் வளர்ப்பதும் நவராத்திரியின் தாத்பர்யம்.

என் மூன்றாவது கண்ணோட்டம் சமூக உறவுகளை ஏற்படுத்தவும் பலப்படுத்தவும்தான் பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன என்பதாகும். இந்தக் காலத்தில் அடுத்த வீட்டில் யார் இருக்கிறார்கள் என்கிற அறிமுகமே இல்லாத ஒரு போக்கு ஏற்பட்டு வரும் நேரத்தில் ஒன்பது நாட்களும் மக்களிடையே அறிமுகத்தையும் நட்பையும் அன்பையும் வளர்க்கும் நவராத்திரி பண்டிகை எத்தனை விலைமதிப்பில்லாதது!


சமூக உறவுகளை நாம் மதிக்காமல் இருப்பதற்கு டீவி ஒரு பெரிய காரணம். வீட்டிற்கு விருந்தாளிகள் வந்தாலே ஏதோ பறிபோய் விட்டதை போன்ற முகபாவத்துடன் அவர்களை சீக்கிரமாக பேசி விரட்டியடித்து விட்டு டீவியின் முன் உட்காரவே பலர் பிரியப்படுகிறார்கள்.

சிறுமிகளுக்குப் பருவமடைந்த பின் ஒரு விதமான பயம் ஏற்பட்டு விடுகிறது. நவராத்திரி போன்ற சந்தர்ப்பங்களில் பலரை வரவேற்று, பலரது வீடுகளுக்குச் சென்று, பாட்டுப் பாடி, வயது வரம்பின்றி அந்நியப் பெண்மணிகளுடன் பரிமாற்றம் ஏற்படும் போது அவர்களது பர்சனாலிட்டி விரிவடைகிறது. மேடையில் ஏறும்போது ஏற்படும் பயம், அச்சம், நாணம் எல்லாம் விலகி தன்னம்பிக்கையும் தைரியமும் ஏற்படுகிறது. இப்பொழுதெல்லாம் எல்லாவற்றிற்கும் வகுப்புகள் நடக்கின்றனவே! அதைப் போல் பர்சனாலிட்டி டெவலப்மெண்ட் வகுப்புகளும் அநேகம் உண்டு. அந்தக் காலத்தில் பண்டிகைகளின் மூலம் மனமுதிர்ச்சிக்கான நேர்முகப் பயிற்சிகள் நடைபெற்றன. எல்லோருடனும் சேர்ந்து செயல்படும் திறனும் கூர்மைப்படுத்தப்பட்டது.

நவராத்திரி தலைமுறைகள் ஒன்றுகூடி பழகுவதற்குச் சிறந்த சந்தர்ப்பமாக இருந்தது. எல்லா வயதினரும் பண்டிகையின் ஏற்பாட்டில் ஈடுபடுவார்கள். அதே மாதிரி வெற்றிலைப் பாக்கு வாங்குவதற்கும், கன்னிகாப் பெண்களுக்கும், சுமங்கலிகளுக்கும் என்று பல்வேறு

அப்பம், அதிரசம், பஜ்ஜி போண்டா போன்றவைகளை எண்ணெயில் போட்டதும், உடனே ஒருபோதும் கரண்டியால் கிளறக் கூடாது. போட்ட வடிவம் (ஷேப்) குலைந்து விடும். ஒரு நிமிடம் கழித்து, மாவின் ஈரப்பசை வற்றி செட் ஆன பின்பே கிளறுவதோ, திருப்புவதோ செய்ய வேண்டும்.

— எஸ். பட்டம்மா



சென்ற வருட நவராத்திரியின் பொழுது, என் மகன், மகளுடைய (பள்ளிப் பாடங்கள் எழுதிப் பார்க்க உபயோகிக்கும்) இரண்டு சிறிய கரும்பலகைகளை கொலுவிற்குப் பயன்படுத்தினேன். ஒன்றில் ஸ்ரீ சக்ரத்தைப் பற்றிய விளக்கமும், மற்றொன்றில் நவராத்திரி கலசத் தத்துவமும் எழுதி வைத்தேன்.

என்ன வரவேற்பு போங்கள்! கொலுவிற்கு வந்தவர்களெல்லாம் நின்று, நிதானமாய்ப் படித்துப் பாராட்டியது, மனத்திற்கு இதமாக இருந்தது. இந்த வருடம் அபிராமியம்மை பதிகம் கூறும் பதினாறு பேறுகளைப் பற்றி ஒன்றிலும், மற்றொன்றில் நவராத்திரி நாயகியரின் நாமங்களையும் எழுத எண்ணியுள்ளேன். நீங்களும் எழுதலாமே?

- சியாமளா ராஜகோபால்.



வயதினருக்கென்று பிரத்தியேகமான தினங்கள் ஒதுக்கப்படுவதும் உண்டு.

வீட்டை விட்டு வெளியில் போக முடியாத இல்லத்தரசிகளுக்கும் வயதானவர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக நவராத்திரி இருந்து வந்தது. வீட்டில் குழுமியிருக்கும் உறவுக்காரப் பெண்களுடன் ஆனந்தமாகப் பொழுதைக் கழிப்பார்கள் வயது முதிர்ந்தவர்கள். மேலும் பண்டிகை நாட்களின் போதுதான் வயதானவர்களுக்கு ஏக டிமாண்ட். சம்பிரதாயங்களையும் பற்றிய அறிவும் பண்டிகையை ஏற்பாடு செய்யும் ஞானமும் அவர்களுக்குத்தானே அதிகம்?

"போ! பாட்டி! உனக்கு ஒன்றுமே தெரியலை" என்று சாதாரண நாட்களில் சூளுரைத்து விட்டுப் போகும் நவநாகரிக பேத்திமார்கள் நவராத்திரியின் போது இந்தப் பாட்டிகளைத்தான் தேடி வருவார்கள்! பாட்டிகளின் மகிமையே அப்போதுதான் இவர்களுக்கு புரிகிறது! இந்த மாதிரி பண்டிகைகளின் போது ஏற்படும் பரிமாற்றங்களின் மூலம் தலைமுறைகளிடையே ஏற்படும் இடைவெளி குறைகிறது.

நாம் டிஜிட்டல் பொம்மைகளை நாடி அலைய ஆரம்பித்திருக்கும் இந்தக் காலகட்டத்தில் மண் வாசனை ததும்பும் நம் நாட்டுப்புறக் கைத்தொழிலை மறந்து விடக்கூடாது. இந்தச் சிறு தொழிலை நம்பி பல ஆயிரக்கணக்கான கிராமவாசிகள் இருக்கிறார்கள். இந்தத் தொழிலுக்கு சந்தையில் போட்டியோ, தொழிலை நிறுவுவதற்கு அதிக முதலீடோ அல்லது செலவோ கிடையாது. பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது பொம்மை செய்யும் தொழில்.

அதை ஊக்குவிப்பதற்காகவே ஒவ்வொரு வருடமும் புதிய பொம்மைகளை வாங்க வேண்டும் என்கிற ஐதீகத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள் நம் மூதாதையர்கள். என்னதான் நாம் மாடர்னாக இருந்தாலும் நவராத்திரி என்றால் ஹை டெக் பொம்மைகளை விட்டு விட்டு மண் பொம்மையை நாடித் தானே போகிறோம்? வெளிநாட்டு நிறுவனங்களின் படையெடுப்பு நம் சிறு தொழிலை பாதிக்காதவண்ணம் பார்த்துக் கொள்வது நம் பொறுப்பாகும். இந்தச் சிறுதொழிலின் மூலம் நம் கலாச்சாரமும் கலைத்திறனும் பாதிக்கப்பட்டு வருகின்றன. பலரது ஜீவனாம்ஸத்திற்கு வழியேற்படுகிறது.

எங்கள் கல்லூரிக்கு மாடர்ன் டிரஸ்ஸுடன் சாதாரண நாட்களில் வரும் பெண்கள் நவராத்திரி சமயத்தில் அழகாக நம் நாட்டு ஆடைகளை அணிந்து ஆடிப் பாடுவதே கொள்ளை அழகு! மேலும், வடநாட்டுப் பெண்களும் தென்னிந்திய பெண்களும் எங்கள் கல்லூரியில் படிப்பதால் நவராத்திரியின் போது கலாச்சார பரிமாற்றம் ஏற்படுகிறது. என் நவராத்திரி கொண்டாட்டம் கல்லூரியில்தான் பெரும்பாலும் நடக்கும்.

வீட்டில் கிராண்டாகக் கொண்டாட முடியாத வேலை பளு. மேலும் என் மாமியார் வீட்டில் கொலு வைக்கும் வழக்கமும் இல்லை. ஒன்பது நாட்களில் ஏதேனும் ஒருநாளை தேர்ந்தெடுத்து என் உறவினர்களையும் நட்பு வட்டாரத்தினரையும் கூப்பிட்டு வெற்றிலைப் பாக்குத் தருவேன். என்னைப் பொறுத்தவரையில் நவராத்திரி உறவுகளை வலிமைப்படுத்தும் சந்தர்ப்பமாகக் கருதுகிறேன்.

சில விஷயங்களை என் மகன் கற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறதே என்கிற வருத்தம் எனக்கு உண்டு என்றாலும் நாங்கள் இருவரும் நவராத்திரி சமயத்தில் எங்களுக்கு வேண்டியவர்களுடன் இனிமையாகப் பொழுதைக் கழிக்க முடிவதால் இந்தப் பண்டிகையை ஒவ்வொரு வருடமும் ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்."

நேர்காணல் : **ஸ்வாதி**

அந்த நாள் ஞாபகம்

இன்றைக்கும் நாம் விடாமல் நவராத்திரியை கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருப்பது சந்தோஷத்திற்குரிய விஷயம்தான் என்றாலும் எந்தப் பண்டிகையையும் நம் அவசரத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றியமைக்கும் சுதந்திரத்தையும் இந்த அவசர யுகம் நமக்கு அளித்திருக்கிறது. படு பிஸியாக இருக்கும் சில பெண்மணிகளைப் பாடுபட்டு பிடித்து அவர்கள் நவராத்திரியை எப்படிக் கொண்டாடுகிறார்கள் என்று கேட்டோம் :

திருமதி கே. சுமதி : வழக்கறிஞர் (குற்றவியல் மற்றும் திருமண வழக்குகள்), எழுத்தாளர் :

எங்கள் அம்மா வீட்டில் கலசம் வைத்துப் பூஜை செய்யும் சம்பிரதாயம் கிடையாது. எங்களைப் பொறுத்தவரையில் நவராத்திரி என்றால் உறவினர்களையும் நண்பர்களையும் சந்திக்கும் ஒரு இனிமையான சந்தர்ப்பமாகத்தான் இருந்தது. பத்து நாட்கள் லீவு என்கிற குதூகலமும் கொலு வைக்க வேண்டும் என்கிற ஆவலும்தான் மேலோங்கியிருந்தது.

கொலு வைக்கும் பழக்கமும் எங்கள் அம்மா வீட்டில் விளையாட்டுப் போக்காகத்தான் ஆரம்பித்தது. அக்கம் பக்கத்தில் எல்லோரும் கொலு வைப்பதைப் பார்த்து சின்னப் பசங்களான நாங்களும் கொலு வைக்க ஆரம்பித்தோம். வீட்டிலிருந்த விளையாட்டு பொம்மைகள் கொலுப்படிகளில் அடுக்கப்பட்டன. முன்பு பினாகா டூத் பேஸ்ட்டுடன் ஓசியில் கிடைக்கும் சின்னஞ்சிறு மிருகங்களை வைத்து ஜூ ரெடியாகும். ஓலைக் கூடையில் கிடைக்கும் மரச் சொப்புகளும் இரும்பினால் செய்த சிறு பொம்மைகளும் கொலுவில் வீற்றிருந்தன.

எங்களுடைய உற்சாகத்தைப் பார்த்து வீட்டுப் பெரியவர்களுக்கும் கொலு வைப்பது நாளாவட்டத்தில் ஒரு வெறியாகவே மாறியது. இப்போதெல்லாம் ஸ்டூலில் படிக்கட்டுகள் கிடைக்கின்றன. ஆனால் அப்போதெல்லாம் படிக்கட்டுகளை அமைப்பதே ஒரு சுவாரசியமான விஷயம்.

மரக்கட்டிலின் மேலே பெரிய பலகைகளை அடுக்கி அதன் மீது தாத்தா காலத்து ஜாதிக்காய்ப் பெட்டிகளை அடுக்கி பருப்பு டின்களை முதல் படியாக அமைத்து கட்டிலுக்கும் அவற்றிற்கும் இடையே நிறைய



• வித்யா

• ஷோபா

இடைவெளி ஏற்பட்டதைக் குறைக்க 'மொனாக்கோ' பிஸ்கெட் டின்களைப் படுக்க வைத்து இரண்டாவது படியை உருவாக்குவோம்.

எங்கள் தாத்தா ஒரு பள்ளியில் ஹெட்மாஸ்டராக இருந்தார். வீட்டில் எப்போதும் இரண்டு பெஞ்சுகள் இருக்கும். இவை நான்காவது, ஐந்தாவது படிகளாயின. சாதாரணமாகக் கிடைக்கும் சூப்பர்செம் பெயிண்ட் டின்களின் மீது கல்யாண மணைகளை வைத்து ஏழாவது படியை அமைப்போம். வீட்டில் கிடந்த தாத்தாவின், அண்ணாவின் மேஜைகளை தூக்கி வைத்து எட்டாவது, ஒன்பதாவது படிகள் அமையும். இதன் மீது வெள்ளை வெளேரென்று ஒரு வேஷ்டியைப் போட்டு மூடினால் எங்கள் வீட்டு கொலுப்படிகள் தயார்!



• சௌம்யா

படிகளின் மீது தசாவதாரம், செட்டியார் செட் என்று விதவிதமான, பெரிய பெரிய மண்பொம்மைகள் வைத்து கொலுவைச் சுற்றி பார்க், போட், டிராஃபிக் என்று எதையாவது அமைப்போம். முன்பெல்லாம் மூர்மார்க்கெட்டில் ஒரு வினோதமான போட் ஒன்று கிடைக்கும். அதன் பின் பாகத்தில் இங்க் பில்லரால் தண்ணீர் விட்டு நிரப்ப வேண்டும். பிறகு

நெஞ்சிலே வந்ததே!

எண்ணெய் விட்டு திரியேற்ற வேறு ஒரு குழாய் இருக்கும். திரியை ஏற்றினால் 'டப் டப்' என்கிற சப்தத்துடன் படகு தண்ணீரில் சுற்ற ஆரம்பிக்கும். இதற்காக எங்களுக்கு என்.சி.சி. கேம்பில் கிடைத்த பெரிய வெள்ளை நிறத்திலான குழிந்த பீங்கான் தட்டில் தண்ணீரை நிரப்பி 'ஸ்டீம்' போட்டை வைப்போம்.

மண்ணை வைத்து மலை செய்து அதன் மீது வெந்தயம் தனியா விதைகளைத் தெளித்து ஒன்பது நாட்களும் பஞ்சினால் தண்ணீர் தெளித்து எங்கள் செடிகளைப் பாதுகாத்து வந்த ரம்மியமான அனுபவம் இன்னும் பச்சைப் பசேலென்று ஞாபகத்திலிருக்கிறது. முன்பெல்லாம் சந்தைகளில் குறைந்த விலையில் கலர் கலரான பொம்மைகள் கிடைக்கும். கார், நீளமான பஸ், டபுள் டெக்கர் பஸ், ரயில் வண்டி எல்லாம் வாங்கி வந்து 'டிராஃபிக்' அமைப்போம். தெரிந்தவர்களைக் கூப்பிட்டு தினமும் வெற்றிலை பாக்கு கொடுப்போம். தினமும் விதவிதமான சுண்டல் தயாராக வேண்டும். ஒவ்வொரு நாளும் கேசரி, புட்டு போன்ற ஏதாவது நைவேத்தியமும் வேண்டும். எங்கள் வீட்டு டிபன்தான் சிறந்ததாக இருக்க வேண்டும் என்ற வேட்கை அதிகமிருந்த காலம் அது.

• சுமதி




பெரியவர்களும் அக்கம் பக்கத்தவர்களின் விமரி

சனத்திற்கு ஆளாகி விடக் கூடாதே என்பதில் ஜாக்கிரதையாக இருப்பார்கள்! ரங்கநாதன் தெருவிலும், பட்டேல் ரோட்டிலும் பெரம்பூரி லும் புதிய புதிய பொம்மைகளைத் தேடி அலைந்த அந்த இனிமையான நாட்கள் மறுபடி யும் வருமா?

எனக்கு இன்றைக்கும் எங்களிடமிருந்த ஒரு அழகான கிருஷ்ணர் பொம்மை ஞாபகம் இருக் கிறது. இரண்டடியுள்ள ஒரு வட்டமான பல கையின் மீது ஒரு பெரிய தாமரை பூ. அதன் மத்தியில் கைநிறைய வெண்ணெயுடன் கிருஷ் ணன் கம்பீரமாக வீற்றிருப்பான். இன்று பொம் மைகள் வீட்டிலுள்ள பரணின் மீது ஏற்றப்பட் டுள்ளன. கையில் வெண்ணெயுடன் அந்த மாயக் கண்ணனின் குறும்புச் சிரிப்பும் அந்த ரோஜாவின் வாசமுமே இன்று என்னிடம் தங்கிவிட்ட நினைவுகள்.

திருமணத்திற்கு பிறகு ஊர் ஊராக போக வேண்டிய நிர்ப்பந்தம் மற்றும் என் தொழிலில் சதா சர்வ நேரமும் ஈடுபட்டுக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயத்தினால் நவராத்திரிப் பண்டிகையை எளிமையாகக் கொண்டாட வேண்டிய சூழல் ஏற்பட்டு விட்டது.

அண்ணன் வேஷ்டியை மடித்துக் கட்ட அவனுக்குச் சரியாக பாவாடையை மடித்துக் கட்டிக் கொண்டு பொம்மைகளை இறக்கு வதிலிருந்து கடைசி வரையில் இருந்த அந்த 'டீம் ஸ்பிரிட்' இன்று எங்கோ ஓடி ஒளிந்து கொண்டு விட்டது சோகம்! அன்றைக்கு இருந்த ஆர்வத்தையும் ஆசையையும் இந்தக் காலத்திய பொருளாதார நோக்கம் தின்று விட் டது. கொலுப்படிகளை அலங்காரத்துடன் தாங்கிய அறையின் ஜன்னல்கள் இன்று வெறிச்



பொடி சாதம் சாப்பிடுபவர்கள், பொடியுடன் பொரித்த அப்பளத்தையும் கலந்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும். நிறைய பேர்கள் சாப்பிடும் போது நிறைய அப்பளங்களைப் பொரித்து, பொடியாக்கி, பொடியுடன் கலந்தே பரிமாறலாம்.

— எஸ். சரஸ்வதி சுவாமிநாதன்.

சோடிக் கிடக்கின்றன! பரணில் ஏற்றப்பட்ட பொம்மைகள் நம்முடைய வாழ்க்கை எத்தனை அர்த்தமற்றுப் போய் விட்டது என்று தங்களுக் குள் பேசிக் கொள்ளுமோ என்னவோ?

திருமதி சௌம்யா (கர்நாடக இசைக் கலைஞர்)

நான் சிறுமியாக இருந்த போது எங்கள் அப்பா, அம்மாவுடன் கேரளாவில் ஒரு அழ கான குடியிருப்பில் இருந்தோம். நவராத்திரி வந்தால் ஒரே அமர்க்களம்தான். சென்னை யைப் போல ஒரு பெரிய நகரமாக இல்லாமல் அது ஒரு சின்ன காலனியாக இருந்ததால் பிரம் மாண்டமான கொலுவாக வைத்து அந்தக் காலனியில் உள்ள அனைவரையும் வெற்றிலை பாக்கு வாங்க அழைப்போம். நாங்களும் எல் லோர் வீடுகளுக்கும் சென்று கொலு பார்த்து விட்டு வருவோம். நவராத்திரி கலாச்சார சம் பந்தமான ஒரு பண்டிகை மட்டுமே என்றில் லாமல் ஒரு சமூக விழாவாகவும் இருந்தது அப்போது.

சென்னைக்கு வந்த பிறகும் அம்மா வீட்டில் கொலு வைப்பதும் தொடர்ந்தது. ஆனால் இப் போதெல்லாம் அதிகம் நவராத்திரி கொண் டாட்டத்தில் ஈடுபட முடிவதில்லை. என் திரு மணத்திற்கு முன்பே நிறைய கச்சேரிகள் வரும் இந்த சீசனில். நவராத்திரி சமயம் பாடகர் களுக்கு 'பீக்' சீசனாயிற்றே? இந்தச் சமயத்தில் கோயில்களிலும் சபாக்களிலும் கச்சேரிகள் நடைபெறும். வெளியூர்களுக்குப் போக வேண்டியிருக்கும். அதனால் விளக்கேற்றி பூ போட்டு எளிமையாக நவராத்திரியை முடித் துக் கொள்கிறேன்.

ஒருவிதத்தில் பார்த்தால் வீட்டில் நவராத் திரி ஏற்பாடுகளை நான் 'மிஸ்' பண்ணினாலும், என்னால் பல கோயில்களுக்குச் சென்று அம்பாளுடைய விதவிதமான அலங்காரங் களைப் பார்க்க முடிகிறது. வேறு வேறு ஊர்களில் நவராத்திரி கொலு பார்க்க முடி கிறது. இங்கேயே வங்கிகள் போன்ற பல்வேறு நிறுவனங்களில் பாட்டுப் போட்டிகளுக்கோ அல்லது துவக்க விழாவிற்கோ அழைப்பதால் இந்த அலுவலகங்கள் வைக்கும் பிரம்மாண்ட மான கொலுவையும் பார்க்க முடிகிறது. இங்கே யெல்லாம் விதவிதமான விஷயங்களை எடுத் துக் கொண்டு கொலு வைப்பார்கள்.

நவராத்திரியே கலையைப் பிரதானமாகக் கொண்ட ஒரு பண்டிகைதானே? கலையில் ஈடு பட்டு இருக்கும் எனக்கு நவராத்திரி ஒரு விசேஷமான பண்டிகைதான். விஜயதசமி அன் றைக்கு கச்சேரிகளுக்குப் போக மாட்டோம். அன்றைக்கு என் குருவின் வீட்டிற்குச் சென்று அவரை நமஸ்கரித்து விட்டு வருவேன்.

இதெல்லாம் இருந்தும் நம் வீட்டில் நம்

கலையார்வத்திற்கும் கற்பனாசக்திக்கும் வடிகால் ஏற்படும் வகையில் நம் கையால் நாம் அமைக்கும் கொலுவின் ஆனந்தமே தனிதான். விரைவில் எனக்கு இந்த அனுபவம் கிட்டும் என்கிற நம்பிக்கை இருக்கிறது.

திருமதி வித்யா – திருமதி ஷோபா – ***('விபா' என்னும் மாடல் கோ ஆர்டினேஷன் மற்றும் ஈவண்ட் மானேஜ்மெண்ட் அமைப்பாளர்கள் :)***

"வாழ்க்கை இன்றைக்குள்ளதைப் போல சிக்கலாக இல்லாமல் சிம்பிளாக இருக்கக் கூடாதா என்று ஆதங்கமாக இருக்கிறது. பண்டிகைக் காலம் என்றால் எங்களுக்குக் கொள்ளை ஆசை. சிறு வயதில் பண்டிகைகள் எங்கள் வளர்ப்பின் ஒரு அங்கமாகவே இருந்தன. ஒவ்வொரு நவராத்திரியையும் ஆவலுடன் எதிர்பார்ப்போம். பண்டிகைக்கு வெகு நாட்களுக்கு முன்பே விலாவாரியாக திட்டம் போடுவோம் நாங்கள் இருவரும். என்ன தீம் வைக்கலாம், என்ன அலங்காரம் செய்யலாம் என்று உற்சாகமாக திட்டங்கள் தீட்டுவோம். பட்சணங்கள் செய்வதில் ஆவலுடன் கலந்து கொள்வோம்.

இப்போது அப்படியெல்லாம் செய்ய முடியவில்லையே என்று வருத்தமாக இருக்கிறது. இரண்டு ஆண்டுகள் முன்பு வரையில் ஓரளவிற்குக் கொண்டாடிண்டுதான் இருந்தோம். என் மகளிற்கும் இதில் அதிக அக்கறை உண்டு. கடந்த ஆண்டு அவளது நச்சரிப்பு தாங்காமல் சிறியதாக ஓர் கொலுவும் அமைத்தேன். நான் சிறு வயதில் அனுபவித்ததை என் மகள் அனுபவிக்கவில்லையே என்று ஆதங்கமாக இருக்கிறது" என்கிறார் ஷோபா.

"என் மகளுக்கு ஒரே சந்தோஷம். அவளே ரங்கோலி போட்டு அக்கம் பக்கம் இருப்பவர்களைக் கூப்பிட்டு ஜமாய்த்துத் தள்ளி விட்டாள். ஆனால் என்னால் கடந்த ஆண்டு கொலு வைப்பதில் அதிக கவனம் செலுத்த முடியவில்லை. இல்லாவிட்டால் ஒவ்வொரு ஆண்டும் ஏதாவது புதிய கான்செப்ட்டை வைத்து கொலு அமைப்போம். எங்களிடமுள்ள பொம்மைகளை வைத்து அவைகளுக்குப் பொருத்தமான ஏதாவது ஒரு கான்செப்ட்டை தேர்ந்தெடுப்போம்.

ஓர் ஆண்டு 'சிருங்கார ரசம்' எங்கள் கருவாக இருந்தது. அதற்கு ஏற்றவாறு ராமர் சீதை பொம்மைகளை வைத்து அண்ணலும் நோக்கினார் அவளும் நோக்கினாள் காட்சி. கிருஷ்ணன் ராதையின் தெய்வீகக் காதல் என்று கொலுவை அமைத்தோம். தாய்ப் பாசத்தை சித்தரிக்கும் ரசத்தை வெளிப்படுத்த திருஞான சம்பந்தர் கதையில் பார்வதி ஞானப்பால் கொடுக்கும் காட்சியையும் அமைத்தோம். இப்படி பலவிதமான 'ரசங்'கள் அதாவது உணர்வுகள் எங்களது கருவாக இருக்கும்.

இப்போது பாருங்கள் மூன்று நான்கு ஆண்டுகளாக வேலையின் பளு அதிகமாக இருப்பதாலும் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களானதால் சதாசர்வ காலமும் படிப்பு படிப்பு என்று இருப்பதாலும் ஏதோ கண்டலைப் பண்ணோமா நான்கு பொம்மைகளை வைத்தோமா என்று நவராத்திரி முடிந்து போய் விடுகிறது. நாலு பேரை கூப்பிட்டு வெற்றிலைப் பாக்கு கொடுக்க முடிகிறது. சொல்லப் போனால் எத்தனையோ பேர் வீட்டிற்கு வெற்றிலை பாக்கு வாங்கக் கூட போக முடிவதில்லை! முன்பெல்லாம் இதை சாக்கு வைத்தாவது அக்கம் பக்கத்தில் இருப்பவர்களைப் பார்த்து விட்டு வரலாமே என்று போவோம். இப்போதோ, நெய்பர்ஸ் என்றால் 'ஹாய்! பாய்' சொல்வதோடு ஓவர்!

சில ஆண்டுகளாக நவராத்திரியை ஒட்டிதான் சென்னையில் பெரிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்கு எங்களிடம் வர ஆரம்பித்திருக்கிறார்கள். அதனால் பண்டிகை வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வதற்கு நேரமே இருப்பதில்லை. தினமும் விளக்கேற்றி நிவேதனம் செய்து விட்டு கடைசி மூன்று நாட்கள் மட்டும் பூஜை செய்கிறேன். எங்கள் வீட்டில் கலச பூஜை உண்டு என்பதால் கொலு வைத்தாலும் வைக்காவிட்டாலும் கண்டிப்பாகக் கலசம் மட்டும் அமாவாசை அன்றைக்கு வைத்து விடுவேன்.

பேட்டி : **ஸ்வாதி**

நவராத்திரி சிறப்பிதழ் — I

மேலட்டையில் : **வித்யா, ஷோபா.**

தேங்காய் அல்வா செய்யும் பொழுது சிறிது முந்திரிப் பருப்பு, பாதாம் பருப்பு இரண்டையும் ஊறவைத்துத் தேங்காயுடன் மிக்ஸியில் அரைத்து விட்டு அல்வா செய்து பாருங்கள். மிகவும் நன்றாக இருக்கும். வில்லைகள் போட்டாலும் நன்றாக வரும்.

– சி. கவுதமி.



மூச்சு விடும் சிக்கல்களிலிருந்து முழு விடுதலை


குளிர்காலம் நெருங்கி வருகிறது என்றாலே அதிகம் பாதிப்படைபவர்கள் ஆஸ்துமாவினால் சிரமப்படுபவர்கள் தான். ஆஸ்துமா நோய் என்பது மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டு இருமல், மூச்சுத்திணறல் மற்றும் மூச்சு விடும்போது விசில் போன்ற ஒலி வருவது முதலியவற்றை ஏற்படுத்தும். மூச்சுக் குழாயின் வழி சளியினால் அடைத்துப் போகும் அல்லது குழாயின் உட்புறச் சுவர்களில் உள்ள மிக மெல்லிய குழாய்கள் வீங்கிப் போகும். இந் நோய் ஏற்படுவதற்கான காரணங்களைத் தீர்மானமாகச் சொல்ல முடிவதில்லை. பரம்பரையாகவும் இந் நோய் ஏற்படுகிறது.

நோய் ஏற்பட்ட பிறகு, பயத்தினாலும், உணர்ச்சிவசப் படுவதாலும் அதிக அளவு பாதிப்பு ஏற்படும். மாமியாரிட மிருந்து கடிதம் வந்தால் என்ன எழுதியிருக்குமோ என்ற பயம், மலர்களைப் பார்த்தாலே – அது பிளாஸ்டிக் பூவாக இருந்தாலும் கூட அதிலுள்ள மகரந்தம் தன்னைத் தாக்கி விடுமோ என்றெல்லாம் பயப்படும்போது, அதிக மகிழ்ச்சி, சோகம் என உணர்ச்சிவசப்படும்போது ஆஸ்துமாவின் பாதிப்பு அதிகரிக்கிறது.

ஆஸ்துமா நோயினை சில காரியங்களைச் செய்யாமலிருப்பதாலும், சில காரியங்களைச் செய்வதாலும், சில ஆசனப் பயிற்சிகளைச் செய்வதாலும், சில மூச்சுப் பயிற்சி களைச் செய்வதாலும் அவதிப்படாமல் கையாளலாம்.

- சரியான முறையில் மூச்சு விட பயிற்சி செய்ய வேண்டும். இவ்வாறு பயிற்சி செய்யும் போது வயிறு, டயாஃப்ரம் முதலியவற்றை அதிகம் பயன்படுத்தி மூச்சு விட வேண்டும். இதனால் உள்ளே சேர்ந்துள்ள சளியும், அதிகமாகச் சுரந்து கொண்டிருக்கும் திரவமும் சுத்தப்படுத்தப்படும்.
- பூக்களின் மகரந்தம், தூசி, புகை, நறுமண சென்ட்டுகள், ஸ்பிரிட் போன்ற திரவங்களை முகர்ந்து பார்ப்பதையும், பயன்படுத்துவதையும் தவிருங்கள்.

தரையில் விரிப்பின் மேல் படுத்துக் கொள்ளவும். கால்களை பத்மாசனம் போல் மடித்துக் கொண்டு இரு கைகளால் பிடித்துக் கொள்ளவும். நெஞ்சை நிமிர்த்தியபடி உச்சந்தலையால் கீழே தொடவும். இந்த ஆசனம் செய்வதற்கு முடியாதவர்கள் கட்டிலில் படுத்தபடி கால்களை நேராக நீட்டி கைகளை மார்பின் மேல் மடித்து வைத்துக் கொள்ளவும். தலையை மட்டும் கழுத்திற்கு மேலே கட்டிலுக்கு வெளியே தொங்கும் நிலையில் படத்தில் உள்ள நிலையில் வைத்துக் கொள்ளவும். ஒரு நாளில் இருமுறை இந்த நிலையில் சில நிமிடங்கள் படுப்பதால் சளி வெளியேற வசதியாக இருக்கும்.



• டாக் ப்ரீத்திங்

விலங்குகள் இயற்கையோடு ஒன்றிப்



→ • மத்ஸ்யாஸனம் செய்ய முடியாதவர்கள் செய்யும் மாற்றுப் பயிற்சி

◆ குளிர்ந்த காற்று, பனியில் வெளியே செல்லாதீர்கள்.

◆ நேராக மின்விசிறிக்குக் கீழ் படுத்து உறங்காதீர்கள்.

◆ புகை பிடிப்பதையும், புகை பிடிப்பவர்களினிடையே இருப்பதையும் தவிருங்கள்.

◆ நல்ல சத்தான ஆரோக்கியமான உணவை சாப்பிடுங்கள். டின்களில் அடைக்கப்பட்ட பழங்கள், டின் ஜூஸ், கலர்ப் பவுடர் கலந்த உணவுகளைத் தவிர்த்து விடுங்கள்.

◆ நல்ல பழங்கள், தண்ணீருடன் தேன் கலந்த பழரசம் முதலியவற்றைச் சாப்பிடவும்.

◆ இரவு உணவை எளிமையாகச் சாப்பிடவும். அதையும் தூங்கப் போவதற்கு இரண்டு மணி நேரம் முன்பாக சாப்பிடவும்.

◆ வாரத்திற்கொருமுறை உபவாசம் இருப்பது நல்லது. ஆஸ்துமாவின் பாதிப்பு இருக்கும் போது பட்டினியாக இருந்தால் சளி வெளியேறுவது எளிதாக இருக்கும்.

◆ புகை பிடிப்பது, புகையிலை போடுவது, மது அருந்துவது ஆஸ்துமாவை அதிகரிக்கும்.

◆ தண்ணீர் நிறைய அருந்துவதினால் உள்ளே இருக்கும் சளி வெளியேறும்.

◆ ஸ்ட்ரெஸ் இல்லாத வாழ்க்கை முறையை வாழ பழகிக் கொள்ளுங்கள்.

◆ உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்க்கவும்.

◆ யோகாசனப் பயிற்சிகளையும், சில மூச்சுப் பயிற்சிகளையும் செய்வது நல்ல பலனளிக்கும்.

◆ சர்வாங்காசனம், தனுராசனம், புஜங்காசனம், அர்த்த சக்ராசனம், உஷ்ட்ராசனம், மத்ஸ்யாசனம் முதலிய ஆசனங்களை ஏற்கெனவே கூறியுள்ளபடி முறையாகச் செய்யவும்.

◆ ஆஸ்துமாவின் பாதிப்பு குறையத் தொடங்கியதும் மெதுவாக டாக்டரின் அனுமதியுடன் மருந்துகளைக் குறையுங்கள்.

இப்போது சில மூச்சுப் பயிற்சிகளைப் பார்ப்போம்.



விளக்குகிறார் :

சுவாமினி

சத்யவிரதானந்த

சரஸ்வதி



• புலியைப் போல் மூச்சு விடும் பயிற்சி - 1

போய் விதவிதமான வகையில் சுவாசிக்கின்றன. அவற்றைப் போல மூச்சு விடப் பழகுவதும் சளியை வெளியேற்ற உதவும்.

நாயைப் போல் வாயை அகலப்படுத்தி மூச்சு விடும் பயிற்சி - Dog Breathing

முட்டிகளை மடக்கி அமர்ந்து கைகளால் முட்டியைப் பிடித்துக் கொள்ளவும். வாயை நன்றாக திறந்தபடி நாக்கை வெளியே தொங்க விட்டு மூச்சை உள்ளிழுத்து வெளியே விடவும்.

மண்டியிட்டபடி தரையில் அமர்ந்து கைகளை முன்புறம் வைத்து பின்புற உடலை வளைத்தபடி மூச்சை



• புலியைப் போல் மூச்சு விடும் பயிற்சி - 2

உள்ளிழுத்தபடி தலையை நிமிரவும்.

மூச்சை வெளியே விடும்போது முதுகுத் தண்டை மேலே தூக்கி தலையைக் குனியவும். இந்த மூச்சுப் பயிற்சியை மிகவும் மெதுவாக ஒரு நாளில் இருமுறை ஐந்து முதல் பத்து முறை செய்யவும்.



• முயல் போல் மூச்சு விடுதல்

முட்டியை மடக்கி கைகளை முன் நீட்டி தலையைக் குனிந்து முயல் போல் அமரவும். சிறிது சிறிதாக மூச்சை வேகமாக விடவும். இவ்வாறு மூச்சு விடும்போது வயிறை உள்ளிழுக்கவும். வெளியே விட்டபடி தலையை மறுபடி குனியவும். இப் பயிற்சி கட்டிக் கொண்டிருக்கும் சளியை வெளியேற்றும்.

நாற்காலியின் உதவியோடு மூச்சு விடுவது -ஒரு நாற்காலியைப் போட்டுக் கொண்டு படத்தில் உள்ளது போல் கால்களை நீட்டி கைகளை மடித்து நாற்காலி மீது வைத்துத் தலையைக் குனியவும். மூச்சை உள்ளிழுத்தவாறு தலையை நிமிர்த்தும் போது வாயால் ஆகார ஒலி எழுப்பவும். பிறகு மூச்சை



• நாற்காலியின் உதவியோடு மூச்சு விடுவது - 1

நாற்காலியின் துணையுடன் மற்றொரு வகை மூச்சுப் பயிற்சி - கால்களை நாற்காலியினிடையே வைத்துக் கொண்டு நிமிர்ந்து உட்காரவும். பிறகு கைகளை பின்புறம் வைத்து உடலை பின்புறம் சாய்த்து தலையை நிமிர்த்தவும். தலையை நிமிர்த்தும் போது ஆகார ஒலி எழுப்பவும் மூச்சை உள்ளிழுக்கவும். பிறகு மூச்சை விட்டபடி தலையைக் குனியவும்.




• நாற்காலியின் உதவியோடு மூச்சு விடுவது - 2

இந்தப் பயிற்சிகளை ஆஸ்துமா பாதிப்பினால் இழுக்காத போதுதான் செய்ய வேண்டும். இந்தப் பயிற்சிகளை செய்த பிறகு சவாசனம் நிலையில் உடலை தளர்த்திக் கொள்ளவும்.

தொகுப்பு :
ராஜ்யஸ்ரீ சந்திரசேகர்
படங்கள்: ஜி. சுரேஷ்

வாழ்வில் முடிவெடுத்த அந்தத் தருணம் என்றும் பசுமையானது...



அதற்கு ஈடான மற்றொரு தருணம் நிங்கள் யெஸ்டி அஸோஸியேடட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!



அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி, முகப்பேர் (கிழக்கு) மற்றும் பிற இடங்களில் அழகிய தரமான டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க

அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LTD.

(FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS)
402, "Challamall" 17, Thyagaraya Road, (Pondy Bazaar),T. Nagar,
Chennai - 600 017. Phone: 4340224/4333636/4342667 Fax: 044-4340210

E.Mail:yesde@md3.vsnl.net.in Web:www.yesde-builders.com

“பெண்களை ஆண்கள்தான் அடிமைப்படுத்துகிறார்கள் என்று நீங்கள் நினைத்தால் அது தவறான கருத்தாகும். ஏனெ னில் ஆண்களுக்கு அதை அறிமுகப்படுத்தியதே அவர்களுடைய கலாசாரமும், வளர்க்கப்பட்ட முறையும்தான்.

மனு சாஸ்திரத்தில் சொல்லியுள்ளபடி பார்த்தால் பெண்கள் இறந்த பிறகு நேராக சொர்க்கத்திற்குச் செல்ல முடியாது. அதாவது பெண்ணாகப் பிறந்தவள் அந்த ஜென்மம் முடிந்த பிறகு மறு ஜென்மம் ஆணாகப் பிறந்து




மங்கையர் மலர் & ஸ்ரீ கிருஷ்ண ஸ்வீட்ஸ் இணைந்து வழங்கும்

ஆணந்தமாய் வாழ்வோமே!

வளர்ந்து இறந்த பிறகுதான் சொர்க்கத்தை அடையலாம் என்கிறது சாஸ்திரம்.

ஆக, பெண் என்பவள் பிறப்பதற்கு முன்பே வீழ்த்தப்பட்டு விடுகிறாள். இவ்வாறு மனதளவில் அடி வாங்கிய பிறகு எவ்வாறு ஒரு பெண் தன்னை உயர்வாகக் கருத முடியும்?



இப்படிப்பட்ட கலாசாரம் இந்தியாவில் மட்டுமல்ல. உலகிலுள்ள பல நாடுகளிலும் நிலவி வருகிறது. கம்யூனிஸ அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன் சீன நாட்டில் பொது மக்கள் ஒரு ஆணைக் கொன்றால் கொலை எனக் கருதி தண்டனை வழங்கப்படும். அதுவே ஒரு பெண்ணைக் கொன்றால் அது கொலை எனக் கருதப்படாது. அதற்கான தண்டனை கிடையாது.

அதாவது எவ்வாறு இன்று மக்கள் அசைவ உணவிற்காக ஆடு, மாடு, கோழி போன்றவற்றைக் கொல்கிறார்களோ, அதே போன்று

சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்களின் பேருரை தொடர்கிறது...

பெண்ணும் கொல்லப்பட்டாள். ஆடு, மாடு, கோழி போன்ற உயிரினங்களுக்கும் உயிர் உள்ளதல்லவா! அந்த உயிரும் போற்றத்தக்க அரிதான ஒன்றுதானே! ஆனால் அதைப் பற்றிக் கவலைப்படுகிறோமா? இல்லையே! அதே போல் பெண்கள் இரக்கமின்றி கொல்லப்பட்டு வந்தனர். அதைப் பற்றி கேட்பார் இல்லாமல் இருந்தது.

ஆனால் இந் நாளில் நிலைமை மாறி விட்டது. இத்தகைய சாஸ்திரங்கள் கூறுவதைக் கேட்டோ, பல பெரியவர்கள் கூறுவதையோ நம்பி ஆணைத் தன்னை விட உயர்ந்தவன், பலசாலி, தன்னை அடித்துத் தாக்கக்கூடிய வலிமை படைத்தவன் எனப் பயப்படக்கூடாது. இருவரும் உடலாலும், மனதாலும், உணர்ச்சிகளாலும் சமமானவர்களே என்று உணர வேண்டும். ஆண்களுக்கும் உணர்த்த வேண்டும்.

பைபிளில் கூறியுள்ளதைப் படித்தால், உலகில் ஆண்தான் முதலில் படைக்கப்பட்டான். அதன் பிறகு பெண் படைக்கப்பட்டாள். ஒரு பொருளை உருவாக்குகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து அப் பொருளை உருவாக்கும்போது அதை இன்னும் திருந்தச் செய்வீர்கள் அல்லவா? அப்படிப் பார்த்தால் பெண் என்பவள் மேலும் பல குறைகளைத் திருத்திய பிறகு உருவாக்கப் பட்டவள் அல்லவா?



இத்தனைக்கும் மீறி ஆண்கள் ஏன் பெண்களை தங்களை விட தாழ்வாகக் கருதி அடிமைப்படுத்துகின்றனர்? ஏனெனில் ஆண்களால் பெண்களைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆணுக்குத் தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய பெண் தேவைப் படுகிறாள். அதனால் அவளை அருகில் வைத்துக் கொள்கிறான். ஆனால் அவளைப் புரிந்து கொள்ள முடியாத பயத்தினால், தன்னை மீறி விடாதிருக்க அடக்கி வைக்கிறான்.



ஒரு பிரச்னை ஏற்பட்டால் ஆண் தன் கருத்துக்களை முக்கியமாக வைத்து வாதாடுகிறான். ஆனால் பெண் தன் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் தந்து வாதாடுவாள். ஆனால் ஆண்களால் உணர்ச்சிகளுக்கு இடம்கொடுக்க முடியாது. பொருள் ஈட்டுவதிலும், தன் வாழ்வின் குறிக்கோளை அடைவதிலும் கவனம் கொண்டுள்ள ஆண்கள் உணர்ச்சிகளை பெரிதாகக் கருதுவதில்லை.

அதே ஆண் தன் வயதான காலத்தில் வேகம் குறைந்து விட்ட போது மிகவும் உணர்ச்சி வசப்படுகிறான். அதனால்தான் ஒரு ஆண் தன் குழந்தையைக் கொஞ்சி மகிழ்ந்ததை விட தன் பேரக் குழந்தைகளுடன் மிகவும் ஆனந்தமாக உணர்ச்சிகரமாக பழகி மகிழ்கிறான்.

இவ்வாறு பொருளுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆண் ஆனந்தத்தை அனுபவ பூர்வமாக உணர்வது எப்படி? அதற்கு தியானம் ஒன்றே வழி. முதலில் வீட்டில் உள்ள பெண்கள் தியானத்தில் ஈடுபட்டு மகிழ்ச்சியடைந்ததும், ஆணைத் தானாக அந்த வழியில் நடத்திச் செல்வார்கள்.

எங்களிடம் தியானம் பயின்ற ஒருவர் விளையாட்

டாக கூறுவார், "தியானத்தில் ஈடுபட்ட பிறகு வாழ்க்கையின் தத்துவம் புரியத் தொடங்கு கிறது. ஆனால் என் மனைவியைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று. ("After meditation, I understand life; but not my wife".)

ஆணின் வாழ்வில் தியானம் நுழைந்ததும், பெண்ணை அடக்க வேண்டும் என்ற உணர்வு குறைந்து விடுகிறது.

இத்தனை கட்டுப்பாடுகள் இருக்கும் போது கூட இந்தியப் பெண்மணிகள் மேல்நாட்டுப் பெண்களை விட எவ்வளவோ அமைதியாக வும், ஆனந்தமாகவும் இருக்கின்றனர் என்றே கூறலாம். அங்கு பெண்களுக்கு உடலளவில் கட்டுப்பாடு இல்லாமலிருக்கலாம், ஆனால் உணர்ச்சிகளின் அடிப்படையில் பார்த்தால் கட்டுப்பாடு உள்ளது.

நாகரீக உலகின் வேகத்திற்கு இணையாக ஓடிக் கொண்டிருப்பவர்கள் நாற்பது வயதை அடைந்ததும் தளர்ந்து விடுகின்றனர். திரும்பிப் பார்த்தால் ஆதரவாக யாருமில்லை. குழந்தை கள் வளர்ந்ததும் வீட்டை விட்டு வெளியே சென்று விடுகின்றனர். ஆதரவை நாடி அநேகம் பேர் நாயை வளர்க்கின்றனர். அவர்களின் நிலையைப் பார்த்து உங்கள் நிலை எவ் வளவோ மேல் என்று உணர்ந்து கொள் ளுங்கள்.

ஆண்களுடன் உரிமைக்காக, சம அந்தஸ் துக்காக போராடுவதோ, விவாதம் செய்வதோ அநாகரீகமானதாகும். கௌரவமும், அந்தஸ் தும் தானாக தரப்பட வேண்டும். கேட்டுப் பெறக் கூடாது. நீங்கள் கண்ணியத்துடன், உங் கள் தன்மை மாறாமல் அன்பாக நடந்து கொள் வதைப் பார்த்து சமூகம் உங்களுக்குக் கௌர வத்தையும், அந்தஸ்தையும் அளிக்க வேண்டும். நீங்கள் உங்கள் தரத்தைக் குறைத்துக் கொண்டு தெருவில் இறங்கி சண்டை போட்டால் மரி யாதை உங்களுக்கு எப்படிக் கிடைக்கும்? அதற்கு முதல் படியாக முதலில் பெண்கள் மற்ற பெண்களை மதித்து கண்ணியமாக நடத்த முயற்சி செய்ய வேண்டும். வீட்டில் உள்ள உறவினர்களையும், தோழிகளையும், சமூ கத்தில் உள்ள அனைத்துப் பெண்மணி களையும் முதலில் மதித்து நடக்க வேண்டும். ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவுகள் போடுவதைத் தவிர்க்க வேண்டும்.

பெண்கள் தங்கள் வாழ்க்கையை தாழ்வு மனப்பான்மையுடனேயே நடத்துகிறார்கள். இதற்கு அடிப்படையில் வீட்டிலேயே ஆண்கள் உயர்ந்தவர்கள், பலசாலி, இது ஆணாதிக்க உலகம் போன்ற கருத்துக்களை பெற்றோர் களும், மதமும், கலாசாரமும் போதிப்பதே கார ணம். இதனை விடுத்து உயர்ந்த நிலைக்கு வர முதலில் உயர்ந்த எண்ணங்களைக் கொண்டு உங்களை உயர்த்திக் கொள்ளுங்கள்.

பெற்றோர்கள் கூறியதாலோ, சமூகம் சொல்லிக் கொடுத்ததாலோ அற்பப் பொருட் களை அடைவதிலோ, சிறிய விஷயங்களை செய்து முடிப்பதிலோ திருப்தியடையாதீர்கள்.

வாசகி பிரதிபா கணபதியின் கேள்வி :

"ஒரு காரியத்தை நன்கு ஆராய்ந்து, சரியான முடிவெடுத்து, தீர விசாரித்து ஒழுங்காக நடத்தி முடித்தால் என் மனம் மகிழ்ச்சி அடைந்து விடு கிறது. அவ்வாறு செயல்படக்கூடிய தன்மை இருந்தாலும், பிறகும் நான் தியானத்திலும், யோகத்திலும் என்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமா?"

"நீங்கள் ஒரு நிலையான மனிதராக, எதற் கும் பதற்றப்படாமல் முடிவெடுப்பதால் உங் களைச் சுற்றி உள்ள சூழ்நிலையை அமைதி யாக வைக்க முடியும். ஆனால் உங்களுக்குள் ஆனந்தத்தையோ, பரவசத்தையோ உருவாக்க முடியாது. சுற்றியுள்ள சூழ்நிலைக்குக் கட்டுப் பட்டு, அதன் அமைதிக்காக உங்கள் மனம் கட் டுப்பட்டு எடுக்கப்படும் தீர்மானங்களால் நல்ல சுமுகமான சூழ்நிலை இருக்கும். ஆனால் இத னால் மட்டும் உங்கள் மனம் திருப்தியடையாது.

ஒருவருக்குப் பூரண திருப்தி அடைய வேண்டுமென்றால், உடல், மனம் தாண்டிப் போய் நம் தன்மை உணர வேண்டுமென்றால் யோகத்திலும் தியானத்திலும் ஈடுபட வேண் டும். அப்போதுதான் அவரின் உடல் தன்மை யைத் தாண்டி தன்னை அறிய முடியும். உங்களி டம் நல்ல உடல்வாகு இருக்கலாம். தேவைக்கு மேல் அதிக அளவு சொத்து, வங்கியில் பணம் இருக்கலாம், நல்ல பண்பட்ட மனம் இருக்க லாம். இவையெல்லாம் தேவையானவைதான்,



கோலு படியில் விரிக்கும் துணி மேல் அலங்காரமாக ஸ்டிக்கர்கள் ஒட்டி விட்டால், விளிம்புகளும், மற்ற இடமும் புதுமைப் பொலிவுடன் அழகாக திகழும்.

- சி. விஜயலக்ஷ்மி.

ஆனால் வாழ்க்கையைப் பூரணமடையச் செய்யாது.

அந்நாளில் ஞானிகளாகவும், யோகிகளாகவும் விளங்கிய பலர் பூர்வாசிரமத்தில் பெரிய ராஜாக்களாக இருந்தவர்கள்தான். மிகவும் உயர்ந்த பதவியையும், கணக்கிலடங்காத அளவு செல்வத்தையும் மகிழ்ச்சியையும் பெற்ற பிறகும் அவர்களின் மனதில் ஆத்ம திருப்தி கிடைக்கவில்லை. எனவே அதைப் பெற தவத்தையும், யோகத்தையும் நாடினார்கள்.

இன்று சராசரியாக ஒவ்வொரு குடிமகனும் ராஜபோகமாகத்தான் வாழ்கிறான். இருப்பினும் அவர்களுக்கு ஆத்ம திருப்தி இல்லை. அந்தத் திருப்தியை அவர்கள் பெற தியானம் பெரிதும் உதவுகிறது. அவர்களின் உடல் மனத்தைத் தாண்டி உள்நோக்கிப் பார்க்க தியானம் உதவுகிறது. உள்நோக்கிப் பார்ப்பது என்றவுடன் ஆத்மா, பரமாத்மா போன்றவற்றைப் பற்றியெல்லாம் உங்கள் சிந்தனையைச் செலுத்த வேண்டாம்.

"நீங்கள் யார்? உங்கள் வாழ்க்கையை எந்த அளவு தரமாக நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்?" என்பதை மட்டும் சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் யார் என்பதை உணராவிட்டால் உலகில் உள்ள மற்றவர்களை நீங்கள் எப்படி உணர முடியும்? உடலளவில், மனதளவில் உள்ள சாப்பிடுவது, தூங்குவது, பிறப்பது, இறப்பது போன்ற செயல்களைத் தாண்டி உங்களை உணரத் தொடங்காவிடில், புழு பூச்சிகளுக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்?

சொல்லப் போனால் அவற்றோடு உங்களால் போட்டி போட முடியாது. ஒரு வகைப் புழு தன்னைப் போல் ஆயிரம் மடங்கு எடையுள்ள உணவைக் கூடச் சாப்பிட முடியுமாம். உங்களால் முடியுமா? தேவைக்கு அதிகமாக சிறிதளவு அதிகம் சாப்பிட்டாலும் டாக்டர் அல்லது டயட்தான்.

புழுக்கள், பூச்சிகள், விலங்கினங்கள் நாள் முழுவதும் கூடத் தூங்குகின்றன. சில மாதக் கணக்கில் தூங்குகின்றன. எத்தனைதான் சுகமான படுக்கையை வாங்கிப் போட்டு அதில் படுத்து உறங்கினாலும் தேவைக்கு அதிகமாக உறங்கினால் நரகம்தான். இனப்பெருக்கத்தை எடுத்துக் கொண்டால் ஒரு குழந்தை உருவாகி பெற்று பிழைப்பதற்குள் எத்தனை பாடு? புழுக்கள் நூற்றுக்கணக்கில் முட்டை இடுகின்றன. குட்டிகள் போடுகின்றன. இறப்பை எடுத்துக் கொண்டாலும் அவை சிரமமில்லாமல் இறந்துவிடுகின்றன.

எனவே பிறப்பு, இறப்பு, சாப்பிடுவது, தூங்குவது, இனப்பெருக்கம் என எதிலும் ஒரு புழுவுடன் கூட உங்களால் போட்டி போட முடியவில்லை. இவையெல்லாம் புழுக்கள் பூச்சிகளாக வாழ்க்கை நடத்தப் போதுமானது. ஆனால் மனிதனாகப் பிறந்தவன் இச் செயல்களால் மட்டும் வாழ்வில் நிறைவடைய முடியாது. மனிதத் தன்மையையும் தாண்டி, அந்த எல்லையைத் தாண்டி மேலும் எதையோ தேட வேண்டும். தேடி அந்த ஆனந்தத்தை உணர தியானமும் யோகமும் அவனுக்குப் பெரிதளவில் உதவும்."

சமூகம் உங்களை எளிதில் உயர அனுமதிக்காது.

மற்றுமொரு வருந்தத்தக்க விஷயமானது பெண்களின் மாதவிலக்கு நாட்களில் இழிவாகக் கருதி கோயில்கள், முக்கிய இடங்கள், நிகழ்ச்சிகளில் அனுமதிக்காமல் தடைசெய்வது. மாதவிலக்கு என்பது அவ்வளவு அருவருப்பான ஒரு விவகாரம் என்றால், தூய்மை இல்லாத ஒரு நிலை என்று கருதினால், குழந்தை என்று ஒன்று உருவாகும் போது அந்தச் சமயத்தில் தாய் என்பவள் அந்த அசுத்தத்தை உடலில் சேர்த்து வைத்துத்தானே குழந்தையை உருவாக்குகிறாள்? அசுத்தம் என்று கருதி இன்று ஆண்கள் உங்களை ஒதுக்கினால், அவர்கள் உருவானது எங்கிருந்து? அப்படியென்றால் ஆண்கள், பெண்கள் என அனைவருமே அசுத்தத்திலிருந்து உருவாகியவர்கள்தானே?

இயற்கை இவ்வுலகில் குழந்தைகள் பிறக்க, மனித சமுதாயம் உருவாக பெண்களுக்கு உடலளவில் இச் செயலை ஏற்படுத்தியுள்ளது. "இதனால் நீ அசுத்தமடைந்துள்ளாய்!" என்ற கருத்தினை தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைகளின் மனத்தில் புகுத்தாதீர்கள். ஒரு பெண் குழந்தை தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள ஆரம்பிப்பது இங்கிருந்துதான். தாய் என்பவள் கூறும் சொற்களும், செய்யும் செயல்களையும் கவனித்துத்தான் ஆண், பெண் குழந்தைகள் வளர்கிறார்கள்.

அதனால் பெண்மணிகளே! அற்ப விஷயங்களிலும், சிறிய பொருட்களிலும் மனதைச் செலுத்தாதீர்கள். உயர்ந்த விஷயங்களை நோக்கி உங்கள் மனதைச் செலுத்தினால் உங்கள் கண்ணியம் கூடும். அந்தஸ்து உயரும். வளரும் சமுதாயத்தின் அங்கமான உங்கள் குழந்தைகள் நல்ல குடிமக்களாக விளங்குவார்கள். ஆணும், பெண்ணும் சமம் என்ற கருத்தினை உங்கள் குழந்தைகள் மனதில் படர விடுங்கள். அவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க பெற்றோர்கள் தங்களிடையே சண்டைச் சச்சரவு ஏற்படாதிருக்க மனதை அமைதியாக வைக்க, தியானம் யோகத்தில் ஈடுபட்டு அமைதியாக ஆனந்தமாக வாழப் பழக வேண்டும்.

(தொடரும்)

தொகுப்பு : **ராஜ்யஸ்ரீ சந்திரசேகர்**

படங்கள் : **சௌரா**



Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 *
Registered No. TN / Chief PMG-143 / 2001 * Licensed to post without prepayment